676
3360

உ

மீனாக்ஷியருள்பெருக.

பதிவிரதை சரித்திரமாகிய

பாலநாகம்மாள்கதை.



ம-ள-ள-ஸ்ரீ வேலூர், கன்னைய நாயுடு,
அவர்களால் இயற்றியதை
கு. அ. நடேச முதலியார் அவர்களால்
பார்வையிடப்பட்டு

K. S. முருகேச நாயகர் அவர்கள்
தமது
தி. யுனைடெட் அச்சுயந்திர சாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை] 1938. [அணா 8.

ரிஜிஸ்டர் காபிரைட்.

உ

மீனாக்ஷியருள் பெருக

பதிவிரதைசரித்திரமாகிய

பாலநாகம்மாள்

கதை



ம-ா-ா-ஸ்ரீ, வேலூர் கன்னைய நாயுடு
அவர்களால் இயற்றியதை

K. S. முருகேச நாயகர்
அவர்களால்

தமது தி-யூனைட்டெட் அச்சுயந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது. காஞ்சிபுரம்

இதன் விலை]   1937   [அணா 8

ரிஜிஸ்டர்காபிரைட்.

ஓம்.

சற்குருவே நம:

மீனாக்ஷியருள் பெருக.

7 - MAY 1940
MADRAS

பதிவிரதை சரித்திரமாகிய

பால நாகம்மாள் கதை.

காப்பு வெண்பா,

சீர்பெருகப் பாலநாகம்மாள் சரித்திரத்தை யின்றுயான்
பேர்பெருக அம்மானைய் பேசிடவே—கூர்வடி
வேலனுக்கு முன்பிறந்த வேழமுகத் தோன்பாதம்.
சீலமுடன் நீ கோது சீர்.

கணேசர் துதி.

ஆதிகணபதியே ஆதரிக்க சமையமையா
சித்திக்கணபதியே சீர்பாதம் யான் துதித்தேன்
வேழமுகத்தோனே விநாயகனே முன்னடவாய்
மல்லி முல்லையிருவாக்ஷி மலர்கொண்டுன்பாதத்தை

அல்லும்பகலாக அர்ச்சித்துபூஜைசெய்தேன்
பாதம்பணிந்தேனையா பார்வதிபாலகனே
உந்தனைதியானித்து உலகத்தில்நின்றுயான்
பாலநாகம்மாள்கதை பண்புடனேசொல்லலுற்றேன்
நாவுத்தவராமல் நல்லோசைத்தாருமையா
ஏடுத்தவராமல் யெழுத்துச்சீர்மாராமல்
சொல்லுத்தவராமல் சுந்திரனேகாருமையா
நீயேதுணையென்று நின்றேனேவையகத்தில்
வேருத்துணையில்லை வேதாந்தமெய்ப்பொருளே
கார்க்கவுங்காலமையா காக்ஷிதரவேளையிது
வந்துவரமருள்வீர் வாக்கில்குடியிருப்பீர்
ஏழைமுகம்பாரும் இதுசமயங்காருமையா
நம்பினவர்களை நாயகனேகாருமையா

சரஸ்வதிதோத்திரம்

வெண்பா

அம்பா சரஸ்வதியே ஆனந்தக் கல்யாணி
நம்பினா னின்றேநம்மா நாதரியே—இம்மையிலே
உன்னைத் துதித்துயான் உலகத்தோர் தான்மதிக்க
கண்மணியே கதைசொன்னேன் கார்

வாணிசரஸ்வதியே வந்தாவேணுமம்மா
உன்பாதம்யான் துதித்தேன் உகந்தென்னைக்காருமம்மா
கமலத்தில்நீபிறந்தாய் காருண்யசுந்தரியே
அன்பத்தோரக்ஷரத்தில் ஆடிடும்திரிசூலி
வேதப்பொருளே வேதாந்தநாயகியே
சதுர்வேதக்காரணியே சஹஸ்த்ரவேதகாரணியே
காவில்குடியிருக்கும் நாதாந்தபைரவியே
உன்னைத்துணைநம்பி உகந்துயிப்புவிமீது
பாலநாகம்மாள்கதை பண்புடன்சொல்லலுற்றேன்
குற்றங்களில்லாமல் குடியிருந்துகாருமம்மா
சொல்லுக்கதிகாரி சுழிதனிலாடுந்தேவி
முக்கோணவீட்டினில் முகந்துநிர்க்கும்கல்யாணி
பிழையொன்றுமில்லாமல் பேதைதனைக்காருமம்மா
தாய்தந்தைநீயென்றுதாணியில்நம்பிநின்றேன்
இதுசமயங்காக்கவே ஈஸ்வரியேவாருமம்மா
நாசிமுனையிலாடும் நாயகிசௌந்தரியே
தப்பிதமில்லாமல் தாயேயெனைக்காருமம்மா
காக்கக்கடனுனக்கு கருணைசெய்யவேணுமிது
கண்ணாலேபார்த்துயென்னைக் காருமம்மாசரஸ்வதியே

கதைச்சங்கம்

வசனம்:— ஸ்ரீகைலாசபதியாகிய சிவசங்காமூர்த்தி பார்வதி சமேதராய் நந்தி, பிருங்கி, முதலான முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிர ரிஷிகளும் புடைசூழ கொலுவமர்ந்திருக்கும் சமயத்தில் நாரதபகவான் தன் இருப்பிடம்விட்டு கைலாயத்திற்கு வந்து லோகாக்ஷகனுகிய சாம்பவமூர்த்தியை தியானித்து நிற்கையில் லோகாபிராட்டியாகிய உமாதேவி நாரதரைப் பார்த்து ஓ-நாரதமுனிவரே நீர் எந்த சமயத்திலும் திரிலோகசஞ்சாரியாய்த் திரிந்துக்கொண்டு வருவதால் இப்பிரபஞ்சத்தில் மானிடஜென்மமெடுத்த மங்கைதனில் பதிவிரதை சிரோன்மணியாக இருக்கப்பட்ட பெண்பாவைகள் இருக்கிறாாவென்று கேட்டமாத்திரத்தில் நாரதமுனிசொல்லத்தொடங்கினர் அம்மணி யான் கண்டறிந்த மட்டும் சொல்லுகிறேன் கேளுமென்று சொல்லத்தொடங்கினர்.

உமாதேவிக்கு நாரதபகவான் பாலநாகம்மாள் கதைச்சொல்லுவது.

பட்டணமாம்பட்டணமாம் பார்புகழும் பட்டணமாம்
மேற்கேவெகுதூரம் மேன்மையானபட்டணமாம்
காசிக்குமேற்குதிசை கடல் சூழ்ந்தபட்டணமாம்
பூச்சக்காபட்டணமாம் புகழ்பெற்றவன்ருடு
அஷ்டலட்சிமிகளும் ஆடியிருந்தவிடம்
கவபோஜராஜனும் நாடிராஜ்யமாண்டுவந்தார்
மந்திரிபிரதானிசூழ மகிழ்ந்துகட்டியங்கூரிவா
எக்காளம்கொட்டிவா இருபுரமுந்தாசியாட
வேதகோஷ்டம்பாட வித்வான்கள்கொண்டாட
செங்கோல்பிடித்தமன்னன் சிறப்புடன்கொலுவமர்ந்து
ஆரிலொருக்கடமை அன்புடன்குடிகளிடம்
பெற்றுமேவாழ்ந்திருந்தார் பெருமையுடனன்ருட்டில்
வைபோகங்கொண்டு வாழ்ந்திருந்தாவ்வேந்தன்

பட்டத்துதேவியாகிய லட்சுமிதேவி புதல்வரில்லையென்று
தோழிமாருடன் துயாமடைவது.

இப்படியாகவே இசைந்துமே லட்சுமிதேவி
அந்தப்புரமதில் அன்பான தோழியுடன்
பெரியதோழிதன்னை பிரியமுடன் தானழைத்து
தோழியேநீகேளாய் தோகையின்மனக்கவலை
ஏதென்று சொல்லுவேன் எந்தன்மனக்கவலை
நோர்க்காதநோன்பை நோர்த்தேனேயென்தோழி
ஆதிசிவனுக்கு அனுதினமும்யான்சென்று
எடுக்காதபுஷ்பமெல்லாம் யெடுத்துயார்ச்சித்தேன்
காசிதீர்த்தந்தன்னில் கண்டுயான் ஸ்நானஞ்செய்தேன்
அன்னதானங்களை ஆவலுடன் யான்செய்தேன்
கானகபூமிதன்னில் கண்டு தண்ணீர்பந்தலிட்டேன்
கோதானம் பூதானம் கெம்பீரமாய்யான் செய்தேன்
இத்தனைகோடிதர்மம் இன்பமுடன் யான்செய்தும்
ஏதும்பயனில்லை என்தோழி யேதுசெய்வேன்
இப்படியாகச்சொல்லி யிருகண்ணில்நீர்சொரிந்தாள்
இதைக்கண்டுதோழிதான் இசைந்துமேசொல்லலுற்றாள்
அம்மாவேநீர்கேளும் ஆச்சியரேயென்தேவி
அய்யனிட்டவிதிபோலே ஆகுமேயென்தேவி
ஈசன்செயலன்றி யேதும்பலிக்காதம்மா
துயருறுதல் நீதியல்லதுரிதமுடன்யென்தேவி
இப்படியாக இருவரும் பேசிவிட்டு
அந்தசமயத்தில் அந்தபுரம்தோழிசென்றாள்

லட்சுமிதேவி தன்கணவன் அந்தபுரம் வந்தபிறகு
பாலகரில்லையென்று துயரமடைவது.

கொலுச்சாவடிவிட்டு கிருபையுடன்நவபோஜன்
அந்தப்புரம்வருக அதைக்கண்டுலட்சுமிதேவி
ஜலமெடுத்து எதிரில்வைக்க தயவுடனேயவ்வேந்தன்
ஸ்நானபானஞ்செய்து சந்தனபொட்டுமிட்டு
நேமநிஷ்டைகளை நிகழுடன் தீர்த்துக்கொண்டு

தங்கதட்டுதன்னில் தகுந்தக்காய்கறிகளுடன்
நெய்சாதத்துடனே நீர்மோரைக்கொண்டுவந்து
எதிரில்வைக்கவே இச்சையுடன் வேந்தனும்
போஜனமும் தானருந்தி புகழுடனே யவ்வேந்தன்

மஞ்சத்தின்மீது மன்னவனும்சயனித்தான்
இந்தநல்லசமயத்தில் இசைந்துமேலட்சுமிதேவி
ஸ்நானங்கள்செய்து தலையாற்றிகொண்டையிட்டு
மையிட்டுபொட்டிட்டு மகிழ்பூஷணம்தான் பூண்டு

பட்டுசேலைகட்டி பகுந்தாவிக்கைபோட்டு
தகுந்ததோழியுடன் தனியறைக்கு தான்வந்தாள்
ஏலக்காய் ஜாதிக்காய் இலவங்கம் வால்மிளகு
பாக்குனெடுதானிடித்து பக்குவமாய்பொடிசெய்து

கண்வன்காமதிலே கடுகவெற்றிலை தான்கொடுத்தாள்
தாம்பூலந்தரித்துமவர் சந்தோஷமாயிருக்கையிலே
கணவன்யெதிராக கருணையுடன் தானமர்ந்து
கேட்பீரோயகரே கிருபையுடனென்வார்த்தை

பல்லக்குயேறிக்கொண்டு பார்முழுது ஆண்டபோதில்
நீதித்தவறாமல் நீரரசுஆண்டாலும்
ஆனைகள்கட்டி அரசாண்டிருந்தாலும்
அம்மாவென்றழைக்க அருங்குழவிநான்காணேன்

அப்பாவென்றழைக்க ஆண்குழந்தைக்காணேனையா
உம்மைப்போல்வேந்தர் உகந்துபாலரெத்தனையென்றால்
என்னைகண்டுமாதர் யெத்தனைப்பெற்றுயென்று
இப்படியாக இசைந்தும்மைகேட்பாராளல்

ஏதேதன்றுச்சொல்லலாகும் யென்கணவாபுவிமீது
மலடியாய்பிறந்து மானிலத்தில்வாழலாமா
பழுத்துவுதிராத பாரில்விருக்ஷமுண்டோ
பாலகரில்லாத பாழ்மனையில்போசனங்கள்
அருதேசிபரிதேசிகள் அன்புடன் புசிக்கமாட்டார்
காட்டில்மரமாக கடுகாம் வளர்ந்திருந்தால்
தச்சன்வுளியாலே தக்கப்படிசெதுக்குவானே
ஆனதாலென்வார்த்தை அன்புடனேகேளுமையா
வடக்கேவெகுதூரம் வளர்ந்திருக்கும் மலைதன்னிலே
சடங்கிமுனிமலைக்கு ஜல்தியாகபோகவேண்டும்
நாகமுனியெதிரில் நானும்தவம்புரிந்து
புத்திரபாக்கியத்தை பெற்றுவாறேன் என்கணவா
அந்தமொழிகேட்டு ஆனந்தவேந்தனும்
எந்தன்மொழிகேளாய் இளமயிலேதோகையரே
ஆசைக்கொண்டுநாமும் ஆற்றில் புரண்டாலும்
ஒட்டுவதுவொட்டுமே வொட்டாததுவொட்டாது
கானகவழிதன்னிலே கண்மணியே நடப்பாயோ
வெய்யல்பட்டால்நிரேகம் வேர்க்குமேயுந்தனுக்கு
வரங்கொடுக்கும்சிவபெருமான் வந்துக்கொடுப்பாரிங்கு
போகாதேகண்மணியே புத்திதனைகேட்பாயின்று
இந்தமொழிக்கேட்டாள் இளம்பருவலட்சுமியும்
வெய்யலும்தோணாது வேர்வையும்தட்டாது
பரமன்செயலிருந்தால் பாலன்வரம்பெற்றுவாரேன்
இல்லாமல்போய்விட்டால் இசைந்துமனைக்குவாரேன்
இப்படிச்சொல்லவே இசைந்துமேயவ்வேந்தன்
மந்திரியைதானழைத்து மகிழ்வாகசொல்லலுற்றார்
பட்டத்துதேவிக்கு பயித்தியங்கள்பிடித்துதப்பா
கானகபூமிச்சென்று கடுந்தவங்கள்தான்புரிந்து
புத்திரபாக்கியம் பெற்றுவாராளாம்யென்தேவி
இப்படிபுவிமீது இசைந்துயெவர்செய்தார்கள்
இந்தமொழிகேட்டு யெடுத்துரைத்தான்மந்திரியும்
அய்யனேநீர்கேளும் அன்பானயென்வார்த்தை
முந்திப்பெரியவர்கள் முகந்துபுத்திரபாக்கியம்பெற
தேவியும்நாயகனும் தீவிரமாய்ஸ்நானஞ்செய்து
காவியாடைத்தரித்து கடுகவனமேசென்று

பாமனைக்கோரியவர் பாரி தவங்கள்செய்து
புத்திரபாக்கியத்தைப் பெற்றுவந்ததுபோலாக
கதைதன்னில்சொல்லிடவும் கண்டுமேயிருக்கின்றேன்
போகவிடைதாரும் பொருமையுள்ளயென்தாய்க்கு
இப்படியாகவே இசைந்துமேமந்திரிசொல்ல
அந்தமொழிகேட்டு அருகிலிருந்தகாவலனை
அப்போதேதானழைத்து அவ்வேந்தன்சொல்லலுற்றான்
காவலரேநீங்கள் கடுகப்புரப்பட்டுயின்று
தேவியுடனேசென்று தீவிரமாய்வருவீரையா
இப்படிச்சொல்லி இசைந்துமனுப்பிவிட்டு
கொலுச்சாவடியைத்தேடி கொலுவேந்தன்வருகலானார்
அந்தநல்லசமயத்தில் அழகானலட்சுமம்மாள்

லட்சுமிதேவியம்மாள் தவத்திற்குபோகுதல்

ஏரினாள்பல்லக்கு இளங்கொடியாலட்சுமியும்
பல்லக்கெடுத்தார்கள் பண்புள்ளபோயிகளும்
தாதிகள்புடைசூழ தகுந்தமேளம்தான்முழங்க
நாலுவீதிகள்தோரும் நலமாகசுத்திவந்தாள்
இராமாராமாவென்று இராமஸ்மரணைசெய்து
பூச்சக்ரபட்டணம்விட்டு போகுராள்கானகமும்
ஆறுநதிகள்தாண்டி அன்பானக்காடுதாண்டி
புலிகள்வாழும்காட்டை புதுமையுடன்தான்தாண்டி
சாம்பிராணிவனந்தாண்டி சந்தனதோப்பைவிட்டு
ஜடங்கிமகாமுனிமலைக்கு தானுமவந்தாள்லட்மியும்
மூன்றுயோசனை தூரம் மூகந்துயுச்சியிருக்குதையா
மூன்றுதாதிகளை முந்தியழைத்துக்கொண்டு
நடக்கும்போதங்கே பாதங்கள் நலிந்துமேகொப்பளிக்க
பாவிபிரமன்யெத்தன் ஓலைதனைக்கிழிக்கானோ
இராமாராமாவென்று ஸ்மரித்தாளேலட்சிமிதேவி
ஜடங்கிமாமுனிமலைக்கு தீவிரமாய்வந்தாளே
மகாமுனியருகில் மாதுசிரோன்மணியும் வந்தாள்
பார்த்தாளேமுனிவரை பண்புடன்லட்சிமிதேவி
கண்மூடிவாய்புதைத்து கலக்கமிட்டுதானிருந்தார்
சிரசில்புத்துதான் மூடி சிரப்புடன் வளர்ந்திருக்க
முனிவன்ஜடாபாரம் முகந்துவேராய்போகுதங்கே

இப்படிக்கொத்தவரின் எதிராகவந்துநின்று
சரணம்சரணமையா சுவாமியேநான்சரணம்
சரணம்செய்தப்போதிலும் சுவாமிவாய்திறக்கவில்லே
இப்படிக்கொத்தவரை எப்படிபேசச்செய்வேன்
சாபங்களிட்டுநான் செத்தாலும் பெரிதல்ல
அந்தசமயத்தில் அரைப்படியரிசிதன்னை
பானையில்தான்போட்டு பண்புடன்ஜலமிட்டு
தனதுமொழுங்காலே தகுந்தயடுப்புசெய்து
தீயிட்டொலேவைத்து தீவிரமாயம்மாது
குபீல்குபீலென்றெரிய தனக்குதீபடவில்லே
இந்தச்சமயத்தில் அழகானமுனிவனும்
இந்தயதிசியத்தை இன்பமாய் பார்த்திருந்தார்
பேசாமல்போய்விட்டால் பெரும்பழிநமக்குவரும்
என்றுயிவர்நினைந்து இளங்கொடியாளெதிரில்வந்து



ஜடங்கிமகாமுனிவர் லட்சுமிதேவியின்
சவிஸ்தாரம் விசாரிப்பது

எந்தவூர்எந்ததேசம் இங்குவரகாரியமென்ன
மனிதர்கள்வாராத மகாமுனிவர்யிருப்பிடத்தில்
நீவருககாரியமென்ன நிகழுடனே சொல்லுமம்மா
இப்படிக்கேழ்கையிலே இசைந்துமேலட்சுமியும்
அய்யாவென்வார்த்தை அன்புடனே நீர்கேளும்

மேற்கேவெகுதூரம் பூச்சக்கிரபூமிதன்னில்
வாழ்வுபோஜராஜன் வரிசையுள்ள பத்தினியாள்
கோடானதிரவியங்கள் குவலயத்திலிருக்குதையா
ஆனைகுதிரைகள் ஆறுகோடிருக்குதையா
பல்லக்குரதமும் பக்ஷமுடனிருக்குதைய்யா
இத்தனைதானிருந்தும் ஏதுபயன்காண்கவில்லை
கோத்திரம்சொல்வதற்கு குவலயத்தில் பாலனில்லை
சந்தானமில்லாமல் சுவாமியான் வந்தேனையா
வரந்தருகாவிட்டால் வாழ்மனைக்குயான்போகேன்

வசனம்.

இப்படி எல்லாம் லட்சுமிதேவியம்மாள் சொல்லி முடிந்த உடனே ஜடங்கிமகாமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

அம்மணி நீகேளாய் அறிவுள்ள லட்சுமியே
பாலன்பாக்கியம்தான் பண்மையுடன் உந்தனுக்கு
பிரம்மனெழுதவில்லை பாவியானென்செய்வேன்
இந்தமொழிகேட்டு ஏதுசெய்தாள் லட்சுமியும்
ஐயோதெய்வமேயென்று ஆயாசப்பட்டாளே
மலடியென்றென்னை மானிலத்தில் கூறுவாரே
இந்தவுடல்வைத்து இனியெவ்வார் நானிருப்பேன்
பாதகி என் உயிரை பக்ஷமுடன் போக்குகின்றேன்
இப்படிச்சொல்லவே இதுகேட்டார்மாமுனிவர்

வசனம்.

கேட்பீரய்யா! ஜடங்கிமகாமுனிவரே அனேக நாள்வருந்தி தன் கணவனை கேட்டபடியால் சந்தானபலத்திற்குபோகும்படி இன்றைக்கு அருள்செய்தார் நீர் சந்தானபலன் கொடுக்கப்போகிறீரா! அல்லது என்னுவியை உமதுபாதத்தில் விடச்சொல்லுகிறீரா யென்று மூர்க்கமாய் கேட்டவுடனே முனிவருக்கு இரக்கமுண்டாகி சற்று நிதானிப்பாய் யான் சாஸ்திரத்தைப்பார்த்துச் சொல்லுகின்றேனென்று சொல்லி சாஸ்திரம் பார்க்கையில் இம்மாதுக்கு பெண்கள் பிறந்தால் தாயிக்கு மரணமுண்டாகும் ஆண்புதல்வன் பிரந்தால் தந்தைக்கு மரணமுண்டாகும் இச்சவிஸ்தாரத்தைச் சொன்னால் ஆயாசமடைவார் இந்த அபநிந்தனை நமக்கேன் நாம் தப்பித்துக்கொள்வது கலமென்று மர்மமாய் சொல்லத்தொடங்கினர்

அம்மணி நீகேளாய் ஆயாசமடையாதே
பாலன்வரங்கொடுக்க பாரிலெனந்தரமல்ல
புத்திரபாக்கியம்பெருக புகழுபாயம் சொல்லுகிறேன்
ஏதென்றுகேட்டால் இம்மலைக்கு வடபாகம்
ஈசான்யமூலையில் இருக்குதம்மா நாகபுத்து
அந்தபுத்தின்மீது அமர்ந்திருக்குமாமரமும்
அந்தச்செடிதன்னில் அடர்ந்திருக்கும் பழங்கள்தானும்
புத்துக்கும் செடிக்கும் புகழ்வந்தனம் நீ செய்து
செடிமீது தானேறிசிறப்புடன் பழம்பரித்து
உனதுபட்டணமசென்று உதயகாலமானவுடன்
சூரியஸ்நானமசெய்து சூக்ஷம பழரசம் பிழிந்து
மும்மூர்த்திகளைநினைந்து முகந்து நீ யுண்ணுமம்மா
இந்தரசம் உண்டால் அக்ஷணமே கர்ப்பம உண்டாகும்
ஆனால் ஒருவார்த்தை அமமணி சொல்லுகின்றேன்
புத்துதன்னில் சேஷன் பொருந்திதானிருக்கின்றான்
பலத்தைக்கொடுப்பானோ பாவி யென்னசெய்வானோ
இப்படிச்சொல்லவே இதுகேட்டு லட்சுமியும்
எந்தன் தலைவிதிபோல் இப்போது முடியுதையா
இப்படிச்சொல்லி இசைந்து நடக்கலுற்றாள்
கைகளை விசிக்கொண்டு கடுக நடக்கலுற்றாள்
பாவிதெய்வமே பார்மீது ஏன்பிறந்தேன்
பிரக்கசெய்தபாவி இறக்கசெய்யலாகாதா

வசனம்.

ஸ்ரீராமராமாயென்று ஸ்மரணைசெய்துக்கொண்டு போகும் சமயத்தில் பிரம்மா விஷ்ணு மகேஸ்வரன் மூவரும் மாறுவேடந்தரித்து இம்மாதுக்கருகில் வந்து எங்கே போகிறாய் என்று கேட்டவுடன் அம்மாது ஐயா நான் நாகமுனீந்திரன் புத்துக்குப் போகிறேனென்றுச் சொல்ல உடனே நாங்கள் வழி காட்டுகிறோம் வாவென்றழைத்துக் கொண்டுபோய் அதோ இருப்பது நாகப்புத்து அதின்மேலிருப்பது தான் மாஞ்செடி அதோ இருப்பது பாதாள கெங்கையென்று லட்சுமி தேவிக்கு காட்டிவிட்டு மூவரும் மறைந்தார்கள்.

அந்தச்சமயத்தில் அழகுள்ளலட்சுமியும்
திரும்பியேதான்பார்க்க துணைவந்தோர்காணவில்லை
தவமுனிவர்களோ தனியாகவந்தவர்கள்
தேவாதிதேவரோ துணையாக வந்தவர்கள்
ஆச்சரியமடைந்து ஆயாசம் தானடைந்தாள்
புடவையிருக்கிகட்டி புத்தைவலமவந்து
லோகாக்ஷகனே லோபியைக்காருமென்று

லக்ஷ்மிதேவி மாமர மருகில் வந்து வந்தனம்செய்து பழம்பரிப்பது.

மாஞ்செடியேறினாள் மகிழுடனேயம்மாது
ஆசைக்குபழங்களை ஆனவரைதான்பறித்தாள்
எழுபழமேதான் இருந்தது மடிதன்னில்
அதிகயாசைப்பட்டால் அளவுக்கொரவாச்சு
தெய்வசங்கல்பத்தால் இருந்தது எழுபழம்
ஈசன்செயலோ இதுவென்னமாயமோ
என்றுமேதன்மனதில் எண்ணிநின்றாளப்போது
இரண்டாந்தடவை ஏறினாளம்மரத்தில்
அறுத்தாளே கூடையில் அழகானபழங்களை
செடிவிட்டிராங்கி சோதித்தாள் அக்கூடையை
எழுபழமின்றி வேறுபழம் காணவில்லை
மூன்றாந்தடவைதான் முகந்துயவ்வாராச்சுது
அந்தசமயத்தில் அங்கிருந்த நாகேந்திரனும்
பனிரெண்டுசிரசுகளை பண்புடன்படமெடுத்து
உந்தன் பிராணத்தை உகந்துக்கொண்டு போரேனென்று
செடியேறிவருவதை சிறப்புடனே பார்த்துவிட்டாள்
திரேகம்நடுங்கியது தீவிரமாயப்போது
செடிமீதுவந்ததோர் சேஷனைக்கண்ணோக்கி
அய்யா நாகைய்யா அடியாள் மொழிகேளும்
பாலர்வேண்டுமென்று பாவிமனமிச்சைக்கொண்டு
புத்திரபலத்திற்கு பெருமையுடனிங்குவந்தேன்

புத்திரர்களுண்டான புகமொம்பதாம்மாதத்தில்
நிறைந்தபௌர்ணமிக்கு நீர்வாருமென்மனைக்கு
கண்டத்தைக்கடித்து கருணையுடன்நீர்போவீர்
இப்படிச்சொல்லவே இதுகேட்டான் நாகேந்திரன்
சொன்னமொழிதன்னை சுந்தரியேதப்புவாயோ
காலஞ்சென்றுவிட்டால் கண்மணிமறப்பாயோ
இந்தசொல்லமொழிதன்னை இலட்சுமியுங்கேட்டாளே
பிசகிடக்கேனையா பிரியமுள்ளநாகேந்திரா
ஒன்பதாம்மாதத்தில் உகந்துநீவாருமையா
எந்தன் ஆவியையுந்தனுக்குயான்தருவேன்
இதுகளைக்கேட்டான் இச்சையுடனநாகேந்திரன்

நாகேந்திரன் லக்ஷ்மிதேவிக்கு வரங்கொடுப்பது

உந்தனுக்குயேழு உகந்துபெண்கள் தான்பிறப்பார்
கடைசிப்பெண்ணுக்கு நீ கனநாகம்மாவென நாமமிடும்
இவ்வார்த்தைதான்கேட்டு இசைந்துமேலட்சுமியும்
அய்யோதெய்வமே அன்னீதமாகுமா
ஏழுப்பெண்களுமே இருந்தால்பேரைச்சொல்லுமா
ஆண்குழந்தையொன்றிருந்தால் அரசாளுமேயென்றாள்
இந்தமொழிக்கேட்டு ஏதுசொன்னான்நாகேந்திரன்
ஆண்குழந்தைதந்தால் உன்வேந்தன்மரணமாவான்
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்லட்சுமியும்
கணவனில்லாபாக்கியம் காக்ஷியிருந்தென்னபலன்
பாலன்பாக்கியம்வேண்டாம் பத்தாவுக்காயுள்தாரும்
இந்தமொழிக்கேட்டு ஏதுசொல்வான்நாகேந்திரன்
உந்தனிஷ்டம்போல் உகந்துவரம்யான்தந்தேன்
உந்தனுக்குமரணமே உத்தமியேசித்திக்கும்
இப்படிச்சொல்லியே இசைந்துநாகம்சென்றது
புத்துக்குள்நுழைந்தது பெருமையுள்ளநாகமது
இதுசென்றதைகண்டு இரங்கினாள்லட்சுமியும்
மடிதனைசோதிக்க மகிழ்மமும்யேழாச்சு
அதைத்தங்கபெட்டியில் வைத்து திக்கபடிபத்ரஞ்செய்தாள்
அந்தவிடம்விட்டு அப்போதேதானடந்தாள்
ஜடக்கிமுனிமலையைவிட்டு ஜடுதியில்தான்வந்தாள்
காடுமலைகள்தாண்டி கரும்புவனத்தோப்பைவிட்டு

சாம்பிராணிமலைவிட்டு சந்தனதோப்புவிட்டு
மூன்றும்தினத்திலே பூச்சக்கரபட்டணம்வந்தாள்
அந்தச்சமயத்தில் அருகிருந்தகாவலரை
இன்பமாய்தானழைத்து எடுத்துச்சொல்லலுற்றளே
நீங்களிப்போசென்று நிகழ்த்தனவேந்தனுக்கு
எந்தன்வரவைச்சொல்லி இப்போதேவருவீர்கள்
இப்படிச்சொல்லவே இதுகேட்டார்காவலர்கள
ஓட்டம்நடையாகச்சென்று ஒருமிக்ககொலுவைத்தேடி
வேந்தனுக்குவந்தனங்கள் வேகமாய்செய்துநிற்க
கண்டானேவேந்தனும் காவலரையப்போது
ஆரடாகாவலரே ஆஸ்தானம்வந்தீர்கள்
என்னவிசேஷம் எந்தனுக்கெடுத்துரைப்பீர்
இந்தமொழிக்கேட்டார் இசைந்துமேகாவலர்கள்
அய்யாவேநீர்கேளும் அன்பாகசொல்லுகிறேம்
உம்முடையதேவிதான் உகந்துதவஞ்செய்துவந்தார்
வரமதைபெற்றுவந்தார் வந்ததைசொல்லச்சொன்னர்
காவலர்கள் சொன்னதை தார்வேந்தன் தான்கேட்டு
எதிராகவந்துமே இருவரும்சந்தித்து
நாலுவீதிகள்தோறும் நலமாகச்சுற்றச்செய்து
மேளத்தாளத்துடனே மேன்மையாய்கோலம்வந்து
அந்தப்புரமடைந்து அந்தநல்லசமயத்தில்
தேவிலட்சுமம்மாள் தீவிரமாயவ்வேளை
திங்கட்கிழமைதன்னில் திகந்தொருப்பொழுதிருந்தாள்
கெங்கைதொரவண்டை கெம்பீரமாய்தானுமவந்தாள்
சூரியஸ்நானமும் சுத்தமாய்தானும்செய்தாள்
பட்டுப்புடவைகட்டி பண்புடனேயம்மாது
தங்கக்கிண்ணமதை தானெடுத்துவாரச்செய்து
ஏழுப்பழங்களையும் இன்பமாய்சார்பிழிந்து
கர்பூரதூபமிட்டு வந்தனமும்தான்செய்து
மும்மூர்த்திதேவரையும் முகந்துதான்நினைத்துக்கொண்டு
நாகசர்ப்பமதை நலமாகநினைத்துக்கொண்டு
ஜடங்கிமகாமுனியை தன்மனதில்நினைத்துக்கொண்டு
மாம்பழரசம்தன்னையெடுத்துமே இன்பமுடன்தானருந்த
அந்தநிமிஷத்தில் அத்தேவிகெர்பமாகி
ஓங்கிவளர்ந்திட உகர்ந்துமேயம்மாது

கர்பூரதூபமிட்டு வந்தனமும்தான்செய்து
மும்மூர்த்திதேவரையும் முகந்து தான்நினைத்துக்கொண்டு
நாகசர்ப்பமதை நலமாகநினைத்துக்கொண்டு
ஜடங்கிமகாமுனியை தன்மனதில்நினைத்துக்கொண்டு
மாம்பழரசத்தை யெடுத்துமே இன்பமுடன்தானருந்த
அந்தநிமிஷத்தில் யத்தேவிகர்பமாகி
ஓங்கிவளர்ந்திட வுகந்துமேயம்மாது
தசமாதமானவுடன் தேவிபுயப்போது
ஓடிவருவீர்கள் உகந்ததோர் தோழிமாரே
என்றுமில்லாகாக்ஷி இன்றுபான்காணலானேன்
பக்கம்பிளக்குதடி பாலன்வந்துருத்துதடி
கால்கள்தடுமாறுதடி கண்களும்சோருதடி
இருந்ததுபோலிருந்து இருபக்கம்நோகுதடி
அந்தசமயத்தில் அருகிருந்ததோழிமாரும்
மருத்துவகிழவிதன்னை மகிழுடனழைத்துவர
ஓட்டமநடையாகச்சென்று மருத்துவகிழவிதன்னை
பாட்டிநீவாடி பண்புடனேயெங்கள்தேவி
கெர்பவேதனைதான் கெம்பீரமாய்படுகின்றாள்
வாடியென்றுசொல்லி வண்மையுடனழைத்துவர
மருத்துவகிழவி மகிழ்ந்துமேதேவிதன்னைக்கண்டு
சற்றுநேரமட்டும் சிரப்புடனேபொருத்திருப்பாய்
அப்படிச்சொல்லவே அந்தநல்லசமயத்தில்
பட்டத்துதேவிக்கு பெண்பிள்ளைஜனனமாச்சு

லட்சுமிதேவியம்மாள் புதல்வரைப் பெறுவது

இப்படியாகவே யேழுபிள்ளைதா னும்பெற்ருள்
சிருவற்குஜலம்வார்த்து சிறப்புடனேபொட்டுமிட்டு
தங்கதொட்டிலிலே தனிமையுடன்வளர்த்திவிட்டாள்
அந்தசமயத்தில் அன்பானலட்சுமிதேவியும்
தோழிகளைதானழைத்து தோகையரேநீர்கேளும்
எங்கையடி யென்பாலர்கள் யெந்தனுக்குக்காட்டுவீர்கள்
இப்படிச்சொல்லவே இசைந்துமேதாதிகளும்
பாலகரையெடுத்துவந்து பக்கத்தில்தான்போட்டார்
தாயும்ஸ்தனம்கொடுக்க தக்கபடிபாலருண்ண
இந்தசெய்திதன்னை இசைந்துமேவேந்தன்கேட்டார்
சந்தோஷம்தானடைந்து சம்பிரமாயப்போது
வீதியலங்கரித்து வீதியெங்கும்தோரணமிட்டு
சர்க்கரைகற்கண்டு சிரப்புடன்தான்கொடுத்தார்

வசனம்.

நவபோஜமகாராஜன் பாலர் பிரந்தாரென கேள்வியுற்று, சந்தோஷமடைந்து தன்நாடெங்கும் அலங்காரஞ்செய்து சர்கரைக் கற்கண்டு பூரிக்கொடுத்திருக்குஞ் சமயத்தில் லட்சுமிதேவியம்மாள் தன்பாலருக்கு ஸ்நானம்செய்துவைத்து நெற்றியில் பொட்டுமிட்டு பட்டுபீதாம்பரங்கட்டி தன்பாலரைபார்த்துச்சந்தோஷமடைந்திருக்குஞ் சமயத்தில் வேந்தனந்தப்புரம் வருகஅக்காலத்தில் லட்சுமி தேவிநாயகனைப்பார்துச் சொல்லலுற்ருள்.

கேட்பீரோநாயகரே கிருபையுடனென்வார்த்தை
பாலகரைப்பெற்ற பெருந்தந்தைநீரானீர்
மக்களைப்பெற்ற மாதுமேநானுமானேன்
மூன்றுமாதமிப்போ முகந்துநடக்குதைய்யா
பாலருக்கானாலும் பேரிடநாள்பாரும்
இந்தமொழிகேட்டு ஏழில்வேந்தன்சொல்லலுற்ருன்
ஆகட்டும்பெண்ணே ஆரணங்கேநீகேட்பாய்
கொலுவிற்குயான்சென்று கோரும்படிசெய்கின்றேன்
இப்படிசொன்னவுடன் சூரியனும்தானுதித்தான்
காலக்கடன்தீர்த்து கடுகவேகொலுவைநாடி
வேந்தனுஞ்சென்றுமே வீற்றிருந்தார்கொலுவதனில்
மந்திரியைதானேக்கி மகிழுடன்சொல்லலுற்ருர்
கேளுங்கள்மந்திரியே கிருபையுடனென்வார்த்தை

பாலருக்குபேருமிட பண்புடனேவேதியரை
அழைத்துவரச்செய்வீர்கள் அன்புள்ளபுரோகிதரை
அந்தமொழிகேட்டு அப்போதேமந்திரியும்
காவலரைதானழைத்து கடுகவேசொல்லலுற்றார்
காவலரேநீங்கள்சென்று கண்டுமேபுரோகிதரை
வேந்தனழைத்ததாக வேகமுடன்சொல்லிநீங்கள்
அழைத்துவருவீர்கள் அன்புடனேபுரோகிதரை
சொன்னவுடனே சேகுவரும்வோடலுற்றார்
வேதியரைக்கண்டு வந்தனங்கள்செய்தாரே
அய்யாபுரோகிதரே அன்புடனேவேந்தனும்மை
அழைத்துவரச்சொன்னார் ஆஸ்தானகொலுவிற்கு
சொன்னமொழிகேட்டுச் சீக்கிரமாய்புரோகிதரும்
பட்டுக்கரைதோவத்தி பண்புடன்கட்டிக்கொண்டு
பஞ்சாங்கம்கட்டுதன்னை பண்புடன்தானெடுத்து
அக்களில்தானும்வைத்து அப்போதுநடக்கலுற்றார்
வேந்தன்கொலுவிற்கு வேதியரும்வந்தாரே
வந்திதோர்வேதியரும் வந்தனங்கள்செய்தாரே



நவபோஜமகாராஜன் தர்பாரில்
வேதியர் பாலருக்கு பெயரிடுவது.

அய்யாகுலக்குருவே அமருவீர்ஆசனத்தில்
இப்படிச்சொன்னவுடன் இருந்தாரேஆசனத்தில்

வேந்தனை தான்பார்த்து வேகமாய்சொல்லலுற்றார்
அய்யாவேநீர்கேளும் அன்புடனேயென்வார்த்தை
ஏதுக்குயெந்தனை இப்போதுதானழைத்தீர்
அழைத்ததோர்காரியத்தை அன்புடனேசொல்லுமையா
இந்தமொழிக்கேட்டு யெடுத்துரைத்தார்வேந்தனுமே
அய்யாகுலக்குருவே அறியநான்சொல்லுகிறேன்
எந்தன்புதல்வருக்கு இன்பமுடன்பேருமிட
ஏழுபுதல்வருக்கும் இப்போதேபேருமிட
அழைத்தேனுங்களையும் அன்புடன்யிவ்வேளை
இந்தமொழிக்கேட்டு எடுத்தாரேபஞ்சாங்கம்
பஞ்சாங்கம்பார்த்துமே பேருமிடயோசித்தார்
அய்யாவேபாலகரை அன்புடன்கொண்டுவாரும்
இப்படிசொல்லவே யெடுத்துவந்தார்பாலகரை
பாலகரைப்பார்த்து பார்ப்பனரும்சொல்லலுற்றார்
பேருமிடுகின்றேன் பெருமையுடன்பாலருக்கு
தலசன்புதல்விக்கு திரமுடன்சொல்லுகின்றோம்
சூர்யநாகம்மாவென்று சொல்லலாகும்பேருதான்
இரண்டாம்புதல்விக்கு அடுத்ததுசந்திரநாகம்மாள்
மூன்றாம்புதல்வியை உத்திரகன்னியென்றழையும்
நான்காம்புதல்வியை தக்ஷணகன்னியென்றழையும்
ஐந்தாம்புதல்வியை பகடசங்கமயென்றழையும்
ஆராம்புதல்வியை அழைப்பீர்முனிகன்னியென்று
ஏழாம்புதல்வியை பாலநாகம்மாளென்றழையும்
இப்படிப்பேர்களை இன்பமாய்யிட்டபின்பு
அந்தசமயத்தில் போஜமஹாராஜனும்
பேருமிட்டவிப்பிரவர்க்கு பெருமையுடன்வெகுமதிகள்
மூன்றுவல்திரங்கள் முகர்ந்துகொடுத்துவிட்டார்
வெகுமதிதானடைந்து விப்பிரவரும்நடக்கலானார்
இப்படியாக இருக்குமந்தசமயத்தில்
ஆறுவருடமாச்சு அழகுள்ளமூத்தப்பெண்ணுக்கு
பேசதானறிந்தாள் பெருமையுள்ளசூரியநாகம்மாள்
தாயிடம்வந்து தான்கேட்கலுற்றாளே
அம்மாவேநீர்கேளும் அன்பாயென்னைப்பெற்றதாயே
பூஷணமில்லாமல் புவிதன்னிலிருக்கலாமோ

இந்தமொழிக்கேட்டு யெடுத்துச்சொன்னாள் லட்சுமியும்
எந்தனைக்கேட்டால் யேதுபலன்வுண்டாகும
தந்தையைக்கேட்டால்தக்கபடிசெய்வாரம்மா
அந்தமொழிகேட்டு யேழ்வரும்நடக்கலுற்றார்
தந்தைக்கொலுவைதேடி இன்பமாய்வருகின்றார்கள்
மக்கள்வருவதை மன்னவனும்பார்த்துவிட்டான்
ஓடியெதிரில்வந்து பாலகரையெடுத்துக்கொண்டு
காதலிபெற்றெடுத்த கண்மணிகளே யெங்குவந்தீர்
எங்களைப்பெற்றெடுத்த இன்பமுள்ள தந்தையரே
பூஷணமில்லாமல் புவிமீதுயிருக்கலாமா
என்னைப்போல்மாதருக்கு யேளனமல்லவோ
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்வேந்தனும்

வசனம்.

இந்தமொழிகளைக்கேட்டு சந்தோஷமடைந்து அன்னாட்டிலிருக்கப்பட்ட கம்மாளரையழைத்து குழந்தைகளுக்கு தகுந்தபூஷணஞ் செய்யும்படி உத்திரவுசெய்தவுடன் கம்மாளன் சம்மதித்து இரண்டு தினத்தில் பூஷணங்களைக் கொண்டுவந்து கொடுத்துவிட அதை குழந்தைகளுக்கிட்டு அழகுப்பார்த்து சந்தோஷமடைந்திருந்தார்.



லக்ஷிமிதேவியம்மாள் வேதியரைப்பார்த்து
பௌர்ணமியைப்பற்றி விசாரிப்பது.

இப்படி இருக்கவே இன்பமுடன்வோர்தினத்தில்
அய்யமென்றுவிப்பிரவன் அன்புடன்வந்தானே
வந்தகல்விப்பிரவனை வாஞ்சையுடன்தேவிபார்த்து
வாருமைய்யா விப்பிரவரே வார்த்தையொன்றுதான்கேளீர்
என்றைக்குபௌர்ணமி யெனக்குமேசொல்லுமையா
இந்தமொழிக்கேட்டு யெடுத்துரைத்தார்விப்பிரவனும்
அம்மாயினிமூன்று அறியநாளிருக்குதம்மா
இந்தமொழிக்கேட்டு யேதுசெய்தாள் லட்சுமியும்
அய்யோமக்களேயென்று அலறியேதானழுதாள்
மக்களேவுங்களை மாபாவிகாண்பதெப்போ
எந்தனுக்குமரணமே இப்போயமைச்சுதம்மா
தவமாதவமிருந்து தான்பெற்றேனுங்களைத்தான்
பாலகர்கள்சந்தோஷத்தை பார்க்காதப்பாவியானேன்
பாலர்கள்வீதியிலேபாலரோடுயாடையிலே
தாயில்லாப்பிள்ளை யேன்று தலைமீதடிப்பாரோ
எந்தனுவிப்போனால் இன்பமாயுங்கள்தந்தை
மருகலியாணம்மகிக்ஷியாய்செய்துகொண்டு
பத்தினிமொழிகேட்டு பாலகரைவெருப்பாரோ
சிருதான்செய்யாமல் சித்திரவதைசெய்வாரோ
இப்படிச்சொல்லி இசைந்தமேலட்சுமிபழுகலுற்றாள்
இதைகேட்டுவேந்தனும் அதிவேகமாய்வந்தாரே



லட்சுமிதேவி தன் கணவனோடு நாகம் வந்து தன்
பிராணனை கொண்டேகுமென்று சொல்வது.

கேட்டீரோநாயகா கிருபையுடனென்வார்த்தை
பாலர்கள்வரத்துக்காக நாகமுனியருகில்சென்று
தவங்களும்பான்புரிய தானறிந்துநாகமுனி
ஏழுபழங்களை இன்பமாய்க்கைகொடுத்தார்
பழங்களையும்தான்கொடுத்து பார்த்தாரோநாகமுனி
உந்தன்பிராணமீது இச்சித்தேன்பெண்ணேயென்றார்
அந்தமொழிக்கேட்டு ஆகட்டுமென்றுச்சொன்னேன்
காலையதினத்திற்கு பூர்த்தியாச்சுயென்மரணம்
நான்சென்றபிரகு பாலகரைகாப்பீரோ
புத்தியரியாத புகழ்பெற்றபாலராச்சே
எப்படியாகவேதான் இப்பாலகரைகாப்பீரையா
அந்தமொழிகேட்டு அழுதுவேந்தனும்
கண்ணீர்ஜலம்விட்டு கண்ணை துடைத்துக்கொண்டு
கொலுசாவடிச்சென்று கொப்பனவேதானமர்ந்து
கேட்டீரோர்மந்திரிகளே கிருபையுடனென்வார்த்தை
காலையதினத்திற்கு நடுராத்திரிவேளைதன்னில்
நாகந்தான்வந்து நலமானயென்தேவியை
கடித்துவுயிர்வாங்கி கடுகவேபோய்விடுமாம்
வாக்குக்கொடுத்துவந்தாள் வண்மையுள்ளயென்தேவி
கொடுத்தநல்வாக்கை கொப்பனவேபிசகமாட்டாள்
இந்தமொழிகேட்டார் இன்பமுள்ளமந்திரிமாரும்
அய்யாவேநீர்கேளும் அன்புடனெங்கள்வார்த்தை
இந்தகெண்டம்தன்னை இப்போதேகார்க்கின்றோம்
அந்தமொழிக்குவேந்தன் ஆச்சரியந்தானடைந்து
தப்பித்துத்தருவீரானால் தாரணியில்தெய்வமென்பேன்

வசனம்.

ஓ மகாராஜனே நீர் துயரப்படவேண்டாம் இதோ நாங்கள் அந்த அம்மணியுடைய பிராணத்தை காப்பாற்றித் தருகிறோ மென்றுச்சொல்லி அன்று மாலையில் தெருக்கோடியில் நாலு இரும் புத்தூணுகளை நட்டு அது மத்தியில் ஸ்காந்த பெட்டி செய்து அந்த பேழைதன்னில் லட்சுமிதேவியைச் சயனிக்கச்செய்து கதவை மூடித்தாளிட்டு பெட்டிக்குச் சங்கிலிகள்கட்டிமேலுக்குத்தூக்கி விட்டு அதன்கீழ் அகண்டமான காட்டுக் கட்டைக்கரியை எரிய விட்டு நாலுபுரமும்காவல் சூழ்ந்திருக்க மந்திரியும் வேந்தனும்

கண்மேல் ரெப்பையிடாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள் இப்படி யிருக்கும் சமயத்தில் நாகமானது புத்தைவிட்டு வெளியில் வந்து பார்க்க தீபின்வெளிளியைக்கண்டு கோபமுண்டாகி தன்திரேகமனைத்தும் அந்தலட்சுமிதேவி சயனித்திருக்கும் பேழைக்குள்நிஜரூபமெடுத்துசெல்லத்தொடங்கியது.

இப்படிசெய்யலாமா இது நல்ல நியாயமாமோ
அந்தாளில்சொன்னமொழி அல்பமாய்யெண்ணலாமோ
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்லட்சுமிதேவி
என்னால்பிழைகளில்லை இப்போதுநாகேந்திரா
பாவிகளிப்படி பலவாராய்செய்துவிட்டார்
என்னாலேகுற்றமில்லை அய்பனேநீர்கேளும்
உந்தனிஷ்டப்படி யுகந்துமேசெய்யுமையா
இந்தமொழிகேட்டு யேதுசொன்னான்நாகேந்திரன்
நீபெற்றபாலகனை நலமாகபார்த்தாயோ
பால்குடிக்கும்பாலருக்கு பாலேதான்கொடுத்தாயே
எந்தன்மொழிகேளும் இன்பமுள்ளநாகேந்திரா
உந்தன்பசியார உகந்துமேபுசியுமையா
இப்படிச்சொல்லவே யெழுந்தானேநாகேந்திரன்
கண்டத்தில்கடித்து கடுகவுதிரம்குடித்தானே
குடித்தநிமிடத்திற்கு கோதையும்மூர்ச்சையானாள்
மாயமாய்போய்விட்டான் மகிழுடன்நாகேந்திரன்
மூர்ச்சைத்தெளிந்துமாது முகந்துமேசொல்லலுற்றாள்
இன்னமேனோதான் இருக்குறீர்கள்காவல்தானும்
இந்தமொழிகேட்டார் இன்பமுள்ளமந்திரிமாரும்
வேந்தனையப்போது வேகமாய்பார்த்துமே
அய்யாவேநீர்கேளும் அன்பானவார்த்தைதான்
இனிபயமில்லைதான் என்னைபெற்றதாயிக்கு
அந்தச்சமயத்தில் அங்கிருந்தகாவலர்கள்
பெட்டியையிரக்கினார்கள் பெருமையுடன்பூமிமீது
பெட்டிகதவைதன்னை புகழுடன்திரந்துவிட்டார்
இரத்தவெள்ளமது பூமியில்பிரண்டோடியது
இந்தயதிசயத்தை வேந்தனும்பார்த்துவிட்டான்
கண்களும்தான்சிவந்து பிச்சுவாதானெடுத்து
குத்தியமர்ந்தானே கோவேந்தனச்சமயம்

நவபோஜ மகாராஜன் மந்திரிமாருடன் துக்கமடைவது

அப்பாமந்திரிமாரே அன்பாயென்வார்த்தைகேளீர்
இனிவுடலைவைத்துயான் இவ்வுலகமாளமாட்டேன்
என்-பத்தினிபோனபின்பு பாருலகமாள்வேனே
என்தேவிதான்போனபின்பு தேருலகமாளலாமா
போக்குகிறேனுவியென்று போர்வேந்தன்யெழுந்தானே
இத்தனையும்பார்த்திருந்து யெழுந்தாரேமந்திரிமார்கள்
இப்படிச்செய்வது இதுநீதியல்லவையா
பாலர்முகம்பாரும் பார்வேந்தாயிவ்வேளை
தாயுமேமாண்டுவிட்டார் தந்தையும்மாண்டுவிட்டால்
பாலரையார்காப்பார் பார்மீதுயென்கோவே
தாய்மாண்டபிற்பாடு தந்தைகாப்பாற்றவேண்டும்
இப்படிச்சொல்லியே இருகைபிடித்துக்கொண்டார்
அந்தச்சமயத்தில் அங்கிருந்தமந்திரிமார்கள்
மந்திரவாதியையழைத்து மந்திரிக்கச்செய்தாரே
எத்தாலும்தீரவில்லை யிளநாகம்கடித்தவிஷம்
அந்தச்சமயத்திலே ஆயாசமடைந்தானே
கண்விழித்துப்பார்த்தாள் கருணையுடன்நாயகனை
இரண்டுகரம்தன்னை இன்பமாய்பிடித்துக்கொண்டு
கேட்டிடுநாயகா கிருபையுடனென்வார்த்தை
அறியாதபாலகரை அவனியில்விட்டேனிப்போ
ஒன்றுமறியாதகுழந்தைகளை கைவிட்டேனையாவே
போகுதுயென்னுவி புகழுடன்கைலாசம்
மறுகலியாணம் மன்னவனேசெய்யவேண்டாம்
மாத்தாந்தாய்வந்துவிட்டால் மன்னவனேபாலகரை
சீராட்டிபாராட்டாள் சிறப்புமொன்றுசெய்யமாட்டாள்
இந்தமொழிக்கேட்டு இன்பமாய்வேந்தனும்
மறுகலியாணம் மாதேயான்செய்யமாட்டேன்
பால்சாதம்சத்தியம் பண்புடன்செய்துதந்தார்
அந்தமொழிக்கு அந்தலட்சிமியேதுசொன்னாள்
புருடரைநம்பலாமா புகழுடன்பாரின்மீது
சத்தியங்கள்செய்திடுவார் சாசங்கள்ஆடிடுவார்
இவைஎல்லாம்கேட்டான் இன்பமாய்வேந்தனுமே

லக்ஷ்மிதேவிக்கு நவபோஜ மகாராஜன் சத்தியஞ் செய்வது.

மாதேநீகேளும் மகிழுடனென்வார்த்தை
இதுவேசத்தியம் இனிபிசகேன்வுண்மையிது
எந்தனைமாலையிட்ட இன்பமுள்ளநாயகரே
பாலகரைதான்வளர்த்து பக்குவமறிந்தபின்பு
தகுந்தபுருடரை தான்பேசிபாலருக்கு
கலியாணம்நீர்செய்து காட்சிகள்கண்டபின்பு
மறுகல்யாணம் மன்னவனேசெய்துக்கொள்வீர்
இனிபிராணம்நிற்காது பென்பாலகரைகாட்டுமையா
வேந்தனைப்பார்த்துமே கண்ணீரும்தான்சொரிந்தாள்
சங்காசிவமேயென்று தன்பிராணம்விட்டாளே
இதைக்கண்டுவேந்தனும் இனிதுக்கம்தானடைந்தான்
தாதிகளும்மந்திரிகளும் தானழுதாரப்போது
நாட்டின்குடிகளெல்லாம் நலமாகதானழுதார்கள்
கிழக்குமேடைதன்னில் சிறுவர்கள்தானிருந்தார்கள்
பழையசாதம்புசிக்க பாலர்கள்வந்தார்கள்
தாயிருக்கும்மேடைக்கு துரிதமாய்வந்தார்கள்
அம்மாவேயம்மாவே பெங்களைபெற்றதாயாரே
பசியெடுக்குதம்மா பழையசாதம்போடுமம்மா
எங்குதான்பார்த்தாலும் தாயில்லைமேடைமீது
தாதிகளைதான்பார்த்து தயவுடன்கேழ்க்கலானர்
எங்கள்தாயாரெங்கே யெங்களுக்குசொல்லுமம்மா
இந்தமொழிக்கேட்டார் இளம்பிராயதாதிகளும்
பாலகரைகண்டவுடன் பலதாதிதுக்கங்கொண்டு
துக்கத்தையடக்கிக்கொண்டு மௌனமாயிருந்துவிட்டார்
பதில்மொழிசொல்லாமல் தாதிகளிருந்துவிட்டார்
நான்குபுரம்தன்னில் நலமாகதேடிவிட்டு
பாலநாகம்மாள் பண்புடன்சொல்லலுற்றாள்
அக்காவேநீர்கேளும் அன்புடனேயென்வார்த்தை
மாமன்வீட்டுக்கு மகிழ்ச்சியாய்போய்விட்டாள்
பானுகண்டிப்பட்டணம் போய்விட்டாள்நமதுதாயார்
நாம்வரப்போறேமென்று நம்முடன்சொல்லவில்லை

இப்படிச்சொல்லிக்கொண்டே மேடைமீதேறிப்பார்த்தார்
வீதிகள்தன்னில் கும்பலாயிருக்கும்போது
அக்காவேநீர்கேளும் அன்புடன்யென்வார்த்தை
நமதுபட்டணத்தில் மாணிக்கம்விற்குதம்மா
கும்பலாய்ஜனங்களும் கூடியேவாங்குகின்றார்கள்
நாமும்மாணிக்கத்தை நலமாகவாங்கலாமே
தாய்வந்துகேட்டால் தாணியிலகப்பட்டுதென்போம்
விளையாடுமிடத்தில் யகப்பட்டதென்போமே
இப்படிச்சொல்லியே வாந்தாரேயப்போது
முந்திதான்வந்தாளே முகந்துசூரியநாகம்மாள்
பெற்றதாயாரைப் பார்த்துவிட்டாள்கண்ணாலே
அய்யைய்யோதங்கைமாரே அன்பானநாகம்மா
நம்மைஈன்றதாயாரும் நலமாகசெத்துவிட்டாள்
அன்புள்ளதங்கைமாரே தயாரையெப்போகாண்போம்
மாரிலரைந்துக்கொண்டு மகிழ்ச்சியாய்யழுதுநின்றார்
அன்பானதந்தையரே யெங்களைப்பெற்றதாயாரெங்கே
கோடுகோடென்றழுதார்கள் கோமளப்பாலகரும்
ஐயைய்யோயெங்களை அன்பாய்பெற்றதாயாரே
பத்துமாதம்தன்னை பகர்ந்துயெம்மைசுமந்தாயே
நீரில்லாக்கிணறானேம் நிலகில்லாபடகானோம்
பாரினில்பாதகராய்இப் பாவிகள்பிறந்தோமே
தாயென்றஆசையை தாணியில்மறந்தோமே
அம்மாவேயம்மாவே யெங்களைப்பெற்றதாயாரே
கொண்டையாரிடுவார்கள் குவலயத்திலெங்களுக்கு
ஆடையாபரணங்கள் ஆர்தாநிணிபூட்டுவார்கள்
பொட்டுதானிட்டுயெங்கள் பெருமைதனைபார்ப்பவர்கள்
எங்களழகுதன்னை யார்கண்டுபூரிப்பார்கள்
தயாரில்லாவிட்டால் தந்தையாதரிப்பாரோ
தாயாருக்கல்லவோ சீர்செய்யத்தான்தெரியும்
புருஷாளுக்கென்ன சீர்செய்யத்தான்தெரியும்
இந்தமொழிக்கேட்டு இன்பமாய்தந்தையரும்
பாலகரைப்பார்த்துமப்போ பகர்ந்துஅழுகலானார்
நாட்டின்ஜனங்களெல்லாம் நலமாயழுகலுற்றார்

வசனம்

இப்படிமரணமடைந்த லட்சுமிதேவியை பாலர்கள்பார்த்து துயரமடைந்து அழுஞ்சமயத்தில் இந்தகோரத்தைப்பார்த்து வேந்தனும் நாட்டின் குடிஜெனங்களும் துயரப்பட்டு அதன்பிறகு வேந்தன் தன் துக்கத்தை ஆற்றிக்கொண்டு நல்லசந்தனக்கட்டை தேவதாரி குங்குமக்கட்டை முதலான கட்டைகளைக்கொண்டுவந்து காஷ்டமடிக்கி அதில் லட்சுமிதேவியை தகனஞ்செய்துவிட்டு கர்மானுஷ்டானங்களை தீர்த்துக்கொண்டு பாலகரோடு சந்தோஷமாயிருக்குஞ் சமயத்தில் அப்பாலகரை தாயின்மேல் ஞாபகமில்லாமல் இருக்கும் பொருட்டுதகுந்த மாம்பழம் பெலாப்பழம் வாழைப்பழம் கிச்சிலி முதலான பழங்களைகொண்டுவந்து பாலகர்களுக்கு கொடுத்து சிறப்புடன் வாழுஞ்சமயத்தில்.



நவபோஜராஜன் தர்பாரில் குடிஜெனங்கள் வந்து நீதி சொல்வது

இப்படியாக இருக்குமந்தகாலத்தில்
பட்டணத்திலிருக்கும் பலகுடிஜெனங்களும்
பந்துஜெனங்களும் பலபேர் கொலுவமர்ந்து
அய்யாவே ராஜேந்திரா அன்புடன்நீர்கேளும்
இப்படியிருப்பது இது நீதியல்லவையா
மறுகல்யாணம் மகிழ்ந்துமே செய்துக்கொள்வீர்

இந்தமொழிக்கேட்டு யேதுசொல்வான் வேந்தனுமே
இப்படிச்சொல்வது நீதியல்லஉங்களுக்கு
மறுகல்யாணம் மகிழ்ச்சியாய் செய்யமாட்டேன்
பாலர்பிழைத்திருந்தால் பாக்கியமதுவேயாகும்
என்னுடையதேவிக்கு இன்பமாய்யானுமேதான்
சத்தியங்கள்தன்னை செய்துமேகொடுத்தேனே
மரணமடையும்போது மங்கைதான் யென்னைப்பார்த்து
மறுகலியாணம் மகிழ்ச்சியாய்செய்யாதீர்
என்றுமேசொல்லி எந்தனுக்குத்திட்டமும்செய்தாளே
அந்தமொழிதன்னை அன்பாகத்தள்ளமாட்டேன்
இப்படிச்சொல்லவே இதுகேட்டார் பலஜனங்கள்
மறுகலியாணம் மன்னவனே யாகாவிட்டால்
உந்தன்கொலுவிற்கு உகந்துயாரும் வரமாட்டார்
முண்டை ராஜ்யமென்று முகந்துமே சொல்வார்கள்
எங்கள்மொழிகேட்டு இன்பமாய் நடவுமையா
இந்தமொழிக்கேட்டு யேதுசொல்வான் வேந்தனுமே
எத்தனைச்சொன்னாலும் ஏற்காது உங்கள்வார்த்தை

வசனம்.

இப்படியெல்லாம் குடிஜனங்கள் சொன்னதைக்கேட்டு வேந்தன் சம்மதமடையாமலிருப்பதை மந்திரிமார் தெரிந்துக்கொண்டு வேந்தனுடைய பெரிய புதல்வியான சூரியநாகம்மாளைப்பார்த்து அம்மா இப்படி வேந்தன் இருப்பது அழகாகுமா நீங்கள் புத்தியறிந்தவர்கள் உங்களுக்கு சீராட்டுவதற்குறியதாயாரிருந்தால் நலமல்லவா வேந்தனைக் கலியாணஞ்செய்துக் கொள்ளும்படி எத்தனைவிதமோ சொல்லிப்பார்த்தோம் கேழ்க்கவில்லை ஆகையால் உங்கள்தந்தைக்கு உகந்தபடிச்சொல்லி மறுகலியாணம் செய்துக்கொள்ளும்படி திட்டஞ்செய்யீரென்று சொல்லியனுப்ப அம்மொழிகளைக்கேட்ட சூரியநாகம்மாள் சம்மதமடைந்து தந்தையின்வருகையை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தாள்.

சுந்திரமானதொரு சூரியநாகம்மாள்
நல்லதென்றுசொல்லி நலமாகயிருக்கையிலே
நவபோஜவேந்தன் நாடிகொலுவைவிட்டு
பாலகரைநினைத்துக்கொண்டு பார்வேந்தன்தான்வருக
தந்தைவருவதை தனிமையுடனறிந்துக்கொண்டு

சூரியநாகம்மாள் தந்தையை கலியாணஞ்செய்துக் கொள்ளும்படி புத்திகூறல்.

தந்தைக்குயெதிரில்வந்து தலைவணங்கிதெண்டனிட்டு
என்னைபெற்றதந்தையே இன்பமாய்நீர்கேளும்
சின்னவயதுதன்னில் சிறப்புடனேயாதரித்தீர்
ஈரைந்துவயதாச்சு இப்போதுயெங்களுக்கு
சேலைகள்கட்டிடவும் சிறப்புடன்நீர்வார்க்கவும்
பெண்களுக்குதகுமேதான் புருஷருக்கு ஏற்காது
மறுகலியாணம் தந்தையேநீர்செய்துக்கொண்டால்
உங்களுக்குவருந்தேவி உகந்தெம்மையாதரிப்பாள்
ஆகையால்நீரிப்போதே துரிதமாய்கலியாணம்
தந்தையேசெய்துக்கொள்வீர் தாணியோர்தான்மகிழ
இந்தமொழிக்கேட்டு ஏதுசொல்வான்மன்னவனும்
அம்மணியேநான்பெற்ற அறிவுள்ள பாலகியே
உங்களுக்குயிந்தமொழி உகந்துசொன்னதாறம்மா
உங்கள்புத்தியாலே ஊகித்துசொன்னீர்களா
கற்பனைசெய்தாரோ கருணையுள்ளபாலகியே
நான்பெற்றபாலகியே நாகம்மாநீகேட்ப்பாய்
உங்கள்தாயாருக்கு உகந்துசத்தியம்செய்துதந்தேன்
சத்தியம்பிசகமாட்டேன் தாணியோர்தான்மகிழ
இந்தமொழிக்கேட்டு யேதுசொன்னாள் நாகம்மாள்
எந்தனுக்குதாயாரை இப்பவேகாட்டுமையா
மாண்டுவிட்டதாய்தானும் மண்டலத்தில்வருவாளோ
இப்படிசொல்லவே இதுகேட்டான்வேந்தனும்
அம்மாவேநீகேளாய் அன்புள்ளநாகம்மா
உங்கள்தாயார்போலவே உலகத்தில்கிடைக்கமாட்டார்
விரதங்கள்கெட்டாலும் சுகமடையவேணுமம்மா
இப்படிக்கில்லாவிட்டால் ஏன்கலியாணம்செய்வது
இதுபோலசொல்லிவிட்டு யெழுந்துமேபோய்விட்டார்
இந்தநல்லசேதிதன்னை மந்திரிமார்தானறிந்தார்

வசனம்.

இப்படிச் சொன்னமொழிகளை மந்திரிமார் தெரிந்துகொண்டு இதற்குதக்க ஏற்பாடுசெய்யவேண்டுமென்று மனதில்நினைந்து இவ

மருந்தெடுத்து எண்ணையில் கலக்கி தாதிக்கையில் கொடுத்து இதை நாளையதினம் ஸ்நானஞ்செய்யுங்காலத்தில் வேந்தனுக்கு தலைக்குத் தேப்பீரென்றுச் செல்லிக்கொடுக்கவே அதுபோல்தாதிகள் பெற்று மறுதினம் உதயத்துக்கெல்லாம் ஸ்நானஞ்செய்யவருக அச்சமயத்தில் எண்ணைத்திட்டி ஸ்நானஞ்செய்துவைத்தார்கள் வேந்தன் ஸ்நானம்செய்தபிறகு திவ்யபோஜனமருந்திரத்தினகசிதமாகிய மஞ்சத்தின்மீது சயனித்துக்கொண்டார்.

அப்போதுவேந்தன் ஆயாசம்தானடைந்து
மஞ்சத்தின்மீது மகிழ்ந்துநித்திரைசெய்தாரே
நித்திரையில் தானும்சொர்பனங்கண்டாரே
கலியாணமென்றுசொல்லி கினவுகண்டுதானெழுந்து
இப்படியிருப்பது நலமல்லவென்றுசொல்லி
எப்படியாகிலும் இப்புவியில்கலியாணம்
செய்துக்கொள்ளவேண்டும் சிறப்புடனேயிப்போது
என்றுமனதில்நினைந்து யெழுந்துமேகாவலரை
அப்பவேதானழைத்து அறிவேந்தன்சொல்லலுற்றான்
ஆடாகாவலனே அதிவேகமாய்நீசென்று

நவபோஜவேந்தன் மந்திரியை அழைத்து கலியாணத்திற்கு பெண்தேடும்படி திட்டஞ்செய்தல்.

மந்திரிதன்னையேமகிழுடனழைத்துக்கொண்டு
சீக்கிரமாக சிறப்புடனவாருமய்யா
என்றுமேசொல்லி இசைந்துயனுப்பிவிட்டான்
காவலரப்போது கடுகவேவோடிவந்து
மந்திரியெதிரில்நின்று வந்தனங்கள்செய்தார்கள்
அய்யாவேவுங்களை அரிவேந்தனிப்போது
அழைத்துவரும்படி ஆக்கினையிட்டாரே
வாருமையாவென்று வகையுடனழைத்தாரே
இந்தமொழிகேட்டு யேதுசொன்னர்மந்திரியும்
ஆனல்வருகிறேன் அடாகாவலனேயிப்போது
என்றுமேசொல்லி எழுந்துவந்தான் மந்திரியும்
வேந்தன்முன்னில்வந்து வந்தனங்கள் செய்தாரே
அய்யாவே நீங்களும் அழைத்தகாரியமேதையா
எங்களுக்குச்சொல்லுமே இன்பமாயிப்போது
இந்தமொழிக்கேட்டு யெடுத்துச் சொன்னன் வேந்தனும்
மந்திரிநீகேளாய் மகிழுடனென்வார்த்தை
எந்தன்தேவிபோல உலகத்தில்தேவிதன்னை
இன்பமாய்நீர்சென்று கண்டுமேவரவேண்டும்
கலியாணத்திற்கு கடுகமுடிவுசெய்துவாரீர்
இந்தமொழிகேட்டு எதுசொல்வார் மந்திரிகளும்
உங்களிஷ்டம்போல் உகந்துமேதேடிவாரோம்
இப்படிச்சொல்லியே இசைந்துமே நடக்கலுற்ருர்
மந்திரிகளிருவரும் மகிழ்ந்துமே புறப்பட்டார்
காடுமலைதாண்டி கடுவனங்கள்தான்தாண்டி
ஆறுநதிகள்தாண்டி ஆவலாய்வருகின்ருர்
இஞ்சிவனம்தாண்டி இருண்டவனந்தோப்பைவிட்டு
தேசதேசங்கள்தோறும் திரிந்துமேபார்க்கையிலே
எங்குபார்த்தபோதிலும் இணையில்லைபெண்பாவை
நயனபட்டணம் நலமாகவந்துசேர்ந்தார்
அந்தநாட்டையாளும் அறிவுள்ளதவளவேந்தன்
வேந்தன்முன்பாக மந்திரிகளும் வந்தார்கள்
எதிரில்தான்வந்து வந்தனங்கள் செய்தாரே
இவர்களைகண்டவுடன் இச்சையுடன் கேழ்க்கலுற்ருன்
எந்தவூர்ரெந்ததேசம் இங்குவந்தவயுணமேது

வந்தவிபரங்களை வகையுடன்சொல்லுமென்றான்
இந்தமொழிகேட்டு எடுத்துச்சொன்னார் மந்திரிகளும்
அய்யாவேநீர்கேளும் அன்புடனே எங்கள்வார்த்தை
வடக்கேவெகுதூரம் வாழ்வதுபூச்சக்கரபட்டணமாம்
அந்தநல்பட்டணத்தை அன்பாகஆண்டுவரும்
நவபோஜவேந்தனுக்கு நலமுள்ளதேவியாரும்
மாண்டுசுகமடைந்தாள் மறுகலியாணஞ்செய்யவே
இச்சைதான்கொண்டார் இப்பபோதேவுங்களிடம்
மாதுகளிருந்தால் மகிழுடன்தருகின்றீரா
இந்தமொழிகேட்டு யேதுசொல்வானவ்வேந்தன்
அப்படியேதருகிறேன் ஆனதோர்வேந்தனுக்கு
என்னென்னபணிகள்தான் ஈடுதான்கட்டுவீர்கள்
என்றுமேதவளவேந்தன் யின்பமாய்கேட்டாரே
இந்தநல்லமொழியை மந்திரிமார்தான்கேட்டு
அய்யாவேநீர்கேளும் அன்புடனே எங்கள்வார்த்தை
காப்புகொலுசுதான் கனமானவொட்டியாணம்
பச்சைபதக்கமும் பகர்ந்தகெம்புபட்டிகையும்
இப்படிக்கொத்தநகைகள் இன்பமாய்கட்டுகிறோம்
இந்தமொழிக்கேட்டான் இன்பமுள்ளதவளவேந்தன்
சந்தோஷம் தானடைந்து சங்கதி சொல்லலுற்றான்
உங்களது இஷ்டம்போல் உகந்துமே செய்துக்கொள்வீர்

வசனம்.

இப்படி சொன்னவுடனே மந்திரிகள் சந்தோஷமடைந்திருக்க அந்தசமயத்தில் அவ்வேந்தன் விப்பிரவரையழைத்து நாள்பார்க்கையில் இன்று எட்டாம்நாள் சுபலக்கினமென்றுச்சொல்ல அது போல் மந்திரிகளுக்கு திட்டஞ்செய்து எட்டாந்தினத்தில் வேந்தனையும் பந்து ஜனங்களையும் வரும்படி சொல்லியனுப்பிவிட்டார் பிறகு மந்திரிமார்கள் புறப்பட்டு பூச்சக்கிரப்பட்டணமடைந்து வேந்தனைப்பார்த்து ஐயா நாங்கள் இந்த ஐம்பத்தைந்து தேசமும் சுற்றிப்பார்த்து எங்கும் மாதுகிடைக்காதபடியால் கடைசியாக நயனபட்டணத்தை பரிபாலிக்கும் தவளவேந்தனிடம் விசாரிக்க அவ்வேந்தனுக்கு மாணிக்கதேவி என்றொருபுதல்வி இருக்கின்றது அதைப்பார்த்து அவ்வேந்தன் சம்மதிக்கும்படி மொழிகளாடி நாளை எட்டாந்தினத்தில் முகூர்த்தம் வைத்துக்கொண்டு வந்தோமென்று சொல்ல அந்தவார்த்தைக்கு சந்தோஷமடைந்து இந்த முகூர்த்தம் உங்களுடையதென்றுச்சொல்லி புறப்பட எத்தனமிட்டார்.

அந்தசமய,த்தில் அறிவுள்ளமந்திரிகளும்
ஏழுபல்லக்கு எடுத்துமேவெளியில்வைத்தார்
பல்லக்குதனிலே பாலகரையேற்றிவிட்டு
கூடவுந்தாதிகளை கும்பலாய்வரச்செய்து
மன்னனையலங்கரித்தார் மகிழுடனவ்வேளை
கலியாணபுருடனைப்போல் கடுகயலங்கரித்தார்
மேளங்கள்தான்முழங்க மிருந்தநாகசுரமூத
போயிகள்தானுமே பல்லக்கெடுக்கலுற்றார்
ஏழுமக்களுடனே இன்பமாயவ்வேந்தன்
சகலசம்பிரமமாக நயனபட்டணம்தானடைந்தான்
கேட்டானேதவளவேந்தன் கிருபையுடனிச்சேதி
பானகம்நீர்மோர் பக்குவமாய் தான்கொடுத்து
தாகந்தான்தீர்ந்தபின்பு தயவுடனேவிடுதிகாட்டி
விடுதியிலிருக்கச்சொல்லி வேகமாயவ்வேந்தன்
பவளகால்கம்பம்நட்டு பச்சையாகபந்தலிட்டு
நாலுவீதிகளும் நலமாயலங்கரித்து
முகூர்த்தங்கள்செய்ய முகந்துமேநின்றார்கள்



நவபோஜ மகாராஜனுக்கு 2-வது கலியாணமாகுதல்

வசனம்.

இப்படிநாடெல்லாம் அலங்கரித்து மாணிக்கதேவிக்கு நலங் கிட்டு ஸ்நானஞ்செய்துவைத்தபிறகு வேந்தனை அலங்கரித்துகலியா ணபந்தலுக்கழைத்துவருஞ் சமயத்தில் மாணிக்கதேவிதாதிகள்.

மாணிக்கதேவியை மகிழுடனலங்கரித்தார்
சம்பங்கியெண்ணெக்கொண்டு சரசமாய்தலைவாரி
ஜன்னல்பின்னலிட்டு தகுந்தமல்லிமுல்லையுடன்
இருவாக்ஷிசெண்பகம் இணையில்லாரோஜாவும்
குண்டுமல்லிகையும் குணமுடன்கொண்டையிட்டு
நெற்றிக்குசிட்டிகட்டி நேர்விழிக்குமையெழுதி
கஸ்தூரிபொட்டுமிட்டு கனபணிகள்தானும்பூட்டி
கூரைச்சேலைதான்கட்டி குணமானமாதர்கள்
சுபம்சுபம்மென்றுசொல்லி சுறுக்காகபந்தல்தன்னில்
கலியாணப்பிள்ளையுடன் கனசுண்டுவிரல்தான்பிடித்து
பந்தக்கால்சுற்றிவந்து பக்குவமாயமர்ந்தாரே

வசனம்.

கல்யாணமணையில்இருவரும் அமர்ந்தவுடன் வேதியர்வேதகோஷ் டம்பாடி மாங்கல்யம் தரிக்கச்செய்து பிறகு சேஷையரிசியிட்டு இருவரும் எழுந்துபோகுஞ்சமயத்தில் பாலர்மீது கியாபகம் வேந் தனுக்கு வருக இதைமாணிக்கதேவியின் தயாரிந்து இப்படிபாலர் மீதுகியாபகமுடைய வேந்தனுக்கு நமது புதல்வியை தந்தோம் ஆனால்இவன் கியாபகத்தை மறக்கடிக்கச்செய்யாமல் போவேனு என்று சொல்லி அந்தப்புரமடைந்தாள் இதற்குள் மாணிக்கதேவி பாலரிடம்வந்து பாலகரைப்பார்த்து நிற்க சூரியநாகம்மாள் தன் தந்தைக்கு வந்ததேவியென அறிந்து அமரும்படிச்சொல்ல அம் மாது அமர்ந்து அம்மா உங்கள் எழுபேர் நாமதேயமேது அடியா ளுக்குத்தெரியச் சொல்லுமென்று கேழ்க்க அதுபோல் பாலர்கள் சொல்ல அதற்கு மாணிக்கதேவி சொல்லத்தொடங்கினாள்.

மாணிக்கதேவி எழுபுதல்வருடைய துக்கங்களைமாற்றி அலங்கரிப்பது.

உங்களுக்குபொட்டுகள் உகந்தேவர்களிட்டார்கள்
தலைவாரிக்கொண்டைதான் தாரணியில் போட்டார்கள்

இந்தமொழிக்கேட்டு இசைந்துமே பாலர்சொல்லலுற்றார்
சிற்றன்னையெநீர்கேளாய் சிறப்புடனெங்கள் மொழி
எங்களைப்பாராட்ட இவ்வுலகில்யாரிருக்கின்றார்கள்
பிறந்தவுடனேதாயை போக்கடித்துக்கொண்டோமே
எங்கள்தந்தைதானும் இந்தபொட்டுயிட்டாரம்மா
எங்கள்தந்தைதானும் இந்தசேலை கட்டினாரே
தாயைநினைந்து தனிபாலர்கள்துக்கமிட்டார்
கண்ணீர்சொரிய கலங்கியவரழுகலுற்றார்
இப்படியவரழவே எதிரிருந்தமாணிக்கதேவி
பாலர்கள்துக்கமாற்றி பண்புடன்தன்சேலையால்
கண்களை துடைத்து கடுகவேபாலருக்கு
ஸ்நானங்கள் செய்துவைத்து தனிமையுடன் தலைவாரி
கொண்டையிட்டு பொட்டுமிட்டு குலுங்கசந்தனம்பூசி
ஏழுபேர்பாலருக்கு இன்பமதாய்சேலைகட்டி
நிலைக்கண்ணாடியெதிரில் நிற்கவைத்துபார்க்கச்செய்தாள்
கண்ணாடிதன்னில்பார்த்து கடுகனவேசொல்லலுற்றார்
பெண்களுக்கல்லவோ பிரியமதுயிருக்குமம்மா
புருடருக்கென்ன பாலர்சுகம் தெரியுமம்மா
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள் மாணிக்கதேவி
சந்தோஷந்தானடைந்து சம்பிரமமாய்ப்போகலுற்றாள்

வசனம்.

இப்படியாக மாணிக்கதேவி கங்கணகையுடன் பாலரிடம் வந்து அவர்களை சிங்காரித்து தேருதலைச்செய்து விட்டுபோக ஐந்தாம் தினத்தில் கங்கணம்அவிழ்க்க அதன் பிறகு வேந்தன்ஐந்தா நாள் அந்நாட்டிலிருந்து மறுநாள் உதயத்துக்கெல்லாம் புறப்பட்டு பரிஜனங்களுடன் பூச்சக்கிரப்பட்டணம் வருக அந்தசமயத்தில் காவலர் எதிரே ஓடிவந்து பட்டத்துயானை இறந்துவிட்டதென்று சொன்னவுடனே வேந்தன் மந்திரியைப்பார்த்து இதுயென்ன விந்தையென்று கேட்டான் அதற்குமந்திரி ஐயா இதுகாலஞ்சென்று மரணமடைந்துவிட்டது இதைப்பற்றி துயரப்படவேண்டாமென்று சொன்னவுடன் வேந்தன் மனக்கவலை அடைந்து நடக்கலுற்றான்.

நவபோஜமகாராஜன் பத்தினியோடு தன்நாட்டிற்கு வருவது

பட்டணத்துக்கப்போ பிரியமாய்வந்தாரே
நான்குவீதிகளும் நலங்கோலம்வந்தாரே
சிங்கதுவாரமாக சிறப்புடன்வந்தாரே

அந்தச்சமயத்தில் ஆண்டூலமப்போது
மடமடவென்று உடைந்ததுயெதிராக
இந்தஅதிசயத்தை பார்த்திராமந்திரிமாரே
அந்தமொழிக்கேட்டு அங்கிருந்தமந்திரிகளும்
ஏதுமேபேசாம லிருந்துவிட்டார் களந்தவேளை

வசனம்.

இப்படிச் சொன்னவுடனே சிலமாங்கல்ய பெண்கள் கும்புக் கூடி கலியாணப்பெண்ணை அழைத்துக்கொண்டு வீட்டிற்கு வர அந்தச்சமயத்தில் இடதுகால் வைக்கவே அடுக்கு பானைகள்யாவும் சாய்ந்துவிட்டது இதைக்கண்டுவேந்தன் கேழ்க்க மந்திரிமார் ஏதும்பேசாமல் மவுனமாய் இருந்துவிட்டார்கள் இம்மாது வந்த தெசையானது பால்பாண்டம் உடைந்து தொழுவத்திலிருந்த தொரு பசுமாடுகள் இரந்ததையறிந்த வேந்தன் தனியாக மேடைக்கட்டி அதில் அம்மாதை இருக்கச்செய்து வேந்தன் அம்மாதுடன் வசனிக்காமல் வெறுத்து இருந்தான் இப்படியிருக்க டில்லிசேவகர்வந்து வேந்தனை டில்லி ஜமாபந்திக்கு வரும் படிச்சொல்ல அந்தசமயத்தில் வேந்தன் புறப்பட்டுபோக எத்தன மிட்டான் இதைக்கண்டு மாணிக்கதேவி பாலகரையழைத்து அம்மா உங்களை தந்தையழைத்தால் சிறியதாயாரிடம் இருக்கிறோமென்று சொல்லுங்கள் என்றுசொல்லிவிட அதுபோல் பாலர் தந்தையரைப் பார்த்து ஐயா நீர் டில்லிக்குப்போய் வருமளவும் நாங்கள் சிற் றன்னையிடம் இருக்கிறோமென்று சொன்னவுடன்வேந்தன் மாணிக்க தேவியிடம் வந்து பாலகரை காப்பாற்றும்படி திட்டஞ்செய்து விட்டுபோக மத்தியில் பௌர்ணமி வந்தபடியால் பாலகரைப்பார்த்து மாணிக்கதேவி அம்மா நீங்கள் விரதமிருந்து பூர்ணச்சந்திரனை தெரிசனம் செய்துபுசித்தால்நன்மையுண்டாகும்என்று சொன்னான்.

மாணிக்கதேவி பாலருக்கு புத்திகூறுவது.

சந்திரன்போல்புருடன் சிறப்பாய்அமைப்பானம்மா
இந்தமொழிக்கேட்டுபாலர் சந்தோஷமடைந்தாரே
இரண்டுமணிநேரம் இச்சையுடனவரிருந்து
அந்தச்சமயத்தில் ஆட்சியுள்ளசிற்றன்னையே
பசியுமெடுக்குதம்மா பாலர்நாங்கள் தாளமாட்டோம்
அன்னமிடுமம்மா அன்புடனேயெங்களுக்கு

இந்தமொழிகேட்டாள் இன்பமாய்மாணிக்கதேவி
இருங்களடிமுண்டைகளே இப்பவேசமைக்குறேன்
மொட்டுமொட்டுயென்று தலையில்குட்டினளப்போது
இந்தஅடிப்பட்டு யெண்ணமிட்டார் பாலகரும்
ஐயோதெய்வமேயென்று அழுதுமே நின்றார்கள்
தந்தையின்பின்பறறி போகாமல் நின்றோமே
இப்படிக்கெல்லாம் இம்சைசெய்வாள் என்றறியோம்
தந்தைஓரடிதான் தயவுடனடிக்கமாட்டார்
பெற்றதாயுமெங்களை பிரியமுடனடிக்கமாட்டாள்
இவள்கையாலடிப்பட இட்டானேபாவிபிரம்மன்
இப்படிதுக்கிக்க இதுகண்டாள் மாணிக்கதேவி
ஏழுபேருக்கப்போ இன்பமாய் பாண்டங்களை
பாண்டங்கள்தன்னில் தொண்டிகள்செய்தாளே
ஏழுப்பேர்கையில் இன்பமாய்தான்கொடுத்து
அம்மாவேபாலகரே அன்புள்ளசெல்விமாரே
உபவாசமிருந்து உகந்துநித்திரைசெய்யலாமா
தண்ணீரெடுத்துவாரும் தயவுடனிப்போது
இந்தமொழிக்கேட்டார் இன்பமுள்ளபாலகரும்
அம்மாவேநீர்கேளும் அன்புள்ளசிற்றன்னையே
தாகமெடுக்குதம்மா தயவுடனே நீர்கொடுப்பாய்
இதைக்கேட்டு அம்மாதுமே சொல்லலுற்றாள்
தண்ணீரெடுத்துவந்தால் தாகமருந்துவீர்கள்
அப்போதுபாலகர்கள் அன்புடனேசொல்லலுற்றார்
பாதைதெரியாதம்மா பண்புடனே துரைக்கேக
இப்படிச்சொல்லியவர் எல்லோருமழுதார்கள்
மாணிக்கதேவியும் மகிழுடனேசொல்லலுற்றாள்

கிணறு

கிணற்றருகில் பாலகர்கள் நினைத்து துக்கிப்பது.

தெருக்கோடிதன்னிலே தெப்பக்கிணறிருக்கிறது
நீங்களுஞ்சென்று நீகழுடனெடுத்து வருவீர்கள்
அந்தமொழிக்கேட்டு எல்லோரும்நடந்தார்கள்
இன்றைக்குநமக்கு இந்தகஷ்டம்வந்துசேர்ந்தது
பாவிவயற்றினில் பெண்ணாகப்பிறந்தோமே
பிறந்ததினத்திலே பெருமையுள்ள எங்கள்தாயார்
கொல்லாமல்விட்டாளே கொடுமையுடனப்போது
தந்தைசொன்னமொழியை தாரணியில்வெறுத்தோமே
கண்ணில்ஜலமொழுக கடுகநடந்தாரே
கிணற்றினருகில்வந்து கொப்பெனவேநின்றுக்கொண்டு
எப்படிமாள்ளுவோம் இன்பமுள்ளயிக்கிணற்றில்
அம்மாடியம்மாடி அன்புள்ளயென்தாயே
பசியுமெடுக்குதம்மா பாவிகளுக்கிப்போது
எங்கள்பசிதீர்க்க எவரையுங்காணோமே
வாவென்றழைக்க வையகத்திலாருமில்லை
பிள்ளைகளென்றுச்சொல்லி பிரியமுடன்சாதமிட
ஆரையுங்காணோமே அத்வானகானகத்தில்
இப்படிச்சொல்லிதான் ஏழுமக்களுமழுதார்கள்



ஏழுபாலகரும் பழவற்கங்களைப் பறித்துத்தின்பது

வசனம்.

இப்படி பாலர்கள் பசியால் பிரலாபித்து அழுஞ்சமயத்தில் லட்சுமிதேவி நிரந்தரமாய், மா, பலா, வாழை, கொய்யா, கிச்சிலி, இப்படிப்பட்ட செடிகளை நிமிர்த்தி அதில் பழங்கள் இருக்கச் செய்ய இச்செடிகளைப்பார்த்து பாலர் சந்தோஷமடைந்து செடிகளேறி பழங்களைப்பறித்துத்தின்று கிணற்று ஜலத்தைக்குடித்து பசியாற்றிக்கொண்டு தண்ணீர் குடமெடுத்து இடுப்பில்வைத்துக் கொண்டு வீட்டிற்கு நடக்கலுற்ருர்.

தண்ணீர்குடத்தில் தண்ணீர்தான்கிடையாது
பொத்தல்வழியாக போச்சுது ஜலமெல்லாம்
கட்டியசேலைகள் நடுகநனைந்துதப்போ
சிற்றன்னையைப்பார்த்து சிறப்புடன்சொல்லலுற்ருர்
அம்மாவே நீகேளாய் அன்புடனெங்கள்வார்த்தை
பானைகளெல்லாம் பொத்தலாயிருக்குதம்மா
இந்தமொழிக்கேட்டாள் இன்பமாய்மாணிக்கதேவி
என்னடிமுண்டைகளே இப்படிச்செய்துவந்திர்
கிணற்றிலுடைத்திரா கீழேபோட்டுடைத்திரா
இப்படிச்சொல்லியே இசைந்துகொம்பை தானெடுத்தாள்
வாங்களடிமுண்டைகளாவென்று ஓங்கிஅடிக்கலுற்ருள்
தெரித்தியடிக்கலுற்ருள் சிருவரையப்போது
இந்தஅடிப்பட்டு ஏதுசொன்ஞர்பாலகரும்
அம்மாவேசிற்றன்னையே அன்புடன்நாங்களுமே
என்னதப்பிதம் செய்தோம் இன்பமாயிப்போது
எங்களையடித்தால் யெவர்வந்துதான் தடுப்பார்
தந்தையில்லாவேளையிலே தாமிப்படியடிக்கலாமா
ஐயோதெய்வமேயென்று யலரிதுடித்தாரே
அழுதுமேஅப்போது ஆயாசமடைந்தார்கள்
அம்மாவேயெங்களுக்கு அன்னம்போடாவிட்டாலும்
தாகத்துக்காஞலும் தயவுடன் தாருமம்மா
இந்தமொழிக்கேட்டு ஏதுசெய்தாளத்தேவி
தாகந்தருகிறேன் தாமதமாயிருப்பீர்கள்
இப்படிச்சொல்லி இசைந்துமேமாணிக்கதேவி
பிழைக்கடைவழியாக பிரியமாய்தான்சென்று

எருக்கங்கள்ளிப்பாலே இன்பமாய்பிழிந்தாளே
சங்குபாஷாணத்தை சுருக்காகபொடிசெய்து
மூன்றும்வொன்றாய்கலக்கி முகந்துமேகொண்டுவந்து
பாலுடன்தான்கலக்கி பிரியமாய்காபிசெய்தாள்
ஏழுக்கிண்ணங்களில் இன்மபாய்வூற்றிவைத்து
வாராய்சூர்யநாகம்மா வகையுடன்தாகங்கொள்ள
சந்திரநாகம்மா சிறப்புடனேவருகுவாய்
பாலநாகம்மா பிரியமாய்வருகுவாய்
சாதமாகநேரஞ்செல்லும் தாகமதைகுடிப்பீரே
இப்படிச்சொல்லவே இசைந்துக்கொண்டார்பாலகரும்
ஏழுப்பேருமப்போ எடுத்தாரேகிண்ணங்களை
ஒன்றுமறியாத உத்தமபாலகரும்
சூதுவாதறியாத சுந்திரபாலகரும்
காப்பியென்றுக்குடித்துவிட்டார் கனமுடனேபாலகரும்
குடித்தநிமிஷத்திலே குணமுடனேமாரடைக்க
என்னம்மாசிற்றன்னையே எங்கள்தலைசுழற்றுதம்மா
கண்கள்சுழற்றுதம்மா காந்தம்போல்வேர்க்குதம்மா
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்மாணிக்கதேவி
எந்தன்கைப்பாலும் விஷமாச்சோவுங்களுக்கு
உங்கள்தந்தைக்கும்விஷமாச்சு உங்களுக்கும்விஷமாச்சோ
பாவிசண்டாளி படுபாவிமாணிக்கதேவி
இடதுகால்கொண்டு எட்டியுதைத்தாளே
ஏழுபேரையுமப்போ எட்டிமயிர்தான்பிடித்தாளே
சிறியவீட்டில்தள்ளி சிறப்புடன்கதவடைத்தாள்
கதவையும்தாளுமிட்டு கடுகவேசயனித்தாள்
தாயில்லாபாலகர்கள் தத்தளித்தாரவ்வீட்டில்
நுரைகளும்தள்ளுது நிற்கபாதம்தளருதே
பெற்றதாயாரை பிரியமாய்நினைத்தாரே
அந்தச்சமயத்தில் அழகானலட்சுமிதேவி
மாயமாய்தான்வந்து மக்களுக்கப்போது
பாவிகொடுத்தவிஷம் பாலாகச்செய்தாளே
அந்த நிமிஷத்தில் அங்கிருந்தபாலகரும்
தட்டினதுபோலாக எழுந்தார்களப்போது
கொஞ்சநேரம்பொருத்து கூப்பிட்டார்மக்களும்

பொழுதுமேபோச்சுதம்மா புகழானசிற்றன்னையே
கதவைதிறவுமம்மா கடும்பசியெடுக்குதம்மா
இந்தமொழிக்கேட்டு இசைந்தாளேமாணிக்கதேவி
முண்டைதான்பெற்றெடுத்த மூதேவிபாலகற்கு
சாவுத்தான்வரவில்லையே சண்டாளபாலகற்கு
அந்தச்சமயத்தில் அரும்பாவிமாணிக்கதேவி
பத்துவீசைமிளகாய் பாங்குடன் தானெடுத்து
அந்தவீட்டில்கொட்டி அக்கினியைமூட்டிவிட்டாள்
இந்தபுகைதானும் இவர்களைச்சூழ்ந்திடவும்
மூச்சியும்பேச்சியும் முகர்ந்துமேவரவில்லை
பெற்றதாயாரை பிரியமாய் நினைத்தார்கள்
மாண்டதோர்லட்சுமிதேவி மக்கள்படுந்துயரம்பார்த்து
சாம்பிராணிவாசனைப்போல் சம்பிரமாய்செய்துவிட்டாள்
பாலகர்ஒழிந்தாரென்று பண்புடன்மாணிக்கதேவி
கதவைதிறந்தாளே கருணையாய்யப்போது
மக்களும்பார்த்தார்கள் மாணிக்கதேவியை
பசிக்குதம்மா எங்களுக்கு சாதமும்போடுமம்மா
இந்தமொழிக்கேட்டாள் இன்பமாய்மாணிக்கதேவி
சொல்லத்தொடங்கினள் சுந்திரப்பாலகறகு
மக்களேகேளுங்கள் மகிழுடனென்வார்த்தை
உபவாசமிருந்து உலகத்தில் பலனென்ன
கோயிலுக்குபோகாமல் கொப்பெனவேசாப்பிட்டால்
கிழப்புருடன்தான் கிருபையுடனமைப்பானம்மா
கோவிலைதான்தேடி கொப்பெனவேபோகலாம்
எல்லோரும்வாருங்கள் இன்பமாய்போகலாம்
இப்படிச்சொல்லவே இதுகேட்டார்பாலகரும்
சம்மதம்தானடைந்து தாயென்றுபுறப்பட்டார்கள்
ஏழுபேருடனே இன்பமாய்மாணிக்கதேவி
காட்டுமார்க்கமாக கடுகநடக்கலுற்றார்
ஆனைபுலிகள் அன்பாய்வாழும்காடுதன்னில்
ஒண்டிகோவிலைக்கண்டாள் உகந்துமாணிக்கதேவி
கோயிலருகில்வந்து கோவில்கதவுதாள்திறந்தாள்
மக்களேநீங்கள்சென்று மாதேவியெதிரில்வந்து
நல்லபுருடனை நலமாயமைக்கச்செய்யுமென்று

வந்தனங்கள்செய்து வருவீரென்றுசொல்ல
அந்தமொழிக்கேட்டு அன்பானபாலகரும்
நல்லதுஎன்றுசொல்லி நடந்தாரேபாலகரும்
ஏழுபேருமாக இன்பமாய் கோவிலுக்குள்
போனவுடனே இப்பொல்லாதசண்டாளி
பாதகிசண்டாளி பாடுபாவிமாணிக்கதேவி
கதவைத்தான்மூடி கடுகவேதாளுமிட்டாள்

கோயிலுக்குள் பாலகர் துயரமடைவது.

அந்தச்சமயத்தில் அங்கிருந்தபாலகரும்
குய்யோமுறையோவென கூச்சலிட்டழுதாரே
அம்மாசிற்றன்னேயே அன்னீதம்செய்யலாமா
இப்படிச்செய்வது இதுவுனக்குதர்மந்தானோ
இந்தமொழிகளை கேட்டாளேமாபாவி
கேளாமல்வந்தாள் கொடும்பாவி தன்மனைக்கு
ஏழுமக்களும் இருள்தன்னில்தானிருந்தார்
எங்களைப்பெற்ற இன்பமுள்ளதாயாரே
நாங்கள்பிறந்தபோது நலமானபிராணமதை
போக்காமலேன்வைத்தாய் பொல்லாதப்பாலகரை
இந்தயிருள்தன்னில் இருக்கவும் முடியவில்லை
எங்கள்கஷ்டத்தை இனியார்வந்துதீர்ப்பார்கள்
இப்படித்துக்கிக்க இதுகண்டலட்சுமிதேவி
அந்தகோவிலுக்குள் அமைத்தாளே தேன்கூண்டை
பிராணங்கள்போகாமல் பாலகரைக்காப்பாற்றிவிட்டு
டில்லிபட்டணத்துக்கு சிறப்புடன் போய்விட்டாள்
அந்தசமயத்தில் அந்தநல்லவேளைதன்னில்
நவபோஜமகாராஜன் நளிந்துநித்திரைசெய்திருந்தார்
நித்திரைதன்னிலே நிலமாகத்தான்சென்று
எழுந்திரும்வேந்தனே யென்பாலகரெங்கேதான்
பாலரைவோட்டிவிட்டு பண்புடன்தான்யிங்குவந்தீரோ
காட்டில்கலக்கிவிட்டு கலக்கமுடன்நீருமே
நித்திரைசெய்யவேதான் நின்மனதுகொண்டீரோ
என்றுமேசொல்லி அரைந்தாளேமுதுகுதன்னில்
அடிபட்டமாத்திரத்தில் அலர்ந்தெழுந்தான்வேந்தனுமே

அந்தசமயத்தில் அருகிருந்தமந்திரிமாரை
அழைத்துமேதான் தன்மையுடன் சொல்லலுற்றுர்
கேட்டீரோமந்திரிமாரே கிருபையுடனென்வார்த்தை
செத்துவெகுநாளாச்சு சிரப்புடனே லட்சுமிதேவி
எந்தகாலத்திலும் என்கினவில்வந்ததில்லை
இன்றுக்கினவில்வந்து இன்பமாயென்முதுகில்
இரண்டுகைகள்தான் கொண்டுஏந்திழைதானடித்தாளே
பார்த்திரோமந்திரிகளே பண்புடனென்முதுகை
பாலகருக்கென்னமோ பலகஷ்டம்வந்ததங்கு
ஆகையாலென்கினவில் அன்புடன்இங்குவந்தாள்

வசனம்.

மந்திரியார்களே பாலருக்கு ஏது அபாயம்வந்ததோ தெரிய வில்லை ஆகையால் நான் இராஜ்ஜியத்துக்கு போகின்றேன் நீங்க ளிருந்து ஜமாபந்திப் பார்த்துக்கொண்டு வருவீரென்றுச் சொல்லி விட்டு டில்லிபாக்ஷாவையுக் காணுதப்படிக்கு வேந்தன் புறப்பட்டு கடைவீதி வந்து பாலகருக்கு வேண்டிய பழதினுசுகளை வாங்கிக் கொண்டு ரதகெஜதுரகபதாதிகளுடன் புறப்பட்டு தன்தேசம்வந்து மேடைதனைபார்க்க பாலகளைக் காணுதபடியால் துக்கமடைந்து சொல்லலுற்றுன்.

வெளியேநான்போய்வருக வேகமாய்பாலகரும்
தந்தைவருவாரென்று தனிவழிப்பார்ப்பாரே
அப்படிபார்ப்பவரை இந்தவேளைக்காணுமே
பாலகருக்கென்னமோ பார்மீதுகஷ்டங்கள்
என்னென்னவந்ததோ யேதுமறியோமே
இப்படிச்சொல்லி இசைந்துமே உள்புகுந்தான்
பாலகளையப்போது பண்புடனழைத்தானே
பேருமிட்டழைக்க பெருமையுள்ளபாலகரும்
ஆருமில்லாதபடியால் ஏதுசெய்தானவ்வேந்தன்
நான்குபுரம்பார்த்தானே நலமுடனவ்வேந்தனும்

நவபோஜமஹாராஜன் மாணிக்கதேவியை பாலகர் எங்கேயென்றுகேட்பது.

இப்படி நான்குபுறமும் பார்த்து எங்கும் தன் பாலகரைக் காணாத படியால் மனவியாகுலமடைந்து மாணிக்கதேவியை அழைத்துஅடிமாதே என்பாலகர் எங்கே என்று கேட்டமாத்திரத் தில் இம்மொழிகேட்ட மாணிக்கதேவி ஓ நாயகா! உனது பாலகரை கேட்டீரே தவிர என்னை விசாரிக்காமல் போனீரே ஆனால் நமது பாலகரை உமதுலட்சுமிதேவி வந்து என்னையடித்து அலங்கோலஞ் செய்து பாலகரை அழைத்துக்கொண்டு போய்விட்டாள் என்று சொன்னவுடனே வேந்தன் நிஜமென்றுநம்பி எண்ணமிட்டு ஐயோ தெய்வமே எங்குகொண்டுபோய்ப் பாலகரை ஒளித்துவைத்திருக் கின்றாளோ என துக்கமடைந்து பல்லக்கு ஏறிக்கொண்டு காட்டு மார்க்கமாய் போகுஞ்சமயத்தில் அநேகவிடங்களில் தேடவே அகப்படாமல் போனதால் சோகமடைந்து சிலதூரம் நடக்கலா னார் அந்தமார்க்கத்தில் பாலகர் பாதக்குறி இருப்பதைப்பார்த்து சந்தேகமுற்று அம்மார்க்கமாகவே ஓ சூரியநாகம்மா! ஓ சந்திர நாகம்மா! ஓபாலநாகம்மா! என்றுபெயரிட்டுஅழைத்த மாத்திரத்தில் கோவிலுக்குள் அகப்பட்டிருந்த பாலகர் வேந்தன் தொனியைக் கேட்டு தந்தையென்றறிந்து சொல்லத்தொடங்கினார்.

எங்களைப்பெற்ற இன்பமுள்ளதந்தையரே
இந்தகல்லகோவில்தனில் அடைப்பட்டிருக்கின்றோம்
எங்களைப்பெற்று இப்படியும்விடலாமா
இந்தமொழிதானும் வேந்தனுங்கேட்டானே
ஓட்டமும்நடையுமாக வோடியேதான்வந்து
கதவுதன்னைத்தான்திறந்து கடுவேபார்க்கையிலே
மக்கள்படும்கோலத்தை மன்னவனும்பார்த்துவிட்டு
குய்யோமுறையோவென குழந்தைகளழுதாரே
பாலகரையழைத்துக்கொண்டு பண்புடன்காட்டிற்கு
தானுமேவந்து தளாரமலிருக்கையிலே
அந்தநல்லசமயத்தில அரிவேந்தன்பாலகரை
தினமொருமேனியாய் தேடிவளர்த்தானே
இப்படியாகவே இருக்குமந்தசமயத்தில்

வேந்தனுமப்போ விடியபோஜனம்தான்செய்து
தாம்பூலம்தரித்ததை தானறிந்தாள் நாகம்மாள்
தந்தையேயெனக்கு தைரியம்தான்தாரும்
இசைந்துமேவேந்தன் இன்பமாய்தருகவே
மறுவிசைகேழ்க்கவே மன்னவன்கோபித்து
அம்மணியென்னை நீ ஆயாசப்படுத்துகிறாய்
உங்களுடையதாயார் உகந்தும்மைகொண்டுபோய்
கானகத்தில்வைத்திருக்க தந்தை முகம்பார்த்திரா
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள் நாகம்மாள்
தந்தையே நீர்கேளாய் தயவுடனென்வார்த்தை
டில்லிக்குதாங்களும் தீவிரமாய்போனவுடன்
மறுநாள்உதயத்தில் மங்கைமாணிக்கதேவி
எங்களைப்பார்த்து இசைந்துமேதானழைத்து
மக்களேநீங்கள் மகிழுடனேயின்றைக்கு
பூர்ணஅமாவாசை புகழுடனெருப்பொழுது
இருப்பீர்களென்றுச் சொல்லிதிட்டமும் செய்தாளே
அப்படியேசம்மதித்து அனைவருமிருந்தோமே
அந்திபானவுடனே அம்மாவேயெங்களுக்கு
பசிக்குதுயென்றுகேட்டோம் புண்படனம்மாது
சில்லிப்பானைதந்து சிறப்புடனே எங்களையும்
தண்ணிக்கொண்டுவரும்படி திட்டமுஞ்செய்தாளே
தண்ணீர்குடத்தில் தண்ணியில்லாமல்போகவே
எங்களையடித்து இம்சைகள் செய்தாளே
பசிக்குதுயென்றுகேட்டோம் புண்படனுங்கள்தேவி
விஷத்தைக்கலக்கியே விஷக்காப்பிதான்கொடுத்தாள்
அதையுங்குடித்து அப்போதும்பிழைத்தோமையா
இப்படியும்யிவர்கள் இசைந்துமேசாகவில்லையென்று
சின்னவீட்டில்போட்டு சிறுமிளகாய்தான்கொட்டி
தீயிட்டுஅப்போது கதவையும்தாளுமிட்டாள்
ஈசன்கருணையால் இருந்தோமேவுயிருடனே
மறுநாள்யுதயத்தில் மங்களமாய் நாங்கள்வர
எங்களையும்பார்த்து மாணிக்கதேவியும்
என் அருமையுள்ளபாலகரே அன்பாகநீங்களுமே
கோவிலுக்குவருவீர்கள் கொப்பெனவேபோய்வருவோம்

என்றுமேதானழைக்க இசைந்துமேநடக்கலானும்
கானகமார்க்கமாய் கடுகவேயழைத்துவந்து
பாழானகோவில்தன்னில் பார்க்கவேதள்ளிவிட்டு
கதவையும்மூடியப்போ கனதாளுமிட்டுச்சென்றாள்
இப்படியிருக்க இசைந்துதாய்மேல் சொல்லலாமா
எங்கள்தாயுடனே இஷ்டமாய்நாங்கள் போனால்
உக்களுக்ககப்பட்டு உகந்துமேவருவோமா
இந்தமொழிக்கேட்டு எங்குமில்லாக்கோபங்கொண்டு
கண்கள்தான்சிவக்க கடும்பசைதான்பதைக்க
இப்பாவிசண்டாளி படும்பாவிமூதேவி
இப்படிச்செய்தாளா இசைந்துமேவுங்களையும்
என்தேவிசொன்னமொழி எல்லாம்சரியாச்சு

வசனம்.

அடைப்பட்டபாலகரை வேந்தன் அழைத்துவந்து தினமொரு மேனியும் பொழுதொருவண்ணமாய் வளர்த்துக்கொண்டு வருஞ் சமயத்தில் மாணிக்கதேவி தன்தாயாருக்கு வேந்தன்மொழியாடா மலிருப்பதும் தன்மனைக்கு வாராதிருப்பதும் கடிதமூலமாக எழுதி சேவகர்வசம்கொடுத்தனுப்பகாவலர் கடிதம்கொண்டுவந்து நயனப் பட்டணத்தில் இராநின்ற தவளவேந்தன்பட்டத்துத் தேவி யாகிய குணவதியிடம் கொடுக்க அம்மாது அதை வாசித்துப் பார்த்து உடனே இடுமருந்தெடுத்து டப்பியில் அடக்கம் செய்து ஓர் கடிதத்தில் இம்மருந்தை சாப்பிடும் சாதத்தில் இடும்படி எழுதி காவலன்வசம் கடிதம் கொடுத்தனுப்ப அக்கடிதம் கொண்டுவந்து கொடுக்க மாணிக்கதேவி அதைவாசித்துப்பார்த்து சந்தோஷ மடைந்து அதுபோல்செய்ய எத்தனமிட்டிருக்கும்போது வேந்தன் ஸ்நானம் செய்யுங்காலத்தில் மாணிக்கதேவி அம்மருந்தை சாதத் தில் கலந்துவிட்டு தன்மனைக்கு வந்துவிட்டாள். உடனே வேந்தன் வந்து சாதம்சாப்பிட்டு நித்திரைச்செய்ய அந்தப்புரஞ்சென்றார் இப்படியிருக்க,

மருந்துமயக்கத்தால் நித்திரைக்கொள்ளாமல்
மாணிக்கதேவிமீது மயக்கமுங்கொண்டானே
மக்களைவெரண்டியாக மன்னவன் விட்டுவிட்டு

மாணிக்கதேவிவாழும் மாளிகைக்குதானும்வந்தான்
அந்தச்சமயத்தில் அந்தநல்லமாதுமே
கதவையும்தாளிட்டு கொப்பனவேநித்திரைசெய்தாள்
கதவண்டைவேந்தனும் கருணையாய்வந்துநின்று
மாணிக்கதேவியென்று மன்னவன்கதவிடித்தான்
இதையும்கேளாமல் இருந்தாளேயம்மாது
மறுபடியும்வேந்தன் மகிழ்கதவை தானிடித்தான்
இந்தசப்தம்கேட்டு எழுந்துமேயத்தேவி
இங்கோவேளையிலே இந்தநல்லகதவுதன்னை
தட்டுகிறதாரோதான் தயவுடன்சொல்லுமென்றாள்
இந்தமொழிக்கேட்டு ஏதுசொல்வான் வேந்தனும்
என்னடிமாதரசே இளங்குயிலேகண்மணியே
கதவைத்தான்திறப்பாயடி கருணையாய்யிப்போது
அந்தச்சமயத்தில் அம்மாதுசொல்லலுற்றாள்
இத்தனைநாளாக எங்கேத்தான்போயிருந்தீர்கள்
என்னைதான்மறந்தீரே என்சுகங்கள் விட்டீரே
பாலகரைவிட்டுநீங்கள் பட்சமாய்இங்குவந்தீரோ
ஒண்டியாய்விட்டவரை உத்தமரேவரலாமா
போகுவீர் போகுவீர் பொழுதாகிப் போச்சுதய்யா
இப்படிச்சொல்லவே இதுகேட்டான் வேந்தனும்
இனிஉன்னைமறக்கமாட்டேன் இதுநிச்சயமென்றுநம்பு
மோகத்தைதீர்ப்பாயடி மோகனமாணிக்கமே
இதுவெல்லாம்கேட்டான் இளமங்கைகோதையரும்
அப்போதுசொல்லலுற்றாள் ஆணழகுவேந்தனுக்கு
நானும்தான்வேண்டுமானால் நலமுடனேபாலகரை
இந்தசமயத்தில் இப்போதேநீர்சென்று
பாலகரைகொன்றுவிட்டு பக்ஷமாய்யிங்குவந்தால்
கதவையான்திறப்பேன் கருணையாயிப்போது
வேந்தனுங்கேட்டானே வேகமாயம்மொழியை
பத்துமாதம்சுமந்து பாரதவம்தான்செய்து
நான்பெற்றபாலகரை மனம்துணிந்து செய்யலாமா
எப்படிநான்கொல்லுவது என்மனம்தான்வருமா
இப்படிச்சொல்லுவது உந்தனுக்குநீதியல்ல
உந்தன்மனம்தான்வருமா உத்தமியேசெய்வதற்கு

அந்தமொழிகேட்டு ஆனதோர்மாதுசொல்வாள்
கேட்டீரோராயகா கிருபையுடனென்வார்த்தை
கொல்லாமல்போனாலும் கொப்பெனவேயிப்போது
பாலகரைதானழைத்து பண்புடனேகானகத்தில்
விட்டுமேவந்தக்கால் இப்போதேதாள்திறப்பேன்

வசனம்.

இந்தமொழிக்கேட்டு வேந்தன் சந்தோஷமடைந்து நாயகி உதயமானவுடன் பாலகரை அழைத்துக்கொண்டுபோய் கானகத்தில்விட்டு வருகிறேன் என்றுச்சொன்னவுடனே மாணிக்கதேவி சந்தோஷமடைந்து கதவைத்திறந்துவேந்தனையழைத்து சந்தோஷமாயிருக்குஞ்சமயத்தில் கிழக்கில் சூரியன் உதயமானான் இதையறிந்து மாணிக்கதேவி ஏழுபாலகருக்கும் விஷத்தைக்கலந்து ஏழுரொட்டிகளைசுட்டு வேந்தன் கையில்கொடுத்து ஐயா நீங்கள் இதை சாப்பிடவேண்டாம் பாலகரை துரோகஞ்செய்யாமல் கொடுங்கள் என்று சொல்லிவிட்டு வேந்தனுக்குமாத்திரம் கொஞ்சம் சாதம்மூட்டை கட்டிக்கொடுத்து அனுப்பினாள். அம்மூட்டையை தோளில்மாட்டிக் கொண்டு பாலகரிடம்வந்து அழைக்கலுற்றான். அம்மா சூரியநாகம்மா ஓ உத்திரகன்னி பாலநாகம்மா நீங்கள் எல்லோரும் எழுந்திருங்கள் நமக்கு இன்னாட்டில் கஷ்டமாயிருப்பதால் உங்கள்மாமனமனைக்குப்போகலாம் வருவீரென்றழைக்க அப்போது சூரியநாகம்மாள் தந்தையைப்பார்த்து ஓதந்தையே இதுவரைக்கும் மாமன்மார் வரக்காணோமே நீங்கள்சொல்வது புதிதாயிருக்கிறதென்றுச் சொல்லவே அதற்கு வேந்தன் அம்மாநீங்கள் வந்துபாருங்கள் என்றுச்சொல்லி அழைத்துக்கொண்டு நடக்கலுற்றார். அந்தச்சமயத்தில் வேந்தன் மாணிக்கதேவிதந்த ரொட்டிகளை ஏழுபேருக்கும் கொடுத்தான் அதை பாலகர்கள் பெற்றுக்கொண்டு மடியில் பந்தனம்செய்தார்கள் கடைசி புதல்வியாகிய பாலநாகம்மாள் அந்த ரொட்டியில் கொஞ்சம்புட்டு காக்கைக்குப்போட்டாள் காகம்தின்ற உடனே சுழன்றுபூமியில் விழுந்துமரணமடைந்தது இதைபார்த்து ஆச்சரியமுற்று மருபடியும் கொஞ்சம்புட்டு நாயிக்கு போட்டாள் அதுதின்று மரணமடைந்தது இதை எல்லாம் பார்த்து பாலநாகம்மாள் சொல்லத்தொடங்கினாள்.

நவபோஜமஹாராஜன் ஏழுபாலகரை இட்டுக்கொண்டு காட்டிற்குப்போவது.

அக்காவே அக்காவே அன்புடனே நீர் கேளும்
இந்த கல்லரொட்டிகளை இன்பமாய் சுட்டுத் தந்தாள்
பாஷாணம் தான் கலக்கி பக்குவமாய் சுட்டுத் தந்தாள்
நாமதை தின்றோமானல் நலமாக சாகவேண்டும்
எறிந்துவிடுவீர்கள் எல்லோரும் ரொட்டிகளை
இப்படிச் சொல்லவே இதுகேட்டாள் பெரியவளும்
இங்குதான் போட்டாலே எவராகிலும் தின்றுமே
செத்துதான் போய்விடுவார் சுற்றுமே யப்பாவம்
மண்ணை தான் தோண்டி மகிழ்ச்சியாய் ரொட்டிகளை
புதைத்துவைத்துவிட்டு போகிறார் தங்கை பின்னால்
சிலதூரம் தானடக்க சிறப்புடனே நாகம்மாள்
நடக்கமுடியாமல் நடக்குறாளப்போது
சூரியநாகம்மாள் சொல்லுகிறாளப்போது
அய்யாவே நீர் கேளும் அன்புடனென் வார்த்தை
தங்கை நடக்காமல் தான் தத்தளப்படுகின்றாள்
இப்படிச் சொல்லவே இதுகேட்டான் வேந்தனுமே
காட்டிலே கொம்பைத் தேடி கடுகதான் வுடைத்துமே
நடந்துவா வென்றுசொல்லி அடித்தாரே யப்போது
ஐயையோ வென்றுச்சொல்லி அழுதாளே நாகம்மாள்
அந்தசமயத்தில் ஏதுசொன்னாள் மூத்தவளும்
ஏனையா அடிக்கின்றீர் இப்போது நீர் தானும்
தங்கைதன்னை யிப்போ தயவுடனெடுத்துக்கொண்டால்
உமக்குபாவங்கள் வருகுமோ பாலகராச்சுதே
தாயில்லாப் பிள்ளைகளை தாங்கலடிக்கலாமா
ஐயோ தெய்வமே என்று அழுதாரே பாலகர்கள்
அந்தச்சமயத்தில் அறிவுள்ள சூரியநாகம்மாள்
தங்கையையப்போது தானெடுத்துக்கொண்டாளே
கானகமார்க்கமாக கடுவழியும் நடந்தாளே
அத்வானகானகத்தில் பொழுதுமே போச்சுதங்கே
அந்தச்சமயத்தில் அரிவேந்தன் சொல்லலுற்றான்
என்மொழியை கேளம்மா இன்பசூரியநாகம்மா
பொழுதுமே தான் போச்சுது பெருமையுடன் கானகத்தில்
நித்திரை தானசெய்துவிட்டு நிகழுதயமானவுடன்
மாமன்மார் வீட்டிற்கு மகிழுடனே போகலாம்
இப்படிதான் சொல்லவே இதுகேட்டார் பாலகரும்

வசனம்.

அந்தச்சமயத்தில் சூரியநாகம்மாள் தந்தையைப்பார்த்து ஐயா எங்களுக்கு பசி அதிகமாக இருக்கின்றது நீர்வைத்திருக்கும் கட்டமுதில் கொஞ்சம் சாதமிடுமையாவென்றுகேழ்க்க அதற்கு வேந்தன் அம்மா அது சாதமல்ல, கானகத்தில் புலி, காடிகள் வந்தால் ஏது செய்வது என்றுமூன்றுகருங்கல்லே மூட்டையாகக்கட்டிவைத்திருக்கிறேனே தவிர சாதமல்லவே என்றுச்சொல்ல பாலகர் நிசமென்று நம்பி ஏழுபேரும் தந்தைச்சமீபத்தில் சயனித்துக்கொண்டார்கள் அந்தச்சமயத்தில் பாலகர்நித்திரை செய்துவிட்டதை அறிந்து வேந்தன் எழுந்து ஒரு தாழம் துண்டை எடுத்து வந்து தன்பாகையை அதற்குமாட்டி ஆடையைநீக்கி பாலகர் மத்தியில் படுக்கவைத்து விட்டு பாலகரை மோசஞ்செய்து தன் மனைக்குபோகுறார்.

அந்தநல்சமயத்தில் அரிவேந்தன்தானுமே
ஆற்றங்கரையோரம் அன்பாகதானும்வந்து
கட்டமுதைதான்னவிழ்த்து கடுகவேபுசிக்கப்போனர்
அந்தமூட்டைதன்னில் அன்பாககல்லுகள்தான்
இருக்கவேகண்டுவேந்தன் அப்போதுசொல்லலுற்றான்
சண்டாளப்பாவியான் பாலர்களேமோசம்செய்தேன்
அந்தநிமிஷத்தில் அரிவேந்தன்தானுமே
மாணிக்கதேவிமீது மையலதுகொண்டுமேதான்
நடையாநடைநடந்தான் நவபோஜமகாராஜன்
பூச்சக்கரபட்டணம் புகழுடனேதானும்வந்தான்
சகலசம்பிம்மாக சையோகமாயிருந்தானே

மாணிக்கதேவியுடன் பாலகரைவிட்ட சங்கதி சொல்லுவது.

வசனம்.

இப்படி யிருக்குஞ்சமயத்தில் பாலநாகம்மாளை அந்த தாழத்துண்டிலிருந்து தேள் ஒன்றுகொட்டியது அப்போது ஐயோ தேள் கொட்டியது என்று அலரியெழுந்திருக்க மற்றவர்கள் எல்லாம் எழுந்து என்னடி அம்மா என்றுகேட்க அதைக்கேட்ட பாலநாகம

மாள் அக்கா ஏதோ தேள்கொட்டியது என்றுச்சொல்ல அதைக் கேட்ட சூரியநாகம்மாள் அருகில் ஓர்தபசி தவஞ்செய்துக்கொண் டிருப்பதைப்பார்த்து அவ்விடத்தில்போய் நெருப்பு எடுத்துவந்து வெளிச்சம்போட்டுபார்க்க தேள் அகப்படாமையால் அருகிலிருந்த தந்தையை எழுப்பலுற்றாள் இதற்குள்ளாக கிழக்கு உதயமாச்சுது.

தந்தையேதந்தையே தயவுள்ளதந்தையே
கிழக்குவுதித்துதையா கிருபையுடன் எழுந்திருமே
வெய்யற்படாமலே வேகமாய்நடந்துமே
மாமன்மார்பட்டணம் மகிழ்ச்சியாய்போகலாம்
இப்படிச்சொல்லவே மருமொழிசொல்லவில்லை
முக்காடுதானெடுத்து முகந்துமேபார்க்கையிலே
தாழந்துண்டாக இருந்தது அப்போது
ஐயோதங்கைமாரே அன்னீதமானேமே
தந்தையென்றிருந்தோமே தாழன்துண்டுதானுச்சே
மார்தனில்மோதிக்கொண்டு மங்கையருமழுதாரே
தாய்சொன்னமொழிதான் நிஜமாச்சுயிப்போது
தெருவில்விடுவாரென்று சிறப்புடனேசொன்னமொழி
தந்தையும்செத்துவிட்டு தாழந்துண்டாய்விட்டாரே



தந்தை மரணமடைந்ததைப்பார்த்து பாலகர் துயரமடைவது.

ஐய்யோஎங்கள்தந்தையரே எங்கேநீர்போனீர்கள்
கானகந்தன்னில்நாங்கள் எப்படிபிழைப்போமையா

கோடுக்கோடென்றுதான் குழந்தைகளழுதாரே
அந்தச்சமயத்தில் அறிவுள்ளபாலநாகம்மாள்
அக்காவேநீகேளும் அன்புடனேஎன்வார்த்தை
தந்தைவயற்றினில் தாட்டியாய்நாம்பிறந்தோமே
ஆகையால்நாமும்இப்போ அரியவேதந்தையை
தகனமேசெய்யலாம் தயவுடனிப்போது
அந்தமொழிக்கேட்டு எல்லோருங்கானகத்தில்
சுப்பல்தனைப்பொருக்கி சுடுகாஷ்டமடிக்கிறார்கள்
நாராயணாவென்று நலமுடனேபிரேதமதை
ஆறுபேருமாக அன்பாயெடுத்துக்கொண்டார்
தாழந்துண்டுதனை தகனமுஞ்செய்துவிட்டார்
குளத்தினில்தானிரங்கி கொடுக்ஸ்நானஞ்செய்துவிட்டு
பெற்றதோர்தாயாரை பிரியமாய்நினைத்துக்கொண்டு
தலைகளையாற்றிக்கொண்டு தனிமையாய்நிற்கையிலே
எப்படிபிழைப்போம் இந்தநல்லகானகத்தில்
பசியுமெடுக்குதம்மா பாவிகளுக்கிப்போது
இப்படிச்சொல்லியே இசைந்துமே நிற்கையிலே
இவர்கள்எதிராக இசைந்துமாபெலாச்செடிகள்
நீர்மித்தாளவ்விடத்தில் நிமிஷத்தில் லட்சுமிதேவி

லட்சுமிதேவி நியமித்த பழச்செடிகளைப்பார்த்து பாலகர் செடி யேறிப்பறித்துத் தின்பது.

அந்தச்செடிகளை இன்பமாய் பார்த்துவிட்டார்கள்
செடிகளும்தானேறி பழங்களைதான்பரித்து
தின்றுமேபசியாறி சிறப்புடனே ஜலங்குடித்தார்
அத்வானகானகத்தில் அன்பாகயிவர்களுமே
எரெட்டுநாளாக இருந்தரேயவ்வனத்தில்
அன்னம்பசிதானும் அன்பாகயெடுக்காமல்
தனியாயிருக்கும்படி தான்செய்தாள் லட்சுமிதேவி

வசனம்.

இந்தபாலகர் இப்படி இருக்குஞ்சமயத்தில் வங்கபுரிபட்டணத்தைப்பரிபாலிக்கும் வேந்தன் வேட்டையாடுவதற்கு சேனைகளுடன் காட்டிற்குவந்து வேட்டையாடி வெய்யலில் ஆயாசபட்டதால்

வேந்தனுக்கு தாகமெடுக்க அந்தகாட்டில் எங்குதேடிப் பார்த்த போதிலும் எங்கும் ஜலமில்லாதபடியால் திரிந்துவரும்சமயத்தில் ஓர் முனிசிரேஷ்டன் தபஞ்செய்திருப்பதை அறிந்து இவனருகில் வந்து ஓமுனிபுங்கவா எங்களுக்கு தாகமெடுக்கிறது ஜலமிருக்குமி டஞ்சொல்லுமென்று கேட்க முனிவன் பேசாமல் நிஷ்டையிலிருந்து விட்டார் வேந்தனுக்குக் கோபமபிறந்து அந்தச்சமயத்தில் அரு கில் மேய்ந்துக்கொண்டிருந்த ஆட்டைப்பிடித்து கழுத்தையறுத்து அதின்உதிரத்தை முனிபுங்கவன்மேல் தெளிக்க அந்தரத்தமானது முனிமேல் பட்டமாத்திரத்தில் அவன்பனிரெண்டுவருடந் தபஞ் செய்யும் நிலையானது பிசக்கிடவே கோபம்பிறந்து வேந்தனைப் பார்த்து பிடியடாசாபமென்று சொல்லி அடா சண்டாளா உதய முதல் மாலை வரையில் மனிதனாகவும் தீபம்வைத்தமாத்திரத்தில் வேங்கையாகக்கடவாய் உனதுசேனைகளும் குரங்குகளாகக்கடவது யென்று சாபமிட்டு இதுவல்லாமல் வீடுவாசலில்லாமல் காடே வீடாக சஞ்சாரம் செய்வாயென்று சாபமிடவே இதைக்கேட்ட வேந்தன் எதும்சொல்லாமல் நடக்கலானர் அங்கு ஓர்குளமிருப்ப தைக்கண்டு தாகமருந்தி சிலதூரம் நடக்க பொழுதுபோச்சுது அச் சமயத்தில் வேந்தன் புலியாகவும் சேனைகள் குரங்குகளாகவும் ஆனர் கள் அந்தராத்திரி எல்லாம் காடுதிரிந்து உதயமானவுடனே நிஜரூப மானர்கள் அதன் பிறகு சாதம் சமைத்துக்கொண்டிருந்தார் இந்த சமயத்தில் அந்தகானகத்தில் பாலநாகம்மாள் முதலானவர்களும் செடிகளேறி பழங்களைப் பறித்துத்தின்றனபிறகு அக்கா நமது தந்தை மாமன்மார் பட்டணம் அருகில் இருக்கிறதென்றுச் சொன் ஞரே அங்குஏதோ புகைவருகின்றது அதுதான் பட்டணம் போலி ருக்கிறது போகலாம்வாருமென்று ஓடிவருக வங்கபுரிவேந்தன் அரு கில்வந்து நிற்கவே ஐயோ இது என்ன ஊருமில்லை காடுமில்லை ஏன் வந்தோமென்று அங்கிருந்த செடியினருகில் நின்றுவிட்டார்கள். அதன்பிறகு வேந்தன் இவர்களைப்பார்த்து இவர் எங்கிருந்து வந்த வரோ இவர்களைப்பார்த்தால் தெய்வீகப்பெண்களைப்போல் இருக் கிறது பொழுதுப்போனல் நாம்புலியாகி கானகமெல்லாம் திரி கின்றோம் இவர்கள் எங்கும் அகப்படவில்லையே விசாரிப்போம் என்று அருகில்வந்து அம்மா உங்கள் நாடேது தந்தைதாய் பெய ரென்ன தெரியச்சொல்லுமென்று கேட்க அதற்கு அப்பாலகர் எங் ங்கள் தாய்தந்தைப்பெயர் எங்களுக்கு தெரியாது எங்கள் பெய

ரும் தெரியாது உம்மை யாரழைத்தார் இங்கு ஏன் வந்ீரென்று கேட்க அதற்கு வேந்தன் அம்மா நீங்கள் என்னுடன் பிறந்தவர் ஏதும்பயமில்லாமல் தந்தைதாய் பெயரும் உங்கள் பெயரும் சொல்லுங்களென்று கேட்டமாத்திரத்தில் பாலகர் சொல்லத்தொடங்கினர்கள்,

வங்கமகாராஜனுக்கு பாலகர் தன்வரலாறு கூறுதல்.

ஐயாவேநீர்கேளும அன்புள்ள அண்ணுவே
எங்கள்தந்தைபெயர்தான் நவபோஜமகாராஜன்
எங்கள் தாயார்பெயர்தான் எழில்லட்சுமிதேவியம்மாள்
சூரியவம்சமையா சுந்திரரேயெங்கள்குலம்
பூச்சக்கிரப்பட்டினத்தில் புகழுடன்வாழ்ந்தோமையா
இந்தமொழிகேட்டான் இன்பமாய்வேந்தனுமே
ஆனல்நீங்களுமே அன்புடன்கானகத்திற்கு
வந்தகாரணமென்ன வகையுடன்சொல்லுமம்மா
அந்தமொழிக்கு அப்போது சூரியநாகம்மாள்
அண்ணுவேநீர்கேளும் அன்புடன்சொல்லுகின்றேன்
நாங்களபிறந்ததோர் ஒன்பதாமாண்டதனில்
தாயுமிறந்துவிட்டாள் தந்தைவளர்த்துவந்தார்
இப்படியிருக்கையிலே இன்பமாய்யெங்கள் தந்தை
மறுகலியாணம் மகிகூடியாய்செய்துக்கொண்டார்
வந்ததோர்சிமாட்டி வையகத்திலெங்களையும்
செய்யாதயிம்சைகள் செய்தாளேயண்ணுவே
இம்சைகள்செய்வதை கண்டாரேஎங்கள் தந்தை
மாமன்மார்பட்டணம் மகிழுடன்போவோமென்று
எல்லோரையுமழைத்துக்கொண்டு இன்பமாய்தான்வருக
ஆரண்யமத்தியில் அன்பாய்பொழுதுபோச்சு
அத்வானகானகத்தில் அன்புடனேசயனித்தோம்
அருகில்படுத்திருந்தார் அன்புடனே எங்கள்தந்தை
உதயமானவுடனே நாங்களெல்லோரும் தானெழுந்து
தந்தையைப்பார்க்கவேதான் தாழ்ந்துண்டுமாகிவிட்டார்
ஆறுமில்லாப்பாவியாய் கானகத்தில் நின்றோமே
இந்தமொழிக்கேட்டு இன்பமாயவ்வேந்தன்
துயரப்படாதம்மா துணையானுமிருக்கின்றேன்
இப்படிதகேருதல இன்பமாய்தானுஞ்சொன்னன்

வசனம்.

இப்படித்தைரியஞ்சொல்லி பாலகரை அழைத்துவந்து போசனம் இட்டு ஆதரித்தார் இதற்குள்ளாக பொழுதுபோவதற்கு நாலுமணிநேரமிருக்கிறது இதையறிந்து அவ்வேந்தன் சிப்பந்திகளை அழைத்து அடா சேனைகளே நான் இந்தபாலகரை அழைத்து வந்தேன் இனியான் புலியாகுஞ்சமயம் வந்துவிட்டது இவர்களை புசித்து விடுவேன் ஆகையால் ஓர் பனமா உயரம் அதிகசீக்கிரத்தில் பர்னசாலை கட்டுவீரென்று சொன்னமாத்திரத்தில் ஆறு பர்னசாலை கட்டி இவர்களை அதில் இருக்கச்செய்து வேந்தனும் சேனைகளும் புலியும் குரங்குகளாய்விட்டார்கள் இதுபோலவே தினந்தோறும் செய்துக்கொண்டு வந்தார் இப்படியிருக்க,

பானுகண்டிபட்டணத்தை பரிபாலிக்கும் வேந்தன் வேட்டைக்கு வந்து வேட்டையாடி அயர்ந்தபடியால் வேந்தன் சேகுவரையழைத்து இக்கானகத்தில் வங்கப்புரிவேந்தன் சாபமடைந்து புலியாயிருப்பதாய் கேழ்வியடைந்தோம் தேடிவருவீர்களென்றுச் சொல்ல சேகுவர் அறிந்துவந்து வேந்தனுக்குச்சொல்ல அம்மொழிக்கேட்டு வங்கவேந்தன் அருகில்வந்து ஐயா இக்கானகத்தில் நான்வேட்டையாடி வந்தேன் எங்கும் ஜலமகப்படவில்லை ஜலமிருக்கும் இடத்தை தெரிவிக்கவேணுமென்றுகேட்க அருகிலிருந்த குளத்தைகாட்டினர் அக்குளத்திற்கு சென்று தாகமருந்தி வங்கவேந்தன் அருகில்வந்து அமர்ந்து ஐயா இந்தபர்னசாலையில் யார்யிருப்பது என்றுகேட்டார் அதற்கு வங்கவேந்தன் ஐயா எனது தங்கைமார் இருக்கின்றார்என்றுச்சொல்ல இம்மொழியைக்கேட்டு பானுகண்டி வேந்தன் ஐயா இராஜோத்தமா இவர்களுக்கு கலியாணமாச்சுதா எனதுபுதல்வருக்குதருவீரா வென்றுகேட்க அதற்குச் சம்மதமடைந்தார் அந்தச்சமயத்தில்பாலகரை காட்டும்படிச்சொல்ல அதுபோல் பாலர் இருக்கக்கண்ட பானுகண்டிவேந்தன் இவரைப்பார்த்து ஐயா இராஜோத்தமாஉன்னுடன் பிறந்த பெண்பாவைகளேது உனது தந்தைக்கு நீங்கள் இருவரேதவிர வேரேதுஎனக்குத்தெரியாதா என்றுச் சொன்னவுடன் வங்கதேசத்துவேந்தன்இனி மர்மமிடலாகாதுஎன்று யோசித்து ஐயா யான் சொல்வதைக்கவனிப்பீர் எப்படி என்றால் இவர்கள் தந்தை நவபோஜவேந்தன் தாயார் பூலட்சுமிதேவி இருப்பிடம் பூச்சக்கிரப்பட்டணம் வம்சம் சூரியவம்சம் தாயும் தந்

ளையும் இறந்துவிட்டாராம் காட்டில்வந்திருக்க யான்கண்டு தங்கை மார்போல் இதுவரைக்கும் காப்பாற்றினேன் என்றுச்சொன்ன வுடனே இதைக்கேட்டவேந்தன் சொன்னதாவது ஓ வங்கவேந் தனே இவர்கள் உன்னுடன்பிறந்த லட்சுமிதேவி கெர்ப்பத்தில் பிறந்தவர் பத்துவருஷமாக அவர் வீட்டிற்கு நாங்கள் போகிற தில்லை எங்கள் வீட்டிற்கு அவர் வருகிறதில்லை ஆகையால் இவர் கள் என் மருமக்கமார்கள் என்றுசொன்னவுடனே இம்மாதர்கள் இதைக்கேட்டு இதுபாதோ தெரியவில்லை நம்மைக்காப்பாற்றிய வரை எமாத்திக்கொண்டுபோக எத்தனமிட்டது போலிருக்கிறது என்று மூத்தவள்சொல்லவே இளையவளாகிய பாலநாகம்மாள் யோ சித்து முந்தி நமது தாயார் சொன்னது உங்கள்மாமன் இராமவர் த்தி வேந்தன் பானுகண்டி பட்டணத்தில் இருப்பதாய் சொல்லி இருக்கிறாள் என்று யோசித்து ஐயா உங்கள் தேசமெது வம்ச மெது தங்களுடையப்பெயரெது என்றுகேட்டு அதற்கு அவ்வேந் தன் அம்மா இருப்பது பானுகண்டிபட்டணம் சந்திரவம்சம்யான் இராமவர்த்திவேந்தன் என்றுச்சொன்னவுடனே அப்பாலகர் இந்தமொழியைக்கேட்டு,

பாலகர் எழுபேரும் தன்மாமனைபார்த்து துயரமடைவது.

எழுபேருமப்போது எடுத்தாரேபெருந்தொண்டை
கானகமும்தானதிர கதரியழுதலுற்றார்கள்
ஐயோமாமாவென்று எல்லோரும்அழுதாரே
தாயுமரணமானாள் தந்தையும்தாழந்துண்டுமோனார்
கானகந்தன்னிலே நாங்கள் கலங்கி அழுகலானோம்
ஆருமில்லாப் பாவியைப்போல் அலைந்தோமே கானகத்தில்
இவருமே இல்லாவிட்டால் இரையாவோம் வேங்கைக்கு
ஐயோ மாமாவென்று அலரியழுதாரே பாலகரும்
பாலகர் தானழவே பார்வேந்தனப்போது
மக்களே உங்களை அவனியில் அலையவிட்டு
பாவிபிரம்மனும் பார்த்திருந்தானேயிப்போது
இப்படியாகயிசைந்துமே வேந்தன் தானழுது
பாலகரையப்போது பார்த்துகண் தான்துடைத்து
அந்தச்சமயத்தில் அங்கிருந்தகாவலரை

தானுமேயழைத்து தயவுடன்சொல்லலுற்றான்
அன்பானகாவலரே அதிவேகமாய்நீங்களிப்போ
நாட்டிற்குநீங்கள்சென்று நலமேழுபல்லக்கு
எடுத்துமேவருவீர்கள் இப்போதுவேகமதாய்
இந்தமொழிக்கேட்டு இசைந்துமேகாவலர்கள்
பானுகண்டிபட்டணம் பண்மையுடன்வந்தாரே
ஏழுபல்லக்குதன்னை எடுத்தாரேயப்போது
நடையாய்நடைகடந்து நடந்துமேவந்துசேர்ந்தார்
வந்ததோர்பல்லக்குதன்னில் வகை யுடனேழுப்பேரை
அமரவேதான்செய்து அப்போயெடுத்துக்கொண்டு
பானுகண்டிப்பட்டணம் பணபுடன்வந்துசேர்ந்தார்
வந்தநல்லபாலகரை வகையுடன்மாமியுந்தான்
பார்த்துமகிழ்வுடன் பக்குவமாய்வளர்ந்துவந்தாள்

வசனம்.

இப்படியாகபாலகரை கொண்டுவந்தவுடன் மாமியும்பார்த்து சந்தோஷமடைந்து குழந்தைகளே தினமொருமேனியும் பொழு தொருவண்ணமுமாய் வளர்த்துவந்தாள் இப்படியிருக்க இராமவர் த்திவேந்தனுக்கு ஏழுபுதல்வர்கள் அவர்கள்பெயர் யாதெனில் முதல் புதல்வன் சூரியவர்த்திவேந்தன், இரண்டாம்புதல்வன்சந்திர வர்த்திவேந்தன், மூன்றும் புதல்வன் பாபவர்த்திவேந்தன், நான் காம் புதல்வன் சாபவர்த்திவேந்தன் ஐந்தாம் புதல்வன் காமவர்த்தி வேந்தன், ஆறும்புதல்வன் இராமவர்த்திவேந்தன், ஏழாம் புதல் வன்கார்யவர்த்திவேந்தன் இப்படி இவரேழுபேரும் ஓர் தாய் வயிற்றினில் பிறந்த பெண்பாவைகளை கலியாணம் செய்வோமே தவிர, மற்றவை இச்சிக்கமாட்டோமென பிருது வகித்து இருந் தார்கள். இதை தந்தையறிந்து அநேகநாடுகளிலும் பெண் தேடிப் பார்த்தும் அகப்படாமையால் சித்தமெலிந்திருந்து தானும்தன் தேவியும்சந்தோஷமடைந்து இன்றையதினம் நமதுபாலகர்கள் கொண்ட எண்ணம் பூர்த்தியாகுமென்று பேசிக்கொண்டு வேந்தன் கொலுவடைந்து வேதியனை அழைத்து ஐயா விப்பிரவரே இன்று முகூர்த்தம் செய்யலாமாவென்று கேழ்க்க விப்பிரவர் இதைஅறிந்து ஐயா இராஜோத்தமா நாளையதினம் நல்லதென்றுசொன்னவுடனே வேந்தன் சந்தோஷமாய் தன்நாடெங்கும் கலியாணப்பந்தலிட்டு

நல்லசுப முகூர்த்தத்தில் ஏழுப்பேர்களுக்கும் மூத்தபுதல்வனுக்கு சூரியநாகம்மாளும், இரண்டாம் புதல்வனுக்கு சந்திரநாகம்மாளும், மூன்றும் புதல்வனுக்கு உத்திரகன்னிகையும், நான்காம் புதல்வனுக்கு தக்ஷணகன்னிகையும், ஐந்தாம் புதல்வனுக்கு பகடசங்கம்மாளும், ஆறும் புதல்வனுக்கு முனிகன்னிகையும், ஏழாம் புதல்வனுக்கு பாலநாகம்மாளேயும் விவாகஞ்செய்வித்து பானுகண்டி பட்டணத்தில் சுககேஷமமாயிருந்தார்கள்.

இப்படியிருக்கையிலே இந்தபெண்கள் தந்தையான
நவபோஜமகாராஜன் நலிந்துமாணிக்கதேவியுடன்
சந்தோஷவைபோகமாய் சம்பிரமாய்தானிருந்தார்
இப்படியிவரிருக்க இசைந்துமேடில்லிபாக்ஷா
தன்னையேகாண்பதற்கு வேந்தனும்வரவில்லையென்று
கோபமும்தான்கொண்டு கொப்பனவே திவான்ஜீயை
தானுமேயழைத்துஅப்போ தகுந்தப்படிசொல்லலானார்
நீங்களுமிப்போதே பூச்சக்கிரபட்டணம்போய்
கட்டவேண்டிய பணம்தன்னை கட்டினல்வந்திடுங்கள்
இல்லாமல்போய்விட்டால் இன்பமாய் அன்னாட்டை
ஏலஜப்திகள்செய்து கணக்குடன் நம்பணத்தை
பெற்றுவருவீரென்று அதிதீவிரமாய் சொன்னதாலே

டில்லிபாதுஷா திவான்ஜீயை அனுப்பி தாலுக்காவை அமானு செய்யச்சொல்வது.

அப்படியேநல்லதென்று திவான்ஜீயும்புறப்பட்டார்
பூச்சக்கிரப்பட்டணம் புகழுடனேதானும்வந்து
வேந்தனையும்தான்பார்த்து வெகுவாய்கிஸ்திபணத்தை
கணக்குபடிதாருமென்று திவான்ஜீயும்கேழ்க்கவே
ஏதுமேசொல்லாமல் இருந்தானே நவபோஜவேந்தன்
இருந்திருந்துபார்த்தார் இசைந்துமேதிவான்ஜீயும்
சரியானபதிலொன்றும் வேந்தனல்வரவில்லை
வேந்தனையும்தேவியையும் வெளியேதான்தள்ளிவிட்டு
அந்தநல்தாலுக்காவை அப்போதுயேலம்போட்டு
சேரவேண்டியபணத்தை சிறப்புடன்பெற்றுக்கொண்டு
டில்லிபட்டணமே திவான்ஜீயும்போய்சேர்ந்தார்

அப்போதுவேந்தனும் இசைந்துமேதன்தேவியோடு
அந்நாடுதன்னில் அயர்ந்துசிலநாளிருந்தார்
டில்லிபாக்ஷாவுக்கு தீவிரமாய் அர்ஜிதன்னை
எழுதியும்பாக்ஷாவும் ஏனென்றுகேட்கவில்லை
இத்தனையும்தான்பார்த்து ஏதுசொல்வானப்போது
மாதேநீசெண்பகமே மரகதமேமாணிக்கமே
இப்படிநாமிருந்தால் இசைந்துமேவயர்வளர்க்க
வேண்டுமேஎன்றுச்சொல்லி வேகமாய்செல்லலானார்
மாதேநீசுந்திரமே மகிழுடனெகானகத்தில்
விருகுதனையொடித்து வேகமாய்கட்டுகட்டி
தலைமீதுநாமெடுத்து தனியாகபட்டணம்போய்
விருகுதனைவிற்றுமெ ஜீவிக்கலாமிப்போது
இப்படிச்சொல்லியே இருவரும்புறப்பட்டார்
கானகம்தான்சென்று கடுகவிரகொடித்து
இரண்டுசுமைகள்கட்டி இசைந்துதலைமீதெடுத்து
பானுகண்டிபட்டணம் எல்லைதனில்வந்தாரே
பெண்ணேநீகேளாய் பிரியமுடனென்வார்த்தை
நான்குவீதிதன்னை நலமாகநீசுற்றிக்கொண்டு
இந்தமரத்தண்டை இன்பமாய்வந்திருப்பாய்
இப்படிசொல்லியே இசைந்துமேநடந்தானே
விரகோவிரகென்று விற்றானே அவ்வேந்தனும்

நவபோஜமஹாராஜன் விரகுவிற்பதை யறிந்து பாலகர்கள் விசாரிப்பது.

வசனம்.

அந்த சமயத்தில் ஏழுபாலகரும் சந்தோஷமாய் பகடசாலை யாடிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் விரகோ விரகென்ற சப்தம் பிறந்தவுடன் இதைக்கேட்ட சூர்யநாகம்மாள் அம்மா தங்கைமாரே நமது தந்தை கண்டத் துவனிபோல் இருக்கிறது என்று எட்டிப் பார்த்தாள் வடிவமும் தந்தைபோலாகதான் இருக்கிறது. சந்தேக மடைந்து காவலனை அழைத்து அடா காவலனே அதோ விரகு விற்பவரை அழைத்து வருவீரென்றுச் சொன்னவுடனே காவலர் அழைத்துவருக அந்தச்சமயத்தில் சூர்யநாகம்மாள் விரகை இரக்கச்

சொல்லி உமது நாட்டையும் பெயரையும் சொல்லும்படி கேழ்க்க அதற்கு அவ்வேந்தன் ஊருமில்லை பெயருமில்லை என்றுச்சொல்ல இதற்குள்ளாக பாலநாகம்மாள் தந்தைக்கு இருந்த குறிகளைக் கண்டுபிடித்து இவர் தந்தையன்றி வேறல்ல கஷ்டதிசையடைந்து இப்படி கஷ்டமனுபவிக்கிறார் என்று மனதில் எண்ணிக்கொண்டு உனது பெயரை சொல்லாமல்போனால் விடமாட்டோமென்றுச் சொல்லவேந்தன் பயமடைந்து அம்மாசொல்லுகிறேன். என்பெயர் நவபோஜவேந்தன் என்பார் என்நாடோ பூச்சக்கிரப் பட்டணம் எனதுபட்டத்து தேவியாகிய லட்சுமிதேவிககு ஏழுபெண்பாலைகள்பிறந்தார்கள் பிறந்த ஒன்பதாமாண்டில் அத்தேவிமரண மடைந்தாள் அதன் பிறகு இரண்டாவது கலியாணஞ்செய்துக்கொண்டேன் அம்மாது இட்டமருந்தால் பாலகரை காட்டில்விட்டு வந்துவிட்டேன் அதுமுதற்கொண்டு படாதபாடெல்லாம்பட்டு இப்படி கஷ்டத்தை அனுபவித்து வருகிறேன். என்று சொன்னவுடனே பாலகர் தந்தையைப்பார்த்து சொல்லத் தொடங்கினர்கள்,

கர்மசண்டாளன் கார்மேகராக்ஷதனும்நீயாவாய்
குலத்துரோகிநீயேயாகும் குவலயத்தில்வும்முடைய
பாலகர்நாங்களாகும் பக்குவமாய் எங்களையும்
கானகத்தில்நீர்தானும் தூங்கவேவைத்துவிட்டு
நாங்கள்நித்திரைசெய்ய நலமாகதாழுந்துண்டை
எங்களருகில்வைத்து இன்பமாய்நீயெழுந்து
மாணிக்கதேவியிடம் மகிழுடன்சென்றீரே
உதயமானவுடனே நாங்களெழுந்திருந்து
பார்க்கவேதந்தைநீர் பக்குவமாய்துண்டாய்நிற்க
ஐயோதெய்வமேயென அழுது துடித்தோமே
எங்களைசெய்ததோர் இக்கொடியபாதகங்கள்
இப்படியலைந்தீர்கள் இதுவும்மைவிடுமோதான்
உனதுமூத்தமகளைப்பாரும்சூரியநாகம்மாளை
இரண்டாம்புதல்வி இதோபாரும்சந்திரநாகம்மாளை
மூன்றாம்புதல்வியைப்பாரும் உத்திரகன்னிகையை
நான்காம்புதல்வியைப்பாரும் தக்ஷணகன்னிகையை
ஐந்தாம்புதல்வியைப்பாரும் பகடசங்கம்மாளை
ஆறும்புதல்வியைப்பாரும் முனிகன்னிகையை

ஏழாம்புதல்வி நானேயாகும் பாலநாகம்மாள்
இப்படிச்சொல்லவே இசைந்துமேவேந்தனும்
தலைதனைகுனிந்துமே தான்கண்ணீரும்விட்டானே
அப்போதுநாகம்மா இசைந்துமேதந்தையரை
தேருதலைசொல்லியே துடைத்தாளேகண்ணீரை
அந்தச்சமயத்தில் அங்கிருந்ததாதிகளை
இன்பமாய்தானழைத்து சுடுத்துவாதண்ணீரை
தந்தைக்குஎண்ணெயிட்டு ஸ்நானங்கள்செய்துவைத்தாள்
பட்டுகரைதோவுத்தி பாங்குடன்தான்கொடுத்தாள்
நெற்றிக்குதிலகமிட்டு நிகழ்தங்கவாழிலைபோட்டு
பருப்புபச்சடி பத்துவகைகறிவர்க்கமும்
நெய்சாதமிட்டு நிகழுடன் புசித்தபின்பு
தாம்பூலந்தான்கொடுத்து சயனிக்கசெய்தாரே
இப்படியாகதந்தையை இன்பமாய்வளர்த்துவந்தார்
நவபோஜராஜனும் சுலமாயிருந்துவிட்டார்

வசனம்

நவபோஜவேந்தன் இப்படியாக இருக்க மாணிக்கதேவி விரகு விற்றுவிட்டு வேந்தன்சொன்ன இடம்வந்துபார்க்க வேந்தன் இல்லாமல் போனதால் மனவியாகூலமடைந்து அந்நாட்டை விட்டு மறுதேசம் போய்விட்டாள். இது இப்படியிருக்க பாலநாகம்மாள் தன் கணவன் வந்தவுடன் ஐயா நீர் டில்லிக்குச்சென்று என் தந்தை பட்டகடனை நீர் ஏந்திக்கொண்டு மறுபடியும் அந்நாட்டை தந்தைக்கு தரும்படி செய்வீரென்று சொல்லவே அதற்கு காயவர்த்தி வேந்தன்சம்மதமடைந்து அந்தக்ஷணமே டில்லிப்பட்டணம்சென்று பாதுஷாவுக்கு சலாமசெய்துநிற்க இவரைக்கண்ட பாதுஷா சந்தோஷமடைந்து என்ன காரியமாய் வந்தீரென்றுகேட்க ஐயா எனது மாமனார் ஆண்டுவந்த பூச்சக்கிரப்பட்டணம் அமானுசெய்துக்கொண்டீராம் ஆகையால் அந்த கடனுக்கு நானேயாகும் என்றுச்சொல்ல பாதுஷா இவர் வர்த்தமானங்களை விசாரித்துக் கொண்டு இவரிஷ்டம்போலவே உகம்எழுதிக் கொடுத்தனுப்பி விட்டார். அதன்பிறகு காயவர்த்திவேந்தன் அந்தக்கடிதம் பெற்றுக்கொண்டு தன்நாட்டிற்குவந்து தேவியாகிய பாலநாகம்மாள் கையில் இக்கடிதம்கொடுக்கவே அதைபெற்று தந்தையிடம்வந்து

இதைக்கொடுக்க சந்தோஷமடைந்தார் இப்படி சில தினமிருந்து அந்த நவபோஜவேந்தன் மாணிக்கதேவியிட்ட இடுமருந்தால் தேகம்மெலிந்து வியாதியடைந்து மரணமடைந்தார், அதன் பிறகு எழுமருமகரும் பிரேதத்தை எடுத்து தகனஞ்செய்துவிட்டு கர்மானுஷ்டானங்களை தீர்த்துக்கொண்டு சந்தோஷமாய் இருந்தார்கள் இவ்விதமாக இருக்குஞ்சமயத்தில் இந்த ஏழுவேந்தரும் கண்டிக்கோட்டைக்குபோக கார்யம்வந்தது அப்போது கடைசிபுதல்வனாகிய கார்யவர்த்தி இராஜன் காவலனையழைத்து அடா காவலனே ஆராகிலும் அரிதேசி, பரதேசி, ஜோகி, ஜெங்கமர், பக்கிரி, பட்டு பிராமணன் ஆர்வந்தபோதிலும உழக்கரிசியும், பருப்பு, உப்பு, காசுமதந்து அனுப்புவீர்களே தவிர உட்பிரவேசிக்கலாகாது அப்படியாராகிலும்சென்றால் உன்சிரசுபோய்விடும் என்றுசொல்லி தன்தேவியிடமவந்து நாயகி அரிதேசி பரதேசி ஆர்வந்தபோதிலும் இந்த மூன்று கோட்டைதாண்டி பிச்சை இடாதேயென்று மூன்று கோட்டைகிரி இம்மாதுக்கு திட்டஞ்செய்துவிட்டு கார்யவர்த்திவேந்தன் தமயமாருடனே புறப்பட்டு கண்டிகோட்டைக்குப் போய்விட்டார்கள்.

இந்தபாலநாகம்மாள்
கதை தன்னில்
லட்சுமிதேவியம்மாள்
கதை சம்பூர்ணம்.

ஓம்.
சற்குருவேநமஃ
மீனாக்ஷி யருள்பெருக.

பாலநாகம்மாள் கதை.

இரண்டாம் பாகம்.

காப்பு—வெண்பா.

பாலநாகம்மாள் பண்புள்ள கதைதன்னை
சீலமுட னிரண்டாம பாகம் சொல்லிடவே—பாலனன்
திங்கள் சடையிலிட்ட திருநேத்திரதா நீன்ற
அங்கரவன் பொற்பாதம் கோரு.

வசனம்.

இப்படி யிருக்க பாலநாகம்மாள் பானுகண்டிப்பட்டணத்தில் இராநின்ற சிவபெருமானை பூசை செய்துவருஞ்சமயத்தில் சங்கர மூர்த்தியருளால் அம்மாது கற்பிணியாயிருக்கும் சமயத்தில் தன் புருடன் முதலானவரும்.

முத்தாருப்பேரும் முகந்து தன் கணவன்தானும்
நகரிலுள்ள சேனையுடன் நலமாய் புறப்பட்டு
மந்திரிபிரதானிகளை மகிழ்ந்துமே அழைத்துக்கொண்டு
கண்டி கோட்டைக்குக் காரியமாய் போய்விட்டார்கள்
வேந்தர்கள் ஆளப்பட்ட விந்தையான பூமிதன்னில்
நாகற்றமூடியொன்று நலமாகபிறந்ததங்கே
பிறந்தவுடனேதான் பக்கிரியும் பிறந்தானே
அவனுடையகோட்டை அழகென்ன சொல்லலாகும்
எழுகோட்டையும் இசைந்த வெள்ளிக்கோட்டைதான்
பதினன்குமேடைகள் பண்புடனிருக்கின்றது
அந்தநல்ல மேடைதன்னில் அமைத்தாரே சிப்பிகளும்
பன்னிரெண்டு ஸ்தம்பம் மசூதிதானிருக்கின்றது
மசூதிதன்னில் மாயாபக்கிரி யிருக்கின்றான்
நன்றாய் தமிழ்தன்னை நலமுடன் வாசித்தவன்

வடக்கு தெலுங்குதன்னை வகையுடன் வாசித்தவன்
மந்திரக்காரனவன் மாயங்கள் செய்பவன்தான்
அவனுடைய மந்திரப்பூதம் அளவிடத்தாமல்ல
எழுநூருபூதமும் இணையில்லா செம்பூதங்களும்
முன்னூருபூதமும் மூதிர்தல் பூதங்களும்
சிட்டிகைதான்போட்டால் சிறப்புடன் வரும்பேய்கள்
வண்ணாரப்பேய்கள் வளமாய் தீபிட்டி பிடிக்குமாம்
அம்மட்டபேய்கள்தான் அழகுக்கண்ணுடி காட்டுமாம்
கொசப்பேய்களங்கே கொண்டுவருமாஞ் சாதமும்
எடப்பேய்கள்தான் ஆடுகளைக்கொண்டுவருமாம்
பாப்பேய்கள்தான் கட்டைகளும் வெட்டிவருமாம்
கிழப்பேய்கள்தான் கிருபையுடன் சரசமாடுமாம்
இப்படி யிருக்கையிலே நாகள்ளபூடி கரைதன்னில்
பூவரசன்செடிகளும் புகழாக இருக்கிறதாம்
அந்தச்செடிமீது அழகான பக்ஷிரெண்டும்
மேற்கேயிருந்து மேன்மையாய் வந்ததுவாம்
செடிமீது தானமர்ந்து சிறப்பாய் மொழிபாடியது
இந்தமொழிகளை இசைந்துபார்த்தான் பக்கிரியும்



வணிகச்சங்கைப்பார்த்து பக்கிரி சொல்வது.

பெரிய கூத்தியாரான பெயரெடுத்த வணிகச்சங்கு
இன்பமாயவளைப்பார்த்து இசைந்துமே சொல்லலானான்
அடிஎன்காமக்கிளியே கட்டழகி வணிகச்சங்கு
பார்த்தாயா பக்ஷிகளை பண்புடனே ஜோடியாக
இருந்துசரசமாக இன்பமாய்போகின்றது
இப்படிசரசமாக இசைந்துமேயிருப்பதற்கு
எனக்கொருத்திஇல்லையே ஏதுசெய்வேன்கட்டழகி
இந்தமொழிகேட்டு இசைந்துமேசொல்லலானாள்
நானிருக்கயுனக்கென்ன நயமுள்ளபக்கிரியே
அந்தமொழிகேட்டு ஏதுசொன்னான்பக்கிரியும்
தூத்தெரிக்கிழப்பிணமே தூரப்போநாற்றமடி
உன்னைப்பிடித்ததுபோல் உனக்குதவிகொண்டுவாரேன்
இரண்டுபேருஞ்சண்டையிட இசைந்துமே பார்க்குராண்டி
இப்படிச்சொல்லியவன் எடுத்தானேகரும்பூனையை
பூனையைக்கொன்றுபஸ்பம் புகழுடன்செய்தானே
இட்டுகண்ணுக்கு மையிட்டானப்போது
கைதன்னிலஞ்சனம் கடுகவேபார்த்தானே
வடதேசமெல்லாம் வகையுடன்பார்த்தானே
வடதேசந்தன்னிலே வாழ்மாதுதோற்றவில்லை
தென்தேசமெல்லாம் தேடியவன்பார்த்தானே
தெற்குதேசந்தன்னில் திகைமாதுகாணவில்லை
கிழக்குதேசந்தன்னில் கிருபையுடன்பார்த்தானே
கிழக்குதேசந்தன்னில் கனமாதைகாணவில்லை
மேற்குதேசந்தன்னில் போட்டானேயஞ்சனம்
அந்தநல்லபூமிதன்னில் அகப்பட்டாள் வொருமாது
பனிரெண்டோசனைதூரம் பானுகண்டி பட்டணமாம்
இவனுடைய அஞ்சனத்தில் அகப்பட்டாள்வொருமாது
வாடிவனக்குயிலே வரிசையுள்ளவணிகச்சங்கு
பானுகண்டிபட்டணம் பக்ஷமாய் நான் போகின்றேன்
எனக்குகந்தமாதை எடுத்துமேவருகின்றேன்
இந்த மொழிகேட்டு இளங்கொடி வணிகச்சங்கு
எங்கடாசக்காளத்தி ஏண்டாநீதலைதுள்ளுகிறாய்
என்றுமேசொன்னாள் ஏந்திழை வணிகச்சங்கு
இந்தமொழிகேட்டு ஏதுச்சொல்வான்பக்கிரியும்

வசனம்.

அடிநாயகி இன்னாட்டிற்கு பனிரெண்டு யோசனை தூரமுள்ள பானுகண்டிப் பட்டணத்தில் நவபோஜமகாராஜன் பெற்றெடுத்த ஏழுபெண்களில் கடைசி மகளாகிய பாலநாகம்மாளை சிறையெடுத்து வருகின்றேன்பார் என்று பக்கிரிசொன்னதை வணிகச்சங்கு கேட்டு அடா சண்டாளப் பாதகா அங்கு நீ சென்றால் உன் தலை சிதறிப் போகுமென்று சொன்னாள்.

பொல்லாதவேந்தரவர்கள் போக்குவாருன்னாவி
நீயேண்டாபோகுராய் நிலைதப்பி அன்னாடு
என்வார்த்தைக்கேளாமல் போவாயேயாமானால்
நீ திருமபிவரப்போவதில்லை துன்பங்கள்தான்நடக்கும்
இந்தமொழிக்கேட்டான் இனிமையாய்பக்கிரியும்
எனக்குயெதிர்மொழி எதிர்த்துமே பேசுகின்றாயா
கத்திதனையெடுத்தான் கடுங்கோபம்தான்கொண்டு
மூக்கையும்காதையும் அறுக்குறேன்மூதேவிமுண்டையே
இப்படியாகச்சொன்னான் இசைந்துமேபக்கிரியும்
அப்போதுவணிகச்சங்கு அன்புடன்சொல்லலானாள்
நீபோனால்யெனக்கென்ன நிமைக்குள்ளேசெத்தாலென்ன
என்றுமேசொல்லிவிட்டு இசைந்துமனைபோய்விட்டாள்

வசனம்.

இந்தப்பிரகாரம் சொன்னமொழியை பக்கிரியும் கேட்காதபடியால் வணிகச்சங்கு எண்ணுதெல்லாம் எண்ணிக்கொண்டு தன்மனைக்குப் போய்விட்டாள்.

அந்தசமயத்தில் அறிந்தானேபக்கிரியும்
வணிகச்சங்குமேடைக்கு வந்தானேபக்கிரியும்
பக்கிரிவந்ததை பார்த்தாளேசங்கோஜி
அன்பாய்குர்ஜியை இசைந்துமேபோட்டாளே
பைடோஜிபைடோஜி பக்கிரிஎன்நாயகா
பக்கிரியப்போது பகர்ந்துமேதானமர்ந்தான்
இன்பமாய்மிட்டாய் இசைந்துகாவென்றுச்சொன்னான்
சங்கோஜிபக்கிரி நலமுடன்மிட்டாய்பெந்தனுக்கு

அகேசங்குதூக்கோவா அன்புடன்தின்னுவாய்
நக்கோஜிபக்கிரி நான்தின்னமாட்டேனென்றாள்
இந்தமொழிகேட்டு இசைந்துமே சொல்லலுற்றான்
பால்ரொட்டியிப்போது பண்புடன்செய்குவாயே
அந்தமொழிகேட்டு அப்போதுசங்கோஜி
தங்கச்சாணிக்கையதனை தனியாயடுப்பில்வைத்து
இரண்டுகலமாவை இசைந்துரொட்டிசுட்டாளே
ஒருகரிசிறுப்பருப்பை ஒருமித்துகடைந்தாளே
இத்தனைரொட்டியும் இசைந்துமேதின்றானே
அறுபதுலோட்டா அன்பாய்கள்குடித்தானே
அதிலும்மயக்கம் அவனுக்குண்டாகவில்லை
பாங்கமாயப்போது பண்புடன் அபினிதின்றான்
அந்தச்சமயத்தில் அழகான சிமிள்தானெடுத்து
ஒருக்கூடை கெஞ்சாவை உகந்துமேதான்கசக்கி
சிமிள்தன்னில்வைத்து சிறப்புடனே பிடித்தானே
கெஞ்சாபிடித்தவுடன் கிர்ரென்றுதலைசுழட்ட
இல்லாதயோசனைகள் அப்போதுபிறந்ததங்கே
அரேஹ்வாரே: அரேபாலகாகோஜி
சுந்தரியென்னைவந்து சரசங்களாடுவாய்நீ
முத்தமிட்டுயென்னை முகந்துமேதான்கூடுவாய்
மாதுவேஷமெடுத்து மகிழ்ஙானைகொண்டுவாரேன்
குலவுர்த்திவேஷத்தை கொப்பனவேபோட்டானே
டோரில்குல்லாவை தொடுத்தானேதலைதன்னில்
கம்பளிக்கந்தையை கழுற்றினில்சுற்றினான்
லுங்கிகுட்டைதன்னை கழுற்றிலேபோட்டானே
தங்கவுக்காதன்னை தகுந்தகைபிடித்தானே
பாலமணி கைதன்னில் பக்குவமாய்கட்டினான்
பக்கிரிமணிகளைபகர்ந்து கழுற்றினில்போட்டானே
நிலைக்கண்ணாடிதன்னில் நின்றுரூபம்பார்த்தானே
அரே இந்தவேஷந்தானும் அழகல்லநமக்குமே
அந்தவேஷந்தன்னை அப்போதேகலைத்துவிட்டான்
பிராமணவேஷம் பண்புடன்கட்டிக்கொண்டான்
நிலைக்கண்ணாடியெதிரில் நின்றுமேபார்த்தானே
அந்தவேஷம்சரியல்லவென அப்போதுகலைத்தானே

பக்கிரி சன்யாசிவேஷம் கட்டிக்கொண்டு புறப்படுவது.

கோமுட்டிவேஷத்தை கொப்பனவேபோட்டானே
அந்தநல்லவேஷமும் சரியல்லயெனக்கலேத்தானே
சன்யாசிவேஷத்தை தானப்போகட்டினுன்
பட்டுதோவத்தியை பாகைபோல்சுற்றினுன்
நெற்றிக்குதூளிபூசி நிகழ்சந்தனபொட்டுமிட்டான்
ருத்திராக்ஷமாலையை ரூடியாய்மாலேயிட்டான்
விபூதிபையெடுத்து இடுப்பினில்சொரிவினுன்
கண்ணுடியெதிரில்வந்து தன்னழகைதான் பார்த்தான்
தன்னழகைதான்பார்த்து தான்மூர்ச்சையடைந்தானே
மூர்ச்சைதெளிந்துமே முகந்துதானும் எழுந்தானே
இந்தவேஷமாய்நான்சென்று இப்போயழைத்துவாரேன்
வாடிநீவணிகச்சங்கு வண்மையுடன்நீகேழ்ப்பாய்
பானுகண்டிபட்டணமும் பாங்குடன்போகின்றேன
மேடைகளும் மகுதியும் மேன்மையுடன்பத்திரம்
இந்தமொழிகேட்டு இன்பமுடன்வணிகச்சங்கு
படுபாவிநீபோனுல் பானுகண்டிபட்டணத்தில்
உன்னேப்பலியிடுவார் உண்மையுடன்வேந்தருமே
இந்தமொழிகேட்டான் இன்பமாய்பக்கீரியும்
தூத்தெரிபாஞ்சோத்து தூரநில்வணிகச்சங்கு
செருப்பாலடிப்பேண்டி சொல்லாதேஇம்மொழிதன்னே
இத்தனேயுங்கேட்டாளே இன்பமுடன்வணிகச்சங்கு
உனதிஷ்டம்போல் உண்மையுடன் நீர்போகுவீர்
அந்தச்சமயத்தில் அன்புடன் மாயாபக்கிரியும்
மாயாபல்லக்குஒன்று அன்புடன்செய்தானே
பிந்தியகொம்புதன்னில் போயிகள்பிடித்தார்கள்
முந்தியகொம்புதன்னில் போயிகளில்லேயே
ஏறினுன்பல்லக்கு இன்பமாய்மாயாபக்கிரியும்
மந்திரபலத்தாலே பல்லக்கு மாயமாய்நடக்கிறது
நாகள்ளபூடிகரை நலமாகதாண்டிவந்தான்
பானுகண்டிபட்டணம் பாட்டையைதான்பிடித்து
இருண்டவனங்களும் எலுமிச்சந்தோப்புகளும்
புலிகள்வனத்தைவிட்டு புகழுடன்வந்தானே
கிளிப்பட்டணம்வந்தான் கிருபையுடனப்போது

கெங்காப்பட்டணம்வந்தான் கெம்பீரமாயப்போது
புலிவேந்தன்பட்டணம்விட்டு பானுகண்டியெல்லைவந்தான்
பானுகண்டிபட்டணத்தில் புகழ்நந்தவனங்கண்டான்
இரக்கினுன்பல்லக்கு இன்பமாயவ்விடத்தில்
அந்தசமயத்தில் அந்தநல்லவனந்தனிலே
பரமசிவனைப்போல் பக்கிரியும்வேஷம்போட்டான்
சங்குசேமக்கலம் சம்பிரமாய்கைபிடித்தான்
பானுகண்டிபட்டணம் கோட்டைக்கெதிரேவந்து
சங்குதானெடுத்துபக்கிரியும் சம்பிரமாய்வூதினுன்
அந்தசப்தம்கேட்டு அங்கிருந்தகாவலர்கள்
வந்தனம்சங்கமரே வந்தக்காரியமேதையா
இந்தமொழிக்கேட்டு ஏதுச்சொன்ஞன்மயாபக்கிரியும்
சுகமாய்சுகமடைவாய் சிறப்புடனேகாவற்காரா
நானுமேகாசியாத்திரை நலமாகபோகின்றேன்
கோட்டைக்குள்போவதற்கு கோபமிலலாசெலவுதாருய்
அந்தமொழிக்கேட்டார் அப்போதுகாவலரும்
போகவிடங்கொடுக்கோம் பொல்லாங்குநேரிடுமே
எங்களுக்குவுத்திரவு இன்பமாய்வேந்தர்தந்தார்
அரிதேசிபரிதேசிகள் அன்புமிகபிராமணர்வந்தால்
உழக்கரிசியும்பருப்பும் உடனேகொடுத்திடுங்கள்
சிலவுதந்துபோனுர்கள் சிறப்புடன்வேந்தருமே
அதற்குமிஞ்சியாங்களும் அளவுசொல்லமுடியாது
இந்தமொழிக்கேட்டான் இன்பமுடன்மாயாபக்கிரியும்
காவலரேநீர்கேளாய் கனமுடன்யென்வார்த்தை
இந்தயிடத்திலே இருக்கவேபோகிறதில்லையான்
இரண்டுமூன்றுவீடு இன்பபிச்சையெடுத்துக்கொண்டு
ஒருவேளைதானிருந்து உப்பொங்கிபோகிறேண்டா
இத்தனையும்தான் கேட்டார் இன்பமுடன்காவலரும்
வேந்தரிதைக்கேட்டால் வேகமாய்சிரசுபோகும்
போகவழிவிடோம் போய்விடுவீர்பரிதேசியே
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்மாயாபக்கிரியும்
பிள்ளைகள்பெருத பெரும்பாவிகளாகுமடா
ஐபாவேநீகேளாய் அன்புடன்பரிதேசியே
பிள்ளைகளில்லாச்செய்தி எப்படிநீயரிந்தீரையா

அடபோடாபாதகா அன்புடன்நீகேளாய்
இந்தநல்லநாட்டிற்கு இருக்குறேன்தெய்வமாக
பிள்ளைகளில்லாவிட்டால் பிள்ளைதரும்பரதேசியான்
பாலகரில்லாவிட்டால் பாக்கியம்தரும்பரதேசியான்

சந்நியாசியை காவலரில் ஒருவன் புத்திரபாக்கியம் கேட்பது

வசனம்.

இப்படியாக மாயாபக்கிரி மர்மமாய் சொல்லவே இதைக் கேட்டகாவலன் ஆச்சரியமடைந்து ஐயா நீர் இதுவரைக்கும் ஆருக்காகிலும் புத்திரபலன் கொடுத்ததுண்டா என்று கேட்டமாத் திரத்தில் இதைக்கேட்ட பக்கிரி அடாபயலே எனது ஞானநிஷ்டி தன்னில் அகப்படுகின்றது இதல்லாமல் இந்த கோட்டையிலிருக் கப்பட்ட பாலநாகம்மாளுக்கும் சந்தானபலன் யானேகொடுத்தேன் இப்போது ஏழுநாளாச்சுது அம்மா பிரசவித்ததென்றுசொன்ன வுடனே காவலன்பயமடைந்து நமது கோட்டை சங்கதி இதரா ளுக்குத் தெரியவராதே இவருக்கு எப்படிதெரிந்ததோ அரியோம் இவர் சாக்ஷிக்ஷாத் சாம்பவமூர்த்தியாயிருக்க வேணுமென்று சொல்லத்தொடங்கினர்.

வந்தனம்வந்தனம் வடகைலாசமூர்த்தியே
செய்தப்பிழைகளை சித்தம்வைத்தாளுமையா
இந்தமொழிக்கேட்டு ஏதுசொன்னன் மாயாப்க்கிரியும்
உந்தனுக்குபுத்திரபலன் உகந்துயான்தருகின்றேன்
இப்படிச்சொல்லி எடுத்தானே விபூதியையை
விபூதிதானெடுத்து வோதியவன்நெற்றியிலிட்டான்
கொஞ்சம்விபூதியை கொடுத்தானேகைதன்னிலே
இந்தவிபூதியை இப்போதுயெடுத்துக்கொண்டு
உந்தனுக்குயேழுப்பேர் உகந்துமேபத்தினிமார்
அவர்கள்நெற்றிதன்னில் அன்பாகநீயிடுவாய்
வீட்டிலும்தொரையிலும் வேகமாய்நீயிடுவாய்
ஏழுபேர்வாயிலும் இன்பமாய்நீபோடுவாய்
இப்படிச்சொல்லி கொடுத்தானேவிபூதியை

அந்தநல்விபூதியை அன்பாகக்காவலனும்
கையிலேந்திக்கொண்டு கடுகேநடக்கலுற்றான்
ஓட்டமாவோடிவந்து யழைத்தானேதேவிகளை
வாங்களடியென்தேவிகளே வண்மையுடனின்றுமே
புத்திரபாக்கியம் பெருவதற்குவிபூதியை
பெரியோர்கொடுக்க பிரியமாய்பெற்றுவந்தேன்
என்றுசொல்லிவிபூதியை இட்டானேநெற்றிதன்னில்
கொஞ்சம்விபூதியை கொப்பனவேவாயில்போட்டான்
வீட்டிலும்தொரையிலும் வேகமாய்தான்போட்டான்
போட்டநிமிஷத்திற்கு பிறந்தார்கள்கோடிபாலர்
பிறந்தவுடனே பிடித்தார்கள்தந்தைமடியை
தந்தையேபசிக்குதையா தயவுடன்சாதம்போடும்
என்றுமேபாலகர்கள் எல்லாம்மடக்கிக்கொண்டார்
இந்தவேதனைகள்படவுந் என்னால்முடியாது
இந்தப்பாலருடன் இனிப்படமுடியாதெனறு
ஓட்டமும்நடையுமாக ஓடியேதான்வந்தானே
பக்கிரியெதிரில்வந்து பண்புடன்தான்பார்த்து
போதுமையாயோகியே பெரும்பாலர்பாக்கியம்
கோடிபாலகரை கொப்பனவேநீதந்தால்
எப்படிச்சகிக்கலாகும் இந்தநல்லபாலர்கோஷ்டம்
பாக்கியமெனக்குவேண்டாம் வைபோகதினகரே
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்பக்கிரியும்
உனதுஇஷ்டம்போல உகந்துபாலர்தருகின்றேன்
ஏழுபுதல்வரை இன்பமாய்நான்தந்தேன்
ஏழுப்பாலருடன் இசைந்துநீவாழ்ந்திருப்பாய்
இப்படிச்சொல்லவே இருந்தபாலர்போய்விட்டார்
ஏழுபாலகரை இசைந்துமேயமைத்துவிட்டு
வாருமையாபரிதேசி வகையுடன்மொழிகேளும்
கோட்டைக்கு போவதற்குகொப்பனவேசிலவுதாரேன்
சந்தடியில்லாமல் தாங்களும்போய்வருவீர்
இந்தமொழிக்கேட்டு ஏதுசொன்னான்பக்கிரியும்
சங்கையான்வூதாமல் சிரப்புடனேபோகலாமா
ஏதுக்குமஞ்சவேண்டாம் இன்பமாய்காக்கின்றேன்
இதுபோல்சொல்லவே ஏதுச்சொன்னான்காவலனும்

வசனம்.

ஐயா பரிதேசியே இதோயான் இருப்பது ஓர்வாயல் இப்படி ஏழு வாயலிருக்கிறது ஏழுவாயலுக்கும் ஏழுக்காவல் இருக்கிறது இரண்டாவது புலியும், மூன்றுவது கரடியும், நான்காவது காட்டு நாயும், ஐந்தாவது காட்டானையும், ஆறுவது சிங்கமும், ஏழாவது ஆளியும் இப்படிகாவல்இருக்க நீர்எப்படிபோகுவீர் என்றுச்சொல்ல இதுக்கேட்டு பக்கிரி அடாகாவலனே போகத்தரமானுல் போகின் றேன் இல்லாவிடில் திரும்பி வருகின்றேன் என்றுசொல்லி மாயா பக்கிரியும் புறப்பட்டான்.

சிட்டிக்கைதான்போட்டு சிரப்புடன்பேய்களையும்
அப்போவரவழைத்து அன்புடன்சொல்லுகின்றான்
கானகம்நீங்கள்சென்று கனமுடனேயெந்தனுக்கு
காட்டாட்டின்கறி கனக்காளம்கொண்டுவாரீர்
தயிருஞ்சாதமும் தனிப்பாலைக்கொடிகளும்
பலழக்கொடிகளும் பண்புடனேகொண்டுவாரீர்
இப்படிச்சொல்லவே இன்பமதாய்பேய்களும்
கொண்டுவந்துகொடுத்தது பேய்களுமப்போது
இத்தனையும் பெற்றுக்கொண்டு இன்பமாய் பக்கிரியும்
அந்தவாயல்தாண்டி அன்பாக இரண்டாம் வாயல்
இரண்டாம்வாயல் வருக இருந்தது பெரும்புலிதான்
இவனைக்கண்டவுடனே இரைச்சலும்போட்டது
அந்தப்புலியைக்கண்டு அன்புடனே பக்கிரியும்
ஆட்டுத்துடைதன்னை அன்பாகத்தான் போட்டான்
இரச்சியைத்தின்பதற்கு இன்பமுடன் திரும்பியது
அந்தநல்லசமயத்தில் அந்தவாயல் தாண்டினன்
மூன்றும்வாயலண்டை முகந்துமே வந்துநின்றான்
கரடியுமப்போது கண்டது இப்பாதகனை
எதிரியேதான்வருக இன்பமாய் பக்கிரியும்
அந்தநல்லசமயத்தில் அதட்டியே காளானை
எதிரினில்போடவே எடுக்கவே திரும்பியது
அப்போதுபக்கிரியும் அந்தவாயல்தாண்டினுன்
நான்காம்வாயலண்டை நலமாகவந்துநின்றுன்
காட்டுநாயுமிவனைக்கண்டு கலங்கிடவேகுலைத்தது

அந்தகாயிக்குஇரச்சியை அவனுமேபோட்டானே
இரச்சியைத்தின்பதற்கு இன்பமுடன்திரும்பியது
அந்தநல்லசமயத்தில் அந்தவாயல்தாண்டியே
ஐந்தாம்வாயலண்டை அன்பாகவந்துநின்றான்
காட்டானைஇவனைக் கண்டுமேகர்ஜித்தது
அப்போதுபவழக்கொடியை அன்பாகபோட்டானே
பவழக்கொடியை பார்த்துமேதிருமபியது
அந்தநல்லசமயத்தில் அந்தவாயல்தாண்டினான்
ஆறும்வாயலண்டை அன்பாகத்தான் வந்தானே
அங்கிருந்தசிங்கம்இவனை அதட்டியேகர்ஜித்தது
பவழக்கொடியைஇவன் பண்புடனேபோட்டானே
அந்தக்கொடியை அதுதின்னத்திரும்பியது
அந்தச்சமயத்தில் அந்தவாயல்தாண்டினான்
ஏழாம்வாயலண்டை இருந்தயாளிதானும்
எடுத்துமேதயிர்சாதம் இன்பமுடன்போட்டானே
தயிர்சாதம்பார்த்தஉடன் திரும்பியதுயாளியுமே
அந்தசமயம் அந்தவாயல்தாண்டிவந்தான்
பானுகண்டிபட்டணம் கோட்டைஎதிர்வந்தானே
உப்பரியருகினில் இருந்ததுகிணறுவொன்று
அந்தகிணற்றருகில் அதட்டிஊதினான்சங்குதன்னை
அந்தச்சமயத்தில் அங்கிருந்தபாலரெல்லாம்
கும்பலாய்கூடினார்கள் குணமுடனிவனருகில்
இந்தநல்லபாலகரை இன்பமாய்பார்த்தானே
அங்கிருந்தமண்ணெடுத்து அவல்கடலைதான்செய்தான்
ஓட்டையும்தானெடுத்து ஒருமிக்கமோருசெய்தான்
சுப்பலைதானெடுத்து சுழிபரம்புதான்செய்தான
இந்தநல்லவேடிக்கையை இன்பமாய்பார்த்தார்கள்
அப்போதுபக்கிரியை அன்புடன்கேழ்க்கலானார்
ஐயாவுனதுபெயர் அரியவேசொல்லுமிப்போ
சொல்லுகிறேன்கேளென்று சுருக்காகபக்கிரியும்
ஜாலவித்தையாடும் பரிதேசிபாப்பையன்
இந்தபெயரைக்கேட்டு எடுத்துசொன்னார்பாலகரும்
இந்நாட்டுவேந்தர்கள் இங்குதானில்லையையா
வேண்டியவெகுமதிகள் வேகமாய்கிட்டுமையா

ஙங்கள்வேந்தர்தானும் அன்பாகயிப்போது
கண்டிக்கோட்டைக்கு கனமுடன்சென்றாரையா .

வசனம்.

இப்படியிருக்க இந்தபக்கிரி ஆறுதேவிமார் வீடுதேடி போவ தற்கு உத்தேசமடைந்தான் அந்தசமயத்தில் பாலநாகம்மாள் பிரச வித்து ஏழுநாளாச்சுது அந்த தீட்டுதன்னில் எல்லாதாதிகளும் அவ்விடத்தில் நின்றுவிட்டார்கள். அதன்பிறகு இந்த ஆறு பேருக்கும் தாகமதிகரிப்பதால் தாமேசென்று வாயிலில் இருக்கப் பட்ட கிணற்றில் ஜலமெடுத்துக்கொண்டு வாலாமென்று எண்ண மிட்டு அவரவர்களும் ஓர்செப்புக்குடம் இடையில் வைத்து நடந்து வந்தார்கள் கிணற்றருகில் அந்தச்சமயத்தில்,

அவன் மந்திரவித்தையில் மகாசிறந்தபக்கிரியாம்
ஆறுப்பேர்களும் அன்பாகவரக்கண்டானே
இடையிலிருக்கும் இன்பசெப்புக்குடந்தன்னில்
நிறயசவரன்கள்தான் நிர்மித்தானவ்வேளை
இந்தநல்வித்தையை இன்பமாய்பார்த்தாரே
என்னசாமர்த்தியம் இந்தநல்லபரிதேசிக்கு
இன்னம்நமக்கு இதுபோல்பாக்கியம்தருவாரோ
சாம்பவமூர்த்தியோ ஷண்முகதேவனோ
பாலன்பிறந்தவேளை பண்பாய்நலமாச்சுது
குடத்தையெடுத்துமே கொப்பனவேதிரும்பினார்
மனைக்குவந்துமிவர் மகிழ்ந்துடமிரக்கினார்கள்
சிலதுகுடங்கள்தானும் செகப்புகருங்கல்லாச்சு
சிலதுகுடத்தில் சிறுவோட்டின்பாளமாச்சு
இந்தநல்லயதிசயத்தை இன்பமாய்பார்த்தாரே
ஜாலத்தில்பெருத்தவண்டி சன்யாசியிவனுக்கும்
இப்படிச்சொல்லவே இசைந்துமேபக்கிரியும்
சூரியநாகம்மாள் சுந்திரஅரண்மனைக்குவந்து
சங்குதானூதினான் சம்பிரமாய்மாயபக்கிரியும்
முரத்தில்முத்துகளை முகந்துமேகொண்டுவந்தார்
இந்தநல்லமுத்தை இவனுமேபெற்றுக்கொண்டு
விபூதிதானெடுத்து வேகமாய்மாயாபக்கிரியும்
சூரியநாகம்மாளுக்கு விபூதியுமிட்டானே

வசனம்.

அம்மா இந்த விபூதியைக் கொண்டுபோய் நெற்றியிலிட்டுக் கொண்டால் சகலமான பிரேத பிசாசு, பூதாகூஷ, ஏவல், பில்லி, சூன்யம் இதுகள்யாவற்றும் அணுகாது குருகடாக்ஷம் அநுசரித்து சந்தோஷமடைவீரென்று விபூதியை சூரியநாகம்மாள் நெற்றியிலிட்டான். அதன் பிறகு,

அந்தச்சமயத்தில் அன்பாகமாயாபக்கிரியும்
ஆறுபேர்மேடைக்கு அன்பாகத்தான்சென்றான்
பிக்ஷாந்தேகியென்று பிருசங்குதானூதினான்
அந்தசப்தங்கேட்டு அதிவேகமாய்தாதிகளும்

தாதிகள் பரிதேசிக்குப் பிச்சையிடுவது.

பிச்சையெடுத்துக்கொண்டு பெருமையுடன்வந்தார்கள்
வந்ததோர்தாதியை வாஞ்சையாய்ப்பார்த்தானே
இந்தமாளிகைக்கு இசைந்தபட்டத்துத்தேவிதானு
அந்தமொழிகேட்டு அப்போதுதாதியுமே
பட்டத்துதேவியல்ல பண்புள்ளதோழிநான்தான்
இப்படிச்சொல்லவே இதுகேட்டான் பக்கிரியும்
தூத்தெரிபாஞ்சோத் தாதிபிச்சைபெறலாமா
சாம்பவமூர்த்திக்கு சரியாகுமாயிந்தபிச்சை
பாலநாகுபிச்சையை பண்புடன்நான்பெறுவேனே
இப்படிச்சொல்லவே இதுகேட்டார்தாதிகளும்
ஐய்யமில்லாபரிதேசியே அன்புடன்கேளுமையா
புருண்டுதீராதப்படி பிச்சையெவ்வாரிடுவாரையா
இந்தமொழிக்கேட்டான் இன்பமுடன்பக்கிரியும்
பரிதேசியானவர்க்கு பகரும்புருண்டேதடி
அந்தபாலநாகுக்கு அன்பாய்சந்தானங்கொடுத்தேன்
பிச்சையிடாமல்போனல் பெருமையுடன்பாலகனை
பாலகன்தன்னையே பண்புடன்வாங்கிப்போறேன்
இப்படிச்சொல்லவே இதுகேட்டார்தாதிகளும்
உடலும்நடுங்கியே உகந்துமேவோடிவந்து
அம்மாவேநீர்கேளும் அன்புடனேயென்வார்த்தை
இத்தனைநாளாக இங்குவரும்பரிதேசியல்ல

பாலநாகம்மாளுக்கு தாதிகள் சொல்வது.

நீர்பிச்சைஇடாவிட்டால் நிகழ்பாலனைகொல்லுவானும்
இப்படிச்சொல்லியவன் இசைந்துமேகூறுகின்றான்
இந்தமொழிக்கேட்டாள் இன்பமுடன்நாகம்மாள்
பயமதுதான்கொண்டு பண்மையுடன்தாதிகளை
அப்போதழைத்துமே அன்புடன்சொல்லலானாள்
தேசங்கள்திரிபவனோடு தேடிபதில்கூறலாமா
எந்தன்பாலன்போனால் இருக்குமாயெந்தனுவி
தாதிகளேநீங்களிப்போ தயவுடன்வென்னீரை
கொண்டுவாருங்களடி கொப்பெனவேநீராட
அந்தமொழிக்கேட்டு அப்போது தாதிகளும்
வென்னீரைக்கொண்டுவந்து வேகமாய்வைத்தாரே
சுத்தநீராடிநாகம்மாள் சுருக்காய்கையணிந்து
பட்டுசேலைதன்னை பாங்குடன்னுடுத்திக்கொண்டு
இருகைதன்னிலே இன்பமுத்துதானெடுத்து
பாலநாகம்மாள் பாங்குடன்வருகின்றாளே
கலீல்கலீலென்றுமே கனகமெட்டுசப்திக்க
பரிதேசிமுன்பாகநாகு பாங்குடன்வந்தாளே
அந்தநல்லசமயத்தில் அன்பானபாலகனும்

காவுகாவென்றுமே கடூமாயகலானுன்
அந்தசப்தம்கேட்டு அப்போதுபாலநாகம்மாள்
எந்தன்தவப்பாலா இளமபாலவர்த்திராஜா
பரிதேசிக்கிப்போது பண்புடனேபிச்சையிட்டு
வேகமாய்வருகின்றேன் தாதிகளேதாலாட்டும்
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்பாலகனும்
என்னவென்றுபாலகன் அப்போது அழுகலானுன்
அம்மாவேநீகேளாய் அன்புடனேயென்வார்த்தை
பரிதேசியல்லம்மா பார்க்கஅவனிப்போது
நாகள்ளபூடிமை நன்மையுடன்ஆள்பவன்தான்
மாயக்காரனம்மா மாயாபக்கிரியவன்தானும்
அவனுக்குபிச்சை அன்பாகயிடவேண்டாம்
பக்கிரிகைதன்னிலே பண்பாகீரகப்படுவீர்
இப்போதுஎன்தந்தைகள் இந்நாட்டிலில்லையே
தாயுமேநீயுமேதான் வேருய்பிரிந்திடுவாயே
இப்படிச்சொல்லி இசைந்துமேபாலனழுதானே
பாலன்சொன்னமொழி பகர்ந்துமேதெரியவில்லை
தாய்சொல்லும்மொழியை பாலன் அரிந்திட்டான்
அழாதேயென்குமாரா அழகுபாலவர்த்திராஜா
இப்படிச்சொல்லியே இசைந்துமேயருகில்வந்தாள்
கோடுவெளிதன்னில் கொடும்பாவிவந்துநின்றுன்
இந்தப்புறத்தில் இசைந்துமே பாலநாகம்மாள்
பெருவீரேபரிதேசி பெருமையுடன்பிச்சைதன்னை
அந்தமொழிகேட்டு அப்போதுசொல்லுகிறுன்
கோடுதாண்டிவந்தால் கொள்வேனேபிச்சைதனை
கோடுதாண்டியானும் கொடுக்கவேஞாயமில்லை
இப்படிச்சொல்லவே இதுகேட்டான் பக்கீரியும்
ஆனாலென்சமர்த்தை அன்பாகநீபார்ப்பாய்
இப்போதேபாலகனை இன்பமாய்கொண்டேகுவேன்
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள் நாகம்மாள்
ஐயையோஅண்ணவே அன்புள்ளபரீதேசியே
நீ என்தந்தையல்லவா நீபெற்றபுதல்வினைச்சே
உனதுபோனிப்போ உகந்துமேஅழுகின்றனே

பால்கொடுக்கப்போகுறேன் பண்புடனே நீருமிப்போ
பிச்சையை பெருவீரையா பாலகனழுகின்றானே
இப்படிச்சொல்லியே இசைந்துமேநாகம்மாளும்
பாலகன்தொட்டிலண்டை பண்புடனே ஓடிவந்தாள்
காவ் காவென்றுமே கனகோஷ்டமிட்டானே
என்றுமில்லாத அழை அப்பொழுதழுகலானன்
தனதுகைமோதிரத்தை தான் கழற்றிஅப்போது
பாலன்கைதன்னில் பண்போடுகொடுத்தாளே

வசனம்.

இந்தச்சமயத்தில் பாலகன் அழுதுக்கொண்டு என்னசொல்லுகிறானென்றால் ஓ அம்மணி எனது பாட்டனான ஜமாமுனி வேந்தன் காட்டிற்கு வேட்டையாடச்சென்றார் அச்சமயம் அக்கானகத்தில் காளியும் துர்க்கையும் அனேக நாட்களாக போர்செய்துக்கொண்டிருந்தார்கள் இப்படியிருக்க அம்மார்க்கமாய் இவர்கள்சண்டையைப் பார்த்துவிட்டுப்போக அவ்விடத்தில் மும்மூர்த்திகளாகிய பிரம்மா, விஷ்ணு, மஹேஸ்வரன் இவர்கள் மூவரும்வந்தார்கள் இவர்களிருவரைக்கண்டு ஓ ஜமாமுனிவேந்தனே இந்த துர்க்கையும் காளியும் நிர்நிமித்தமாய் போர்செய்கிறார்கள் இவர்கள்கலகத்தை சமாதானம் செய்வீரென்றுச்சொன்னவுடனே வேந்தன் இதைக்கேட்டு சுவாமி இவர்கள் வீரசத்துக்களாச்சுதே என்னைக்கொன்றால் நான் ஏதுசெய்வது ஆனாலும்பெரிதல்ல யான்சென்று சமாதானம் செய்கிறேனென்று சொல்லிவிட்டு அவர்களிடம்வந்து ஜமாமுனிவர் அம்மாலோகரக்ஷகிகளே நீங்கள் இப்படிச்சண்டை செய்வதுநலமல்ல உங்கள் இருவருக்கும் மத்தியஸ்தம் செய்கிறேன். எப்படி என்றால் கிழக்கெல்லையில் காளியும், மேற்கெல்லையில் பிடாரியும் யிருக்க வேண்டும் இதோ நீங்கள் இருவர் நிற்கும் இடத்திற்குமத்தியில் எல்லைகல்லை நட்டுவைத்தேனென்று இருவரையும் சமாதானஞ்செய்துவிட்டார். அந்தச்சமயத்தில் பிரமமா, விஷ்ணு, மகேஸ்வான், இவர்கள் மூவரும் சந்தோஷமடைந்து செந்திராயுதம் ஒன்று பாட்டனுக்குக் கொடுத்தார்கள் அந்தச்செந்திராயுதம் லட்சுமி விவாஹத்திலிருக்கிறது அதை எடுத்துககொண்டு வந்து எனது தொட்டிலில் வைத்தால் நானந்தபக்கிரியை கொல்லுகிறேனென்றுசொன்னமொழியாலனது தாயிக்குத்தெரியவில்லை பாலகன் அழுவதைக்கண்டு தாதிகளோடு சொல்லத்தொடங்கினள்

தாதிகளே நீங்ககளும் தயவுடனேபாலகனை
தாலாட்டிஇப்போ நித்திரையுமசெய்துவைப்பீர்
இப்படிச்சொல்லியே இசைந்துமே நடக்கலானாள்
நான்குகோடுகள்தாண்டி நலமாகவந்தாளே
இனியாகிலும்பிச்சை இன்பமாய் பிடியுமையா

பாலநாகம்மாள் பக்கீரிக்கு பிச்சையிடுவது.

இந்தமொழிகேட்டு யேதுச்சொல்வான் பக்கிரியும்
கோடுதாண்டாமல் பிச்சைநான்வாங்கமாட்டேன்
அந்தக்கோடுதனை அன்பாகதாண்டிவந்தாள்
கண்டானே பக்கீரியும் கனமுடனேநாகம்மாளை
மூர்ச்சையடைந்து மூகந்துமேகீழ்விழுந்தான்
மூர்ச்சையும்தான்தெளிந்து முந்திஎழுந்துமே
ஜோல்னுதனைப்பிடித்து பிச்சையைதானபெற்றான்
விபூதியைதானெடுத்து வைபோகமாகவேதான்
பாலநாகம்மாளுக்கு பண்புடன் நெற்றியிலிட்டான்
சிவசாம்பவமூர்த்தி சித்தமாய்காப்பாற்றுவான்
இப்படிச்சொல்லியே இசைந்துமேஆசிக்கூறினான்
பிச்சைத்தானிட்டுமே பெருமையுடன்திரும்பினாள்
அவன்கையிலிருந்த மந்திரக்கோல்மூன்றையுந்தான்
வெள்ளிப்பிரம்பை வைத்தானேநாகுதன்சிரசில்
குபீலென்றுதானெரிந்து சாம்பலாக்குவித்தானே
அந்தசாம்பல்தன்னை அடவாய்குப்பல்செய்தானே
செப்புக்கோலெடுத்து சாம்பல்மீதுவைத்தானே
அந்தநல்லச்சாம்பல் அப்போதேகருப்புநாயாச்சு
நாயாகஇவன்செய்துமே நலமாக்கிவிட்டானே
அந்தநல்லகருப்புநாயும் அப்போது பாலனிடம்
தொட்டிலருகில்வந்து சுத்திசுத்தியமுதுதங்கே
இதைக்கண்டுபக்கிரியும் இன்பமாயப்போது
ஆவ்ரே பைரியென்றான் அவ்விடம் தான்வந்தது
பாலும் ரொட்டியும் தின்னென்று தான்கொடுத்தான்
ரொட்டியும் பருப்பும் தீண்டவில்லை அக்கருநாயும்
திகிலடைந்திருந்தது தீனியொன்றும் தின்னாமல்
இப்படியிருப்பதை இதையறிந்தான் பக்கீரியும்

கழுத்துக்குக்கயிசையும் கனமுடனே தான்கட்டி
கையில்பிடித்துக்கொண்டு கடுகநடந்தானே
பானுகண்டிபட்டணங் கோட்டவாயல் வந்தானே
தலையாரிராமன் தானங்கு காவலிருந்தானே
பக்கிரிதன்னையே பண்புடனேகண்டானே
நன்றுயிருக்குதையா நலமுள்ளபரிதேசியே
இரண்டுநாளாக இவ்விடத்தில்நீரிருந்தால்
வேந்தர்இதைக்கேட்டால் வேகமாய்தலைபோகும்
போகும்போதுமக்கு புகழ்நாயுங்கிடையாதே
வருகும்போதிந்நாயும் வந்தக்காரணமேதையா
இவ்விடத்துநாயாகும் இதைவிடமாட்டேனிப்போ
இந்தமொழிக்கேட்டான் இன்பமாய் பக்கிரியும்
ஆரடாகாவலனே அன்புடனேகேளடாநீ
நான்காசிக்குபோவதாய் நன்மையுடன்தானதைக்க
தான்வருக தாமல்ல தண்மையுடன் இன்னுயை
அழைத்துமேநீரும் அக்காசியில்முழுகவைத்து
அழைத்துவாருமென்று அன்புடனேதான்கொடுத்தார்
அவர்கள்கொடுத்தநாயை அழைத்துமேவருகின்றேன்

காவர்க்காரன் நாயை விடாமல் தடுப்பது.

இதிலும்கொஞ்சம்புண்ணியம் இன்பமாய்சேருமப்பா
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்காவலனும்
விருப்பமாய்சொன்னாலும் விடமாட்டேனிந்நாயை
இதுகளைக்கேட்டானே ஈனகுலத்துரோகியும்
ஏன்கெட்டுப்போகின்றாய் என்முன்புக்காவலனே
இப்படிச்சொல்லவே இசைந்துமே காவலனும்
கெட்டுப்போனேன்முந்தி கிருபையுடனுன்னாலே
பனிரெண்டுகரிசை பச்சபயர்தான்கெட்டது
இருபதுகலமரிசி இன்பமாய்தான்கெட்டது
இன்னுமென்னதான் இப்போதுகெடப்போகிறது
இதுகளைகேட்டானே ஈனகுலத்துரோகியும்
விபூதிதானெடுத்து வேகமாய் காவலன்மேல்
அள்ளித்தெளித்தானே அப்போதுவிபூதியை
அந்தச்சமயத்தில் அந்தநல்லக்காவலனும்

பயித்தியம்பிடித்ததுபோல் பினத்தினான்வாயாலே
பேய்பிடித்ததைப்போல் பேயாடினான் அப்போது
கானகமார்க்கமாய் காவலனும்வோடிவிட்டான்
அந்தச்சமயத்தில் அறிவுகெட்டமாயபக்கீரியும்
நாயையழைத்துக்கொண்டு கலமாகவோடினான்
மூன்றுந்தினத்திலே முகந்துமேநாகள்ளபூடி
அந்தநாகள்ளபூடி அழகுகரையோரத்திலே
மௌலாவிப்பேட்டைக்கு மகிழ்ந்துமேவந்தானே

வசனம்.

அந்தமௌலாவிப்பேட்டையில் இருக்கப்பட்ட ஒரு ஆல மரத்தருகில் வந்து தான் அழைத்துவந்த நாயைநிறுத்தி வெள்ளிப் பிரம்பை அந்நாயின்தலைமேல் வைக்கவேதிக்கென்றெரிந்து அதுசாம் பலாய்விட்டது அதன்பிறகு அந்தச்சாம்பலை கும்பலாக்கி செப்புப் பிரம்பால் தட்டவே அந்தச்சமயத்தில்

கலகலவென்றுமே கன்னிகையும்நாகம்மாள்
அழகுப்பதுமைப்போல் அப்போதெழுந்தாளே
குமரனைப்பெற்றதொரு கோமளாங்கி போலாக
பாலகனைப்பெற்றதொரு பண்புள்ள நாகம்மாள்
அழகில்சிறந்தவள்தான் அன்புள்ளநாகம்மாள்
இவளைக்கண்டவுடன் ஏதுசொன்னான் பக்கீரியும்
கோமளமோகனே கோரிக்கையைதீர்ப்பாயடி
என்னழகுமோகனுங்கியே எனக்குமுத்தந்தரலாகாதா
இத்தனையும்கேட்டாளே இன்பமுடன் நாகம்மாள்
அண்ணாவேயண்ணாவே அன்புள்ளபரதேசியே
தாயும்நீதந்தையும்நீ தாம்பெற்றபுதல்வியானும்
உனதுபேரப்புதல்வன் உகந்துயழுகுவான்
பால்தரப்போகவேணும் பக்ஷமுடன்விடைதாராய்
இந்தமொழிக்கேட்டான் இன்பமுடன்பக்கீரியும்
இத்தனைநாளுன்மேல் இன்பம்வைத்துகொண்டுவந்தேன்
பொல்லாதமுறைகொண்டு புகழ்ந்துநீபேசுகின்றாய்
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்நாகம்மாள்
பாவிசண்டாளா பரமலோபிஅடாபக்கீரியே
உனதுமாயமெல்லாம் உகந்துபரிந்திட்டேனான்

பனிரெண்டுவருடம் பாரினில்எனக்குநோன்புண்டு
அந்தநோன்புதானும் அன்புடனேதீர்ந்தபின்பு
உனதுசொல்படி உகந்துயான்கேழ்க்கின்றேன்
உனக்கேயென்பிராணம் உகந்துமேதருகின்றேன்
இப்படியாய்ச்சொல்லி இருக்குமந்தவேளையிலே
இல்லாமொழிச்சொல்லி இசைந்துமேகைபிடித்தான்
கோபமும்தான்பிறந்து குமரியும்சொல்லலுற்றாள்
பூமியைக்கிரியரன் புத்தாகசாபமிடுகின்றேன்
அந்தசாபமிட்டால் அடபாவியுன்தலைவுடைந்து
பக்கென்றெரிந்திடுவாய் பத்திரம்நீதூரநில்லடா
இந்தமொழிகளைத்தான் இசைந்துமேகேட்டானே
உள்ளம்நடுநடுங்கி உகந்துபயம்கொண்டானே
வெள்ளிபிரம்பெடுத்து வைத்தானேநாகுசிரசுமீது
குபீலென்றுதானெரிந்து சாம்பலாய்குவிந்ததங்கே
அந்தநல்லசாம்பலை அப்போதுஜோல்னுவில்
பத்திரப்படுத்தியே பாங்குடன்மனைக்குவந்தான்

வசனம்.

ஆனால் இந்த பக்கிரியிடத்தில் வாச்சொன்னால் வருகிறது போகச்சொன்னால் போகிறது லட்டியுத்தம் செய்வது மூத்துவோடு மேடைகட்டுகிறது வெள்ளிப்பிரம்பு, கருப்புபிரம்பு, சிகப்புபிரம்பு, இந்த மூன்றிலும் மாயமிருக்கிறது மனிதரூபமாகிறது சாம்பலாய் போகிறது நாயாய் போகிறது இப்படியாக அனேக வித்தைக ளிருக்கிறதே தவிர ஸ்ரீ புருடன் அனுகூலமாகும்படியான மந்திர மும் செடிகள் மந்திரமும் இவனிடத்தில் இல்லாதபடியால் பால நாகம்மாள் சொன்னமொழிக்கு பயமடைந்து நடுநடுங்கி முன்செய்த பிரகாரம் வெள்ளிப்பிரம்பை நாகம்மாள் சிரசில்வைத்து சா ம் ப லாக்கி ஜோல்னுவில் போட்டுக்கொண்டு தன்மனைக்கு நடந்தான்.

அவனுடையபத்தினியும் அழகுள்ளவணிகச்சங்கு
மருதிதானேரிபக்கிரி வருவதைப்பார்க்கின்றாள்
பக்கிரியொருவன்தான் வருகின்றானவ்வழியே
இவனாலேதான்முடியுமா அம்மாதைகொண்டுவா
பலமானவேந்தரவர்கள் பார்த்தாலேகொன்றிடுவார்
இவனுக்குயெப்படிதான் அகப்படுவாளம்மாது

இப்படிஎண்ணிக்கொண்டு இருக்கின்ருள்வணிகச்சங்கு
பக்கிரிதானுமப்போ பக்ஷமுடன்வந்துவிட்டான்
வாடிநீவணிகச்சங்கு வண்மையுடனிப்போது
உனக்குச்சக்காளத்தியை உகந்துமேகொண்டுவந்தேன்
இருவரும்சண்டைசெய்ய இசைந்துமேபாற்கின்றேன்
இருவர்கள்தமாஷை இன்பமாய்பார்க்கின்றேன்
இந்தமொழிக்கேட்டாள் இசைந்துமேவணிகச்சங்கு
இல்லாமல்போனாலும் இனிமையாய்பேசுகின்ருய்
பார்வேந்தர்பத்தினியும் பார்புகழும்நாகம்மாள்
இந்தசண்டாளனுக்கு எப்படியகப்படுவாள்
இப்படியாகவே இசைந்துசொன்னுள்வணிகச்சங்கு
அந்தச்சமயத்தில் அறிவுகெட்டமாயாபக்கிரியும்
வந்தானேமகூதிக்கு வகையுடனே அப்போது
வாடிஎன்கண்ணே வரிசையுள்ளவணிகச்சங்கு
உனககுச்சக்காளத்தியை உகந்துமேகொண்டுவந்தேன்



பால நாகம்மாளை நிஜரூபம் காட்டுவது:

இருவரும்சண்டைசெய்ய இன்பமாய்பார்க்கின்றேன்
உங்கள்தமாஷை உகந்துயான்பார்க்கின்றேன்
எங்கையடாபக்கிரியே எந்தனுக்குக்காட்டுவாயே]
அந்தச்சமயத்தில் அச்சாம்பலையும்போட்டானே

செப்புப்பிரம்பாலே சிறப்புடன்தட்டினன்
கலகலவென்றுச்சொல்லி வளையலும்சப்திக்க
பாலநாகம்மாள் பண்புடன்பெழுந்தாளே
மேடையும்மெத்தைகளும் மின்னலுண்டாச்சுது
இந்தநல்வடிவுக்கு மருதியெங்கும்வொளியாச்சுது
இம்மாதைக்கண்டு இசைந்துமே வணிகச்சங்கு
உன்தலைஉடையாதோ ஓகோசண்டாளப்பாதகா
இம்மாதையேனோ இங்குநீகொண்டுவந்தாய்
அம்மாதைதீண்டினல் அப்போதேதானழிவாய்
இவனுடன்ஏன்வந்தாய் இப்படும்பாவிபின்னலே
இத்தனையும்கேட்டானே அப்போதுபக்கீரியும்
தூத்தெரிபாஞ்சோத் தூரப்போடிவணிகச்சங்கு
இல்லாதமொழிகளை என்மேல்சொல்லுகின்ருய்
மூக்கையும்நாக்கையும் முகந்துயான் அருப்பேண்டி
அடபோர்டாபாதகா ஆனலெனக்கென்னடா
எங்குதான்நீசெத்தாலும் எந்தனுக்கென்னடா
அந்தநல்லபக்கீரியும் அன்பாகநாகம்மாளை
மருதிதன்னிலே மகிழுடன்அமரச்செய்தான்

வசனம்.

அந்தச்சமயத்தில் பாலநாகம்மாளை மருதியில்கொண்டுவந்து விடவே பாலநாகம்மாள் கேட்டாயா பக்கீரி யெனக்குபனிரெண்டு வருடம் கோம்பு தீரும்பரியந்தம் இவ்வாயல்தாண்டி நீ உட்பிரவே சிக்கலாகாது அப்படி மீரிவந்தால் தரணிதேவியை நினைத்து உன் தலையுடையும்படி சாபமிடுவேன் என்றுசொன்னவுடன் பக்கீரி நடு நடுங்கி ஒன்றுமேபதில்சொல்லாமல் பள்ளியறையிற்போய் மௌன மாயிருந்தான்.

இப்படிச்சொல்லவே இதுகேட்டான் பக்கீரியும்
உள்ளம்நடுநடுங்கி ஒன்றுமேபேசவில்லை
பக்கீரிதானுமே பள்ளியரைச்சேர்ந்தானே
இப்படியிருக்கையிலே இந்தநல்லசமயத்தில்
பானுகண்டிபட்டணத்தில் பாலநாகுபோனபின்பு
ஆறுபேர்கள்அக்காமார் அழுதுபுரண்டாரே
தாதிகளேநீங்களும் தயவுடன்இப்பாலகனை

பால்கொடுத்துவளர்ப்பீர் பண்மையுடன்பாலகனை
இந்தராஜ்பத்திற்கு இவன்தானொருப்பிள்ளையாகும்
ஐயோகுமாரா அழகுபாலவர்த்திவேந்தா
நீபிறந்தவுடனே தாயைத்துரந்திட்டாயே
ஜனனமாகாதமுந்தி தந்தைகள்எழுபேரும்
கண்டிக்கோட்டைக்கு காரியமாய் போய்விட்டார்
பாவியவன்பக்கிரியும் பண்புடனேவந்தானே
இப்படிச்சொல்லியே இசைந்துமேஅழுதார்கள்
தாதிகளும்தாளுமப்போ தாலாட்டிவளர்க்கலானர்

குடிஜெனங்கள் துயரமடைந்து கண்டிகோட்டைக்கு கடிதமெழுதுதல்.

பானுகண்டிபட்டணத்தில் பண்புள்ள குடிகளெல்லாம்
அந்தமாயாபக்கிரியும் இங்குஎப்படிவந்தானே
வந்தமாயாபக்கிரியும் வகையுடன்போய்விட்டான்
எங்களுக்குமேஇங்கு ஏதொன்றும்தெரியவில்லை
நமதுபட்டணத்தில் நன்மை ஒன்றுந்தோணவில்லை

வசனம்.

ஆகையால் காலையதினம் கண்டிக்கோட்டையிலிருந்து நமது வேந்தர்கள் இன்னாட்டிற்கு வந்து ஏது யெண்ணிக்கொள்வார்களோ நாங்கள்வெளிநாட்டுக்கு போயிருக்கும்சமயத்தில் நம்நாட்டு குடிகளே நம்நாட்டை கொள்ளையடிக்க இருந்தார்களோ என்றுச் சொல்வார்களோ இன்னம்யேதேது எண்ணங்கொள்வார்களோ தெரியாது ஆகையால் இதற்குள்ளாக வேந்தர்களுக்கு இந்தச் சங்கதியை உடனே அறிக்கை செய்யவேண்டும் என்றுச்சொல்லி கடிதமெடுத்து கண்டிக்கோட்டைக்குக் எழுதினார்கள். எப்படி என்றால் மகாகனம் பொருந்திய சூர்யவர்த்திவேந்தர், சந்திரவர்த்தி வேந்தர் முதலானவர்களுக்கும் எழுதியதுயாதெனில்:— நமது பட்டணத்திற்கு சமீபத்திலிருக்கும் காகள்ளபூடிகரைதனை ஆளப் பட்ட மகாசண்டாளப்பாவியாகிய மாயாபக்கிரி இங்குவந்து நமது பாலநாகம்மாள் ஜலகமாடிய ஏழாநாள் சிறையெடுத்துக்கொண்டுப் போய் விட்டான் அவன்வந்ததும் போனதும் யாருக்குக்தெரியாது இப்போது கார்யவர்த்திவேந்தனுக்கு ஆண்குழந்தை ஜனித்திருக்கிறது அப்பாலகனை தாதிமார்கள் பால்கொடுத்துவளர்த்து வருகின்

நமதுமீதுகியாபகம் நன்மையுடன்தான்கொண்டு
டேகைகளைவிட்டுமே டேகைஒன்றுவந்ததிப்போ

கார்யவர்த்தி வேந்தன் டேகையைப்பார்த்து அண்ணனோடு சொல்வது.

வசனம்.

அந்தச்சமயத்தில் வேந்தரெல்லாம் மேடைமீது சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தார்கள் அப்போது கார்யவர்த்தி வேந்தன் எழுந்துவந்து டேகைதன்னை அழைக்க,

அந்தவர்னடேருமீது அழகாயமர்ந்திருந்த
டேகையைக்கண்டுமே தீவிரமாயழைத்தானே
மனிதரைநம்பினால் அண்ணா-மானிலத்தில்யேதுபலன்
நமதுபட்டணத்தில் நன்மையுடனிருந்தடேகை
நம்மீதுஞாபகமாய் சுலமாயிங்குவந்ததிப்போ
வாயில்லாபட்சியது வாஞ்சையிட்டுவந்ததிங்கே
அந்தநல்டேகைதன்னை அன்பாய்தான்பார்த்துமே
கழுத்திலிருந்ததொரு கடிதத்தைபார்த்தானே
நமக்குமேநற்செய்தி நன்றாககொண்டுவந்ததிப்போ
வந்ததொருகடிதத்தை வாசிப்பாய் அண்ணாவே
ஆறுபேரும்கேட்டாரே அப்போதுசெய்திதன்னை
கண்டத்தின்மீதுவைத்தார் கனமந்திரிகைபிடித்தார்
பாருமையாராஜேந்திரரே பாங்குடனேஇப்போது
இங்குதான்நீங்களும் இப்போதிருந்தீரானால்
அந்தமாயாபக்கிரிக்கு அங்குயேதுபயந்தானும்
செத்தால்தான்யாரை சீராட்டப்போறமையா
நாமிருந்தாலல்லவா நன்மைகொள்ளவேண்டுமையா
நீங்களேன்துயரப்படுகின்றீர் நீண்டபடைதானிருக்க
இரண்டுகோடிபீரங்கியை இப்போதேகொண்டுநாம்
அவனைநாம்கொன்றுமே அழைத்துவரவேண்டுமே
பாலநாகம்மாளை பண்மையுடன்கொண்டுவரலாம்
இந்தமொழிக்கேட்டு யேதச்சொன்னார்வேந்தர்களும்
அம்மாதைக்கொண்டுவந்தால்அன்புள்ளயின்னாட்டில்
வீட்டைவிட்டுப்போனவளை வேகமாய்கொண்டுவந்தால்
நம்மைப்போல்வேந்தர்கள் நால்வர்நகைப்பார்களே

இப்படிச்சொல்லவே இதுகேட்டான்மந்திரியும்
பயித்தியம்பிடித்ததோ பாராளும்வேந்தர்களே
ஸ்ரீராமச்சந்திரன்செய்தது இவ்வுலகம்அரியாதோ
தசகண்டராவணன் தாஷ்டீகமாய் அம்மைஜானகியை
சிறையெடுத்துக்கொண்டு சிறப்புடனுருமாதம்
இலங்கையில்வாழச்செய்து இராவணனிருக்கையிலே
அந்தநல்இராவணனை அங்குசென்றுசம்மரித்து
அந்தநல்லதேவியை ஸ்ரீராமர்கொண்டுவரவில்லையா
அந்தநல்தேவியாகும் அன்புள்ளநம்பாலநாகம்மாள்
அதுபோல்நடக்கலாம் அன்பாகஎல்லோரும்வாருங்கள்
இப்படிச்சொல்லவே இன்பமாய்புரப்பட்டார்கள்
பனிரெண்டாயிரம் பகர்ந்தநல்லசேனையுடன்
புரப்பட்டாரப்போது புகழுடனேவேந்தர்களும்
இரண்டாயிரம்பீரங்கி வண்டிகள்தான்வருகிறது
மூன்றுமந்திரிமார்களுடன் முகந்துவேந்தர்வாரார்கள்

ஏழு வேந்தர்களும் சண்டைக்குப் புறப்படுவது.

தவளச்சங்குநாதம் தாமப்போவூதினர்கள்
ரணபேரிகைதன்னையே தீவிரமாயடித்தார்கள்
கண்டிக்கோட்டைவிட்டு கடுகவேமூன்றுதினத்தில்
நாகள்ளபூடிகரைதான் நலமாகவந்துசேர்ந்தார்கள்
மோரிஜாஎழுப்பியே முன்பீரங்கிநிறுத்தினர்கள்
நாலுபக்கமும்பீரங்கி நலமாகநிறுத்தினர்கள்
மருந்துகெட்டம்செய்து மகிழ்ந்துமேசுட்டாரே
பீரங்கிபட்டவுடன் பொதுங்கவில்லைகல்லுகளும்
சுண்ணும்புக்கரைகளும் சிறப்புடன்விழவுமில்லை
மகாமந்திரக்காரனையா மாயாபக்கீரிஅவன்தானும்

வசனம்.

கேட்டீரா மந்திரிகளே எத்தனை பீரங்கிகளை நாம்சுட்டபோதிலும் ஏதென்று கேழ்க்கவில்லை இதைப்பார்த்தால் பாழடைந்த கோட்டையைப்போலிருக்கிறது மனிதர் இருந்தால் மேடைமீதேரி பார்க்கமாட்டார்களா யாருமில்லாததுப்போல் காட்டுகிறது இப்படிச்சொன்னவுடன் மந்திரி நிச்சனைப்போட்டு அம்மேடைமீது

ஏரிபார்க்க அங்குபுருடர் அகப்படவில்லை சிறை எடுத்துக்கொண்டு வந்த நூறுபெண்கள்மாத்திரம் கோட்டையில் இருக்கின்றார்களே தவிர மாயாபக்கிரி எங்கும அகப்படவில்லை நாம்யாருடன் யுத்தம் செய்வது என்று மனவியாக்கூலமடைய இதற்குள்ளாக காவலன் பக்கிரியைப்பார்த்துவிட்டு ஐயா இராஜோத்தமா அதோபடுத்துக் கொண்டிருப்பவன் பக்கிரிதான் ஆகையால் அவனெழுந்தால் அகப் படமாட்டான் இதுதான்சமயம் அவனைக்கொல்வதற்கு என்றுச் சொன்னவுடனே வேந்தன் சந்தோஷமடைந்து பீரங்கிகளை கோட்டைமீது நிறுத்தி சுடுஞ்சமயத்தில் அந்த குண்டுகள் அவனை ஏதுஞ்செய்யவில்லை ஆனால் பக்கிரியும் அப்போது இரண்டாயிரம் ரொட்டிகள் இரண்டு கலபருப்பு மூன்றுகரிசை எண்ணை அறுபது லோட்டாக்கள்ளும் முப்பது புட்டிசாரயம் ஆகாரஞ்செய்து கொண்டு பனங்காயளவு அபினியும் பூசனிக்காயளவு மாஜினமும் தின்று படுத்துக்கொண்டிருக்கிறான் உதயமானவுடன் எழுந்திருப் பான் இதற்குள்ளாக ஏதாகிலும் காரியமிருந்து எழுப்பவேண்டு மானால் கூச்சலிட்டாலும் ஆட்டுமந்தையை ஓட்டினாலும் ஆனையை விட்டு மிதிக்கச்செய்தாலும் எழுந்திருப்பது அதிகதுல்லபம் எழுப்ப மேண்டுமானால் கெட்டபாரையை செகப்பாய்காச்சி அவன்காதில் விட்டு துழாவினால் எழுந்திருப்பானென்றுச் சேகுவன் சொன்னதை வேந்தர்கள்கேட்டு ஆச்சரியமடைந்து இருக்க அந்தச்சமயத்தில் பக்கிரி முதல்பத்தினியாகிய

வணிகச்சங்குதானுமப்போ வந்தாளேமேடைமீது
பார்த்தாளே இவர்களையும் பயமதுதான்கொண்டாளே
எழிந்திரடாஎழுந்திரடா ஈனங்கெட்டபக்கிரியே
அன்றுநான்சொன்னேனே அம்மாதுவேண்டாமென்று
பகைவரும்வந்துமிப்போ பண்புடன்சுற்றிக்கொண்டார்
எப்படிஎழுப்பினாலும் ஏதொன்றும்கேழ்க்கவில்லை
கம்மாளனைதானழைத்து தும்மட்டிபோடச்சொல்லி
கெட்டபாரையை அங்கு கெம்பீரமாய்காச்சினார்கள்
எடுத்துமேயவன்காதில் எனமுடன்திருப்பினார்கள்
அப்போதுமாயாபக்கிரியும் அசைந்துமேபுரண்டானே

வசனம்

அப்போதுவேந்தர்கள் பக்கிரியைப்பார்த்து இவன் எழுந்தி ருக்கப்போகுறான் இதுசமயம் குண்டால்சுட்டு வீழ்த்தவேண்டு மென்று தீர்மானித்து.

பக்கீரியை குண்டால் சுடுவது.

பக்கீரியிடதுபக்கம் பக்குவமாய்சுட்டாரே
பிரங்கிதன்னையே பிருப்படுத்திசுட்டாரே
அந்தகுண்டுபட்டவுடன் அப்போதுமாயாபக்கீரியும்
என்னடிவணிகச்சங்கு இங்குமூட்டுகடிக்குதடி
வலதுபக்கங்குண்டு வண்மையுடன்சுட்டாரே
இந்தகுண்டுப்பட்டு இணங்கி அந்தபக்கீரியும்
என்னடிவணிகச்சங்கு எருமைக்கொசுகடிக்குதடி
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்வணிகச்சங்கு
அடசண்டாளப்பாதகா அதிசீக்கிரம்யெழுந்திருப்பாய்
அன்றுநான்சொன்னமொழி இன்றுசரியாச்சுதடா
பகைவர்கள்வந்துமிப்போ பகர்ந்திட்டார்நாலுபக்கம்
அந்தமொழிதான்கேட்டு அப்போதுஎழுந்தானே
வாடியம்மாபாலநாகு வகையுடன்தானிப்போது
உன்னுடையசேனைகள் உகந்துமேதான்என்மீது
சண்டைதான்செய்யவே சாங்கமாய்வந்தாரிப்போ
என்னுடையசண்டையை எதிர்நின்றுபாராடிநீ
இப்படிச்சொல்லிதான் யேணியைப்போட்டானே
ஏரடிப்பெண்ணேநீ இந்தநல்லஏணிதன்னில்
பாரடியுந்தன்பலமான வேந்தன்சேனைகளை
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்நாகம்மாள்
பனிரெண்டுவருடமும் பண்புடன்பொருத்துக்கொடா
இப்படிச்சொல்லிகொண்டு ஏறினாள்ஏணிதன்னில்
மேடைமீதேறினாள் மேன்மையுடன்நாகம்மாள்

பாலநாகம்மாள் மேடைமீதேரி கணவனையும் மூத்தார்மார்களையும் பார்ப்பது.

ஆறுபேர்மூத்தாரை அன்புடன்பார்த்தாளே
தனதுகணவனைத் தான்பார்த்தாள்கண்ணாலே
பனிரெண்டுலக்ஷம் சேனைகளைப்பார்த்தாளே
இவர்களைப்பார்த்துமே இணையில்லாத்துக்கமானாள்
கண்ணில்ஜலம்சொரிய சுதரியேதானழுதாள்
அவளழுவதையப்போ பார்த்தானேபக்கீரியும்

ஏண்டிநீயழுகின்றாய் எங்குமில்லாசேனையைநீபார்த்து
சேனைகளைப்பார்த்துமே சித்தம்பயமடைந்தாயோ
நானிருக்கும்போது நாகுயுனக்கென்னபயமடி
மேடையைவிட்டுமப்போ நாகுமெதுவாய்இறங்கினாளே
பாரடிப்பெண்ணேநீ பண்புடனென்பலத்தை
இப்படிச்சொல்லியே இணையில்லாமாயாபக்கிரியும்
லட்டியைத்தானெடுத்து லட்டிக்குபிராணந்தந்தான்
கிழக்குசேனைகள்மீது கிரியையுடன்மாறேயென்றான்
அப்போதுலட்டிதான் ஆகாயமாய்பாந்துவந்து
மூன்றுலக்ஷம்சேனையை முகந்துதான்கொன்றது
மூன்றுமணிநேரம் முகந்துமேயுத்தம்செய்தது
ஆவுரேலட்டியென்றுஅழைத்தானே மாயாபக்கிரியும்
லட்டியைக்கையில்பிடித்து லகுவாகபிராணமதை
வாங்கியபிறகுவைத்தானே லட்டியைத்தானவன்
இப்படியுத்தஞ்செய்ய இதுநீதியல்லவென்று
குல்லாவையெடுத்துமே குறிப்புடன்தலையிலிட்டான்
கம்பிளியைத்தான்கிழித்து இடுப்பிலேகட்டினான்
லுங்கிதானெடுத்து லுருவாகபோட்டுக்கொண்டான்
மந்திரவிபூதியை மகிழுடனேஎடுத்துக்கொண்டு
கிழக்குவாயல்மார்க்கம் கிளம்பிதான்எழுந்தானே
அப்போதுவேந்தர்கள் அவனையும்பார்த்தாரே



பக்கிரியுடன் வேந்தர்கள் சண்டைச்செய்வது.

வந்தானேபக்கிரியென்று வந்துமேசூழ்ந்துக்கொண்டார்
கத்தியாலப்போது கடுங்கோபமாய்வெட்டினார்கள்
சதையுங்கொடலுமங்கே சரிந்துஅப்போவிழுந்தது
நாலுமணிநேரமதாய் நலங்கோலமாயடித்தாரே
கிழக்குகல்குளத்திலே வெட்டினாரவன்தலையை
அல்லாவும்தான்எனக்கு அனபாகதுணையிருப்பார்
குதாயெனக்குமேதான் கூடத்துணையிருப்பார்
இப்படிச்சொல்லியே இசைந்துசைதானும்பிறந்தான்
நாலுதிசைகளிலும் அவனைநலமாகக்கொன்றார்கள்
அப்படியும்சாகாமல் அப்போதுபிழைத்தானே
பக்கிரியைத்தான்பிடித்து பக்குவமாய்தலைகொய்து
சுட்டுமேசாம்பலாக்கி சுருக்காய்ஜலத்தில்விட்டார்கள்
அந்தஜலத்திலவன் அப்போதேபிறந்தானே

வசனம்

அடா கார்யவர்த்திவேந்தனே சூரியவர்த்திவேந்தனே சந்திரவர்த்தி வேந்தனே இதுவரைக்கும் உங்களுடைய சண்டையாச்சுது இனி என்சண்டையை கொஞ்சம் நேரில்பாருங்களடா வென்று சொல்லிக்கொண்டுவந்தான்

இனியெனதுதமாஷை இன்பமாய்பாருங்களடா
மந்திரவிபூதியைதானெடுத்து மாயாபக்கிரியும்
மகிழுடனப்போது மாயமாய்விபூதிதெளித்தானே
ஆனைகளெல்லாமப்போ ஆனைகருங்கல்லாச்சுது
குதிரைகளெல்லாமப்போ குத்துக்கல்லாச்சுது
ஒட்டைகளெல்லாமப்போ ஒருமிக்கல்லாச்சுது
பீரங்கியெல்லாம் பிண்டிகல்லாச்சுதங்கே
எழுபேர்டேருக்கள் ஏழுமலைக்குன்றாச்சுது
அந்தநல்லவேந்தரை அழகுபுத்துசெய்தானே
மூன்றுபேர்மந்திரிகளை முகந்துசிலைசெய்தானே
இப்படியாகவே இவர்களைத்தான்செய்துவிட்டு
திரும்பிநான்மகுடிக்கு தீவிரமாயப்போது
வாடிநீஎன்பாலநாகு வண்மையிடனிப்போது
கோமளாங்கியேயெந்தன் கோரிக்கையைதீரடிநீ
முத்தமிட்டுயெந்தன் மோகத்தைதீர்ப்பாயடி

உங்கள்சேனைகளெல்லாம் உகந்துமேகொன்றுவிட்டேன்
உனக்குபயமேயில்லை உகந்துமேநீகேளும்
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்நாகம்மாள்
அருகிலேவாராதடா அடாசண்டாளபடுபாவி
உந்தன்தலையுடையும் உகந்துமேஓடிப்போடா தூரமாக
இளமயிலேகோகிலமே இன்னும்உன்மனதிரங்கலையோ
பனிரெண்டுவருடம்போனால் பண்புடனுந்தனுக்கு
என்-பிராணன் தருகுவேன் என்டாநீபக்கிரியே
இத்தனையுங்கேட்டானே இன்பமாய்பக்கிரியும்
அந்தப்புரத்தினில் அன்பாகத்தான்போனான்
இப்படியிருக்க இன்பமுள்ளவேந்தர்களும்
வேந்தர்கள்யாவரும் வெந்துமடிந்தார்களென்று
பானுகண்டிப்பட்டணத்தில் பண்புள்ளதேவிமார்க்கு
தெரிந்தது அப்போது தீவிரமாய்மாதருக்கு
அய்யோஎன்தங்கைமாரே அலைந்திடலானோமே
நமதுகுடைகள்போச்சு நாமெப்படிபிழைப்போமம்மா
இப்படிச்சொல்லியே எல்லோரும்தான்அழுதாரே
அக்காவேநீகேளாய் அன்பானசூர்யநாகம்மா
ஏழுபேரும்மாண்டுவிட்டால் என்னநாம்செய்வதம்மா
ஆர்கையில்கொடுப்பது ஆசையுள்ளகுமாரனையும்
குடும்பப்பேரில்லாமல் குறைந்ததேஇந்நாட்டில்
நாமென்றைக்குயானாலும் நலமாகஇரக்கப்போறோம்
இந்தநல்லபாலகனை இன்பமாய்வளர்த்துநாமும்
கலியாணஞ்செய்துவைத்து கண்குளிரப்பார்த்துவிட்டு
பிறகுமேதபனிரந்தால்நமக்கு பெரும்பதவிகிட்டுமம்மா
நமக்குள்ளும்தண்ணீரையும் நலமாகதானிறைப்பான்
பாலன்மீதுஅன்புவைத்து பாலகனைவளர்க்கின்றார்
வளர்த்துவருகின்றார்கள் வயதுஐந்துஆச்சுதப்போ
தினமொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய்
ஐந்துவயதானவுடன் அன்பாகபாலகனைத்தான்
பள்ளியில்தான்வைக்க பட்சமும்கொண்டாரே
அந்தநல்லசமயத்தில் அந்நாட்டிலிருக்கப்பட்ட
வாத்தியார்தன்னையே வகையுடன்தானழைத்து
ஐயாவேநீர்கேளும் அன்புடனெங்கள்மொழியை

இந்தநல்லபாலகனுக்கு இன்பமாய்கல்விநீருமே
கல்விகளைகற்றுதான் கனமுடன்ஓதிவையுமையா
இப்படிச்சொல்லவே இசைந்துமேவாத்தியாரும்
காலையதினத்தில் நாள்நன்றாயிருக்குதம்மா
அனுப்புவீர்கள்பள்ளிக்கு அன்புடனேபாலகனை
நல்லதென்றுச்சொல்லி நலமுடனேமாதாக்கள்
அப்போதுசூர்யநாகம்மா அன்புடன்தானுமே
மணல்சிவப்புநெல்லை மணக்கவேவூரப்போட்டு
பச்சரசிதானும்குத்தி பாங்குடனப்போது
கொழக்கட்டைதானுமே கொப்பெனவேசுட்டுமே
கடலையும்வேகவைத்து கனவடைகள்தான்சுட்டு
பத்துவிதபச்சடி பருப்புசாதம்தான்சமைத்தார்
பாலகனுக்கப்போது பட்சமாய்நீர்வார்த்து
தலையும்துவட்டியப்போ சந்தனப்பொட்டுமிட்டு
பட்டுதோவத்தியை பண்புடன்கட்டச்செய்து
கணபதிபூஜைகளை கனமுடனேசெய்யச்செய்தார்
வாத்தியார்தானும் வகையுடனேவந்துமப்போ
பாலகன்கைதனிலே பக்குவமாய்பாடந்தந்தார்

பாலவர்த்திவேந்தன் பாடசாலையில் வாசிப்பது.

ஹரிநமோத்துச்சிந்தமென்று ஐயருந்தான்சொல்லவே
அந்தமொழிதான்கேட்டு அன்புடனேபாலகனும்
அதுபோலசொல்லவே ஐயருஞ்சந்தோஷித்தார்

அந்தநல்லபாலகனை அன்புடனேபள்ளிக்கு
அழைத்துமேசென்றூர்கள் ஐயரும்தானப்போது
அந்தநிமிஷத்தில் அரிச்சுவடியும்தான்படித்தான்
ஆத்திச்சுவடியும் அறிவுவரும் கொன்றைவேந்தன்
எண்சுவடிலெக்கமும் ஏற்கனவே தானும்படித்தான்

வசனம்.

இப்படிப்பாலன் எட்டுவயதிற்கெல்லாம் பாரதம் பாகவதம் யாவும் பூரணமாய்வாசித்தான் பத்தாவது வயதில் பாரதசாஸ்திரமும் காவ்யமும் அலங்காரமும் படித்தான் இதற்குள்ளாக உபாத்தியாயரைப்பார்த்து ஐயா இதுவெல்லாம் படித்துப் பூர்த்தியாகிவிட்டது இனியேதாகிலும் இருந்தால் சொல்லுங்களென்றுகேட்க இதைக்கேட்டு வாத்தியார் சொன்னதாவது அப்பா இராஜகுலோத்தமா இதுதான் யான் கற்றறிந்த வித்தை இனி உனக்குச்சொல்ல என்தரமலல வென்றுச்சொல்லவே பாலகன்சந்தோஷமடைந்து தாய்மாரிடஞ்சென்று வாத்தியாருக்குவேண்டிய வெகுமானம் கொடுக்கச்செய்து சந்தோஷித்தபிறகு பாலகன் தாயாரைப்பார்த்து சொல்லத்தொடங்கினன்.

அம்மாவே நீர்கேளும் அன்புள்ள தாய்மாரே
படித்ததுபோதுமம்மா பகர்ந்துமேயான்சென்று
சந்தனைசெய்துவாரேன் தக்கபடிவிடையருள்வீர்
இப்படிச்சொல்லவே இதுகேட்டார் தாய்மார்கள்
செல்வக்குமாரா சொல்வதை நீகேட்பாயப்பா
நமக்குயேனடா நியாயமில்லா கொட்டடிதான்
இதுவெல்லாம் கற்காமல் யிருந்தாலேபோதுமப்பா
இப்படிச்சொல்லவே இதுகேட்டான் பாலகனும்
அம்மாவே நீர்கேளும் அன்புடனே என்வார்த்தை
பிழைப்பதுபெரிதல்ல் புவிதன்னில் கீர்த்திதான்
செத்தாலும் கீர்த்திதான் சிறப்புடனிருக்கவேண்டும்
கொட்டடிக்குபோகாமல் கொஞ்சமுமாநிருக்கமாட்டேன்
இந்தமொழிகேட்டார்கள் இசைந்துமே தாய்மார்கள்
ஜட்டிகளைஅப்போதே அதிசீக்கிரமாய் அழைத்தாரே
கேட்டீரோ ஜட்டிகளே கிருபையுடனென்வார்த்தை
எங்கள்பாலனுக்கு இன்பமாய் கொடிவித்தைகளை

நலமாகயிவனுக்கு நன்மையாய் சொல்லுமையா
அந்தநல்லஜட்டிகள்தான் அன்பாகஅப்பாலகனை
கொடிவித்தைக்கு கெம்பீரமாய் அழைத்துச்சென்றார்

வசனம்.

அடாபாலகனே எங்களுக்கு எதுகீர்த்தி கொண்டுவருவாயோ தெரியாது உனக்கு இந்தவித்தைகள் எப்படிவருமோ ஆனால்உனது திரேகமெல்லாம் ஒடிக்கவேண்டும் என்று சொன்னவுடனே பாலகன் இவர்களைப்பார்த்து ஐயா என்னை எது செய்யச் சொல்லுகிறீர்களோ அதைச்சொன்னால் அதுபோல் செய்கிறேன் என்றுசொன்னவுடனே ஜட்டிகள் சொல்லத்தொடங்கினார்கள்.

நூறுபஸ்கிகள்தான்நீயுமே யெடுக்கவேவேணுமப்பா
அப்படியேதானுமே அன்பாகபாலன்யெடுத்தானே
முன்னூறுபஸ்கிகளைத்தான் முகந்துமேநீயெடுப்பாய்
அப்படியேயெடுக்கின்றேன் அன்புடனே பாருமையா
ஐந்நூறுபஸ்கிகளைஇப்போ அன்பாகத்தான்எடுப்பாயே
ஐயாவேநீங்கள் கேளும் அன்புடனே என்வார்த்தை
நானெடுக்கும் பஸ்கியை நலமுடனே கணக்கிடுவீர்கள்
அதுபோலவே ஐந்நூறுபஸ்கியும் பாலன்எடுத்தானே
சந்தனப்பட்டாவும்பாலன் சாங்கமதாய்செய்தானே
இரட்டைக்கோல் கைப்பிடித்து இன்பமாய் யாடினான்
பாணவைத்தானெடுத்துப் பலத்தையெல்லாங்காட்டினான்

வசனம்.

இதற்குள்ளாக பாலனுக்கு பதினோரவது வயதாச்சுது கொட்டடி விஷயத்தில் மகாசாமார்த்தியனாயிருந்ததால் அப்போது அந்த மூவரையும்பார்த்து எனக்கு நீங்கள் இவ்வித்தையை கற்பித்து வைத்தபடியினால் நீங்கள்ஒருபக்கம் இருப்பீர் யான் ஒருவன் ஒரு பக்கமிருந்து இரட்டைககோலை செய்துபார்க்கலாமென்றுச்சொல்ல இதற்கு அவர்கள் சம்மதமடைந்து செய்யும்படி தொடங்கினார்கள்.

கொம்புகள்தன்னையே கொய்பெனவேகைபிடித்தார்கள்
மூவருமப்போதான் முகந்துமேபாலனை சுற்றிவந்தார்
மூவருமப்போதுதான் முகந்துமேபாலனை அடிக்கலானார்
அந்தஅடிகளைத்தான் அன்பாகபாலன்தட்டிவிட்டான்

மூவரையும்போது முகந்துமேதான் அடித்தானே
தப்பித்துக்கொண்டானே தயவுடனேஅப்பாலகனும்
இத்தனையும்பார்த்தார்கள் இன்பமாய்மூவரும்தான்
சந்தோஷமடைந்தார்கள் தயவுடனே பாலன்மீது
இப்படியாயிருக்க இன்பமாபொருதினத்தில்
வீட்டிற்குஅவன்தானும் வேகமாய்தான்வந்தானே

வசனம்.

பாலகன் தன்வீட்டிற்கு வருஞ்சமயத்தில் அந்த வீதியில் சிலபாலர்கள் பொம்பரம் ஆடிக்கொண்டிருந்தார்கள் அதைக்கண்ட பாலவர்த்திவேந்தன் அப்பாபாலகரே அந்தபொம்பரத்தை என்னிடம்தருவீர்கள் அதைநான் ஆடிப்பார்க்கின்றேன் என்றுச்சொன்னவுடனே அந்தப்பாலகர் அவனைப்பார்த்து ஐயா நீர் பாக்கியபுருடர் நீங்கள் வெள்ளியினாலும் அல்லது பொன்னினாலும் செய்துக்கொண்டால் ஆகாதா நாங்கள் ஏழைகளாகையால் மரக்கட்டைபொம்பரம் ஆடிக்கொண்டிருக்கிறோம் உனக்கேனிது என்றுச்சொன்னவுடனே ஐயா நான் ஒருவிசைஆடித்தருகின்றேன்என்றுகேழ்க்கஅதற்கந்தப் பாலர்கள் ஐயா இதைக்கொடுத்தால் எங்கள்தந்தை தண்டிப்பாரென்றுச்சொன்னவுடனே பாலகன் கோபத்துடன் தன்வீட்டிற்கு வந்து தாய்மார்களைக்கண்டு கேழ்க்கலானான்.

அம்மாடியம்மாடி யென்னைப்பெற்றதாய்மாரே
எனதுபாட்டன்மார் என்றுமேயாடிக்கொண்டிருந்த
பொம்பரந்தானெங்கே புகழுடனேசொல்லுமம்மா
இந்தமொழிக்கேட்டு ஏதுச்சொன்னாரப்போது

வசனம்.

அடா என்கண்மணியே உனது பாட்டன்மாராடிய பொம்பரமானது, இன்னாட்டிற்கு வடமூலையில் இராநின்ற காளிகோவிலருகில் பொதிந்துப்போயிருக்கிறது அடாஎன்செல்வமே அதை உனது தந்தைமார் எவ்வளவோகஷ்டப்பட்டு பேர்த்துப்பார்த்தும் அசையவில்லையென்று விட்டுவிட்டார்கள் அதை நீஎப்படியெடுத்து வருவாயென்று சொன்னவுடனே பாலகன் சொல்லத்தொடங்கினான்.

மூன்றுகரிசை அரிசியை முகந்துமே தாருமம்மா
முப்பது எருமைக்கடா முந்தியேநீங்கள்தாருமம்மா

முப்பதுதேங்காயும் முகந்துமேநீங்கள்தாருமம்மா
கர்ப்பூரம்சாம்பிராணிஇப்போ கனமுடனேதாருமம்மா
இந்தமொழிக்கேட்டு இன்பங்கொண்டுதாய்மார்கள்
அப்படியேதான்கொடுக்க அப்போதுநல்லபாலகனும்
இதுகளையெல்லாம் இன்பமாஇவன்யெடுத்துக்கொண்டு
காளிக்கோவிலண்டைதான் கடுவேகமதாய்வந்தானே
அரிசியைதானெடுத்து அப்போதேபொங்கல்வைத்தானே
காளியெதிருககனமுடன் கும்பத்தைகொட்டினானே
எருமைக்கடாபொலியும் இன்பமாய்தான்கொடுத்தான்
ஆட்டுக்கிடாபொலியும் அப்போதுதான்கொடுத்தான்
கர்ப்பூரதீபத்தைஅக்காளிக்கு கனமுடனேத்திவைத்தான்
தாயேதாயே என்றுச்சொல்லியிவன் தாள்பணிந்தானப்போது



பாலவர்த்திவேந்தன் காளியைதியானிப்பது.

ஓம்காளிநீகேளாய் இப்போதுயென்வார்த்தை
ஐயுங்கிலியும்சவ்வுமென்று யன்பாகயுச்சரித்தான்
ரீயுங்கிலியும்வசியமென்று யின்பமாய்பூஜித்தான்
அம்மணிநீவந்துஇப்போ அன்பாகயெந்தனுக்கு
எனதுபாட்டன்மார் இன்பமாய்யிறந்தபின்புதான்
உனக்காகாரமதை யுகந்துமேயாரும்கொடுக்கவில்லை
உந்தனுக்கிப்போது உகந்தாகாரம்யான்கொடுத்தேன்
பொம்பாமீதிப்போ புகழ்மனம்நான்கொண்டேனே

இப்படிச்சொல்லவே இதுக்கேட்டாள்காளிதேவியும்
சந்தோஷந்தானடைந்து சரியானபலம்தந்தாளே
பாலனுக்கப்போது வரமதைபாங்காய்க்கொடுத்தாளே
அந்தச்சமயத்தில் பாலன் அந்தகல்லபொம்பாத்தை
கயற்றைத்தான்சுற்றியே கடுகவேஎடுத்தாடினான்
பூமியில்நிற்காமல்பொம்பாம் புகழுடனேபாந்தது
பாந்துவந்தபொம்பாமும் பாங்குடனே அப்போது
நந்தவனந்தன்னில் நலமுடனேதான்வந்தது
பட்டணமெங்குமே புகழ்துவனிக்கேட்டதப்போ
இந்தயதிசயத்தை இன்னாட்டின்குடிகளெல்லாம
வந்துமேபார்த்தாரே வகையுடனேபொம்பாத்தை
அப்போதுஜனங்களும் அன்பாகப்பேசிக்கொண்டார்
இந்தயதிசயத்தை இவன்தந்தைகள்பார்த்தானால்
என்னதான்சந்தோஷம் யவர்களுங்கொண்டிடுவார்
ஏழுபேர்ராஜாக்களும் எங்குதான்சென்றார்களோ
இப்போதொருவர்கூட இல்லாமல்போய்விட்டாரே
அவர்கள்வயற்றினில் யன்பாகயிவன்பிறந்தானே
தாய்தந்தைமாருக்கு பேரெடுக்கப்பிறந்தானே
வந்தஜெனங்களெல்லாம் வல்லமையைச்சொல்லியேதான்
பாலகனுமப்போது பண்பாய்மனைக்குவந்தானே
அம்மாடியம்மாடி யென்னைப்பெற்றதாய்மாரே
பொம்பாந்தன்னையே புகழுடனேகொண்டுவந்தேன்
எந்தனைப்பெற்றெடுத்த யின்பமுள்ளதாயாரே
பனிரெண்டுகரிசையரிசி பாங்குடன்வேண்டுமம்மா
இப்படிச்சொல்லவே இணக்கமதாய்தாய்மார்கள்
அப்படியேதந்தார்கள் அன்புடனேபாலனுக்கு
நந்தவனத்திலேதான் நலமாகிடங்கடுப்புமூட்டி
சாதமும்சமைத்தங்கேதான் சம்பிரமாயப்போது
அன்னதானங்கள் அன்புடன்தான்செய்தானே
இப்படியிருக்கையிலே இசைந்துமேவோர்தினத்தில்
அம்புவில்லுதானெடுத்து அன்பாகசாம்பிடித்து
நந்தவனத்திற்கவன் நலமாகதான்வந்தானே
அந்தச்சமயத்தில் யந்தகல்லவேளைதன்னில்
நாசம்மாயென்றதோர் நலமானமங்கைதானும்

தண்ணிக்குடமெடுத்துத் தண்ணிக்குவந்தாளே
குடத்தில்ஜலமெடுத்து குணமாகஇடையில்வைத்தாள்
அப்போதுபாலகன் அன்புடனேவில்வித்தையை
குறிபார்க்கவேணுமென்று குணமாய்சாம்பிடித்து
அந்தக்குடத்தையும் அன்பாகதான்பார்த்து
அப்போதுதான்விடவே அந்தக்குடமுடைந்தது
அப்போதம்மாது அப்பாலகனைப்பார்த்துமே
ஏண்டாபயலேநீ என்னைஇப்படிசெய்யலாமா
தாய்தந்தைகள்தன்னை தனிச்சிறையில்வைத்திருக்க
பிழைத்துநீவருகின்றாய் புவிமீதில்பாதகனே
பிசகாதநாகம்மாள்தான் போய்விட்டாளிப்போது
உனக்குயேனோதான் உண்மையாய்சாவுவரவில்லை
அப்போதுபாலகனை அன்பாகத்தான்சபித்தான்
இந்தமொழிகளைத்தான் இன்பமாய்க்கேட்டானே
அம்மணிஎன்தேவியே அன்புள்ளஎன்தாயாரே
நீதானென்தாய்தந்தை நானுமேயுன்பாலகன்தான்
இப்போதுசொன்னதை இசைந்துமேசெல்லுமம்மா
எனக்கேதொன்றும்தெரியாது நீபோடாபாதகனே
நல்லவன்நீயானால்இப்போ நியாயத்தைச்சொல்லலாகும்
கசடனேநீயாகும்இப்போ கண்டமொழிசொல்லலாமா
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்பாலகனும
அம்மாடியம்மாடி என்அன்புள்ளத்தாயாரே
என்னைப்பெற்றதாயார் எப்படிசிறைப்போனாள்
என்-தந்தைதானெப்படி சிறையானார்சொல்லுமம்மா
அந்தச்சவிஸ்தாரம்இப்போ அன்புடனேசெல்லுமம்மா
எனக்குத்தெரியாது என்னைஏண்டாகேழ்க்கின்றாய்
இப்படிச்சொல்லிகொண்டே இசைந்துமேநடந்தாளே
அந்தமொழிதன்னை அப்போதுறான்கேட்டாளே
இந்தக்கத்தியாலே யிப்போதுனைவெட்டுகிறேன்
பார்என்றுச்சொல்லி பாலாகத்தியைதான்எடுத்தான்
கத்தியைக்கண்டாளே கனமுடனேநாசம்மாள்
உள்ளம்நடுநடுங்கியேதான் உப்பொங்கிதானுமப்போ
ஐயோநல்லபாலகா அறிவுள்ளபாலவர்த்திவேந்தா
என்னையேண்டாயிப்போது எதிரியேகொல்லவாராய்

நானுமேசொல்லுகிறேன் நலமுடனேகேளடாநீ
உன்னைஈன்றெடுத்ததாயார் உகந்தபாலநாகம்மாள்
உன்தந்தையான உகந்தசார்பவர்த்திவேந்தன்
உகந்துமே நீஜனித்த ஏழாந்தினத்தில்தானும்
நாகள்ளபுரிதன்னை நலமுடனாளும்சண்டாளன்
மாயாப்பக்கிரியவன் மாயமாயிங்குவந்துமேதான்
பாலநாகம்மாளைப்பார்த்து சிறைப்பிடித்தானே
உன்தந்தைகளவன்மீது உகந்துயுத்தம்செய்தார்கள்
ஆசையுள்ளதந்தைமாரை அதமாகசெய்துவிட்டான்
உன்பெரியதாய்மார்கள் உந்தனை வளர்த்தார்கள்
அந்தமொழிக்கேட்டு அப்போதுதான்பாலகனும்
பாதத்தில்தான்விழுந்து பகர்ந்துமேதொழுதானே
அம்மாவேநீகேளாய் அன்புடனே என்வார்த்தை
திட்டாதேயென்னையும்நீ தீங்காகயிப்போதுதான்
ஆசிர்வாதம்செய்வாயம்மா அன்புடனேயிப்போது
இந்தமொழிக்கேட்டு இசைந்துமேநாசம்மாளும்
சுகமாய்சுகமடைவாய் சுந்திரப்பாலவர்த்திவேந்தா
உந்தனின்தாயாரை உகந்துமேநீகொண்டுவருவாய்
அந்தபக்கிரிதன்னாலே ஆகாதுஉன்னைவெல்வதற்கு
உந்தனின்கையாலே உகந்துமேயவன்சாவான்
இப்படியாசீர்வாதம் இன்பமுடன்தான்செய்தாள்
தாம்பூலம்தான்தந்து தயவுடனனுப்பினாளே
தாம்பூலம்பெற்றுக்கொண்டு தானுமேவந்தானே
தனதுநல்வீட்டைத்தேடி தானுமேபோகையிலே
பாலகன்வருவதை பார்த்தார்களேதோழிமார்கள்
வந்துதன்கொட்டடியை வகையுடன் தாளிட்டானே
வென்னீரைக்கொண்டுவந்து வேகமாய்வைத்தார்கள்
அழைத்தாரேபாலகனை அப்போதுதாதிகளும்
அந்தப்புரத்தினில் அவனுமேபடுத்துக்கொண்டான்
தாதிகளப்போதங்கு தயவுடனெழுப்பினார்கள்
ஆர்வந்தெழுப்பினாலும் அவன்ஒன்றுமேபேசவில்லை
இந்தநல்சங்கதியை இசைந்துமேதாய்மார்க்கு
அப்போதுச்சொன்னாரே அன்பாகதாதிமார்கள்
ஆறுபேர்தாய்மார்கள் அப்போதுவோடிவந்து

அழகுள்ளசுந்திரனே அன்புள்ள எங்கள்குமாரா
ஸ்தானங்கள்செய்துமே தனிபுசிப்புகொண்டிடுவாய்
எழுந்துமேநீவாடா நான்பெற்றசெல்வாத்தினமே
இப்படிதானழைக்கவே இன்பமாய்பாலன்பேசவில்லை
தனக்குள்ளேதானும்தான் திதும்பிதுக்கப்பட்டானே
இவனையும்பார்த்தார்கள் இன்பமாய்தாய்மார்கள்
என்னடாகுழந்தாய்நீ ஏனழுகின்றாயிப்போது
ஆராகிலுமுன்னையிப்போ அடித்தாராதூஷித்தாரா
பந்தியத்திலேதாகிலும் பிழைவந்துசேர்ந்ததோ
வித்தைபரிக்ஷைதன்னில் வேதியர்தான்தூஷித்தாரு
சாதனக்கொட்டடியில் சமர்த்துகள்தான்வந்ததோ
எந்தச்சங்கதியானாலும் எங்களுக்குச்சொல்லுவாயே
ஏதுமேச்சொல்லாமல் ஏங்கியேபாலனிருந்தானே
அந்தச்சமயத்தில் தாய்மாரனைவரும்தானழுதாரே
தாயழபிள்ளையழ அங்கே தனிதாதிகள்தானழவே
துக்கத்தையாற்றிக்கொண்டு சிறப்புடன்கேழ்க்கலானார்
நான்பெற்றசெல்வாத்தினமே நலமுடனேயிப்போது
அழுதநல்காரியத்தை அன்பாகநீசொல்வாயப்பா
அந்தமொழிக்கேட்டு அன்புவைத்துபாலகன்தான்



பெரிதாயை பாலவர்த்திவேந்தன் தாய்தந்தைகளை
விசாரிப்பது.

அம்மாவேநீர்கேளும் அன்புடனேஎன்வார்த்தை
என்தந்தைஎங்கையம்மா என்தாயாருரம்மா
தாயுமேநாங்கள்தான் தந்தையுமிறந்துவிட்டார்
உங்கள்நல்லாறுபேரில் உகந்தஎன்தாயாருரம்மா
இப்படிகேழ்க்கையிலே இனிஒன்றும்தோணவில்லே
அந்தச்சமயத்தில்தான் அரிபாலவர்த்திவேந்தனும்
இடுப்பிலிருந்ததொரு பிச்சுவாளைதானெடுத்து
உங்களைக்குத்தியிப்போ உயிர்மாத்திக்கொள்வேனே
ஐயோமகனேஅப்பா அறிவுள்ளஎங்கள்சிகாமணியே
எந்தமுண்டைகள்தான் எடுத்துமேசொன்னுளிப்போ
ஆனாலும்நாங்களிப்போ அன்பாகசொல்லுகின்றோம்
உனதுநல்தாயாராகும் உகந்துமேபாலநாகம்மாள்
ஏழுநாள்புருண்டில்தான் இன்பமாயிருக்கையிலே
நாகள்ளபூடியாளப்பட்ட காமர்தாசிறையெடுத்தான்
இந்தசங்கதிதான்கேட்டு இன்பமாயுன்தந்தைகளும்
யுத்தசன்னுத்தாராய் யப்போது அங்குசென்றுரே
அவர்களையும்தானும் அதஞ்செய்தானும்பக்கீரியும்
அப்போதிருந்துநாங்கள் அன்பாகஉந்தனைத்தான்
பிரியமாகவளர்க்கின்றோம் பெற்றபுதல்வனைப்போல்
இத்தனையுங்கேட்டானே இன்பமுள்ளபாலகனும்
அம்மாவேநீர்கேளாய் அன்புடனென்வார்த்தைதனை
என்தாயார்தன்னையே இப்போதேபார்த்துவாரேன்
எந்தனுக்குத்திரவு இப்போதேதான்கொடுங்கள்
இந்தமொழிக்கேட்டார் இசைந்துமேதாய்மார்கள்
ஐயோமகனேஅப்பா அழகுபாலவர்த்திவேந்தா
நீயங்குபோனுல்தான் நீச்சனவன்என்செய்வானே
பனிரெண்டுலக்ஷம்சேனைகளை பாங்குடன்கொன்றானே
எழுப்பேர்தந்தைகளேஅவன் எப்படியோகொன்றானே
நீசென்றுல்நாங்களிப்போ நிலத்தில்பிழைப்போமா
நீபோகும்பக்ஷத்தில் யெங்களைத்தானிப்போது
விஷத்தைக்கொடுத்துமே விடியுமுன்கொன்றுவிட்டு
உன்கையால்மண்ணை உகந்துமேகொடுத்துவிட்டு
அதன்பிறகுநீயுமே அன்பாகப்போய்வருவாய்
இந்தமொழிக்கேட்டான் இன்பமாய்பாலகனும்

அம்மாவேநீர்கேளும் அன்புடனென்வார்த்தையை
மல்லிகைச்செடியைஇங்கு மகிழுடனேவைக்கின்றேன்
என்பிராணமிருந்தால் இந்தச்செடிபூர்க்குமம்மா
என்பிராணன்போனால் இந்தச்செடிவதங்குமம்மா
இப்படியாய்பாலகனும் இன்பமாய்சொன்னனே
இத்தனையுங்கேட்டாரே இன்பமாய்தாய்மாரும்
எத்தனைச்சொன்னாலும் எங்கள்மொழிகேட்கவில்லை
உனதுஇஷ்டம்போல் உகந்துமேபோய்வருவாயப்பா
அப்போதுபாலகனும் அன்பாகஸ்நானஞ்செய்து
போஜனஞ்செய்தானே பொருமையுடனப்போது
அம்மாவேயிப்போது அன்புடன்வார்த்தைகேளீர்
உதயமானவுடனே உப்பொங்கிபோகவேண்டும்
கட்டுச்சாதமும்எனக்கு கட்டியிப்போதாருமம்மா
அப்போதுமாதர்கள்தான் அன்பாகபாலனுக்கு
கட்டமுதைத்தானும் கட்டிதந்தாரப்போது
பாலகனுமப்போது பக்குவமாய்பெட்டியைத்தான்
திரந்துமேவேஷ்டியை திரமுடன்தானெடுத்தானே
பட்டுகரைதோவத்தியை பக்குவமாய்கட்டினன்
இடுப்பினில்தட்டியை இருக்கியேகட்டிக்கொண்டான்
ஈட்டிபிச்சுவாளைத்தான் இடுப்பினில்சொரிவினன்
காதில்கடுக்கனும் கழுத்தினில்சந்திரஹாரமும்
கையிலேபாஜிபந்துங் கைவிரலில்மோதிரமும்
சரிகைதனிபாகைதன்னை தலையினில்போட்டானே
இப்படியலங்கரித்து இசைந்துமேதாயாரெதிரினில்
வந்துமேநின்றுஅப்போ வந்தனங்கள்தான்செய்தானே
அப்போதுதாய்மார்கள் அன்புடனேபாலகனை
ஆசீர்வதித்துநன்ருய் ஆலமும்சுத்தினர்கள்
போய்வருவாய்மகனேஎன்று புகழுடன்வார்த்தினர்கள்

வசனம்.

இப்படியாக பாலவர்த்தி வேந்தன் தாய்மாரிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு பிரயாணமடைந்து நடக்கலானன்.

பாலவர்த்திவேந்தன் தயாரைப்பார்க்க
புறப்பட்டுப்போவது.

பானுகண்டிப்பட்டணத்தை பலமுடன்தாண்டினான்
பொழுதுமேதெரியாமல் புகழுடன்தான்கடந்தானே
எட்டுயோசனை தூரம் எட்டிகடந்தான்பாலகனும்
எங்குதான்பார்த்தாலும் எவருமில்லைநாடுநகரமில்லை
கோகிலவனந்தனில் கொப்பெனவேபொழுதுபோச்சுது
ஆகாரம்தானுமப்போ அன்புடனேதுவுமில்லை
அங்கிருந்தஆலமரம்ஒன்றை அன்பாகப்பார்த்தானே
அந்தமரத்தின்கீழே அன்பாகதளுவமபோட்டு
ஈஸ்வராயென்றுசொல்லி இன்பமாய்படுத்தானே
மல்லுநல்சல்லாவை மகிழ்ந்துமேமுக்காடிட்டானே
மரத்தின்கீழாக மகிழ்ந்துநித்திரைசெய்கின்றான்
அந்தநல்லசமயத்தில் அங்கிருந்தநாகேந்திரன்
பாலகனருகில்வந்து பக்குவமாய்பனிபடாமல்
குடம்போல்படமெடுத்துக் குவிழ்ந்ததுபாலனுக்கு
அப்போதுகிழக்கில்சூரியன் அன்பாகஉதயமாச்சு
பாலகனப்போது பக்குவமாய்யெழுந்தானே
இவனெழுந்தவுடனே இன்பமாய்பாம்புதானும்
காட்டுமார்க்கமாகபார்த்து கடுகவேதான்நடந்தது
பார்த்தானேநாகமதை பாலகனும்கண்ணாலே
கத்தியைக்கைபிடித்து கடுகவேதானஓடினான்
அப்போதுநாகமது அரிக்குமேசொல்லலுற்றது
கேட்டையாபாலகா கிருபையுடனென்வார்த்தை
உன்னையும்தின்பதற்கு உகந்துமேயான்வந்தேனே
வந்துவுன்னைபார்த்ததும் வகையுடனுன்தாயாரும்
நாகேந்திரன்வரத்தில் நலமாகபிறந்தவள்தான்
அம்மாதுநல்புதல்வன் அருங்குழந்தைபோனுச்சே
என்றுமேசொல்லி இருந்தேனேகாவல்தானும்
போகுரேனிப்போது புகழுடனென்னிருப்பிடமே
ஆனால்கேள்பாலகனே அரிந்திடவேசொல்லுகிறேன்
பக்கீரியிருப்பிடம்தான் பக்குவமாய்நீபோகின்றாய்
உனதுக்கையாலே யவன்சாகவேபோகின்றான்
அவனுக்கும்மாணம்தான் அருகினில்கிட்டியது.
உனதுநல்தாயாரை யுகந்துமேநீகொண்டுவருவாய்
உத்தனுக்குகண்டமொன்று யுகந்துமேயிருக்குதப்பா

இப்படிச்சொல்லவே யிசைந்துபாலகன்தான்கேட்டு
ஐயாவேநாகேந்திரா அந்தகெண்டம்சொல்லுமையா
அப்போதுநாகேந்திரன் அறியவேசொல்லுகின்றது

வசனம்.

அப்பா! பாலகா நாகள்ளபூடிகரையருகில்இருக்கும் நயனவாதி பட்டணத்து எல்லைக்கோடியிலிருக்கப்பட்ட பாரசக்தியை அந்த பக்கீரியமைத்திருக்கின்றான். ஏனெனில் எந்தப் பகையாளியானு லும் கோட்டைமீது வந்தால் அவனைத் தின்பதற்கு உத்திரவுசெய் திருக்கின்றான். ஆகையால் நீபோகும்போது அந்த பராசத்திமாயப் பெண்ரூபந்தரித்து புன்சிரிப்புக்காட்டி சந்தோஷ மொழிகளாடிக் கொண்டுஉனக்கெதிரில்வருவாள் அப்போது நீ வெகுஜாக்கிறதை யாய் இருக்கவேண்டும் பாலகா என்று நாகேந்திரன் ஆசீர்வாதம் செய்து அனுப்பியது.

அப்போதுபாலகனும் அன்பாகநாகமதைசுற்றிவந்து
வந்தனமும்செய்தானே வகையுடனப்பாம்புக்கு
அப்போதுநாகேந்திரன் அன்புடனேபாலகனை
போய்நீயும்வாருமப்பா புகழுடனேஇப்போது
அந்தவரம்தான்பெற்று அன்புடனேபாலகனும்
அங்கிருந்துபாலகனும் அன்பாய்நடக்கலானான்
அந்தப்பொழுதெல்லாம் அக்காட்டில்நடந்தானே
புலிவேந்தன்பட்டணமும் புகழுடனேவந்தானே

பாலவர்த்தி வேந்தன் புலியைக்கொன்று வேந்தன் புதல்வியை கலியாணஞ்செய்வது.

அந்தநல்பட்டணத்தில் அன்பாகதான்சென்றானே
சத்திரந்தான்தேடியே சாந்தமாய்நடந்தானே
சத்திரம்தானடைந்து சந்தோஷமாயப்போது
அங்கிருந்தகிழவிதன்னை அன்புடன்தான்பார்த்து
பாட்டியேயின்றனக்கு பணந்தாரேன்இப்போது
சாதம்நீயிடுவாயம்மா சம்பிரமாயிப்போஎந்தனுக்கு
அந்தமொழிக்கேட்டு அந்தநல்லகிழவிதானும்
நல்லதுயென்றுச்சொல்லி நலமாகசம்மதித்தாள்
அந்தநல்சமயத்தில் அந்தக்கிழவிதானுமப்போது

நாலுவிதக்கரியுடனே நலமாகசாதமிட்டாள்
அப்போதுபாலகனும் அன்பாகத்தான்புசித்து
கையலம்பிக்கொண்டுமப்போ கடுகசயனித்தானே
உதயமானவுடனே உப்பொங்கிதான் யெழுந்தானே
கேட்டையாபாட்டி நீ கிருபையுடனென்வார்த்தை
நேற்றுபகல்முழுதுமே நடந்தேனம்மாவெகுதூரம்
சாதம்புசியாமல்நான் சம்பிரமாய்நடக்கமாட்டேன்
மருவிசைசாதம்தான் மகிழுடனேயிடுவாய்யம்மா

வசனம்.

இப்படிச்சொல்லவே அக்கிழவி சம்மதமடைந்து பாலகன் கொடுத்த வராகனை பெற்றுக்கொண்டு சாதம் சமைத்துக் கொண்டிருந்தாள் அச்சமயத்தில் பாலகன் அக்கிழவியைப்பார்த்து அம்மா பாட்டி இந்தப்பட்டணத்தில் ஏதாகிலும் புதுமையுண்டா யென்று கேட்க அதற்கு அக்கிழவி பாலகா இந்நாட்டில் ஒரு புதுமையும் கிடையாது ஆனால் இந்நாட்டில் நல்ல தண்ணீர் கிடையாது உப்புத் தண்ணீர்தான் குடிப்பது அதுயேனென்றால் இந்நாட்டில் நல்ல தண்ணீர் கிணற்றருகில் பதினாடி வேங்கை ஒன்றிருக்கின்றது அதுதினத்திற்கு ஐந்துப்பேரைக் கொன்றுப்போட்டு வருகிறது அதை யாரும் கொல்வதற்கு சக்தியற்று இருக்கின்றார்கள் ஆகையால் இந்நாட்டின் வேந்தன் இந்தபுலியைஎவர் கொல்லுகின்றாரோ அவருக்கு தன் மகளாகிய சுபத்திரா தேவியைத்தந்து கலியாணஞ் செய்துக்கொடுப்பதாய் பிரதிக்கினை செய்திருக்கின்றார் இதில்லாமல் நாலுமூலையிலும் எல்லோரும் அரியும்படி பலகை யெழுதி விளம்பரஞ் செய்திருக்கின்றார் என்றுச்சொன்னவுடன் இம்மொழியைக்கேட்டுப் பாலகன்.

ஸ்நானங்கள் செய்துமே போஜனமும்செய்தானே
சந்திராயுதத்தையப்போ சீக்கிரமெடுத்துக்கொண்டு
இரத்தினக்கம்பளியை யிடையில்தான்தரித்தானே
அந்நாட்டின்வடகெவுனி அப்போதேவந்தானே
அக்கெவுனிக்கதவுதான் அப்போதாளிட்டிருந்தது
அந்தவிடத்திலேதான் அன்பாகபாராயிருந்தாரே
அவர்களையும்தான்பார்த்து அப்போதுபாலகனும்
ஆடாகாவலனே அன்புடனே நிற்கின்றவன்

பாலவர்த்திவேந்தன் காவலரை, கதவை திறக்கும்படி சொல்வது.

கதவைத்தான் திறப்பீர்களே கடுகயான்போகவேண்டும்
இந்தமொழிகேட்டார்கள் இன்பமாய்காவலரும்
ஐயாவேநீர்கேளும் அன்புடனேயெங்கள்வார்த்தை
இந்தவழியாகயிப்போ யாருமேபோகலாகாதையா
மிஞ்சிநீர்போனாலே மிருகத்துக்கிரையாவீரையா
அங்கொருவேங்கைபுலிதான் அன்பாகயிருக்குதையா
அடித்துமேகொல்லுமையா அங்குநீர்போகவேண்டாம்
கிழக்குவாயலாகயிப்போ கெம்பீரமாய்போவீரையா
இப்படிச்சொல்லவே இதுகேட்டான் பாலகனும்
எந்தனுக்குயிஷ்டமாகும் இந்தமார்க்கம்தான்போக
இப்படித்தான்சொல்லவே இதுகேட்டார்காவலரும்
ஆனாலுமதிஷ்டமையா அப்படியே விடுகின்றோம்
என்றுமேசொல்லியப்போ இசைந்துமேதாள்திறந்தாரே
கதவைத்திறந்ததும்அப்போ கண்டானே அப்பாலகனும்
சந்தோஷமாகவேதான் சாந்தமாய் போனனம்மார்க்கம்
அவன்போனவுடனேயப்போ அன்பாகசேகுவரும்
கதவைதான்மூடியப்போ கனத்தாளும்பிட்டாரே
தண்ணீர்கிணற்றருகில் தான்போனான்பாலகனும்
நாலுதிசையுமப்போ நலமாகச்சுற்றிப்பார்த்தானே
அந்தப்புலியுந்தான் அங்குபகப்படவில்லையே
புலியும்தானப்போது புலிமீதிரைக்காகப்போச்சுதங்கே
புலிபடுக்குமிடத்தையும் புண்ணியனுங்கண்டானே
அந்தவிடத்தினிலே யன்பாகத்தான்கம்பிளியை
போட்டுமேபடுத்தானே புகழுடனதோனப்போது
சல்லாவைதானெடுத்து சாங்கமாய்முக்காடிட்டு
சந்தாயுதத்தைதான் சாங்கமாய்வைத்தானே
அந்தநல்சமயத்தில் அந்தநல்லப்புலிதானும்
காட்டையும்விட்டுமப்போ கடுகவேவருகின்றது

வசனம்.

இப்படியாக அந்தவேங்கைப்புலியானது தினமும் ஐந்துப் பேரை கொன்று தின்றுவிட்டு வருவது வழக்கம் அன்றையதினம்

ஒருவரும் அகப்படாமல் இருப்பதால் ஐயோ பகவான் நமக்கு இரைத்தாராமல் நிருத்திவிட்டார் நாம் செய்தப்பாக்கியம் இதுதானென்று எண்ணமிட்டுக்கொண்டு வருஞ்சமயத்தில் தனது இருப்பிடத்தில் பாலகனைக்கண்டு சந்தோஷப்பட்டு இது தான் சமயம் நமக்கு பகவான் தேடியழைத்துவந்து இரைத்தந்தார் என்று சந்தோஷமடைந்து வருக இதற்குள்ளாக தன் மனதில் திகிலடைந்து தூரமாய் நின்று கர்ஜித்து பாலகனைப்பார்த்து ஆடா எனது படுக்கைமீது படுத்திருப்பவன் என்றுக் கூச்சலிட்டு நிற்க இதற்குள் தனக்குத்தானே யோசித்து இவனைப்பார்த்தால் ஸ்ரீராமரைப் போல் இருக்கிறது இவன்கையில் நாம்செத்தால் நலம்உண்டு இல்லாமல் மனிதனுயிருந்தால் நமது கையால் சாகுவானென்று யோசித்து தகிரியமாய்ச் சொல்லத்தொடங்கியது.

ஆரையாநீருமேதான் இங்கு அன்புடனேபேசமையா
இப்படிச்சொல்லவே இதுகேட்டான் பாலகனும்
திடுக்கிட்டெழுந்துமப்போ தீவிரமாய்தானமர்ந்து
அந்தநல்லபுலியையும் அன்புடன்தான்பார்த்துமே
வாவென்றழைத்தானே வகையுடன்தானுமப்போ

அந்தமொழிதனைக்கேட்டு அப்போதுபுலியுமங்கே
உந்தனைப்பார்த்தாலே விஷ்ணுபோலிருக்குதையா
சாம்பவமூர்த்தியைப்போல் சாந்தமாயிருக்கின்றீரே

உத்தனருகில்வா இப்போ உகந்துபயமேதெனக்கு
அப்போது பாலகனும் அன்புடன்சொல்லலானர்
பயமொன்றுமில்லாமல் பக்குவமாய் என்னருகில்
வருவாயே இப்போது வகையுடனே நீதானும்
என்றுமேசொல்லியப்போ எதிர்ப்பார்த்திருந்தானே
திகிலேயுர்தானடைந்து தீவிரமாய்புலியும்வந்ததங்கே
இடதுகையாலேயிவன் பெட்டிப்பிடித்தானே
வலதுகைகத்தியாலே வாங்கினன்புலியையப்போ
இரண்டுதுண்டமாகவே விழுந்ததுபுலியுமங்கே
நிதானித்துத்தானுமங்கே நின்றுனேயப்போது

வசனம்.

அப்போது ஆகாயமார்க்கம் அசரீரிசொல்லியது. இப்புலியை நீ கொன்றதால் பாவமொன்றுமில்லை ஆகையால் புலியின் நகத்தையும், வாலையும் வெட்டிக்கொண்டு நீ சுகமாய் வாழ்வாய் என்று சொன்னது.

அதைகேட்டபாலகனும் அன்பாகத்தானப்போது
புலியின்நகமும்வாலும் புகழுடனறுத்துக்கொண்டான்
நடையாநடைநடந்தான் நாணமாய்ப்பாலகனும்
கிழக்குவாயல்தாண்டிவந்து கிழவிதனைபார்த்தானே
பாலகனைப்பார்த்துமப்போ பண்புடன்கிழவியும்
எங்கையப்பாபோயிருந்தாய் எவர்தவப்பாலகனே
ஆயாவேநீகேளாய் அன்புடன்தானநானுமே
வீதியலங்காரத்தை வேடிக்கைபார்த்திருந்தேன்
திரேகங்கன்னோகுதம்மா தீவிரமாய்நடக்கமாட்டேன்
இந்தமொழிகேட்டு இன்பமதாய் கிழவிதானும்
நீபோகவேண்டாமப்பா நிற்பாயடாயிரண்டுதினம்

வசனம்.

இப்படிச்சொல்லவே பாலவர்த்தி வேந்தன் அந்தக்கிழவி வீட்டில்தானே இருந்துவிட்டான். இப்படியிருக்க புலிவேந்தன் புதல்வியாகிய சுபத்திராதேவி துக்கமடைந்து யென்னை என் தந்தை பதினெட்டு ஜாதிகுலத்தார் ஆராகிலும் புலியைக்கொன்ருல் பெண்ணைக்கொடுப்பதாய் செல்லியிருக்கின்ருர் இந்தப்புலியை யார்

கொல்லுவாரே என் தலையில் எது யெழுதி இருக்கிறதோ என்று எண்ணமிட்டு ஆகாரம்விட்டு மேடைமீது பார்த்துக்கொண்டிருந்தாள் அந்தச்சமயத்தில் கிழவியிடம் வந்திருந்த வேந்தக்குமாரன் பலகையைப் படித்ததும், புலியைக் கொன்றதும், கிழவிவீட்டில் இருப்பதும், இதையாரோடும் சொல்லாமல் இந்த இனிஎன்ன நடக்கிறதென்று பார்த்துக்கொண்டிருந்தான்

வண்ணான் துணிமுட்டை யெடுத்துக்கொண்டு துரைக்குப்போகையில் புலியைக்காணுவது.

இப்படிதானிருக்க இசைந்துஅந்நாட்டின்வண்ணான்
திப்படுயென்றவன்தான் திறமுடன்மூன்றுமாதமாய்
சலவைகள்செய்யாமல் தானுமேயிருந்துவிட்டான்
அன்றுதினத்திலே அன்புடனேயவ்வண்ணானும
காட்டுத்துணிகளை நலமுடனேயெடுத்துக்கொண்டு
நல்லதண்ணீர்கிணர்மார்க்கம் நலமாகநடந்தானே
வண்ணானுமப்போது வகைபுடனேபோகின்றான்
இப்படியாகவே இவன்போகுஞ்அச்சமயத்தில்
நாலுபக்கமும்வண்ணான் நலமாகப்பார்த்தானே
ஐயோபுலியென்று அலறியேகூச்சலிட்டானே
இதன்வாயிலகப்படவே இப்போதுநான்வந்தேனே
என்றுமேசொல்லிக்கொண்டு இசைந்துதான்நின்றானே
ஆ-ஆ-இதுயிப்போ அலர்ந்துமேதூங்குகின்றது
இந்நாட்டின்வேந்தன் இதையுந்தான்யறியானே
இந்தப்புலியைக்கொல்வதற்கு இதுநல்லசமயமையா
ஆ-ஆ-இப்புலியை நானேதான்கொல்லுகின்றேன்
இந்தப்புலியைக்கொன்றால் இசைந்துவேந்தனாகுவேன்
சுபத்திராதேவியைநான் சுகமாகமணம்செய்குவேன்
இந்தநாட்டிற்குநானும் இசைந்துமேவேந்தனாகுவேனே
இப்படிதன்மனதில் இசைந்துதான்யெண்ணமிட்டு
அழுக்குத்துணிகளைத்தான் அக்காட்டில்போட்டுவிட்டு
ஓட்டமும்நடையுமாகத்தான் ஓடிவந்தான்வீட்டிற்கு
வீட்டிலிருக்கிறதாம் விந்தையானமொக்கையீட்டி
அந்தநல்யீட்டியை அப்போதுதான்எடுத்தானே
அந்தநல்லச்சமயத்தில் அவனுடையதேவியாளும்

நீர்யெங்குதான்போகின்றீர் இப்போதுஎன்கணவா
இந்தமொழிக்கேட்டான் இசைந்துமேவண்ணானும்
வேந்தனுமாவேனிப்போ விந்தைநல்லசுபத்திரையை
உனக்குநல்லசக்களத்தி உகந்துமேகொண்டுவாரேன்
இந்தமொழிக்கேட்டாள் இசைந்துமேவண்ணாத்தி
உன் தலையுடையாதோ உகந்துயிவ்வார்பேசுகின்றாய்
இந்தநல்சந்தோஷம் இசைந்துதுக்கமடைவதற்கு
பாதகாநீதானும்விணாக பழிஏண்டாசுமக்கின்றாய்
இத்தனையுங்கேட்டானே இசைந்துமேவண்ணானும்
புலியைநான்கொன்றுவிட்டு புவியாளப்போகையிலே
மங்களமொழிகளைத்தான் மகிழ்ந்துமேநீசொல்லாமல்
சண்டாளிமுண்டையே ஜாடுரேன்உன்னைப்பாரென்று
உலக்கைதனையெடுத்து ஓடோடிஅவளையடித்தானே
ஐயோதெய்வமேயென்று அழுதுமேஅவள்நின்றாளே
படுபாவிவுந்தனுக்கு பழிவந்துதான்சம்பவிக்கும்
இப்படிச்சொல்லியே இசைந்துயவள்ஓடிவிட்டாள்
அப்போதுவண்ணானும் இசைந்துருமால்கைபிடித்து
ஈட்டியையெடுத்துமவன் இசைந்துமேகிணற்றருகில்
ஓட்டமும்நடையுமாகஅவன் ஓடிவந்துபார்க்கையிலே
அந்தநல்லப்புலியும்தான் அவ்விடத்தில்தானிருந்தது
ஆ-ஆ-இந்தபுலியைக்கொன்று இசைந்துமேசுபத்திரையை
கலியாணஞ்செய்துமேநான் கண்குளிரதானுமிப்போ
கலியாணஞ்செய்கின்றேனோ கடுகவேநான்சாகிறனோ
இப்படிச்சொல்லிக்கொண்டே ஏரினான்மரத்தின்மீது
கிளைகளைவொடித்துமே போட்டானப்புலியின்மீது
ஏதுமேதான்பேசாமல் இருந்ததுஅந்தப்புலிதானும்
இத்தனையும்பார்த்தானே இசைந்துமேவண்ணானும்
மரத்தின்மீதுநாமிருந்தால் மகிழுடனேயேறிவந்து
நம்மையும்கொன்றுவிடும் நலமானயிந்தபுலிதானும்
இப்படியெண்ணமிட்டு இசைந்துமேமரம்விட்டிறங்கி
இருந்தாலும்கீர்த்திதான் இறந்தாலும்பேரென்றுமே
தைரியங்கள்செய்துக்கொண்டு தாட்டியாய்வந்தானே
வந்துமேதான்பார்த்தான் வண்மையுடன்புலியைத்தான்
ஓங்கியவன்ஈட்டியாலே ஓயர்ந்துமேதான்குத்தினானே

கொஞ்சமாகிலும் அங்கே குத்துதான்படவில்லையே
அந்தக்ல்லயீட்டிதானும் அடர்ந்ததுப்புப்பிடித்தது
ஈட்டியைதானுமப்போ இசைவாகயெரிந்துவிட்டு
புலியின்வயற்றின்மீது புகழாயேரிகுந்திக்கொண்டு
கத்தியால்வயிற்றைஅப்போ கண்டுஅவன்கிழித்தானே
அப்போதுரத்தம்தான் அமோகமாய்வெளிவரவே
ஈட்டிநிறையரத்தம்அவன் இசைவாகபூசிக்கொண்டான்
உடம்பெங்குமரத்தமாய் உகந்துமேபூசிக்கொண்டானே
நெகத்தையும்வாலையும்தான் நிகழாயருத்துக்கொண்டு
கையிலேவைத்துக்கொண்டு கடுகவேநடக்கலானான்
எதிரேயார்வந்தாலும் இடித்துக்கொண்டுபோகின்றான்
எங்குநீபோராய்வண்ணனே யென்றுமேகேட்டாலும்
என்னடாபயலேயென்னை வண்ணனென்றுசொல்லுதாய்
வேந்தன்மருமகனுனச்சே வேந்தனென்றழையுமே
இப்படிசொல்லிக்கொண்டு இசைந்துமேநடந்தானே
அந்தச்சமயத்திலவன்தானும் அடர்ந்தகச்சேரிதன்னில்
வேந்தன்யெதிராகத்தான் வேகமாய்வந்துநின்றானே
ஈட்டிநெகம்வாலையும்தான் இன்பமாய்வைத்தானே

புலிவேந்தன் யெதிரில் வண்ணன் கலியாணஞ் செய்யும்படி சொல்வது.

வசனம்.

புலிவேந்தன் கொலுவமர்ந்திருக்கும் சமயத்தில் வண்ணன் புலியுடைய பாதிநெகமும் பாதிவாலையும் வேந்தன் எதிரில் வைத்து சாஷ்டாங்க வந்தனஞ்செய்து தீனதயாள ஒ இராஜோத்தமா! உனதருகில்கோடானக்கோடிசேனைகளிருந்தும் ஏதுபயன்மாதமானவுடன் சம்பளம்பெற்றுக்கொண்டு போகிறார்களே தவிர இந்த ஆபத்தை தீர்த்தவர் யாருமில்லை ஆனால் உங்களுடைய திரவியத்தை எதுமரியமாட்டேன் யான் நாட்டிலிருந்து அழுக்குத்துணிகளை மூட்டைக்கட்டிக்கொண்டு தொளைக்குப்போகையில் அந்தப்புலிவந்து என் மீது விழுந்து என்னை ரத்தமயமாகச்செய்தது அந்தச்சமயத்தில் இந்த ஈட்டியால் குத்தி அதைக் கொன்றேனையா இதோ பாரும் அதின் நெகமும் வாலும் என்றுகாட்ட வேந்தன் விசனமடைந்து நிற்க அருகில் இருந்த மந்திரிகள்பார்த்து ஒ இராஜோத்தமா புலி

யை இவன் கொன்றவனல்ல ஆரோ வேந்தர்கள் கொன்றதுபோல் தெரிகிறது என்று சொல்லவே இதைக்கேட்டு வேந்தன் அய்யா மந்திரிகளே நீங்கள் எதைப்பார்த்து சொல்லுகிறீர் என்றுகேட்க அப்போது மந்திரிகள் மொண்டிவாலேயும் மொண்டிசுகத்தையும் பார்த்துச் சொல்லுகிறோம் என்றுச்சொல்லவே இம்மொழிகேட்டு வண்ணான் போதும் போதுமையா இந்தப்புலியானது வேந்தன் கோட்டையிலிருக்கும் கருங்கல்லே தனது நெகத்தால்கீரி அதின் நெகம் மொண்டியாகி விட்டது எனச்சொல்லவே வேந்தன் மந்திரிகளைப்பார்த்து நான்பெருத்தபிரமாணம்செய்திருக்கின்றேன் அய்யா மந்திரிகளே இந்த மொழியைத் தவறினால்அந்தப் பாபம் என்னைச் சுற்றும் இதில்லாமல் சொன்னமொழித் தவறலாகாது இந்த வண்ணானுக்கே எனது குமாரத்தியைக் கொடுத்து கலியாணஞ் செய்வதுநிச்சயம் இம்மொழியைக்கேட்ட வேந்தர்களுக்கு சமாதானமில்லாமல்போச்சுது அப்போதேவேந்தன் விப்ரவரையழைத்து முகூர்த்தம் விசாரிக்கவே அப்பிராம்மணர்கள் ஐயா பொழுதுபோகும்வரை லக்கினம் நன்றாயிருக்கிறது என்றுசொன்னதைக் கேட்டவேந்தன் தன் தேசமெங்கும் அலங்காரம்செய்யும்படிக்கும் தன்னாட்டில் இராநின்ற துரைகளும் உத்தியோகஸ்தரும் மந்திரிமார்களும் வித்வான்ளும் கத்திக்காரர்களும் காவலாளிகளும் இவனை வண்ணானென்றுச் சொன்னால் அவன் தலையைக்கண்டிக்கப்படும் என்றும் இவனை எக்காலத்திலும் திப்ப வேந்தனென்று அழைக்கவேண்டு மென்று பறைசாற்றுப்படி சொல்லிவிட்டார்

எனதுதேசத்தையும் அவனுக்கேகொடுக்கின்றேன்
இதாபூமியைநான் இன்பமாய்யாண்டுக்கொள்வேன்
அந்தச்சமயத்தில்தாதிகளை அறிவேந்தன்தானழைத்து
ஆரடிதாதிகளேநீங்கள்தான் அன்புடனேயிப்போது
திப்பவேந்தனவனையும் தீவிரமாய்மாப்பிள்ளைபோல்
அலங்காரஞ்செய்வீரே அன்புடனவனையிப்போது
இப்படித்தான்சொல்லவே இதுகேட்டார்தாதிகளும்
சம்பங்கியெண்ணெயிட்டு ஸ்நானமும்செய்துவைத்தார்
பட்டுகரைநல்தோவத்தி பாங்காககட்டச்செய்தார்
இரண்டுகாதிலும்தான் இணையில்லாகடுக்கனிட்டார்
சந்திரகாந்திப்பாகையதை தானுமேதலையிலிட்டார்
கலியாணமாப்பிள்ளைபோல் கடுகனவேசெய்தாரே

வசனம்.

இப்படியாக தயார்செய்த சங்கதியெல்லாம் வேந்தன் அறிந்து மேளவாத்தியங்கள் முழங்கவும் நாட்டியப்பெண்கள் ஆடவும் முத்துப்பல்லக்கு அலங்கரித்து அதின் மீது அமரும்படிச்செய்து கோலம் வரும்படிச்செய்யவே அச்சமயத்தில் அப்பட்டணத்திலிருக்கும் குடிகளும் கணக்கரும் இவன்பின் தொடர்ந்து ஐயா திப்ப வேந்தனே இன்னாட்டில் மூன்றுவருடமாக மழையில்லாமல் அதிக துன்பப் படுகிறோம் இந்த வருடம் நீர் அரசுக்கு வந்தபடியால் எங்கள் எல்லோரையும் காப்பாற்றவேண்டும் சுவாமியென தெண்டனிட்டார்கள்.

இந்தவார்த்தைக்கேட்டதும் வண்ணான திப்பவேந்தன்
இதுசமயமல்லவேதான் இசைந்துமேநான்சொல்வதற்கு
ஆகட்டுமென்றுசொல்லி அப்போதேபல்லக்கேறினன்
மேளங்களடியுமென்று மேன்மையாய்திட்டஞ்செய்தானே
தீவிட்டிக்காரர்களையப்போ தீவட்டிபிடியுமென்றான்
அக்ராரக்கோலந்தான் அழகாககிழக்குவீதிதன்னில்
சந்தோஷமாகவேதான் சம்பிரமாய்வருகின்றானே

வசனம்.

அந்தச்சமயத்தில் புலி வேந்தமகாராஜன் சேடிகளையழைத்து கலியாணமாப்பிள்ளை ஊர்க்கோலம் வருகின்றான் நீங்கள் சீக்கிரமாக எனது புதல்வியை அலங்காரம் செய்வீரென்று சேடிகளை அனுப்பினர் அந்தசமயத்தில் சேடிகள் ஓடிவந்து

அம்மாவேசுபத்திராதேவி அந்தபாழும்பிரமன்தான்
இப்படியெழுதுவானோ இசைந்துமேவையகத்தில்
வேந்தர்கிடையாரோ வேண்டிஉன்னைமணம்புரிய
பிறந்தவுடனேயெமன் பாவிகொல்லாமல்விட்டானே
இந்தமொழிகேட்டாள் இன்பமாய்சுபத்திராதேவியும்
அப்போதான்தாதிகளை அன்புடனேகேழ்க்கலானள்
என்னடிதாதிகளே இப்படியாய்சொன்னீர்களே
ஒளியாமல்யெந்தனுக்கு உண்மையைச்சொல்வீரே

சுபத்திராதேவியை தாதிகள் கண்டு துயரமடைவது.

அப்போதுதாதிகளும் அன்பாகசொல்லலானர்கள்
அம்மாவேநீகேளாய் அன்புடன்பெங்கள்வார்த்தை

வண்ணாப்பையனவன் வகுந்தகணவன்வுந்தனுக்கு
நாலுவீதிகோலமும்தான் நலமாகவருகின்றானும்
உன்னையலங்கரித்து உகந்துமேயழைத்துக்கொண்டு
வரும்படிசொன்னாம்மா வகையுடன் உந்தன்தந்தை
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்சுபத்திராதேவியும்
அந்தமொழிக்கேட்டாள் அப்பவேதாதிகளைத்தான்
இடித்தாளேதாடைமீது இணையில்லாகோபங்கொண்டு
அந்தயடிப்பட்டுக்கொண்டு அப்போதுதாதிகளும்
வேந்தன்கொலுவில்வந்து வேகமதாய்நின்றார்கள்
கண்ணில்ஜலம்சொரிய கடுகவேத்தான்யழுதார்கள்
ஐயாவேநீர்கேளும் அன்புடனேயெங்கள்வார்த்தை
நாங்கள்போய்சொன்னவுடன் நலமுடனேவும்புதல்வி
அடித்தாளேதாடைமீது அலரவேதான்யிப்போது

வசனம்.

இந்தப்பிரகாரம் சேடிகள் வந்துச்சொல்லவே இதைக்கேட்டு வேந்தன் இனி நமது புதல்விக்கு யார் சமாதானஞ் சொன்னாலும் கேழ்க்கமாட்டாள் என்று தானே புறப்பட்டு அந்தப்புரம்வந்து சுபத்திராதேவியை பார்த்து சொல்லத்தொடங்கினார்.

நான்பெற்றசெல்வமே நவரத்தினசெண்பகமே
தாதிமார்கள்தன்னையே தானடித்தக்காரியமேன்
வண்ணாப்பையனென்றுமே வகைமோசம்போனாயோ
உந்தனுக்குயேதுமே உலகத்தில்கஷ்டமில்லையம்மா
நான்பார்க்கமாட்டேனம்மா நயமுடனேயெப்போதும்
என்ராஜ்யம்முழுதும்தந்து ஏராளதிரவியமதருகின்றேன்
கலியாணஞ்செய்யாவிட்டால் கபடனென்றுசொல்வாரே
சீக்கிரமெழுந்திருப்பாய் சிறப்புடனென்கண்மணியே
இத்தனையுங்கேட்டாளே இன்பமாய்சுபத்திராதேவியும்
தந்தைஐயதான்பார்த்து தானுமேசொல்லலுற்றாள்

வசனம்.

தந்தை வருவதை சுபத்திராதேவி அறிந்து ஓர்கடிதமெடுத்து ஓ தந்தையே அந்தப்புலியைக் கொன்றவர் இன்னாட்டில் இருக்கும் சத்திரத்தில் இருக்கின்றார் அவர் கொன்றப்புலியை வண்ணான் கொண்டுவந்துக்காட்ட நீங்கள்சம்மதித்துவிட்டீர்கள் இதுநியாயமா,

செடியைவைத்தவன் ஒருவன் பலனையனுபவிப்பது ஒருவனு அவ் வேந்தனைவிட்டு இதர புருஷரை ஒருக்காலும் விருப்பமடையேன் என் று கடிதமெழுதி தயாராய் வைத்திருந்ததை தந்தையிடம் கொடுத்தாள்.

தந்தையைதானபார்த்து தானுமேசொல்லலுற்ருள்
காகிதம்தானப்போது கனமுடனேதான்கொடுத்தாளே
அந்தக்கடிதத்தையப்போ அன்பாகவேந்தன்தானும்
படித்துமேநடந்தசங்கதியை பக்குவமாயறிந்திட்டானே

விருத்தம்.

தந்தையேசொல்லக்கேளீர் தனிபலவேந்தைதன்னை
அந்தமாய்கொன்றவரை அவனியில்விட்டுயானும்
பந்தமாயிந்தமுடன் பலவாருய்வந்தானிப்போ
சிந்தையில்நினைக்கமாட்டேன் சிரியேமாலையிட்டேன்

வசனம்.

அந்தக்கடிதத்தை வாசித்து சங்கதியரிந்துக்கொண்டு அருகில் இருக்கப்பட்டசேகுவரை, பனிரெண்டுபேரை அழைத்து அடசேகு வரே நீங்கள் சென்று ஊர்கோலம்வரப்பட்ட வண்ணானை என்கண் ணெதிரில் வாராதபடிக்கு முத்துபல்லக்கு தன்னிலிருந்து கோட் டைக்கு கொண்டுவருவதற்குள் பனிரெண்டு வருடம் உதிரம் கக்கும் படி அடிக்கவேண்டுமென்று உத்திரவிட்டார் அதுபோல் சேகுவர் ஓடிவந்து ஆரையா திப்பவேந்தா அன்புடனே இரங்குமையா

இந்தமொழிகேட்டான் இன்பமாய்வண்ணனும்
உதயமானவுடனே உங்களுக்குநான் பூமிதாரேன்
மேளமடியுமென்று மேன்மையாய்போகின்றுன
இப்படிச்சொல்லிக்கொண்டு இன்பமாய்போகுரான்
அந்தநல்லசமயத்தில் அரண்மனைசேகுவர்தான்
ஓடியேவந்துதானுமங்கே ஓங்காரமிட்டார்களே
பல்லக்குதன்னையப்போ பக்குவமாய்நிறுத்தினுரே
திப்படுவண்ணனையப்போ தீவிரமாய்பார்த்தார்கள்
துப்பாக்கியாலேஅங்கே துடிக்கவேஇடித்தாரே
குத்தினகுத்துதன்னில் கொப்பனவேவிழுந்தானே
என்னையேன்படிக்கின்றீர் என்னகுற்றம்செய்தேனையா
உங்கள்வஸ்திரத்தை உகந்துசலவைசெய்துதாரேன்
இந்தநல்லக்கல்யாணம யெந்தனுக்குவேண்டாமையா
இப்படிவருமென்றுநான் இதையரியாமல்போனேனே

வசனம்.

அப்போது வண்ணான் தரித்து இருந்த பூஷணங்களும் ஆடைகளும் கைபற்றி கோட்டைக்கு அனுப்பிவிட்டு அதன் பிறகு கம்மாளனையழைத்து இரண்டு கொரடா கொண்டுவரும்படி திட்டஞ்செய்து ஒன்பதுசெமைப் புளியமலார் கொண்டுவந்து தயாராய் வைத்துக்கொண்டு வண்ணானை செடியருகில் கொண்டு வந்தார்கள்.

புளியன்மலாரையப்போ புகழுடன்பார்த்தானே
இந்தமலார்ஏதுக்கையா இன்பமாய்சொல்லுமிப்போ

வசனம்.

ஓ திப்பவேந்தனே உனது கலியாணத்திற்கு ஆராகிலும் இருடர்கள் தொடர்ந்தால் அவர்களை அடிப்பதற்கு வேந்தன் கொண்டு வரும்படி திட்டஞ்செய்தார் என்றுச்சொல்லிக்கொண்டே

வண்ணானைத்தானுமப்போ வகையுடன்பிடித்தாரே
இரண்டுதன்கைகளையும் இருக்கியேகட்டினார்கள்
பெரியமரத்தில்அவனை பிகியவேகட்டினார்கள்
ஒன்பதுசெமைபுளியமலார் ஓடியடித்தாரப்போது
அவன்திரேகமெங்கும் அலாவேதானடித்தார்கள்
கொரடாவைவேகவைத்து கொப்பனவேசுட்டார்கள்
அங்கிருந்தசேகுவர்தான் அப்போதுவோடினார்கள்
வண்ணான்வீட்டைதேடி வகையுடன்போனார்கள்
அவன-வீடடிற்குசென்று அவன்மனைவியையழைத்தாரே
ஆரடிப்பெண்ணேநீ அரைக்கூடைசுன்னங்கொட்டடி
இத்தனையுங்கேட்டாளே இன்பமாய்வண்ணாத்தி
ஏனையாசுன்னமிப்போ யெனக்குமேசொல்லுமைய்யா
அப்போதுகாவலர்கள் அரியவேசொல்லுகின்றார்கள்
உந்தன்கணவனைத்தான் உடம்பொடிய யடித்தாரே
இரத்தமும்வந்ததற்கு இச்சுண்ணாம்புபோடவேணும்
இந்தமொழிதான்கேட்டு யேதுச்சொன்னாளப்போது
நன்றாயடியுங்கள் நாணங்கெட்டப்பாவியைத்தான்
இப்படிசொல்லிக்கொண்டு இதமாகசுன்னம்தந்தாளே
கொண்டுவந்தசுன்னம் கொப்பனவேயவன்மீதில்
நிறையவேபூசிவிட்டார் நிர்மாணமாய்வோட்டிவிட்டார்

அப்போதுவண்ணனும் அழுதுகொண்டுவந்தானே
அழுதுவரும்தனகணவனை அன்பாகபார்த்தாளே
சட்டியில்யாலாத்திஅவள் சல்தியாய்கொண்டுவந்தாள்
இந்தால்லஆலாத்திதான் எனக்கேண்டியாதகிபே
நான்பட்டபாட்டையிப்போ நானிலத்தில் சொல்லலாமா
மானமும் யீனமும்போச்சு மரியாதைதான்போச்சு
ஆனால்தான்யானுமிப்போ ஆண்டேன் யொருநிமிஷம்
ஏரினேன்பல்லக்குதான் யெடுத்தாரேயெந்தனேயும்
இப்படியாகவே யிவனிருந்தான் தன்மனையில்

புலிவேந்தன் பாலவர்த்தி வேந்தனை அழைத்து வருவது.

வசனம்.

இப்படியிருக்க புலிவேந்தன பல்லக்குஏரிக்கொண்டு அந்நாட்டிவிருக்கப் பட்டசத்திரம் எதிரில்வந்துதனது மந்திரிகளை அனுப்பி இவ்விடத்தில் புலியைக்கொன்ற இராஜகுமாரன் இருக்கின்றான் அழைத்து வரும்படிச்சொல்லவே அதுபோல் மந்திரிகள் சென்று பார்க்க அவ்விடத்தில் அப்பாலகன் இருந்தான் அவனைப்பார்த்து ஐயா உம்மை புலிவேந்தன் அழைக்கிறாரென்றார். அப்போது அப் பாலகன் ஐயா என்னை புலிவேந்தர் எப்படி யரிவார் யான் அவரை எப்படியரிவேன் என்னுடன் வேந்தனுக்கு என்னகாரியமிருக்கிறது ஏதுமில்லை வருவதில்லை என்றுச்சொல்ல அம்மொழிக்கேட்ட மந்திரிகள் வேந்தனுக்குச்சொல்ல வேந்தன் உடனே உட்பிரவேசித்து வாருமப்பா வேந்தனே நீர் என் நாட்டில் வசித்துக்கொண்டிருந்த துஷ்டமிருகமாகிய புலியைக்கொன்றதாய் அறிந்திட்டேன் ஆகையால் உனக்கு என்புதல்வியைத்தந்து கலியாணஞ் செய்துவைக்கின்றேன் என்றுச்சொல்ல அம்மொழிகேட்டு பாலகன் இது என்ன அன்னீதம் நான் யென்ன புலியைக்கொல்லப்படவல்லவனா அது மேல்விழுந்து ஓர் அரையரைந்தால் யான் எம்மாத்திரம் இதுவெல்லாம் வீண்சங்கதிகள் வண்ணாதிப்பன் புலியைக்கொன்றவன் அவனுக்கு உமது புதல்வியை தந்து கலியாணஞ்செய்யலாகதா என்று சொல்ல இதைக்கேட்டப்புலிவேந்தன் அப்பா இராஜபுதல்வனே அந்தசங்கதி போகட்டும் நீரே புலியைக்கொன்றதாக நிஜமாகிறது என்றுச்சொல்லி அவன் கையைப்பிடித்து யழைக்க அப்பாலகன்

எழுந்து பல்லக்கு மீதமர்ந்தான் அப்போது நாலுவீதியும் கோல மாகவந்து கோட்டைக்குள்சென்று இருவரும் அர்தப்புரமடைந்து ஸ்நான முதலிய ஷட்கிரமங்களை தீர்த்துக்கொண்டு திவ்யபோஜனங் களரிந்து தாம்பூலந்தரித்து லட்சுமி விலாசத்தில் நித்திரையடைந் தார்கள் உடனேசூரியன் கிழக்குதிசையில் உதித்தான் புலிவேந்தன் எழுந்து கொலுச்சாவடியடைந்து விப்ரவரையழைத்து புதல்விக் கும் பாலவர்த்திவேந்தனுக்கும் பெயாமைப்புப் பார்த்து மூகூர்த்த லக்கினமிடும்படிச் சொல்ல இதைக்கேட்ட பாலவர்த்திவேந்தன் அய்யா அந்தப்புலியை நானே கொன்றதாய் தீர்மானித்தீர்கள் அதுநிக்ஷபமே இதோபாருமதனுடைய நகமும் வாலுமென்று எதி ரில் வைத்துவிட்டு அய்யா நீர் என்னைக் கலியாணஞ்செய்துக்கொள் ளும்படி சொல்லுகிறீர் இப்போது ஏதும்தடையில்லை ஆனல் எனது தாயாராகிய ஸ்ரீபாலநாகம்மாளை நாகள்ளபூடி கரைதன்னில் வசிக் கப்பட்ட மகாசண்டாளனுன மாயாபக்கிரி சிறையெடுத்து வைத்தி ருக்கிறனும், அவனை ஜெயிக்க யான் போகுறேன் இச்சமயம் கலியா ணஞ்செய்வது நலமல்லவே நான் திரும்பிவரும்போது கலியாணஞ் செய்துக்கொள்ளுகிறேனென்றுச்சொல்லவே அதற்கு புலிவேந்தன் சம்மதமடைந்து இவன் நமக்கே மருமகனுகப் போகிறுனென்று சந்தோஷமடைந்தான் அதன் பிறகு, பாலகனைப்பார்த்து அப்பா ராஜகுமாரா நீ நாகள்ள பூடிக்குப்போவதால் எனது சேனைகளை அனுப்புகிறேன் அழைத்துச் செல்லுவாயென்றுச் சொல்ல, இதை கேட்ட பாலகன் அய்யா சேனைகள்வேண்டாம் நானேபோகிறே னென்றுச் சொல்ல புலிவேந்தன் கேட்டு ஐயா என் நகரத்தில் சுப்பாசாஸ்திரி யென்ருெருப் பிராமணன் இருக்கின்றுன் அவனை யாகிலும் துணையாக அழைத்துக்கொண்டு போவாயென்றுச்சொல்ல அதற்கு சம்மதமடைந்து அப்பிராமணனை யழைத்துக்கொண்டு போகலுற்றுர்,

பாலவர்த்திவேந்தனும் விப்பிரவனும் புரப்படுவது.

இருவருமப்போது இசைந்துமே நடக்கலானுர்
இரண்டுஜாமமாகத்தான் இருவரும்தான்நடந்தாரே
பாலகனுக்கப்போது பார்க்கராவுவரண்டதுவே
அய்யாவேவிப்பிரவரே அன்புடன்கேளுமையா
எந்தனுக்குதாகமிப்போ ஏங்கியெடுக்குதையாவே

ஜலமிப்போகொண்டுவாரும் ஜல்தியாயெந்தனுக்கு
அந்தமொழிக்கேட்டான் யப்போதுவேதியனும்
கடையாகடைநடந்தான் நாலுபக்கம்தேடிப்பார்க்க
கினவழிதன்னிலேதான் கண்டானேகிணறொன்றை

வசனம்.

அச்சமயத்தில் வேதியன் கிணற்றைக்கண்டு இராஜபுத்திரனை அழைத்துக் கொண்டுவந்து ஓஇராஜேந்திரா முந்தி யென்னைக்கிணற்றினில இரக்கினால் நான்தாகமரிந்தபின்புதங்களை விடுகிறேனென்று சொல்ல வேந்தன் சம்மதமடைந்து இரண்டுபேர்களுடைய பாகைகளை கழட்டி ஒன்றுப்முடிபோட்டுபிராமணன் இடுப்பில்கட்டி கிணற்றிலிரக்கினார் அப்போது விப்பிரவன் தனது தாகம் திரும்படி ஜலமருந்தி கயற்றை அசக்கவே வேந்தன் சேந்திக்கொண்டார் கரைக்கு வந்தபிறகு வேதியன் வேந்தனைப்பார்த்து அப்பா இக்கிணற்றில் செடிகள் சூழ்ந்திருக்கிறது தாங்கள் இறங்கினால் காதில் இருக்கப்பட்ட கடுக்கன் செந்திரஹாரம் இதுகள் சிக்கிகொண்டு தொந்திரவு படுவீர்கள். ஆகையால் இதையெல்லாங் கழட்டிக்கரையில் வைத்துவிட்டு கிணற்றில் இறங்கினால் நலமென்றுசொல்ல அதுபோல்வேந்தனும் சம்மதித்து பூஷணங்களை கழட்டிகரைமீது வைத்துவிட்டு இடுப்புக்குக் கயர்கட்டிக்கொண்டு கிணற்றில் இரங்கி ஜலமருந்தி கயற்றையசக்க அச்சமயத்தில் வேதியன் பாதிகயர்ச் சேந்தி மத்தியில் வரும் சமயத்தில் செந்திராயுதமெடுத்து கயற்றை அருத்துவிட்டான் அப்போது,

பாலவர்த்தி வேந்தன் கிணற்றில் விழுந்தான் வேதியன் ஓடிப்போவது

வேந்தனும்கிணற்றினில் வேகமாய்விழுந்தானே
முழுகிதெப்பமாடியங்கே மூச்சுகள்விடுகின்றான்
அந்தச்சமயத்தில் யறிவுள்ளப்பாலகன்தான்
தனதுநல்பாட்டியைத் தன்மனதில்நினைத்தானே
அய்யோலட்சுமிதேவியரே யம்மாயென்னைக்காருமே
எந்தன்தாயாரைநீதான் யேன்பெற்றாய்முந்திநீ
அந்தப்பாதகிஇப்போ யென்னையும்பெற்றாளே
எந்தனுக்கெத்தனைதான் இடுக்குகள்நேர்ந்ததம்மா

இனியான்பிழைக்கமாட்டேன் இன்பமாய்யென்தாயே
இந்தக்கிணற்றினில்தான் என்னுவிவிடுகின்றேன்
என்னையுங்காப்பவர்கள் எவருமில்லேஇக்கானகத்தில்
இப்படிச்சொல்லிகொண்டு இருந்தானே அப்பாலகனும்
இப்படித்தான் துயரமிட இதுக்கண்டலட்சுமிதேவி
அந்தக்கிணற்றினில் அரியதர்பைவுண்டாக்கவே
அப்போமுழங்கால்ஜலமாக முழுகினுளக்கிணற்றில்
மாயக்கொடையொன்றுதான் மகிழுடன்நியமித்தான்
விஷபூச்சிகள்வொன்றும் வாாமலக்குசெய்தாளே
இப்படியாய்பாலன் இருந்தானே ஏழுதினமக்கிணற்றில்
அப்போதுவிப்பிரவன் அங்கிருந்தபூஷணத்தை
மூட்டைதான்கட்டிக்கொண்டு முடுக்காய்நடந்தானே
கெங்காவதிப்பட்டணம் கெவரமாய்விப்பிரவன்
வந்தானேவிப்பிரவன் வண்மையுள்ளபட்டணமும்
அந்தநல்லபட்டணத்தில் அன்புடனிருக்கும்வேசியை
கண்டானேவிப்பிரவன் கண்கொண்டபார்வையால்
மோகமதிகரித்து அங்கே மோகனுங்கியைதான்கண்டு
கொண்டுவந்தபூஷணத்தை கும்பலாய்கொடுத்தானே
அந்தநல்லாத்திரியில் யாசைநித்திரைதான்செய்தானே
உதயமானவுடனே அவன் யெழுந்தானேவிப்பிரவன்
குளத்தருகில்தான்வந்து குந்தினன்விப்பிரவன்
அந்தச்சமயத்தில்தான் அந்தபடுபாவிவேதியனுக்கு
மேகரோகங்கள்தான் மேன்மையாயுண்டாச்சுதங்கே
கிரந்திசெலந்தியுமப்போ கீல்வாதம்மொடக்குவாதம்
இரத்தவெள்ளேயும் இரணபுத்துயுண்டாச்சுதங்கே
இத்தனைவியாதிகளுந்தான்வா இதுகண்டுதுயரமிட்டான்
இந்தப்பாவிவிப்பிரவனை இங்குயெவரும்சேர்க்கவில்லே
அந்தநல்தெருக்கோடியில் அயர்ந்துமேபடுத்திருந்தான்
இப்படியிவனிருந்தான் இசைந்துமேயன்னுட்டில்
அன்னுட்டுவேந்தர்கள்தான் ஆறுபேருமப்போது
இன்பமாய்புறப்பட்டார் யிசைந்துமேவேட்டையாட
கானகத்தில்வேட்டையாடி களைத்துவருஞ்சமயத்தில்
வேட்டைநாயிகளுந்தான் வெண்தாகங்கொண்டது
அப்போதுயன்னுய்கள் வேந்தர்கள்தன்பல்லக்கை

போகவிடாமலப்போ புகழ்ந்துமேமடக்கியது
இந்தநல்லகோத்தை வேந்தர்களும்கண்டாரே
அப்போதுகாவலரை யன்புடன் தானழைத்து
இந்தவேட்டைகாய்களுக்கு யிப்போதேஜலமதுதான்
கொண்டுவருவீரென்று கும்பலாய்திட்டஞ்செய்தாரே
அப்போதுகாவலர்கள் அங்கேயன்பாகவோடினுர்கள்
ஆலமரத்தடியிலங்கு அமர்ந்திருந்ததுகிணறென்று
அந்தக்கிணற்றிலேதான் அன்பாகசொம்பைக்கட்டி
சொம்பையும்தான்விடவே சிறப்புடனேபாலகனும்
சொம்புதனைப்பார்த்துமே பிடித்துக்கொண்டானப்போது
இந்தநல்லக்காவலர்கள்தான் யிழுத்துமேபார்த்தார்கள்
கயருமசையவில்லைஅங்கே கடுங்குறல்தான்கேட்குதங்கே

வசனம்.

இந்த துவனியைக்கேட்டு இதைநாம் பலமாய் வலித்தால் பாகை யறுந்துவிடுமென்று சந்தேகமடைந்து அதில் இரண்டுபேர் ஓடி வேந்தரைக்கண்டு ஐயா அந்தக்கிணற்றில் ஆரோவிழுந்திருக் கிருப்போலிருக்கிறது அவர் துயரமடைகுறுர் நாங்கள் போட்ட சொம்பைப் பிடித்துக்கொண்டார் வாவில்லை என்றுசொல்ல இதைக் கேட்டு வேந்தர்கள் அடா காவலர்களே ஆரோமனிதர் விழுந்திரு ப்பார்கள் அவரைக்கரையேற்றினுல் நமக்கு நல்ல பலன்தான் என்று ச்சொல்லி அவர்களுடைய பர்கையும் இடுப்பில் தரித்துக்கொண்டிரு ந்த கச்சாவும் கழட்டிக்கொடுத்து இதுகளையெல்லாம் சேர்த்துக் கிணற்றில்விட்டு அம்மனிதனை கரையேற்றி விடுவீர்கள் என்றுச் சொல்ல அதுபோல் சேகுவர்களும் வந்து கயற்றை விடவே.

அந்தக்கயற்றையப்போ பிடித்தானேபாலகனும்
தூக்கினுர்கள்காவலர்கள் தொந்தமுடனப்பாலகனை
அப்போதுபாலகனும் அரிபவேகனைந்திருந்தான்
பாலகன்திரேகமது பாங்காயிருந்ததப்போது
கிள்ளினுலும்யிரத்தம்தான் கொஞ்சமும்வரவில்லை
காட்டில்கட்டைக்கொண்டு கடுகவேதீமூட்டினுர்கள்
தீயதனைகாட்டும்படிச் திகழ்பாலகனைநிறுத்தினுர்கள்
அட்டைகள்தானுமப்போ அடையாயிருந்ததங்கே
இத்தனைக்கோலமதை இன்பமதாய்க்கண்டாரே

பிச்சுவாதானெடுத்துத் தள்ளினர் அட்டைகளை
அப்போதுபாலகனை யன்புடன்தான்பல்லக்கில்
ஏற்றிக்கொண்டுமேதான் எடுத்தாரேயப்போது
கெங்காவதிபட்டணமும் வந்துமேசேர்ந்தாரே
பாலகனுக்கப்போது பக்குவங்கள்தான்செய்தாரே
இப்படித்தான்செய்யவே இந்தநல்லபாலகனும்
தினத்திற்குதினமதாய் தேரிவந்தான்பாலகனும்
அந்தச்சமயத்தில்தான் யங்கிருந்தவேந்தர்களும்
பாலகனைத்தான்பார்த்து பண்புடனேகேழ்க்கலானர்
எந்தவூரெந்ததேசம் யிசைந்துமேநீசொல்லுமப்பா
உனதுதாய்தந்தைகள் புகந்தபெயர்சொல்லுமே
இப்படியும்நீதானும் யிசைந்துவந்தக்காரியமேன்
இத்தனையும்கேட்டானே இசைந்துமேபாலகனும்
சொல்லத்தொடர்ந்தான் சொகுசுடனேயப்போது
பானுகண்டிபட்டணத்தை பரிபாலித்துவந்ததொரு
கார்யவர்த்திவேந்தன் கருணையுள்ளயென்தந்தை
பாலநாகம்மாள்தான் யென்னைப்பெற்றதாயாகும்
எந்தனைப்பெற்றதோர் ஏழாந்தினந்தன்னிலே
நாகள்ளபூடிகரைதன்னில் நன்றிகெட்டபக்கிரியும்
மாயாப்பக்கிரிஅவன் மகிழ்ந்துசிறையெடுத்தானும்
என்தந்தையேழ்பேரும் யிசைந்துயுத்தம்செய்தாராம்
அந்தநல்லதந்தைகளை யதமாகச்செய் துவிட்டானும்
என்னுடையத்தாயாரை யிசைந்துமேபார்ப்பதற்கு
போகுறேன்அங்குயானும் புகழுடன்தான்இப்போது
இத்தனையுங்கேட்டாரே இன்பமதாய்வேந்தர்களும்
ஆனாலும்நீகேளும்பாலகனே யரிவுள்ளஅப்பாவே
இந்தநல்லகிணற்றில்தான் ஏன்விழுந்தாயிப்போது
இந்தமொழிக்கேட்டு ஏதுச்சொன்னன்பாலகனும்
காட்டையும்பார்த்துக்கொண்டு கலக்கமுற்றுவருகவே
காற்றுதான்யடிக்கவேகாணுமல் கிணற்றில்விழுந்தேனே

வசனம்.

இந்தப்பிரகாரமாக பாலகன் சொல்லவே இந்த வேந்தர் சந்தோஷமடைந்து எனது புதல்வியை உனக்கு கலியாணம் செய்து வைக்கின்றேன் கலியாணஞ் செய்துக்கொண்டுப் போவீரென்று

சொல்ல அதற்குப் பாலகன் கேட்டு அய்யா நீர் சொல்வது சரி தான் எனது தாயார் சிறையிலிருக்க யான் இங்கு கலியாணம் செய்வது தகுதியாகுமா இது நீதிக்கு தர்மமா உத்தமற்கு அழ காகுமா யான் நாளைவரும்போது கலியாணஞ்செய்துக்கொள்கின் றேன் நான்வந்து வெகுநாளாச்சுது போகவேண்டும் உத்திரவு தாரு மையா வென்றுகேட்க அதற்கு வேந்தர்கள் சந்தோஷமடைந்து அப்பா பாலவர்த்தி வேந்தனே நீ வந்து வொருமாதமாச்சுது இது வரைக்கும் யாங்கள் இன்னாட்டில் கட்டிய வேணுகோபால் சுவாமி சன்னதியை நீர்பார்க்காமல் போவதுநலமல்ல இந்தவேளை இருந்து நாம் அனைவரும் கோவிலுக்குப்போய் வருவதற்குள்ளாக சமையல் ஆகிவிடும் வந்தவுடன் புசித்துவிட்டு உமதிஷ்டப்படி போய்வருவீ ரென்றுச்சொல்ல அதற்கு சம்மதமடைந்து வேந்தரும் பாலகனும் சுவாமிக் கோவிலுக்கு வந்துக்கொண்டிருந்தார்கள்.

பாலவர்த்தி வேந்தனும் கெங்காவதிப் பட்டணத்து வேந்தரும் வேணுகோபால் சுவாமியைத் தரிசிப்பது.

தோடியருகிலங்கே திகழும்விப்ரவன்யிருந்தானே
விப்ரவனை தான்கண்டு வேகமாய்தான்பாலகனும்
வந்தனவந்தனமையாவே வாழ்விப்ரவரேயுந்தனுக்கு
இப்படிச்சொல்லவே யிசைந்துமேயப்பிராமணன்
பாலகனைத்தானகாண பலமதுதான்குண்ணியது

தலைதனைத்தான்தளரவிட்டு தானுமேகுந்தினானே
அப்போதந்தவேந்தர்கள் யன்புடனேபாலகனை
கண்ணாலேதான்பார்த்து கடுகவேகேழ்க்கலானார்
இந்தநிற்பாக்கியனுக்கு யேன்வந்தனஞ்செய்திரப்பா
பாதகஞ்செய்தவன்போல் பார்க்கயிப்போதோணுதே
இந்தமொழிகேட்டான் யிசைந்துமேஅப்பாலகன்தான்
அய்யாவேநீர்கேளுங்கள் அன்புடனென்வார்த்தை
இவன்குலமேதென்று இன்பமாய்தானறிந்தீரா
குலத்திலிவன்வேதியன்காண் குருபீடமானவர்கள்
இத்தனையுங்கேட்டாரே இப்போதுவேந்தர்களும்
ஆனால்நீதான்பாலகனே அன்புடனந்தகல்விப்ரவனை
எப்படிநீரறிந்தீரய்யா யெந்தனுக்குசொல்லுமய்யா

வசனம்.

இப்படியாக வேந்தர்கேட்க பாலவர்த்திவேந்தன் ஐயா இவன் செய்தக் காரியத்தை நாம் சொல்வோமாகில் இந்தப் பிராமணனை அநியாயமாய்க் கொன்று விடுவார்கள் அபகாரம் செய்தவனுக்கு உபகாரமே செய்தால் நலமென்றுச்சொல்லிச் இருப்பதுபோல் இவனைக்காட்டலாகாதென்று தன்மனதில்தானே திடப்படுத்திக் கொண்டு ஓ வேந்தரே இந்த விப்ரவனிருப்பது எங்களுடைய பட்டணமே இவர் யெனக்கு பால்ய சிநேகிதரென்றுச்சொல்ல அதற்கவ்வேந்தர் கேட்டு ஆனால் இப்பட்டிணத்திற்கு ஏன் வந்தானென்று கேட்க அய்யா நான் நாகள்ளபூடி பட்டிணத்திற்கு பிரயாணமாகு முந்தி இவரையனுப்பி டக்கிரியெம்மாத்திரம் சிப்பந்தியோடு இருக்கிறான் என்று அறிந்துவாவென்று யனுப்பினேன், னென்றுச்சொல்ல அதற்குயவ்வேந்தர் இவரிப்படி காயலாவாகயிருக்க எப்படி யனுப்பினீரென்றுகேட்க அய்யா இவரை யனுப்பும்போது நன்றாயிருந்தார் ஆனால் மனிதருக்கு க்ஷணத்தில் வருவது யாருக்குத்தெரியும இப்போது தான் இவருக்கிப்படி வியாதியுண்டாயிற்றென்றுச்சொல்ல நல்லதென்று சந்தோஷமடைந்து எல்லோரும கோவிலுக்குச் சென்று சுவாமியைத் தியானஞ்செய்து வரும்போது அந்த விப்ரவனைப் பாலகன் தன்னுடன் அழைத்துக்கொண்டு இருப்பிடம் வருக அத்தினத்தில் பிரயாணம் நிறுத்திவிட்டு பதினான்குதினம் அங்கிருந்து அவனுக்குத்தகுந்த அவுஷதங்களைகொடுத்து தேகத்தை திடப்படுத்தி பலம்வந்தபிறகு பாலகன் ஓர்தினத்தில் கெங்காவ

திப்பட்டணம் வேந்தரைப் பார்த்து ஐயா இந்த விப்ரவன் வெகு கஷ்டப்பட்டான் இவன்கோரியப்படி செலவுக்குகொடுத்து காப்பாற்றுவீர்கள் செலவாகும் மொத்தத்தை யான் வரும்போது தருகிறேன் என்றுச்சொல்லி அந்தவிப்ரவனை அவரிடம் வொப்பித்து கட்டு சாதமும் கட்டிக்கொண்டு பிரயாணப்படவே அவ்வேந்தர் இப்பாலகனுக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்து அனுப்பினார்கள் அப்போது பாலகன்.

வெள்ளிமுளைத்ததும்பாலகன் வேகமாயெழுந்தானே
பொழுதும்தான் தெரியாமல் நடந்தானே அப்பாலகனும்
இளிபட்டணம்தானுமே கிருபையுடன்வருகின்றான்
அந்தகல்லபட்டணமும் இருக்குதாம்யிரண்டுகாதம்
அந்தகானகத்திலிப்போ அமர்ந்ததேபொழுதுதானும்
இனியிந்தகானகத்தில் இன்பமாய்நடக்கலாகாது
சாதமுங்கிடையாது ஜலமருந்தகுளமும்காணோம்
இந்தகல்லகானகத்தில் இருக்கலாமென்றுச்சொல்லி
எண்ணமுமிட்டுதானுமவன் இருந்தானே யப்போது

வசனம்.

இந்தகானகத்தில் இருப்பதற்கு சத்திரம்காணோம் ஏது செய்வதுஎன்று நாலு திசைகளும் பார்க்குஞ்சமயத்தில் அங்கு பாழடைந்த கோவிலகப்பட இதுவே நமக்கு கோட்டை யெனறு எண்ணமிட்டு அந்தக் கோவிலிற்குள் சென்று பசியால் நித்திரைப் பிடிக்காமல் உட்கார்ந்துக் கொண்டிருந்தான்.

இப்படியிருக்க நடுஜாமத்தில் நாலுஜீவஜந்துக்கள் வந்து ஒரு பக்கம் பெரியபுலியும் ஒருபக்கம் சிங்கமும் ஒருபக்கம் காட்டு நரியும் ஒருபக்கம் நல்லசர்பமும் இந்த நாலும் கோயிலுக்கு வெளியில் உட்கார்ந்து ஆலோசனைச் செய்துக்கொண்டிருந்தது அச்சமயத்தில் நரியானது ஓ புலிமாமா இந்தவேளை உமக்குஎன்னபோஜனம் கிடைத்தது என்றுகேட்க அதற்குப் புலியானது ஓ நரியே நான் கானகஞ்சென்று வேண்டிய எருதுக்களைக் கொன்றுதின்றேன் என்றுச் சொல்ல அதன்பிறகு சிங்கத்தைப்பார்த்து ஓ சிங்கமாமா உனக்கு யேது ஆகாரம் கிட்டியது என்றுகேழ்க அதற்கு சிங்கம் அப்பா நரியே நான் கானகம் போகும்போது எதிரில் பெரிய யானைவருக அதை யடித்து மத்தகத்தை பிளந்து மூளையை

நன்ருய்த்தின்று வந்தேன் என்றுச்சொல்ல அதன் பிறகு ஓ சர்பமே உனக்கு ஏது இரைக் கிடைத்தது யென்றுகேட்க அப்பா நரியே நான்பெரிய மீன்களைத்தின்றுவந்தேன் என்றுச்சொல்ல இதற்குள்ளாக புலியானது நரியைப் பார்த்து ஓ நரியே உனக்கு ஏது இரைக்கிடைத்தது சொல்லென்று கேட்க அப்போது நரியானது புலியைப்பார்த்து ஓ புலிவேந்தா யான் இன்ஞட்டிலிருக்கும் ஏரியில்சென்று நண்டுகளைப்பிடித்து செவ்வையாய் தின்றுவந்தேன் இதில்லாமல் இன்னங்கேளும்,

பெரும்புலியேநீகேளும் பெருமையுடனென்வார்த்தை
நாளையதினந்தானெனக்கு நல்லபோஜனமிருக்குதப்பா
இந்தமொழிதன்னைத்தான் இன்பமாய்அப்புலிகேட்டு
எங்கேதான்உனக்குபலகாரம் மிருக்கின்றதுவுந்தனுககு
எந்தனுக்குச்சொல்லுமே யிசைந்துமேதாஞ்யிப்போது
இப்படியாய்தான்கேழ்க்க இன்பமுடனந்தநரிதானும்
ஆனல்நீர்கேளுமிப்போ அன்புடனேயென்வார்த்தை
கிளிப்பட்டணத்தில்தான் கிருபையுடனிருக்கப்பட்ட
வேந்தன்புதல்விக்குயிப்போ வேகமாய்முதுகுதன்னில்
இராஜப்பிளவுகண்டுமேதான் ஆறுமாதமாச்சுதுதங்கே
அனேகவைத்தியர்களும் அன்பாகவந்துபார்த்தார்கள்
ஆருலுமங்குமுடியவில்லை யந்தபிளவுயாற்றுவதற்கு
நான்தினந்தினம்யத்தேசம் நன்ருகச்சென்றுமேதான்
இரண்டுகூச்சல்போட்டுமே இன்பமாய்வருகின்றேன்
நாளையதினத்திற்குள்ளவள் நல்மாதுஅங்குசாகுகின்றாள்
அந்தச்சமயத்தில்தான் அன்புடனேநான்தின்னுவேன்

வசனம்.

இப்படியாக நரிசொல்லவே இதின் வாயில் மண்ணைப்போடவேணுமென்று மனம்விட்டு ஓ நரியே அந்தஒளஷதம் இந்நாட்டில் கிடையாதா என்றுகேட்க அப்போது நரியானது ஓ புலியே ஒளஷதமென்னமோ இருக்கிறது அதுமனிதருக்கு அகப்படாதுஎன்றுச்சொல்ல அதற்குபுலியானது கேட்டு ஓநரியே அதுயெங்கிருக்கிறது சொல்லென்றுகேட்க நரியானது ஓ புலியே நாமிருக்கப்பட்ட ஆலயத்தின்மேல் வெள்ளையாக ஏழுயிலையோடு கருத்தபுஷ்பம் பூர்த்த ஓர் செடியிருக்கிறது அந்தச்செடியில் ஏழுஇலைகள் அறுத்துக்கொ

ண்டு அந்தச்செடியின் கீழ் சஞ்சீவி கொம்பிருக்கிறது அந்தக்கொம்பை எடுத்துக்கொண்டு சுத்த ஜலத்தில் அந்தக்கட்டியைக்கழுவி ஏழு இலைகளுக்கு எண்ணைதீட்டி அனல்காட்டி இலைமீது இலையாக ஏழு இலைகளையும் போட்டு இந்தக்கொம்பால் ஓர்அடிஅடித்து கட்டுக்கட்டிய மூன்றாந்தினத்தில் அவிழ்த்துப்பார்க்க கட்டியிருந்தவிடம் இன்னதென்று தெரியாது என்றுச்சொல்லியது.

இத்தனைமொழிகளையும்பாலன் இன்பமாககேட்டிருந்தான்
அப்போதுஅங்கேசூரியனும் அன்புடனேஉதயமானான்
அங்கிருந்தஜீவங்கள் அப்போதுதனிதனியாய்போச்சுதே
இவையெல்லாம்தான்கேட்டு இன்பமாய்வெளியில்வந்து
கோவில்மீதிலப்போதே கொப்பனவேதான்யேறினான்
அந்தயிலைகள்தன்னை அன்புடன்தானறுத்துக்கொண்டு
சஞ்சீவிகொம்பையங்கே தானுமேயெடுத்துக்கொண்டு
மடிதன்னில்வைத்துமே மர்மமாய்செய்துக்கொண்டான்
அங்கிருந்துதானுமே அசைந்துமெள்ளநடக்கலானான்
பொழுதுமேபோவதற்குள் புகழுடனேஅங்குவந்தான்
கிளிப்பட்டணம்வந்துமப்போ கிருபையுடன்சேர்ந்தானே
அந்தநல்லவீதிதன்னில் அமைத்திருந்தசத்திரத்தில்
சத்திரமும்தான்வந்து சார்மணையிலங்குகுந்தினானே
அந்தநல்லசத்திரத்தில் அமர்ந்திருந்தகிழவியைத்தான்
கிழவியைத்தான்பார்த்து கிருபையுடன்சொல்லுகிறான்
கேட்டையாபாட்டியம்மா கிருபையுடனென்வார்த்தை
காசுகள்நான்தருகின்றேன் கனமுடனன்னமிடுவாயம்மா
அந்தமொழிதான்கேட்டு அங்கிருந்தநல்லகிழவிதானும்
இந்தசமயத்தில்தானப்பா இங்குஅன்னமதுகிடைக்காது
இப்படிச்சொல்லவேதான் இதுகேட்டான்பாலகனும்
ஏண்டியம்மாகிடைக்காது யெந்தனுக்குசொல்லுமே
பணத்தைவிடஉந்தனுக்கு பாரினில்இனிகாரியமேதம்மா
சத்திரக்கிழவிதானுஞ்சே சாந்தமாய்சாதமிடும்தாயாச்சே

பாலவர்த்திவேந்தன் சத்திரக்கிழவியை
தேசவிந்தை விசாரிப்பது.

வசனம்.

இப்படிச்சொல்லவே இதுகேட்டுஅக்கிழவி அப்பா இராஜகுமாரனே இப்படிநான் பிழைப்பது நிட்சயமே ஆனல் இப்பட்டணம் பரிபாலிக்கும் வேந்தன் புதல்விக்கு இராஜபிளவு கண்டு ஆறுமாதமாய் ஆராதபடிக்கி தொந்தரவுபட்டு இராத்திரி இரண்டு ஜாமமாய் நிலைக்கண்பட்டு மொழித்தடுமாரி ஆகாரமில்லாமல் இருக்க இன்று யம்மாதை கைசோர்ந்து விட்டோமென்று தலைக்கடையில் போட்டார்கள் ஆகையால் அதிக துக்கத்துடன் இருக்கின்றோம் இதுவல்லாமல் அந்த சமஸ்தானத்தில் பிழைக்கப்பட்டவள் நான் அங்கு போகிறேன் என்னல் சமையல் செய்யமுடியாது இனி எங்காகிலும் கொடுத்து சாப்பிடுவீரப்பா என்றுச்சொல்ல இதைக்கேட்டபாலகன் ஓ பாட்டி இராத்திரிமுதல் எனக்குசாதம் கிடையாது அந்த இராஜ கட்டியை நான் தீர்க்கின்றேன் யெனக்கு இந்தவேளை சாதம் போடுவாயென்று கேழ்க்க அதற்கு அந்தக்கிழவி அப்பா உனது கையால் அந்தக்கட்டியை ஆற்றுவாயாயென்றுகேட்க அம்மா யான் அநேகஜனங்களுக்குசவுக்கியம் செய்திருக்கின்றேன் என்றுச்சொல்ல அந்தக்கிழவி தான் இராத்திரிப்பொழுதுக்கு வைத்துக்கொண்டிருந்த சாதத்தை அப்பாலனுக்குப்போடவே அச்சாதம் சாப்பிட்டுவிட்டு ஓ பாட்டி நீ போகும்போது என்னையும்அழைத்து செல்லுவாய்என்று சொல்ல அதுபோலஅக்கிழவி பாலவர்த்தி வேந்தனையும் அழைத்து கொண்டு மேடைக்குச்செல்லுஞ்சமயத்தில் அந்த இராஜன் புதல்வியை மேடைமீதிருந்து தலைக்கடைக்கு எடுத்து வருஞ்சமயத்தில் அப்புதல்வி தந்தையும் அநேக வைத்தியரும் வேந்தரும் பந்துக்களும் முகவாட்ட மிட்டு சோகமடைந்து தலைக் குனிந்துக் கொண்டு வருக அச்சமயத்தில்கிழவி அந்தவேந்தனைப்பார்த்து ஐயா, இதோ என்னுடன் வந்திருக்கும் மஹானுபாவர் அந்தக் கட்டியை சுவஸ்தம் செய்வாரென்று சொல்லுகிறார் என்றுச்சொல்ல இதைக் கேட்ட வேந்தன் ஏ கிழவி இதுவெல்லாம்.வீண்வார்த்தை அநேக வைத்தியரும் பார்த்து தீரவில்லை, இவரால் ஏதுமுடியும் இதில்லாமல் இப்பெண்ணுக்கு ஆயுசு இவ்வளவுதான் ஆகையால் இந்தக் கட்டிப்பிறந்தது என்றுச்சொல்ல இதற்குள்ளாக அங்கிருந்த பெரியார் இதைக்கேட்டு இராஜோத்தமா நீர் இப்படிச்சொல்வது சரியல்ல எவர் கைபாகமெப்படியிருக்குமோ தெரியாது அப்படியிருக்க அப் புதல்வனையழைத்து அக்கட்டியைக் காட்டும்படி திட்டஞ்செய்ய

அதுபோல அவ்வேந்தன் அப்பாலகனையழைத்து அப்பா இந்தக் கட்டியைப்பார்த்துச் சொல்லென்றார் அதுபோல் பாலகன் அந்தக் கட்டியைப்பார்த்து ஐயா இதை யான் லகுவாக்குகிறேன் என்றுச் சொல்லி நல்ல ஜலத்தை கொண்டுவரும்படி திட்டஞ்செய்ய அது கொண்டு வந்தவுடன் அந்த ஜலத்தால் அக்கட்டியைக் கழுவி சுத் தப்படுத்தி தன் இடுப்பிலிருக்கும் இலைகளை எடுத்து எண்ணைத் தடவி அனல்காட்டி ஒன்றுமேலொன்றாய் ஏழு இலைகளையும் போட்டுகந்தைத்துணியால் கட்டி தன் கையிலிருக்கும் சஞ்சீவிக் கொம்பால் அந்தக்கட்டியை ஓடி அடித்துவிட்டான்.

பாலவர்த்தி வேந்தன் கிளிப்பட்டணத்து இராஜப்புதல்விக்கு வந்த இராஜகட்டியை ஆற்றுதல்

சற்றுகோத்திற்குள்ளாக சுவாமியின்கிருபையாலே
அந்தநல்லமாதுக்குமேதான் அறிவுதான்பிறந்ததப்போ
கண்ணைத்திறந்துமப்போ கடுகவேதான்பார்த்தாளே
அங்கிருந்தசிலபேர்கள் அப்போதுபேசிக்கொண்டார்
மயக்கமும்போச்சுதப்பா மாணமும்இனியில்லையப்பா
இன்னும்சிலபேர்கள்தான் இன்பமதாய்சொல்லுகின்றார்
இனிபயந்தானில்லையப்பா இந்தஇளவாசிமாதுக்குமே
விலகியோபோச்சுதப்பா விநாயகர்தன்கிருபையாலே
இப்படிபேசிக்கொண்டு இருந்தாரேபலஜனங்களும்
அந்தநல்லசமயத்தில் அறிபாலவர்த்திவேந்தனுமே
சிவனைநினைந்துமப்போ சிவயோகஞ்செய்திருந்தான்
அப்போதுபாலகன்தான் அன்னமும்உண்ணவில்லை
ஐயோசிவமேயென்றுமே அன்னிதமாகவேதான்
மிருகங்கள்சொன்னதை மிகவுண்மையாய்நான்நம்பியே
இந்தநல்வைத்தியத்தை யின்பமதாய்செய்தேனே
அபகீர்த்திவாராமல்என்னை ஆதரிக்கவேணுமையா
நீயேகதியென்றுயிப்போ நின்றேனேவையகத்தில்
காக்கவேவாருமையாஎன்னை கைலாசமூர்த்தியிப்போ
இப்படிச்சொல்லிக்கொண்டு இருந்தானேபாலகனும்
இப்படியேமூன்றுதினம் இசைந்துமேதான்போச்சுது
அப்போதுபாலகன்தான் அனைவரையும்வரச்சொல்லி
அருகினில்வைத்துக்கொண்டு அப்போதுபாலகனும்

சொல்லத்தொடங்கினன் சிறப்புடனே அச்சமயந்தான்
கேட்டீரோவேந்தர்களே கிருபையுடனென்வார்த்தை
இந்தகல்சட்டியைத்தான் இப்போதவிழ்க்கின்றேன்
கட்டியிருந்தவிடம்தன்னை காட்டுமையாளந்தனுக்கு
இப்படித்தான்சொல்லியே இன்பமதாயக்கட்டியை
வேந்தர்கள்தானுமப்போ வேகமாய்ப்பார்த்தாரே
கட்டியிருந்தவிடமங்கேதான் காணவேதோற்றவில்லை
அப்போதுயவ்வேந்தன் யறிவுள்ளபாலன்தன்னை
வாரியெடுத்துக்கொண்டு வண்மையாய்மடியில்வைத்து
அழகுகல்லசுக்கிரமே ஆஸ்தானஎங்கள்ரத்தினமே
பிரம்மதேவனுன்னையிப்போ பிரியமாயனுப்பினனோ
ஆதிசிவனுன்னைத்தான் அன்பாயிங்கனுப்பினனோ
சுந்திரப்பாலகனே அப்பா சிறப்புடனிந்தவித்தை
இந்தவித்தைதன்னையப்பா இந்தவயதுதன்னில்நீயும்
எங்குநீகற்றுவந்தாயடா எங்கள்குலரத்தினமே
இப்படிசொல்லியப்போ இன்பமாய்வேந்தர்களும்
இந்தகல்லச்சேதிதன்னை இந்ததேசமெங்குதான்
இருக்குமந்தபிரஜைகளும் இன்பமதாயறிந்தாரே
எல்லோரும்தான்வந்துமே எதிர்நின்றுபார்த்தாரே
இப்படிபார்க்கவேதான் இசைந்துமேயவ்வேந்தனும்
இதுநீதியல்லவென்று இன்பமதாய்அப்பாலகனை
பல்லக்குதன்னிலேற்றி பக்குவமாய்காலுவீதிகளும்
ஊர்கோலம்செய்துவைத்தார் உடனிருந்துபாலகனை
காலுவீதியுஞ்சுற்றியங்கே கலமாகபாலன்வந்தபோது
வேந்தனும்பாலகனும் வேகமாய்ஸ்நானஞ்செய்து
போஜனம்தானரிந்து புகழ்ந்துமேகொலுவில்வந்து
வைத்தியர்களுக்கெல்லாம் வெகுமதிகள்தான்கொடுத்து
எல்லோரும்போனபின்பு இசைந்துமேஅவ்வேந்தனும்
பாலகனைபார்த்துமப்போ பக்குவமாய்சொல்லலானர்
எந்தன்மகளையிப்போதான் எழுப்பியேநீதந்தீரையா

கிளிப்பட்டணத்து வேந்தன் தன்மகளை பாலவர்த்தி வேந்தனை கலியாணஞ்செய்துக் கொள்ளும்படி சொல்வது.

வசனம்.

ஓ இராஜப்புத்திரனே நீ என் புதல்வியை பிழைக்கச் செய்த படியால் என்புதல்வியை நீரே கலியாணம் செய்துக்கொள்ளும்படி விரும்புகிறேன்.

அந்தமொழிகேட்டுமேதான் அப்போதுநல்பாலகனும்
வந்துவெகுநாளாச்சுதையா வகையுடன்போகவேண்டும்
இப்படித்தான்சொல்லவே இதுகேட்டார்வேந்தர்களும்
கலியாணஞ்செய்துக்கொண்டு கடுகவேநீர்போவீரையா
இந்தமொழிதன்னையப்போ இன்பமுடன்பாலகனும்

வசனம்.

ஐயா இராஜோத்தமாஎனது தந்தையானகார்யவர்த்திவேந்தனும் எனது பெரியதந்தைகள் ஆறுபேரும் பானுகண்டிபட்டணத்தை பரிபாலித்தவர்கள் என்து தாயாராகிய பாலநாகம்மாளை நாகள்ள பூடியில் இருக்கப்பட்ட மகா சண்டாளனுன மாயாபக்கீரியானவன் சிறையெடுத்துக் கொண்டுப்போனனும் அவன்மீது என்தந்தைகள் யுத்தச்சன்னுத்தாய்போக அவரையதஞ்செய்து விட்டானும் என் தாயார் சிறையிலிருக்கின்றுள் நானிப்போது கலியாணஞ்செய்வது நீதியல்ல மறுபடியும் வரும்போது கலியாணம் செய்துக்கொள்ளு கிறேன் ஆகையால் எனக்கு செலவுகொடுக்க வேண்டுமென்று கேட்க அதற்கு அவ்வேந்தன் பாலகனைப்பார்த்து ஓ இராஜபுதல் வனே இன்று அஷ்டமி, நாளையதினம் நவமி அதன் மறுநாள் தசமி ஆகையால் அதைத்தள்ளிப்போகலாமென்று அவர் பிரயாணத்தை நிறுத்தினர்கள். இப்படியிருக்க கெங்காவதிப்பட்டணத்தில் விட்டு வந்த விப்ரவன் பதினைந்து தினத்திற்கெல்லாம் திரேகத்திற்கு அதிக பலம்வந்து அப்போது அந்தப் பிராமணன் வேந்தனைப்பார்த்து ஐயா நீர் கொடுக்கும் படியான உழக்கு அரிசியைப்பார்ப்பது எனக்குநிஹாசாரமா இதோயான் சென்று அந்தபாலவர்த்தி வேந் தனை கலந்துகொண்டு போகிறேன் என்று அவருடன்சொல்லி பிறகு தன்மனதில் எவ்விதத்திலாவது அவனைக்கொன்று அவன்தரித்திருக கும்படியான பூஷணங்களை அபகரித்துக்கொள்ள எண்ணமிட்டு உடனே உதயமானவுடன் சொம்புஒன்றை எடுத்துக்கொண்டு கத்தி யொன்றை சம்பாதித்துக்கொண்டு பொழுது போவதற்குள்ளாக கிளிப்பட்டணம் வந்துசேர்ந்தான் அப்பட்டணம் வந்தவுடனே சந் திரக்கிழவியை கண்டு நீர்மோர் தாகம் பெற்றுக்கொண்டு அம்மா

பாட்டி இந்தப் பட்டணத்தில் என்னவர்த்தமானம் என்று கேட்க அதற்கு அந்தக்கிழவி அப்பா எங்கள் வேந்தன் புதல்விக்கு முது கில் இராஜக்கட்டிக்கண்டு துயரப்பட அதை பானுகண்டிப் பட்ட ணத்து வேந்தர்புதல்வன் அக்கட்டியை ஆற்றினான் அவன்பெய ரோ பாலவர்த்திவேந்தர் என்பார் அவனுக்கு எங்கள் சூர்யவர்த்தி வேந்தன் தன் புதல்வியைக்கொடுத்து கலியாணம் செய்கிறேனென் றார் அதை வெறுத்து தன் தாயாரை அழைத்துவருவதற்காக உதயமானவுடன் புசித்துவிட்டு போகப்போகிறான் என்று அக் கிழவி சொல்ல அதைக்கேட்டுப் பிராமணன் அம்மா உதயத்திற்கு போகுறாரா என்று கேட்க அக்கிழவி அப்பா அவருக்கு பதினுபிர வாகன் வெகுமதிகள் கொடுத்தார்கள் என்றுச்சொல்ல அதற்கு அந்தச்சண்டாளப் பிராமணன்,

பிராமணன் கிளிப்பட்டணம் சத்திரம் வந்து சாப்பாடு கேழ்ப்பது.

என்னதான்சந்தோஷம் எனக்குமிப்போவந்ததம்மா
எனக்குதயமாகாமுந்தி யெழுந்துநீசாதமிடுவாயா
சாதம்யான்புசித்துமே சாந்தமாயவருடன்தான்போக
அவருடன்சென்றுமே யன்பாய்நான்போகவேண்டும்
நல்லதுயென்றுச்சொல்லி நயவார்த்தைசொன்னாள்க்கிழவி
அப்போதுவேதியன்தான் அயர்ந்துநித்திரை செய்தானே
அங்குஉதயமானவுடனே யெழுந்தானேபிராமணனும்
எழுந்திரடிபாட்டியம்மாநீதான் என்னேரமாச்சுதிப்போ
உதயமும்தானுச்சுதம்மா உகந்துசாதம்சமைப்பாயே
இந்தமொழித்தான்கேட்டாள் இன்பமாய்தான்அக்கிழவி
அந்தமொழிகேட்டுமப்போ அரிசியில்லையப்பாயிப்போது
அரிசியைக்கொண்டுவந்தால் அன்புடன்சாதம்செய்வேனே
கடைவீதிசென்றுமேநீதான் கருணையாய்வாங்கிவந்தால்
சாதமும்சமைப்பேனப்பா சாந்தமுடனேவட்டிப்பேன்
இத்தனையுந்தான்கேட்டான் இன்பமுடன்பிராமணனும்

வசனம்.

உடனே அப்பிராமணன் கிழக்கு வீதியில் இருக்கப்பட்ட கோமுட்டி வீட்டிற்கு வந்து ஆரையாகோமுட்டி கதவைதிறப்பீர் என்றுக்கேட்டான் அதற்குகோமுட்டி நீஆரையாஎன்று கேட்டான்

இம்மொழியை கேட்டபிராமணன் ஐயா ஒருபடி அரிசிவேண்டியது என்றுச்சொல்ல கோமுட்டி கேட்டு இதுமகா லாபமடையும்படி யான பேரம்வந்தது ஆனால் இங்கு படியும் அரைப்படியும் உழக்கும் இந்தயிருட்டினில் அகப்படாது ஆகையால் உதயமான பிறகு வந்தால் கொடுக்குறேன் என்றுச்சொல்ல அம்மொழியைப் பிராமணன்கேட்டு உதயமாகிறவரைக்கும் அங்கு உட்கார்ந்திருந்து ஒய் செட்டியாரே அரிசிகொடுப்பாய் யான்போகிறேன் என்று கேட்டான் அதற்கு அந்தச்செட்டி போணி செய்யுமென்று கேட்க விப்ரவன்கேட்டு இப்போது என்னிடம் காசுகிடையாது இரண்டு மணி நேரமானபிறகு தருகிறேன் அதுவரைக்கும் இந்த சொம்பை வைத்துக்கொண்டு போணிசெய்யும் என்றுசொல்லிக்கொண்டிருக்க உதயமாகி இரண்டுமணி நேரமாச்சுது அச்சமயத்தில் பாலவர்த்தி வேந்தன் போஜனம் செய்துக்கொண்டு தாம்பூலம் தரித்துக் கொண்டு நாகள்ளபூடிக்கு பிரயாணமானன்.



பாலவர்த்தி வேந்தன் புறப்பட்டு நாகள்ள பூடிக்கு போகும்சமயத்தில் வேதியனைக்கண்டு விசாரிப்பது.

பிரயாணமென்றுசொல்லியே புரப்பட்டான்பாலகனும்
வேந்தருமப்போதங்கே வெளியில்வந்துபாலகனை
ஆசீர்வாதம்செய்துமே அன்புடனனுப்பினர்கள்
இராஜவீதியாகவேபாலன் இன்பமாய்வருகின்றான்
அந்தசமயத்திலங்கே அறிவுகெட்டபிராமணனும்

அரிசியுமேவாங்காமலங்கே அந்தச்சந்தவந்தானே
அந்தநல்லபிராமணனை அவன்பார்த்தானேபாலகனும்
வந்தனமையாவிப்ரவரே வாருமையாபிராமணரே
இங்குதான்இப்போது இன்பமாய்நீஏன்வந்தீரையா
அந்தவிடத்தில்உம்மைத்தான் அன்பாகவிட்டுவந்தேனே
அந்தவிடம்தான்விட்டு அருளுடனிங்குவரகாரியமேன்

வசனம்.

ஐயா இராஜோத்தமா நான் இப்போதுதான் வந்தேன் இந்த சத்திரத்தின் கிழவியிடம் சாதம் செய்யும்படி திட்டஞ்செய்திருக்கிறேன் இதோ யான் புசித்து வருகிறேன் என்றுச்சொல்ல அந்த மொழிக்கேட்டு பாலவர்த்தி வேந்தன் இதுயெல்லாஞ்சரிதான நீ வந்தகாரியம் ஏதென்று கேட்க அப்போது விப்ரவன் சொல்லத் தொடங்கினன், ஐயா இந்நாட்டு சூர்யவர்த்தி வேந்தன் புதல்விக்கு இருந்த இராஜக்கட்டி உன்னால் லகுவாச்சுதென்று சங்கதி புலி வேந்தன் கேட்டார் அவர்யாமன் குமாரத்திக்கு இதுபோல் இருக்கிறதென்று உம்முடன் சொல்லும்படி சேகுலவரை அனுப்பினர் மறுபடியும் அவர்சொன்னது அவ்வேந்தன் தாயாரையழைத்து வருகப்போகுரர் நாங்கள் வரும்படிச்சொன்னால் வருவாரா ஓ பிராமணஉனக்குமவருக்கும் சிநேகிதமல்லவா நீ சென்றால்வருவார் என்று என்னை அனுப்பினர்கள் என்றுச்சொல்ல இதைக்கேட்டபாலகன் இவன் யுக்தியை தெரிந்து நானெங்கு வருகிறது போகிறபிரயாணம் திரும்பலாமா அந்த கட்டிக்கு மருந்துச்சொல்லுகிறேன் நீ எடுத்துக்கொண்டுப்போகிருயா என்றுச்சொல்ல நல்லது நீர் சொல்லுமென்று கேட்டான் அப்போது பாலகன் இதைக்கேட்டு சந்தோஷமடைந்து ஐயா வேதியரே இந்தக் கிளிப்பட்டணத்திற்கு வடமூலையில் இருக்குங்கானகத்தில் பாழுங்கோவில் ஒன்று இருக்கிறது நீ போஜனமருந்தி பொழுதுப்போனப்பிறகு அங்குசென்று அந்தக்கோவிலுக்குள் புகுந்து கதவை திறந்து வைத்துக்கொண்டிருந்தால் நடுஜாமத்திற்கு அந்தக்கோவில் நாலுபக்கமும் நாலு ஜீவராசிகள் வந்து குந்திக்கொண்டு ஆலோசனை செய்துக்கொண்டிருக்கும் அந்தச்சமயத்தில் ஓ புலிவேந்தனே இராஜகட்டிக்கு மருந்து ஏதென்றுக்கேளும் அந்தப் புலி அம்மருந்தைச் சொல்லும் என்றுச்சொல்லவே அதைகேட்டுபிராமணன் போனன்

பாலகன்தானப்போது பகர்ந்துமேநடந்தானே
இத்தனையும்தான்கேட்டு இன்பமாய்பிராமணனும்
பொழுதுதான்போனதும் பார்த்தானேயப்போது
கோவிலுக்குவந்துமே குந்தினனவன்விப்ரவனும்
கதவைத்திறக்கயப்போ கடும்பயம்கொண்டானே
கதவு இரண்டையும்தான் கனத்தாளுமிட்டானப்போ
அந்தநல்லசமயத்தில் அங்குவந்தது நாலு ஜீவன்களும்

வசனம்.

இப்படியாக வந்த மிருகங்கள் அதுகள்புசித்த ஆகாரத்தை நினைந்து பேசிக்கொண்டிருந்தது.

புலிவேந்தாநீயுமிப்போ புகழ்பூமிதன்னிலிப்போது
என்னதான்ஆகாரம் எடுத்துமேதின்றுவந்தாயோ
அப்போதுஅப்புலியும் அன்பாகஅங்கேசொல்லியது
காட்டிலெனக்கின்றுதான் காட்டெருதுகிட்டியது
அந்தச்சமயத்திலப்போ அந்தகுள்ளநரிதானெழுந்து
இந்தவிடத்திலிப்போதான் இங்கேதுமனிதர்நாற்றம்
அந்தமொழித்தான்கேட்டு அப்போதுவேங்கையுமே
பயித்தியம்பிடித்தவனே பாழ்காட்டில்மனிதரேது

வசனம்

இப்படிச்சொல்லவே நரியானது இதோயான் அந்தமனிதனைப் பிடித்துத்தருகிறேன் என்றுதன்வாலை அந்தக்கதவு சந்தில் விட்டுப் பார்க்க இவன் இருப்பதை அறிந்து கதவைத்திறந்து எல்லா ஜீவனும் உட்புகுந்து அவனைக்கொன்றுத்தின்றுவிட்டது.

அப்போதான்பாலகனும் அன்பாகத்தானடந்துமே
நயனவாதிப்பட்டணமும் நலமாகவந்தானப்போ
நாகள்ளபூடிதன்னிலே நடுவெல்லைதான்வந்தானே
அப்போதுமருதிதான் அகப்பட்டதுபாலனுக்கு

வசனம்

பாலகன் இந்த மருதியைப்பார்த்து இந்தமருதிதன்னிலே தான் நமது தாயார் இருப்பது அந்தகோட்டையை சுற்றிலும்தான் நமது தந்தைமார் அதமாய்விட்டது என்றுச் சொல்லிக்கொண்டு வருக அந்த எல்லைமீது பக்கிரி பாசத்தியை காவல் வைத்திருக் கிறான் ஏனென்றால் யாராகிலும் பகையாளி கோட்டைமீது வந்தால் அவர்களை கொல்லும்படி திட்டஞ்செய்து வைத்தான் இப்படி

யிருக்க அந்தப்பாலகன் வருவதைக்கண்டு ஆ! ஆ! நாமெப்போதும் இப்படிக்கொத்த ரூபவந்தனைப் பார்த்தது கிடையாது நாம் இந்த கோரவேஷத்துடன் போனால் நம்மைக்கண்டு பயமடைந்து சாகுவான் அப்படிச்செத்தவனைத் தின்றால் ருசிகாமிருக்காது என்று மாறுவேஷம் போட்டுக்கொண்டுபோய் அவனை பிராணத்துடன் காகாவென்று கடித்து முழுங்கினால் என்மனம் சந்தோஷிக்குமென்று எண்ணமிட்டு அதிபால்ய ரூபந்தரித்து கில்கொண்டைபோட்டு இடது கையில் தாம்பூலம்பிடித்து புன்னகை நகைத்துக்கொண்டு அந்தபால்யன் எதிராக கலகலென்று நடந்து வந்தாள் அச்சமயம் பாலகன்பார்த்து நீயாரென்றுகேட்க ஐயா? நாங்கள் தம்பதியுத்தமாய் இந்த மார்க்கமாய் வருக இக்கானகத்தில் இராநின்ற செடியின் கீழ்பிரசவித்தேன் உங்கள் கடாக்ஷத்தால் ஆண் புதல்வன் ஜனிததான் அந்தபுதல்வனுக்கு எண்ணெயிடுக எங்களிடம் ஒத்தை காசு கிடையாதபடியால் ஓர் மகாப்பிரபு நேற்றியதினம் நாலுகாசுத் தந்தார் அது செலவழிந்துவிட்டது இந்தவேளைகுஎதும்கிடையாதப் படியால் விசனமடைந்திருக்க பகவான் உம்மைக்காட்டினார் ஆகையால் ஏதாகிலும் கேட்கலாமென்று வருகலானேன் என்றுச்சொல்ல இதைக்கேட்டபாலகனும்

காளி பாலவர்த்தி வேந்தனை மோகிப்பது

இந்தஎல்லைதனிலிருக்கும் இக்காளிநீயல்லவோதான்
இதற்குமுந்தியேநீதான் இவ்வேஷந்தானெடுத்தாய்
இப்போதுநீதானென்னை இன்பமாய்கொல்லவந்தாயடி
அப்போதுபாலகன்தான் அன்பாய்கத்தியைவுருவினான்
கத்தியைக்கண்டுமப்போ சத்தியும்தான்நடுங்கினாளே
அய்யாவேஅய்யாவே அன்புள்ள அழகுவேந்தனே
உன்னையான்தின்பதற்கு உகந்துமே தான் வந்தேனிங்கு
இப்போதுவுன்னைக்காண இடிவிழுந்ததென்மனதில்
இந்தசமயத்தில்தான் இச்சைக்கொண்டேனுன்மீது
இந்தமொழிக்கேட்டான் இன்பமாய்தான் பாலகனும்
சின்னம்சிறுப்பிள்ளைநான் சித்தம்வைத்தாய்யென்மீது
காயைத்தின்றாலிப்போது கனிருசிகொள்ளுமோதான்
உனக்கேண்டியிம்மோகம் உருதியாய்கொண்டாயடி
இப்படிச்சொல்லுவதுதான் இதுவுனக்குபுத்தியல்லவே
தூரமாயிப்போ எட்டிப்போடி துர்மதிகொண்டபேயே

இப்படிதான்சொல்லவே இதுகேட்டாள் அச்சக்தியும்
ஐயாவேயெந்தனையிப்போநீ யன்புடன்சேர்ந்திட்டால்
உன்தாயார்தான்கிடைக்க உகந்தமார்க்கம்காட்டுகிறேன்
பாதகியானுமிப்போதான் பக்குவந்தான் அரியாதவன்
மாதருடன் தாகடப்பது மங்கையேயானறியேன்டி
இப்படிக்கொத்தவனை நியுமே இச்சிக்கலாமோதான்
இத்தனையும் கேட்டாளே இன்பமாய் அச்சக்தியும்
ஆனால்நீர்கேளுமய்யா அன்புடனேயென்வார்த்தை
என்பலத்தைவுந்தனுக்கு இப்போதுயான்தருகின்றேன்
இப்படிச்சொல்லியப்போ இசைந்துபலம்கொடுத்தாளே
பாலகனோடுமப்போயிவள் பலக்கிரீடைதான்புரிந்தாள்
அந்தமோகத்தாலேதான் அவள்கைபிரம்பைகொடுக்கவே
அந்தநல்லசமயத்தில்தான் அறிவுபெற்றபாலகனும்
என்னடிபராசக்தியே என்தாயார்கிடைக்குமார்க்கம்
இப்பவேதான்சொல்லடி இன்பமாய்யெந்தனுக்கு
அய்யாவேவேந்தா இப்போ அன்புடனேநீர்கேளும்
காகள்ளபூடிகரைக்குமே நயந்துமேநீர்போவீர்கள்
அந்தக்கரைதன்னில்தான் அன்பாகயிருக்கப்பட்ட
வணிகக்கிழவியொருத்தி வாழ்கின்றாளங்குதானே
அந்தநல்லக்கிழவியும்தான் அன்புடனேபக்கிரிக்கு
புஷ்பங்கள்கட்டிதந்து புகழுடனேவசிக்கின்றாள்
அந்தநல்லபக்கிரியும்தான் அந்தவணிககிழவிக்கு
தம்பள்ளக்கிழவியென்று தானுமேபேருமிட்டான்
ஜாதியிலே அவள்வணிகச்சி ஜெகமெங்குமறிந்தவள்
அந்தக்கிழவிவீட்டைதான் அன்பாக நீ பார்த்து
அங்குமேநீதான்சென்றுமே அன்புடையவேந்தனே
தாகத்துக்குநீகேட்டால்தான் தயவுடனேவுந்தனையுந்
எந்தவூரெந்ததேசமென்று இனிமையாய்கேழ்ப்பாளே
மோகத்தைதீர்த்துவிட்டு முகந்துமேநீபோவீரையா
மேற்குசீமையென்றுதான் மேன்மையாநீசொல்லுமே
வீட்டின்பேர்தந்தைபெயர் வேகமாய்கேழ்ப்பாளே
அப்போதுநீதானய்யா அன்பாகத்தான்சொல்லுமே
தந்தைபெயர்தானம்மா தம்பள்ளசாபையாவே
தாயார்பெயர்தானம்மா தம்பள்ளநாகம்மாளே

எந்தன்வீட்டின்பெயர் தம்பள்ளகுலமென்பார்கள்
என்னுடையபெயர்தானம்மா வீரையனென்றுமே
இப்படிச்சூதாகவேதான் இதமாகநீசொன்னுயானுல்
உன்னைப்பெற்றதாயாரும் உகந்துமேயகப்படுவாள
பக்கீரிக்குநீதானும்அப்போ பகையாளியாகுவாயே
உந்தன்தாயாரைநீதான் உகந்துமேகொண்டுவருவீரே
இப்படித்தான்சொல்லவே இதைக்கேட்டான்பாலகனும்
நல்லதுயென்றுசொல்லி நடந்தானேவேகமாயப்போது
நாகள்ளபூடிதன்னிலப்பா நடுக்கரைவந்துசேர்ந்தானே
தம்பள்ளவீட்டைத்தான் தானுமே தேடிவந்தானே
அப்போதுபாலகன்தான் அந்தவீட்டில்வந்துமேதான்

பாலவர்த்திவேந்தன் நாகள்ளபூடியில் இரா நின்ற புஷ்பவணிகச்சி வீட்டிற்குப்போவது

ஆரம்மா இந்த வீட்டினில் என்று கேட்க அக்கிழவி ஓடி வந்து நீயாரென்று கேழ்க்க அதற்குப்பாலகன் அம்மா ஆராகிலு மென்னகொஞ்சம் குடிப்பதற்கு ஜலம் தாருமம்மா என்றுக்கேட்ட வுடனே அக்கிழவி அதுபோல் தாகம்கொடுக்க அதைக்குடித்தப் பிறகு கிழவியானவள் அப்பாலகனைப்பார்த்து அப்பா நீ எந்த ஊரு என்றுகேட்க அதற்குப்பாலகன் அம்மா எனதுஊர் மேற்கு ராஜ்யம் எனது வீட்டின்பெயர் தம்பள்ளகுலம் என்றுசொல்லவே அதைக் கேட்ட கிழவி ஆச்சரியமுற்று அப்பாலகனை உனது தாய்தந்தை பெயரென்ன உன்பெயரென்ன தெரியச்சொல்லுமென்று கேட்க அப்போது பாலகன் அம்மாபாட்டி என்தந்தைபெயர் சாபையன் என் தாய்பெயர் நாகம்மாள் என்பெயர் வீரய்யன் என்றுச்சொன்ன வுடனே கிழவியும் தான்மகிழ்ந்து.

என்புதல்விமகனிவன்தான் இவனுகுமென்றுசொல்லி
சந்தோஷந்தானடைந்து சிறப்புடனேதான்வந்து
பாலகனையப்போதங்கே பக்ஷமாய்யெடுத்துக்கொண்டு
உச்சிமுகந்துமப்போ அவள் உள்ளங்கால் முத்தமிட்டாள்
சந்தோஷம்தானடைந்து சம்பிரமாயன்னுட்டிலேதான்
அண்டையசலிலப்போதான் அன்பாகயிருப்பவர்கள்
எல்லோரும்வந்துமேதான் இன்பமாயிவனைப்பார்த்தாரே
ஆரம்மாயிவன்தானுமே அன்பாகசொல்லுமென்றாரே
அப்போது அக்கிழவியும் அவருக்குதானுரைத்தாளே

என்புதல்விமகனிவன்தான் இவனுரும்யம்மமாரே
இப்படிச்சொல்லியேதான் இசைந்துமேஅக்கிழவியும்
பாலகனேத்தான்பார்த்து பண்புடனேகேழ்க்கலானுள்
இத்தனை நாளா கநீயுமேதான் இசைந்திருந்தாய்பாலகனே
உன்தாய்தந்தைமார்களிப்போ உகந்துதானிருக்கின்ருரு
இந்தமொழிகேட்டுமப்போ இன்பமாய் அப்பாலகனும
அம்மாடியம்மாடியிப்போ அன்புள்ளஎன்பாட்டியாரே
என்தாய்தந்தைமார்கள் எப்பவோ மாண்டுபோனூர்கள்
இப்படித்தான்சொல்லவே இதுகேட்டாள்கிழவிதானும்
குய்யோமுறையோவென்று கூச்சலிட்டுதானழுதாளே

பாலவர்த்தி வேந்தனே நாகள்ளபூடியிலிருக்கும் ஜனங்கள்வந்து பார்ப்பது.

வசனம்.

இப்படிக்கிழவி அங்கு இருப்பவர்களுக்கு எல்லாம் அம்மா என் புதல்விபெயர் நாகம்மாள்தான் என்மருமகன்பெயர் சரபையன்தான் அவருக்கு ஒரே புதல்வன்தான் அவன்பெயர் வீரையன்மூந்தி இங்கு பிழைப்பில்லாதபடியால் மேற்கு சீமைபோய்விட்டார்கள் ஆகையால் இவன் என் பேரப்புதல்வன் என்றுசொல்லிவிட்டு அடா பாலகா நீ எங்குபோக வந்தாய் என்றுக் கிழவிகேட்க அதற்கு அவ் வேந்தன் அம்மா பாட்டி தாய்தந்தைமார் இறந்தபிறகு திக்கில்லாதபடியால் ஏதாகிலும் இராஜ்யம் சென்று பிழைப்போமென்று எண்ணமிட்டேன் பிறகு நான் சின்னவனுய் இருக்கும்போது என் தாய்தந்தைமார்கள்இந்நாட்டில்எனதுபாட்டி இருப்பாதாய்சொல்லி இருந்தார்கள் அம்மொழிகியாபகம்வந்துநாடெங்கும் கேட்டுகொண்டு உன்னருகில் இருக்கலாமென்று இத்தனை தூரம்வரலானேன் என்றுச் சொல்லஇதைக்கேட்டக்கிழவி அடாஎன்கண்மணியே எனக்கும்ஆருமில்லை திக்கில்லாதப்படியால்தான் நான் இந்தபக்கிரிக்குபுஷ்பமாலைகள் கட்டிக்கொடுப்பதர்க சம்மதடைந்து இருக்தறேன் நித்தியமும் அரைப்படி சோளம் தருகின்ருன் அதுஒருவேளைக்கு வருவது கஷ்டமாயிருக்கிற தென்றுச் சொல்லி நல்லது நீ யெங்கும்போக வேண்டாம் இங்குத்தானே இருப்பாய்யெனச் செப்பி நிறுத்திக் கொண்டாள் இப்படிமூன்று நாள் சென்றபிறகு காலாந்தினத்தில் அப்பாலகன் அக்கிழவியைப்பார்த்து அடிபாட்டி நீகட்டுப்படியான புஷ்பஹாரத்தையான் கட்டுகிறேனென்றுச் சொல்ல இதைக்கேட்டு

அடாஎன் செல்வமே உனக்குத் தெரியுமா என்றுகேட்க அதற்கு அப்பாலகன் அடிப்பாட்டி இத்தனைநாளாக நாங்கள் இந்தப்புஷ்பம கட்டியல்லவா பிழைத்தோம் என்றுச்சொன்னான்,

உன்கையாலாகுமானால் உகந்துகட்டுமென றமேதான்
அப்போதுபாலகனதான் அன்பாகபுஷ்பங்களையாவும்
போராகக்கொட்டிக்கொண்டு பொருமையாய்தானமர்ந்து
அப்போதுபக்கிரிக்குத்தான் அன்பாகக்கட்டலானான்
மல்லியப்பூமொக்குமாலை மகிழ்ந்துமேதான்கட்டினானே
புஷ்பத்தாலங்கிதானே புகழ்துமேஅவன்கட்டினானே
பரிஜாதகட்டில்தானும் பகர்ந்தானப்போபுஷ்பத்தால்
அளவுசரியாகவப்போபாலன் அந்தகட்டில்செய்தானே
வேரோகயவெடுத்தானப்போ வேகமாய்பாலன்தானும்
தன்னைப்பெற்றதாயார்க்கு தானுமேதான்அப்போது
ஒண்டிமாலைத்தானுமங்கே ஒழுங்காகத்தான்கட்டினான்
அந்தமாலைதன்னிலப்போ அன்பாகபாலன்மோதிரமும்
கழட்டியேவைத்தானப்போ கடுகவேமாலைக்குள்ளேதான்
அம்மாடியம்மாடியிப்போ அன்புள்ள என்பாட்டியாரே
இந்தபுஷ்பஆரம்தன்னை இன்பமாநீயெடுத்துக்கொண்டு
பக்கிரிதனக்குநீயுமம்மா பக்குவமாய்தான்கொடுப்பாயே
இந்தபுஷ்பஆரத்தையும இந்தபாலநாகம்மாளுக்கு
இப்படிக்கொடுமென்று இரண்டாய்பிரித்துதந்தானே
அந்தக்கிழவியுமப்போது அன்புடனேஅந்தஆரங்களை
கையில்பிடித்துக்கொண்டு கடுகஅவள்நடந்துவந்தாள்
பக்கிரிஎதிரில்வந்துமேதான் பகர்ந்தஆரம்கொடுத்தாளே
அந்தஆரம்தன்னையப்போ அன்பாகத்தான்பார்த்தானே

வசனம்.

அரே தம்பள்ளக்கிழவி இத்தனைநாளாக இந்தவேலையை எங்கேவைத்திருந்தாய் இந்த புஷ்ப ஆரத்தின் விநோதத்தை நான் என்னவென்றுச் சொல்வேன் அரேக்கிழவி இதைபார் கட்டியது என்றுகேட்க ஐயா எனது மகளுடைய குமாரன் கட்டினானய்யா யென்றுச்சொல்லவே இதைகேட்ட பக்கிரி அவன் எப்போது வந்தான் ஐயா வந்து மூன்றுதினமாச்சுது சரிதான் இன்றைக்காகிலும் காலையதினம் மாலைஅதிகவிநோதமாய் இருக்கட்டும் அந்தப்பையன் அதிகவேலைக்காரன் அவனைநன்றாய் காப்பாற்றுவாய் என்றுச்சொல்ல இதைக்கேட்ட கிழவி ஐயா நீர் கொடுப்பது அரைப்படி சோளம்

அதுயெனக்கு ஒருவேளைக்கு வருவதுமகா கஷ்டமாயிருக்கிறது அவனுக்கு எப்படியான் போஷிப்பது நீங்கள் ஏதாகிலும் கொடுத்தால் காப்பாற்றுகிறேன் என்றுச்சொல்லவே இதைக்கேட்டபக்கிரி அக்கிழவியை அழைத்துக்கொண்டுபோய் உக்கிராண வீட்டைத் திறந்து இரண்டுகரிசை அரிசியும் ஐந்துமரக்கால் பருப்பும் நாலு மணங்கு புளியும் மூன்றுமணங்கு மிளகாயும் ஒருசித்தை செய்யும் கொடுத்து பாலகனை காப்பாற்றும்படி திட்டஞ் செய்தனுப்பினான் அதைப்பெற்றுக்கொண்டு சந்தோஷமாய் பாலநாகம்மாள் மேடைக்கு வந்து அம்மாதுக்கு கொடுக்கவேண்டிய புஷ்ப ஹாரத்தை கொடுத்தாள் மாலைதனைப்பார்த்து அம்மாபாட்டி நான் எந்தவேஷமாயிருக்கின்றேனோ அந்த வேஷத்திற்குத் தகுந்தபடி நீ மாலை கொண்டுவந்துகொடுத்தாய் ஆனால்இது யெனக்குவேண்டாம் என் அழகு யார் பார்க்கப்போகுறார்கள் என்றுச்சொல்லி அந்தமாலைதனை தூணுக்கு விசிறி அடித்தாள் அடித்தமாத்திரத்தில் அந்த மாலையிலிருந்துமோதிரம்விழ அதைக்கண்ணால் பார்த்தவுடனே,

பாலநாகம்மாளுக்கு தம்பள்ளக்கிழவி பூமாலைக்கொடுப்பது.

ஸ்தன்யபானத்திலப்போது பாலுமங்கேபொங்கியது
அய்யோமகனேயப்பாஎன் அருமையுள்ளக்கண்மணியே
நானபெற்றசெல்வாத்தினமே நலபாலவர்த்திவேந்தா
என்குமாரன்மோதிரம்தான் இங்குவரக்காரியமென்ன
பார்க்கஇப்போகண்கூசுதே பாலகன்தன்கைமோதிரம்
எப்படித்தான்வந்ததிங்கே யென்புதல்வன்மோதிரமும்
பாலகனும்வாராமலிப்போ பார்க்கமோதிரமனுப்பினானோ
நீயேன்வந்தாயப்பாஇங்கு நீதிகெட்டஇந்தபாவிகாட்டிற்கு
பாவிச்சண்டாளனவன் படுபாவிஅந்தபக்கிரியுந்தான்
உன்தந்தைதனைத்தானுமே உகந்துஅதம்செய்தானே
இப்படித்தான்சொல்லியே இனியில்லாதுக்கங்கொண்டாள்
அந்நீகல்லமோதிரத்தை அன்பாகயெடுத்துக்கொண்டு
மவுனமாயிருந்தாளங்கே மங்கையுந்தானப்போது
இந்தக்கிழவியும்தான் யிசைந்துமேதன்வீடுவந்து
பாலகனைப்பார்த்துமப்போ பக்குவமாய்சொன்னாளே
உந்தன்கைமாலைதன்னை உகந்துமேபார்த்துபக்கிரியும்
சந்தோஷப்பட்டுமிப்போ சரிபருப்புயரிசிதந்தான்

விந்தைவிந்தையாய்மாலைகளை விநோதமாய்கட்டுவாயே
மாலைதனைப்பார்த்துமே மகிழ்ந்தரிசிதான்தருவான்
அந்தசமயத்திலப்போ அந்தநல்லபாலகன்தானும்
புஷ்பங்களைதான்கொண்டு புகழுடனேகையொடுத்து

வசனம்.

இப்படியாக பாலகன் அநேகவிதமாகிய புஷ்பங்களை எதிரில் வைத்துக்கொண்டு ஒரு அடுக்கு வெண்மைபுஷ்பமும் ஒரு அடுக்கு கருப்புபுஷ்பமும் ஒரு அடுக்கு செகப்புபுஷ்பமும் குச்சுகள் கட்டி விந்தையான அங்கிசெய்து அந்த தம்பள்ளக்கிழவியைப்பார்த்து ஓ பாட்டி நீ இந்த புஷ்ப ஆரமெடுத்துக்கொண்டுபோய் பக்கீரிக்கு கொடுமென்றுச்சொல்ல அம்மொழியைக்கேட்டு அக்கிழவி சந்தோஷமடைந்து புஷ்பயங்கியை எடுத்துக்கொண்டுபோய் பக்கீரிக்கு கொடுக்க இந்தயங்கியைப் பார்த்து பக்கீரி அதிக சந்தோஷமடைந்து அடிக்கிழவி நேற்றுக்காகிலும் இன்றைக்கு அதிக விந்தையாயிருக்கிறது அவனோ மகாவேலை தெரிந்தவன் அவனை நன்றாய் காப்பாற்றுவாய்யென்றுச் சொல்லி, அந்தக்கிழவியைப் பார்த்து நேற்றியதினம் தந்தது ஆகிவிட்டதாயென்று கேட்க அதற்கு அக்கிழவி ஐயா அவன் சாதயென்று அதிகஆவலடைந்தான் ஆகையால் ஆகிவிட்டது யென்றுச்சொல்ல மறுபடியும் முந்திபோலவே கொடுத்து அனுப்பினான் இதில்லாமல் அவனைநான் பார்க்கவேண்டும் நாளையதினம் அழைத்துவருவாய் என்றுச்சொல்ல அதற்குசம்மதித்து அக்கிழவி தனது வீட்டிற்குவந்தாள் வந்தவுடனே பாலகனைப்பார்த்து அடா வீரையா இன்றைக்கு வெகுமேன்மையாக மாலைகளைக்கட்டுவாய் என்றுச்செப்பியவுடன் அதுபோல் பாலகன் வெகுவிந்தையாக மாலைகளை கட்டிக் கிழவிகையில் கொடுத்தான் கொடுத்தமாத்திரத்தில்,

உந்தனையழைத்துக்கொண்டு உகந்துமேவாச்சொன்னானே
இந்தமொழித்தான்கேட்டு எதுசொன்னான்பாலகனும்
நான்யேண்டிபாட்டியம்மா நலமாயிப்போநீபோடி
இப்படிச்சொல்லவேதான் இதுகேட்டாளக்கிழவியுமே
உன்னையவன்பார்க்கவய்யா உகந்துமேவாச்சொன்னானே
இந்தமொழித்தன்னைத்தான் இன்பமாய்பாலன்கேட்டு
ஆனாலும்நீகேளும்இப்போ அன்புடன்நான்வருகின்றேன்

இப்படிச்சொல்லியேதான் இரண்டுபேரும்நடந்தாரே
மசூதிக்குதானுமப்போது மகிழுடனேவந்தார்களே
அப்போதுயக்கிழவிதான் அன்புடனேஅப்பக்கிரிக்கு
கொண்டுவந்தமாலையை கொப்பெனவேகொடுத்தாளே
மாலைதனைபார்த்துமப்போ மகிழ்ந்துயேமாயாபக்கிரியும்
சந்தோஷம்தானடைந்து சம்பிரமாய்சொல்லலானன்
எங்கேயடிவுந்தன்போன் எந்தனுக்குகாட்டுவாயே
இப்படிச்சொல்லவேதான் அப்போதுயக்கிழவியுமே
அந்தநல்லப்பாலகனை அப்போயெதிரினில்நிறுத்தினளே
அந்தநல்லபாலகனைத்தான் அவன்கண்ணாலேபார்த்தானே
அரேஇவள்குமாரனைப்போல் இவனுமேயிருக்கின்றான்
உந்தன்பேரப்புதல்வனாயிவன் உகந்துமேநீசொல்வாயடி

வசனம்

ஓ! கிழவி இவன்உன்து பேரப்புதல்வன் நிஜயமாயென்றுகேழ்க்க அதற்கு அக்கிழவி ஐயா இந்த கரைதனிலிருக்கும் தர்க்கிசாக்ஷியாய் இவன்என் புதல்வி யுடையபுதல்வன் என்றுச்சொல்ல இதைக் கேட்ட பக்கிரி அடிக்கிழவி உன்புதல்வி இருக்கிறாளா ஐயா என்புதல்வி இறந்துபோய்விட்டாள் என்றுச்சொல்ல இதைக்கேட்டப்பக்கிரி அரேயல்லா அரேயல்லா உன்மகள் குமாரன் இத்தனையழகாயிருக்க அம்மாது பெப்படியிருப்பாள் அவளையும் சிறையெடுப்பேன் அல்லாவா உன்மருகனும் அந்தவம்சத்தாரும் நாசமடைந்துவிட்டார் எனக்கேட்டு அப்பாலகனைப்பார்த்து அடாபாலகா உன்துவீட்டின் பெயரென்ன வென்றுகேழ்க்க அதற்குப்பாலகன் ஐயா எங்கள் வீட்டின்பெயர் தம்பள்ளகுலத்தார் என்தந்தைபெயர் சாபைய்யா தாய்பெயர் நாகம்மா என்பெயர் வீரய்யா என்றுச்சொல்ல இதைக் கேட்டு சந்தோஷமடைந்து அடாப்பாலகா உனக்கு குதிரைகள் யானைகள் இராஜ்ஜியங்கள் வேண்டுமா என்றுகேட்க்க அதற்கு பாலகன் ஐயா இதுவெல்லாம் எந்தனுக்கேன் நான் அனுபவிக்கப் பட்ட பலசாலியா ஆனால் பனிரெண்டு கம்பத்தால் கட்டிய உனது மக்காமசூதி இருக்கிறது அந்தமசூதியில் வெள்ளியானையும் தங்கக் குதிரைகளும் கிளிகளும் புராக்களும் கல்லால்செதுக்கி இருப்பதைப்பார்க்க ஆவலடைந்தேன் உத்திரவு தருவீரானல் பார்த்து வருகிறேனென்றுச்சொல்ல அதற்கு பக்கிரி அடாபாலகா அதைப் பார்த்தால் என்னவருகிறது இராஜ்யமாளவேண்டும் என்றுச்சொல்ல

இதைகேட்டு ஓ! பக்கிரி யான் சிறுவன் அதைப்பார்க்க ஆவல டைந்தேன் என்றுச்சொல்ல இதைக்கேட்டு அடாப்பாலகா அங்கு போவதற்கு சாத்தியப்படமாட்டாது என்றுசொல்லஅதுயேனப்பா என்றுகேட்க அப்பா பாலகா மேற்கேயிருக்கும் பானுகண்டி பட்டணத்திலிருந்து பாலகாகு என்ற ஓர்மாதை சிறையெடுத்துக் கொண்டுவந்து இந்தமசூதியில் வைத்திருக்கிறேன் அம்மாது பனி ரெண்டுவருடம் நோன்புவிரதமென்று சாதித்தாள் நான் அருகில் போனால் பயமடைகுருள் அவளுக்குமெனக்கும் இனிமூன்றுவருட காலமிருக்கிறது அதுவரைக்கும் அங்குபோவதற்கு தாமல்ல வென்றுச்சொல்ல அப்பாலகன் ஓ பக்கிரியே நீவாரவிட்டால் யான் சென்று பார்த்துவருகின்றேன் எனச்செப்ப இதைக்கேட்டு அடா போவதற்குநலமல்ல எப்படியென்ருல் மந்திரசாவிகள் பூட்டியிருக் கின்றேன் எனச்சொல்ல ஓ பக்கிரி நாளையுதினம் இன்னும்தமாஷா கவும் அழகாகவும் மாலேக்கட்டித்தருகிறேன் எனக்குஇதுயெல்லாம் நீர்வந்து காட்டுமையா என்றுச்சொல்ல அதற்கு பக்கிரி அடாபால கனே அதற்கு ஒருமொழியிருக்கிறது அதைச்சொல்லுகிறேன் அதைஞாபகம்வைத்துக்கொள்வாயென்று சொல்லத்தொடர்ந்தான் அப்பா கோட்டையருகில்சென்று ஓம்மஹம்காளி (ஈவி) என்றுச் சொன்னால் கதவுதிறந்துவிடும் உட்பிரவேசித்து வேடிக்கைபார்த்து விட்டு மறுபடியும் வரும்போது (கியாரே அஸ்தி நீகடோரே) என்றுச்சொன்னால் கதவுகள் மூடிக்கொள்ளும் நீ சென்று ஒரு மணிநேரத்தில் வரவேண்டுமென்றுச் சொல்லியனுப்ப அதுபோல் பாலகன் சம்மதித்து கோட்டைக்குவந்து ஓம்காளிதுர்க்கி (ஈவீ என்றவுடன் கதவுகள் திறந்துக்கொண்டது உடனே பாலகன் மசூ திக்குள் சென்ருன்

மசூதிக்குள்சென்ருனே மகிழுடனே அப்பாலகனும்
தாயானநாகம்மாளேத்தான் தானுமேஅங்குபார்த்தானே
தலேயைக் குனிந்துக்கொண்டு தானமர்ந்திருந்தாளே
அப்போதுபாலகன்தான் அருகினில்போகையிலே
மனிதர்வரும்காலடிகள் மகிழ்ந்துமேகேட்டாளே
தலேயெடுத்துப்பார்த்தாளே தானுமப்போதுநாகம்மாள்
அருகினில்வாராதடாநீ அறிவுகெட்டமாயாபக்கிரியே
உன-சிரசுவுடையுமிப்போ உகமையாய்சாபமிடுவேனே
இந்தமொழிகளேயப்போத்தான் இன்பமாய்கேட்டானே

மாயாப்பக்கிரிகானல்லவம்மா மாதாவேஎன்தாயே
உன்னுடையபாலகன்தான் உத்தமியேகானுமேதான்
என்னுடையபெயர்தானம்மா இவல்பாலவர்த்திவேந்தன்
இப்படியுஞ்சொல்லியப்போ இம்மொழியைகம்பவில்லை
நிமிஷத்திற்குநிமிஷம்தான் நிகழ்வேடம்போடுவாயே
உன்மாயைகள்யாவும்தான் உகந்தகானறிவேன்போடா
கொஞ்சமாகிலுமப்போதான் கோப்பெனவேகம்பவில்லை
எப்படிச்சொன்னாலும்தான் பென்மொழியைகம்பவில்லை
அப்போதுபாலகன்தான் அன்புடனேதுசெய்தானே
ஆகாசவாணியம்மாயிப்போ அன்புடன்நீசொல்லுவாயே
பூமிதேவித்தாயேயிப்போ புகழுடன்நீசொல்லுவாயே
கைலாசபதியேஜயாயிப்போ கருணையுடன்சொல்லுவாயே
பார்வதிதேவியம்மா பாங்குடன்நீவந்துசொல்லுவாயே

வசனம்.

இந்தப்பாலகன் இப்படித் துயாமடையுஞ்சமயத்தில் பார்வதி பரமசிவன் ரிஷபவாகனரூடாய் அங்கு நின்று ஸ்ரீபாலநாகம்மாளை பார்த்து ஓ அம்மணி இவன் உனதுகெர்ப்பத்தில் ஜனித்தவன் நிக்ஷயம் நீ ஏழுதினத்தில் விட்டுவந்தபிறகு அவன்பெரிய தாய்மார்கள் இதுவரைக்கும் வளர்த்துவந்தார், இப்போது உன்னைபார்க்கவந்தப் படியால் அவனைக்கண்ணால் பார்த்து நல்மொழி கூறலாகாதா என்றுச்சொல்ல இம்மொழியைக்கேட்டு பாலநாகம்மாள்

தலையெடுத்துப்பார்த்தாளே தன்மையுடனப்பாலகனை
ஸ்தன்யபானத்திலப்போதான் தனிபாலும்பொங்கியது
அய்யோகுமாராஅப்பா அறிவுள்ளயென்செல்வாத்தினமே
வாடாநீயென்றுச்சொல்லி வகையுடனெடுத்துக்கொண்டு
உச்சிமுகர்ந்துமப்போதான் உள்ளங்கால்முத்தமிட்டு
இடுப்பிலெடுத்துக்கொண்டு இசைந்துமேதான்பார்த்து
எந்தன்தவப்பாலகனேநீ யேன்வந்தாய்யிங்குமேதான்
உன்தந்தைமார்கள்தான் உகந்திங்குமூழ்கிவிட்டாரே
தாயென்றுநீயுமேதானிப்போ தனியாகவந்தாயோடா
உந்தனுக்குபான்தானுமே உகந்ததயாரல்லவப்பா
உந்தன்மதலைச்சொல்லுகளை உகந்துயார்கேட்டாரோ
இதுவரையில்லப்பாவுன்னை யெடுத்துவளர்த்தார்களே

அவர்தானுனக்குதாய்மார் அறிவுள்ளஎன்சிகாமணியே
இங்குதான்எனப்பாவந்தாய் என்செல்லாத்தினமே
பாவிசண்டாளனவன்தான் பாமலோமிமாயாபக்கிரியும்
மந்திரமும்கற்றவன்தான் மாயாக்காரனத்தசண்டாளன்
மனிதரைக்கண்டாலப்பா மதிமலைக்கல்லாக்குவானே
நமதுபனிரெண்டாயிரம் கலமுள்ளசேனைகளைத்தான்
கல்லாகசெய்துமப்போதான் கடுகவிட்டான்பாதகனும்
உன்னையுந்தானிப்போது உகந்துகொல்வான்இவனுமே
சீக்கிரமாய்த்தானுமிப்போ சென்றுஇங்குவாருவாயே
உன்தாயார்போக்காமார் உன்னை அன்புடன்வளர்த்தாரே
அவர்களுக்குநீயுமேதான் அன்புள்ளபுதல்வனப்பா
ஆசையாய்உன்னைவளர்த்தாரே அவர்களைவிட்டுநீவாலாமா
நான்பெற்றசெல்வாத்தினமே நலமுடன்நீபோய்வருவாயே

வசனம்.

இப்படி தாயார் சொன்னமொழியைக்கேட்டு அம்மா உன்னு டன் பேசுவதற்கு இதுவும் காலமல்ல என்னைபக்கிரி ஒருமணிநோத் திற்கெல்லாம் வரச்சொன்னான் ஆகையால் யான் சீக்கிரம் போகின் றேன் ஆனால் நாளையதினத்தில் பக்கிரி புஷ்பவனத்திற்கு ஷிகாரி போவான் அவன் மறுபடியும் வீட்டிற்கு வருவதற்குள்ளாக அவ னிருக்கும் மகூதியெல்லாம் நன்றாய் மெழுகி அவன்புசிக்கும் சாப் பாடு தயார்செய்து அனுப்புவாய் அதையெல்லாம் அவன்புசித்து சந்தோஷமாய் உட்காருஞ்சமயத்தில் யான் விந்தையான மாலைகள் கட்டி அனுப்புகிறேன் அதைப்பார்த்து அவன் சந்தோஷமடைகு வான் அந்தச்சமயத்தில் எனது தந்தையிடம் நீயெப்படி சந்தோஷ மடைகுவாயோ அப்படி சந்தோஷமொழிகளாடி அவன் எதிராக வந்து நிற்க அவன் உன்னைப்பார்த்து என்னடி பாலநாகு இன்றை க்கு வெகு சந்தோஷமடைந்தாய் என்றுக்கேழ்ப்பான் அதற்கு நீ ஓ! பக்கீரியே எனது பனிரெண்டு வருடம் கோம்பு முடிவதற்கு இன்னும் வொன்பது தினமிருக்கிறது ஆகையால் சந்தோஷமடை குறேன் என்றுச்சொல்வாயம்மா அப்போது அவன் சந்தோஷமா யிருப்பான் அச்சமயத்தில் ஐயா நான் இப்படியிருப்பது தர்மந்தானு உனது உயிர் நிலையை எனக்குச்சொல்லாமல் இருப்பது நலமாகுமா என்றுக் கேட்பாய் அதற்கு உனது உயிர்நிலை சொல்லும்படி கேழ் ப்பான் அப்போது ஐயா எனது உயிர் நிலையானது பானுகண்டி

பட்டணத்திற்கு மேற்குபாகத்திலிருக்கும் ஆலமரத்தில் பனிரெண்டாவது கிளையைவெட்டினுல் நான் மரணமடைகுவேன் என்றுச் சொல்வாயம்மா அவன் சந்தோஷமடைகுவான் ; அந்தகாலத்தில் நீ அவனுடன் எனக்கு இனியார் ஆதாவு இருக்கின்றார்கள் என்று நயனமொழியாடுவாயானல் அப்போது அவன் சந்தோஷப்பட்டு வாயால் எதுசொல்னுகிறானே அந்த சங்கதியை தம்பள்ளக்கிழவிவீட்டிற்கு அனுப்பும்படி சொல்லிவிட்டு கோட்டைக்கு வெளியில்வந்து (கியாரே அல்திமீகடோரோ) என்றுச்சொல்ல கதவுகள்மூடிக்கொண்டது அந்தச்சமயத்தில் பாலகன் மரூதிவிட்டு வரும்பரியந்திரம் அக்கிழவியை விடாமல் நிருத்திவைத்தான் அப்போது அக்கிழவியை பார்த்து அடி தம்பள்ளக்கிழவி அப்பாலகன் மகாயுக்திசாலி அதிக ரூபவந்தன் அந்தபாலகனை முப்பழமும் தயிர் பால் நெய் சாதமிட்டு வளர்த்துக்கொண்டு வருவாய் என்றுச்சொல்ல அதற்கு அக்கிழவி நான் எதுவைத்து வளர்ப்பது இரண்டு வேளைக்குச்சரியாய் போகிறது இந்தவேளைக்கு எதுங்கிடையாது என்றுச்சொல்ல அப்போது பக்கீரி அரேக்கிழவி கொடுக்கிறேன் வாவென்று கிடங்குயருகில் அழைத்துச்சென்று பத்து லக்ஷம் வாரகன் கைக்கொடுத்தான் அதைப்பெற்றுக்கொண்டிருக்க இதற்குள்ளாக பாலகன் பக்கீரி யெதிரில் வருக அப்பாலகனைப் பார்த்து இந்த மூன்றுதினத்தில் யேதுபார்த்தாய் யென்றுக்கேட்க ஐபா நான் சகலமானவேடிக்கையும் பார்த்துவிட்டேன் என்றுச்சொல்ல பக்கீரி சந்தோஷமடைந்து அப்பாபாலகனே அதியழகுடையமாலைகள்கட்டிக்கொடென்று திட்டஞ்செய்தனுப்ப பாலகன் தன்மனைக்கு வந்துசேர்ந்தான்

இப்படியிருக்க மருதினத்தில் பக்கீரிநந்தவனத்திற்குப்போகவே இதையறிந்த பாலநாகம்மாள் அந்த மருதியெல்லாம் மொழிகி அவனுக்கு வேண்டிய வுணவுகளைத் தயார்செய்து அனுப்பியிருந்தாள் இவள் வந்தவுடன் தாதிகள் வுணவுகளை எதிரில்வைத்தார்கள் சந்தோஷமாய் தின்ன பிறகு பூவணிக்ச்சி விந்தையான அங்கி ஒன்று புஷ்பத்தால் கட்டிக்கொண்டுவருக அதைப் பக்கீரிபோட்டுக்கொண்டு உல்லாசமாய் இருக்கும் சமயத்தில் இதையறிந்த பாலநாகம்மாள் அவனுக்கெதிரில்வந்து நிற்கவே இம்மாதை கண்டு ஆ! ஆ! பால்நாகு எது இவ்வளவு சந்தோஷமாய் வந்தாயென்றுகேட்க அதற்கு பாலநாகம்மாள் அய்யா! எனது நோன்பு தீர்வதற்கு இன்னும் வொன்பது தினமிருப்பதால் சந்தோஷமடைந்

தேன் ஆனால்யான் உன்னைநம்பியிருந்தால் நலமென்ன வென்றுச் சொல்ல இதைக்கேட்ட பக்கீரி மாதே உனக்கேதுகுறை யொன்றுமில்லாமல் நான்வைத்துக்கொண்டிருக்கிறேன் இதில்லாமல் இந்த நகரத்திலிருப்பதெல்லாம் உன்னுடையதன்றி இனியார் அனுபவிப்பவரென்றுச் சொல்ல இதைக்கேட்ட நாகம்மாள் இதுகளெல்லாம் யெந்தனுக்கேன் உன்னைநம்பியிருக்க எவராகிலும் பகையாளிகள் உன்னைக்கொன்றுவிட்டால் நான் ஏதுசெய்வேனென்றுச் சொல்ல இதைக்கேட்டபக்கிரியும் நகைத்து அடிமாதே என்னைக்கொல்ல ஒருவராலும்முடியாது எப்படியென்றால் ஏழுக்கடல் தாண்டிப்போனால் மண்கோட்டையெனப்படும் அக்கோட்டைமத்தியில் ஏழுக்கோட்டை ஒன்றிருக்கும் அந்தக்கோட்டைக்குள் ஐன்னூறு வெளாமரமும் முன்னூறு முருங்கமரமும் நூறு பனமரமும் ஐன்னூறு வேப்பமரமும் இருக்கும் இதுமத்தியில் முந்திரிமரம் ஒன்றிருக்கும் அந்தமரத்தடியில் ஏ ழ டு க் கு பானையிருக்கும் அந்தக்கீழடுக்கில் தங்ககூண்டு வொன்றிருக்கும் அந்தகூண்டுக்குள் பஞ்சவர்ணகிளி இருக்கும் அந்தக்கிளிகண்டத்தில் எனதுபிராணமிருக்கிறது அதைக் கொன்றால்தான் நான்சாகுவேனே தவிரவேறு ஏதுசெய்தாலும் மரணங்கிடையாதுமாதே! என்றுச்சொல்ல இதைக்கேட்ட நாகம்மாள் ஐயா இப்போது சந்தோஷமடைந்தேன் இன்னும்வொன்பதுதினம் பொருப்பீர்கள் உமதிஷ்டம் பூர்த்தியாகிறதென்றுச்சொல்லி மகுதிக்குச்சென்றுவிட்டாள்.

அதன்பிறகு பூவணிகச்சி புஷ்பங்கொண்டுவந்தவுடன் அவளைப் பார்த்து ஓ கிழவி நேற்றியதினம் கட்டிக்கொண்டுவந்த மாலைதன்னில் இருக்கப்பட்ட புஷ்பம் இத்தனையென்று கணக்குத்தெரியுமாயென்றுக்கேட்க அதற்கு அக்கிழவி அம்மாயெனக்கேதும் தெரியாதென்றுச்சொல்ல அப்போது பாலநாகம்மாள் கிழவியைப்பார்த்து அடிக்கிழவி யான் புஷ்பக்கணக்கு எழுதித்தருகிறேன் அதுபோல் மாலையைக்கணக்காகக் கட்டிக்கொண்டுவருவாய் ஆனால் இந்தக்கடிதத்தை பக்கிரி பார்க்கப்படாதென்றுச் சொல்லியனுப்ப அதுபோல் கிழவி வோடி பாலகனையழைத்து அப்பா இக்கடிதத்திலிருக்கும் கணக்குப்போல் மாலைகட்டும்படி திட்டஞ்செய்தாள் நாகம்மாளென்றுச்சொல்ல அதைப்பாலகன்வாங்கி தன்னுள்வாசித்து சங்கதியறிந்துக்கொண்டு அப்படியே ஆகட்டுமென்றுச்சொல்லி மாலைகட்டிவிட்டு மறுநாள் உதயத்துக்குப் பாலகனெழுந்து அம்மாப்பாட்டி எனது

தந்தை மரணமடையும்போது அடுத்தநாட்டிலிருக்கப்பட்ட கடன்
காரர் பத்திரம் என்னிடம்கொடுத்துவிட்டார் நான்வரும்போது
கேட்க இத்தினம்வரும்படி திட்டஞ்செய்தார்கள் ஆகையால் அங்
குச்சென்றால் ஏதாகிலும் காசுவந்தால் நமக்குநலமல்லவா வென்றுச்
சொல்ல அம்மொழிக்குச் சம்மதமடைந்தாள் இதையறிந்தபாலகன்
பாட்டி எனக்குக்கொஞ்சம் சாதங்கட்டிக்கொடுமென்றுச் சொல்ல
அதுபோல் கிழவி கட்டிக்கொடுக்க அதை யெடுத்துக்கொண்டு
அனேகமான காடு மலை வனம் வனாந்திரந்தாண்டி சமுத்திரக்கரை
ஓரம்வந்து நின்றுக்கொண்டு நாம் எப்படி இதைத்தாண்டுவது
என்று துயரமடைந்து அங்கிருந்த ஆலமரத்தின்கீழ் சயனித்துக்
கொண்டான் அந்தச்சமயத்தில அந்தச்செடிமீது இரண்டுகண்ட
பேரண்டபக்ஷியின் குஞ்சுகளிருந்தது இந்தக்குஞ்சுகளை தின்பதற்கு
அங்கு ஐந்துதலை நாகமானது செடியேருவதை பாலகன் பார்த்து
செந்திராயுதத்தால் வெட்டினான் அதில்ஓர்சிறசானது இவன்கையில்
கடித்தவுடன் விஷமேறி பூமியில் விழுந்து சாவுக்குச்சரியான மூர்ச்
சை யடைந்தான் இவன் இப்படிவிழ பானுகண்டிப் பட்டணத்தில்
இவன் வைத்துவிட்டுவந்த மல்லிகைச்செடியானது வொணர்ந்து
போய்விட இதைக்கண்ட பெரியதாய்மார்கள் பாலகன் இறந்தா
னென்று சோகமடைந்தார்கள் இது இப்படியிருக்க நமக்கு நமது
தாய் தந்தை இரையெடுத்துவந்தால் தின்னாதபடிக்கி இருந்து இவ
ரைக் யெழுப்பும் மார்க்கம் தேடிய பிறகு இவர் வந்தக்காரியத்தை
பூர்த்தி செய்து நாம் புசிப்பரிய வேண்டுமென்று மனதை திடஞ்
செய்துக்கொண்டு இரண்டு குஞ்சுகளும் இருந்தது.

இப்படியிருக்குஞ் சமயத்தில் அந்த கண்டபேரண்ட பக்ஷி
கள் இரண்டும் ஆகாரமெடுத்துக்கொண்டு கூண்டில்வந்து பார்க்க
இரண்டு குஞ்சுகளும் சோகமாயிருப்பதறிந்து அக்குஞ்சுகள் இப்
படியிருக்க காரணமேதென்று கேட்க அதற்கு அந்தக் குஞ்சுகள்
பிராணமற்று விழுந்திருக்கும் வேந்தரில்லாமல் போனால் நாங்கள்
இருவரும் நாகத்திற்கிரையாகுவோம் ஆகையாலந்த உத்தமரை
யெழுப்பிவிட்டு அவர்வந்தக் காரியத்தை இன்னதென்று விசாரி
த்து அக்காரியத்தை பூர்த்திசெய்கிற வரையில் நாங்கள் இரைத்
தீண்டமாட்டோமென்றுச் சொல்ல அப்போது அந்தஇரண்டு பக்ஷி
களும் பூமியைப்பார்க்கவே நாகம் இரண்டு துண்டமாக விழுந்தி
ருப்பதையறிந்து சந்தோஷத்துடன் சஞ்சீவி மலைக்குப்போய்

சஞ்சீவிக் கொண்டுவந்து இப்பாலகனுக்குக்காட்ட பாலகன் நித்திரை செய்தவன்போல் யெழுந்தான் இவனெழுந்தவுடன் பானுகண்டி பட்டணத்தில் மல்லிகைச்செடி துளிர்பிடித்தது அப்போது பெரி தாய்மார்கள் மகாசந்தோஷ மடைந்தாகள் அதன்பிறகு இந்த இரண்டுபக்ஷிகளும் இப்பாலகனைப்பார்த்து,

உந்தன்பெயர்தானென்ன யுகந்துமேசொல்லுமப்பா
இந்தமொழிகேட்டுதான் யிசைந்துமேபாலகனும்
சொல்லத்தொடங்கினன் சிறப்புடன்தானப்போது
பாலவர்த்திவேந்தனென்பார் பக்ஷிகளேஎந்தன்பெயர்
இப்படிதான்சொல்லவே யின்பமாயிரண்டுபக்ஷிகளும்
ஆனலிப்போபாலகனே யன்புடனேநீயுமேதான்
எங்குதான்போகின்றய் யெங்களுக்குச்சொல்லுமே
அப்போதுபாலகன்தான் யன்புடனேசொல்லலானன்
நான்சஞ்சீவிமலைக்குதான் சம்பிரமாய்போகவேண்டும்
உனககென்னகாரியந்தான் உகந்துமேயவ்விடத்தில்
இன்பமாய்சொல்லுமையா இப்போதுயெங்களுக்கு

வசனம்.

இந்தப்பக்ஷிகளை பக்கிரி இவ்விடம் வைத்திருந்தால் நாம் வந்த காரியம் பூர்த்தியாகாமல் போகுமென்று ஓ! பக்ஷிகளே யெனக் கங்கு காரியமிருக்கிறதென்றுச் சொல்ல அப்போது பக்ஷிகள்,

உன்னைத்தானெப்படி யுகந்துகொண்டுபோகுவோம்
ஆகாயமார்க்கமாய்நாம் அந்தரமாய்போகவேண்டும்
போகுஞ்சமயத்திலங்கே பொல்லாதகாற்றடிக்குமே
அந்தவிஷக்காற்றடித்தால் அப்போதுயிர்நீங்குவாயே
அபோதுவுந்தனைத்தான் ஆதரிக்கஎங்களால்முடியாது
இப்படித்தான்சொல்லியே யிருந்தது இரண்டுபக்ஷிகளும்
அப்போதுபாலகன்தான் யன்பாகபக்ஷிகள்தன்னேடு
எப்படித்தான்செய்தாலும் எல்லாவுங்கள்பாரமென்றான்
அந்தமொழிதான்கேட்டுமே அண்டரெண்டப்பக்ஷிகளும்
ஈசந்துண்டையங்கேதான் யின்பமதாய்எடுத்துவந்தது
மூக்காலேஅப்போதங்கே முகந்துமேதொளைசெய்தது
அந்ததொளைதன்னிலேதான் அப்பாலகனைதானமர்த்தி
ஆண்பக்ஷியப்போதான் அதன்ரக்கைகளைவிரித்தது

பெண்பக்ஷிதானுமப்போ பெருமையாய் நோக்கியது
ஆண்பக்ஷிமுதுகினிலே அப்போதுவைத்ததங்கே
ஆகாயமார்க்கமங்கே அன்புடனே தான்பார்த்தது
விஷக்காற்றுதானுமங்கே வந்துஉள் நுழையாமல்
பொட்டைகளாலேயங்கே போர்வைகள்செய்தது
சந்தோஷமாகத்தான்பக்ஷிகள் சம்பரமாய்பாந்தது
பால்சமுத்திரத்தையப்போ பண்புடன்தாண்டியது
ஏழுக்கடலையும்பக்ஷிகள் யின்பமதாய்தாண்டியது
சஞ்சிவிமலைக்கருகிலப்போ சம்பரமாபக்ஷியிரங்கியது
பாலகனைத்தானப்போது பக்குவமாயிரக்கிவிட்டது
அந்தகல்லகானகத்தை அப்போதவன்பார்த்தானே
கோட்டைக்குள்ளாக குணமுடன் நுழைந்தானே
அங்கிருக்கும்காடுகளை அவன் அன்பாகபார்த்தானே
சந்திராயுதத்தையுந்தான் சடுக்கெனவேகைபிடித்தான்

வசனம்.

இப்படியாகச் சந்திராயுதத்தை கையில்பிடித்து அந்தமாயாபக் கிரிகைதனில் என்தாயார் விரதம்கெடாதபடிக்கிருந்தால் இந்த செந்திராயுதத்தால் இந்தச் செடிகளெல்லாம் நான்வெட்டும் வெட்டுக்கு கீழ்விழவேண்டியது இல்லாமற்போனால் விழலாகாது என்றுச்சொல்லிவெட்டத்துணிந்தானப்போது,

முன்னூறுவெளாமரத்தை முந்தியேதான்வெட்டினான்
எழுநூறுவேப்பமரத்தையும் இன்பமாய்வெட்டினான்
அறுபத்திநான்குபனமரம் அங்குஅன்பாகவெட்டினானே
முந்திரிச்செடிகளைத்தான் முகந்துஅவன்வெட்டினான்
மைதானமாய்ச்செய்தானே மனமகிழ்ந்துஅப்பாலகனும்
முந்திரிச்செடியையப்போ முழுதுமங்குவெட்டினானே
செடியெல்லாம்கீழ்விழவே ஜெகஜோதிஆச்சுதங்கே
அடுக்குப்பானைகள்தானப்போ அழகாகத்தெரியுதங்கே
அந்தச்சமயம்பக்ஷிகள்தான் அன்பாகபேழ்க்கலாச்சுது

வசனம்.

அப்பா ராஜகுமாரனே இந்த முந்திரிசெடிகளைவெட்டி அந்த அடுக்குப்பானை இருக்குமிடத்திற்குபோகின்றாய் அந்தயடுக்குபானை பக்கிரியுடையது அவன் வந்தால் உன்னைக் கொன்றுப்போடுவான்

என்றுச்சொல்ல அப்போது பாலகன் அன்புள்ளபக்ஷிகளே யானும் அவனிடம் வேலைசெய்துக்கொண்டிருக்கிறேன் அந்தச் சமயத்தில் என்னைப்பார்த்து ஓ பாலகனே யான் கிழவனுகிவிட்டேன் நடக்க முடியாது ஆகையால் இப்போது நீ சென்று ஏழ்கடலுக்கு அப்பா மிருக்கும் சஞ்சீவி மலையில் எழுகுகோட்டை இருக்கிறது அந்தக் கோட்டை மத்தியில் முந்திரிச்செடியின்கீழ் ஏழடுக்கு பானையிருக் கும் கீழடுக்கில் தங்ககூண்டில் பஞ்சவர்ணக்கிளி இருக்கிறது அந் தக் கிளியை கொண்டுவரும்படி திட்டம் செய்தான் ஆகையால் நான் வந்தேன் என்றுச்சொல்ல இதைக்கேட்டு பக்ஷிகள் நீவந்ததும் சரிதான் அவன்சொன்னதும்சரிதான் நாங்கள் வருவதற்கு முந்தி எங்கள் பாலகருடைய பிராணத்தைக்காப்பாற்றி தந்தபடியால் உம்மை யித்தனைதூரங்கொண்டுவந்தோம் இப்போது இந்தச்செடி களை வெட்டிவிட்டாய் அந்தக்கிளியை 'எப்படி கொண்டுவருவாய் என்றுக்கேட்க அப்போது பாலகன் சொன்னதாவது இந்தப்பானை களைஉடைத்து கூண்டைக்கொண்டு வருவேனென அப்போதுபக்ஷி கள் இவனைபார்த்து அப்பாஇதை உடைத்தால் இதில்மந்திரவண்டு கள் இருக்கின்றது அதுவொன்றுகடித்தால் நீ க்ஷணம் சாகுவாய் என்றுச்சொல்ல அதற்குப்பாலகன் எனது கத்தியால் வெட்டித்தள் ளுவேன் என்றுச்சொன்னுன் அதற்கு அப்பா ஒன்றைவெட்டிஞல் ஆயிரமாகுமே இதற்கேது செய்குவாய் என்றுச்சொல்ல அதற்கு பாலகன் இடிவிழுந்த மரமபோல் ஒன்றும்சொல்லாமல் உட்கார் திருந்தான்.

இப்படியிருக்க அந்த பக்ஷிகள் குபீலென்று பாந்து காட்டுக் குச்சென்று வயிறுநிறைய தீனிதின்றுவிட்டு இப்பாலனுக்கு தீனி யெடுத்துக்கொண்டுபாலகன் எதிரில்வந்து அப்பா பாலகனே வாரு மென்றழைக்க அதற்குப்பாலகன் ஐயா நான் கொண்டுவருவதாய் சொல்லிவிட்டு இப்படிப்போனுல் ஏதுச்சொல்வான் இதற்காகிலும் இங்குநான சாவதுநலம் உமதுபாலகர் எப்படிபசியால் வாடுருரோ தெரியாது நீங்கள் போவீரெனச்சொல்ல இம்மொழியைக்கேட்ட பெண்பக்ஷி தன் நாயகனைப்பார்த்து நாயகா! நாமும் நமது பால கரும் சந்தோஷமிட இப்பாலகன் கானகத்தில் துக்கப்படுவது நீதி யாகுமா நீரெப்படியாகிலும் சாதித்து அந்தக்கிளியை கொண்டுவரு வாயென்றுச்சொல்ல அப்போது இப்பாலகனை இருள்சூழ்ந்த பொத ரில் குந்தவைத்துவிட்டு ஆண்பட்சி அதிவேகமாய் பாந்து வந்து

எட்டியுதைத்ததங்கே ஏழடுக்குப்பானைகளைத்தான்
பானைகளும்தானுமப்போ பண்பாய்உடைந்ததங்கே
கருத்தவண்டுகள்தானுமே கர்ஜித்தங்குவெளிவந்ததுவே
அந்தகானகமெல்லாமப்போ அடர்ந்துமேசூழ்ந்துவிட்டது
பெண்பட்சியும்பறந்துமங்கே பிரட்டைகளாலடித்ததுவே
அந்தவண்டுகள்தானுமங்கே அழிந்துமேபோச்சுதப்போ
ஆண்பக்ஷிதான்பறந்துமப்போ அக்கூண்டைதானெடுத்து
மூக்கால்கடித்துக்கொண்டு முகக்துமேதான்பறந்தது

வசனம்.

ஓ! பாலகனே பக்கிரி இப்போதே தெரிந்திடுவான் அவன் வந்தால் உன்னையும் என்னையும் கொன்றுவிடுவான் இந்தக்கிளியைப் பத்திரஞ் செய்வாயென்றுச் சொல்லி அவன் காதிலிருக்கப்பட்ட கடுக்கனை கழட்டி அந்தகிளிக்கு இரண்டுகாலுக்கும் விலங்கு மாட்டிவிட அந்தப்பக்கிரிக்கு இரண்டுக் காலுக்கும் விலங்கு பூட்டியது போல் ஆகிவிட்டதப்போ,

அரே-எனதுயிர்க்கிளியை ஆரேதான்கொண்டுவாரான்
இல்லாவிடிலக்கிளிதானுமே இரைதேடப்போச்சுதோ
கானகக்கொடியிலங்கேதான் கண்டுயகப்பட்டதோ
இப்படிமாயாப்பக்கீரியுந் இதமாகபார்த்திருந்தான்

வசனம்.

இப்படியிருக்க அந்தக்கிளியை பாலகன் பிடித்துக்கொண்டு ஈச்சன் பொந்தியில்புகுந்தபிறகு பட்சிகள்இரண்டும் அந்தபொந்தனைஎடுத்து முதுகில்வைத்துக்கொண்டு ஆகாயமார்க்கம் பறந்து தன் இருப்பிடம் வருகின்றது.

ஆகாயமார்க்கம்தன்னிலப்போ அன்பாய்பறந்ததுகள்
ஏழுக்கடல்தன்னையும்தான் எடுத்துமேதாண்டிவந்தது
ஆலமரத்தருகிலங்கே அன்பாகத்தானிறங்கியது
பாலகனும்தானுமப்போ பக்குவமாய்வெளிவந்தானே
உதயமுமாச்சுதங்கே உகந்துநீபோய்வருவாயப்பா
அப்போதுபாலகன்தான் அந்தப்பட்சிகளைப்பார்த்துமே
அன்புள்ளஎன்பக்ஷிகளே அன்பாகஉங்கள்தயவாலே
நான்போய்வருகின்றேன் நலமுடனேஇப்போது
நீங்கள்செய்தஉதவிக்கு நான்என்னதான்செய்யேனையா

நீடூழிகாலம்நீங்கள்தான் நிலைத்திருக்கவேண்டுமையா
நீங்கள்யேன்வருகின்றீர்கள் நில்லுங்களிவ்விடத்தில்
நாங்கள்சிலதூரமய்யா நலமுடன்தான்வருகின்றோம்
இதுகேட்டான்பாலகனும் இன்பமதாயப்போது
வேண்டாமேநீங்களுமே வெகுதூரமிப்போவந்தீரே
நில்லுங்கள்நில்லுங்களென்று நிகாமாய்சொன்னானே
இப்படிச்சொல்லிவிட்டு இசைந்துமேதான்நடந்தானே
காடுசெடிகளதானுமப்போ கடுகவனந்தாண்டிவந்தான்
காகள்ளபூடிக்குத்தானுமே நலமாகவந்துசேர்ந்தானே
தம்பள்ளக்கிழவிவீட்டிற்கு தண்மையுடன்வந்தானே
பாட்டியேபாட்டியம்மா பசிதாகமெடுக்குதிப்போ
தாகந்தான்கொடடியம்மா தயவுடன்தானிப்போது
இப்படிச்சொல்லவேதான் இதுகேட்டாளக்கிழவி
தாகமும்தான்கொண்டுவர தயவுடன்பெற்றுக்கொண்டு
தாகமருந்தியப்போதான் தண்மையுடன்னப்பாலகனும்
என்னுடையபௌத்திரனே என்னடாசேதியென்றாள்
அம்மாடியம்மாயிப்போ அங்குகடங்காரர்மாண்டாரே
இத்தனையும்தான்பார்த்து இப்பத்திரங்கிழித்தேனே
இதுகளையும்தான்கேட்டு இவளழுதாளேயக்கிழவி

வசனம்.

அம்மாபாட்டியாரே நீயேன் அழுதாய் எனக்குபசி எடுக்கிறது சாதம் போடுவாயம்மா இரண்டுநாள் பொருத்துக்கொண்டிருப்பாய் இந்தக்கோட்டையிலிருக்கும் திரவியமெல்லாம் உனக்கே தருகிறேனென்றுச்சொல்ல இதுகேட்டுக் கிழவி சந்தோஷமடைந்துபொசிப்பிட பாலகன் சாப்பிட்டு சந்தோஷமாக நித்திரைசெய்தான் அதன் பிறகு சூரியன் கிழக்குதிசையில் உதயமானதும் இப்பாலகன் எழுந்து பாட்டி எனக்கு பழையதுபோடுவாயம்மா நான்விளையாட போகவேண்டும் என்றுச்சொல்ல அதுபோல் பழையதுபோடவே புசித்துவிட்டு பாலகன் கிளியையெடுத்து அக்களில்வைத்துக் கொண்டு வணிகச்சங்கு வீட்டிற்குவந்து அம்மா யான் இந்தசெக்கு மாட்டை வோட்டுகிறேன், எனக்கு புண்ணாக்கு தருகின்றாயா? வென்றுக்கேட்க அதற்கு வணிகச்சங்கு சம்மதமடைந்து ஓட்டச் சொன்னாள் பாலகன் செக்கிலமர்ந்து ஓட்டவும் நந்தவனத்திலிருக்

கும் பக்கீரி கிருகிருவென்று சுழன்றான் அப்படிச்சுழலவே அவன் தள்ளாடிதள்ளாடிக்கொண்டு வணிகச்சங்கு வீட்டைதேடி வந்தான்.

வணிகச்சங்குவீட்டிற்கு வந்தானேபக்கீரிப்பபோது
செக்கிருக்குமிடத்திற்கு சிராகமாயாப்பக்கீரியும்
பக்கீரிவருவதைத்தான் பார்த்தானேபாலனப்போது
வேகமாய்மாட்டையங்கே வேடிக்கையாய்ஓட்டினனே
அந்தநல்லப்பக்கீரியும் அல்லாகூவென்றுசுற்றினான்
வணிகச்சங்குதன்னையப்போ வகையுடன்பார்த்தானே
அப்போதுவணிகச்சங்கு அன்பாகத்தான் பாலகனை
நிறுத்தடாநிறுத்தடாநீயும் நிதானமாய்செக்குதன்னை
என்பக்கிரிக்குதானுமப்பா எடருகள்தான்வந்ததிப்போ
பார்த்துமேவருகின்றனடா பாலகாநீநிறுத்துவாயே
இப்படிசசொல்லவேதான் இதுகேட்டான்பாலகனும்
செத்தாலெனக்கென்னதான் சீரழிந்தாலெனக்கென்னடி
அந்தச்சமயத்திலப்போ அந்தநல்லமாயாபக்கீரியும்
செக்கிருக்குமிடத்திற்கு சிறப்புடனேவந்தானே

வசனம்.

அரே வணிகச்சங்கு என் திரேகமெல்லாம் பாரமாயிருக்குதடி கால்கள் நடக்க விலங்குபூட்டியதுபோலிருக்கிறது எனது உயிர்நிலை யை எவனோ கொண்டுவந்ததுபோல் தெரிகிறதுஎன்றுச்சொல்லிக் கொண்டிருக்குஞ்சமயத்தில் பாலகன் அக்களில்வைத்திருந்த கிளி யை எடுத்து செக்குமீதுவைத்து மஹாஆனந்தமாய் ஆட்டிக்கொண் டிருந்தான் அப்போது பக்கீரி பார்த்து,

அப்பாநல்லபாலகா அந்தக்கிளியென்னுதடா
உந்தன்கிளியாகுமானல் யெந்தன்கையில்வருவானே
அப்பாநல்லபாலகா யந்தக்கிளியென்னுதல்லவடா
பஞ்சவர்ணக்கிளியடா பகர்ந்தயென்கிளியாகுமடா
இப்படிதான்சொல்லவே இதமாய்செக்கைதிருப்பினான்
பக்கீரிசுழன்றுமப்போ பாலகாகிளியென்னுதென்றான்
திரும்பினபின்புஅங்கே திகிலடைந்தான்பக்கிரியும்

வசனம்

அப்போது பக்கீரி அரே பாலகா அந்தக்கிளி என்னுடைய தென்றுக்கேட்க பாலகன் உனதானல் உனக்கே தருகின்றேன்

அந்த பாலநாகம்மாள் உனக்கு என்னவேண்டுமென்று கேட்க அப்போது பக்கிரியும் சொல்லுகின்றான்

எனதுகூத்தியார்பாலகாகு என்றுமவன்சொன்னானே
இதைக்கேட்டுபாலகன்தான் இககிளியைதானெடுத்து
கழுத்தையப்போஅமுக்கினான் கடுகவேபக்கிரிக்கு
மூச்சிதான்வாராமல் முழிகளும்வெளிவருகின்றது
அப்பாநல்லபாலகா நீ அந்தக்கிளியைகொல்லாதே
அந்தநல்லநாகம்மாள் அன்புள்ள என்தாயாருக்கும்

வசனம்.

இப்படிப் பக்கிரிச்சொல்ல இதைக்கேட்டப்பாலகன் அடா பக்கிரியே உந்தனிடம் நல்ல மந்திரமிருக்கிறது அது யாதென்றால் வாவென்றால் வருமாம் போவென்றால் போகுமாம் மூன்நூறு இராக்ஷத பூதங்களும் எழுநூறு செகப்பு பூதங்களும் இருக்கிறது அதையெனக்குச் சொல்லென்று கேட்க உடனே பக்கிரிக்கேட்டு அப்பா அது எனது ஜீவனம் யான் யாருக்கும் சொல்லமாட்டேனென்று சொன்னான். சொல்லாமல்போனால் இக்கிளியைக் கொல்லுகிறேன் என்று பாலகன் சொன்னதைக் கேட்டு பக்கிரியும்

அப்பாநல்லபாலகா நீதான் அக்கிளியைகொல்லாதே
உனதிஷ்டம்போலேநான் உகந்துமேநடக்கின்றேன்
உனக்கந்தமந்திரங்கள் உண்மையாய்சொல்லுகிறேன்
மந்திரங்கள்தன்னையப்போ மகிழ்ந்துபதேசஞ்செய்தான்

வசனம்.

இப்படிப்பாலகன் உபதேசமடைந்து மறுபடியும் அடா பக்கிரியே உந்தனிடத்தில் லட்டியிருக்கிறது அது நீ இங்கிருந்து யுத்தம் செய்துவாவென்றால் வருமாம் அதை எனக்கு கொடுவென்றுக் கேட்க அப்பா பாலகனே அது எனது பிராணம் எவருக்குந் நான் கொடுக்கமாட்டேனென்று சொன்னான்.

லட்டியைநீதாராவிட்டால் லகுவாய்க்கொல்லுகிறேன்
பாலகாநீயதைக்கொல்லாதே பக்ஷமுடன்தருகின்றேன்
என்பிராணக்கிளியைத்தான் யெடுத்துமேநீவந்தாயே
என்பிராணம்போனால் என்னலாபம்உனக்குகிட்டுமப்பா
அந்தலட்டியைத்தான் அன்புடன்கைகொடுத்தானே

வசனம்.

இதையுந்தான் பெற்றுக்கொண்டு அடா பக்கிரி உன்னிடத்தில் முத்துவோடு இருக்கிறது அந்தவோடு கோட்டைகளைக்கட்டுமாம் ஆகையாலதை எனக்குக் கொடுப்பாயென்று கேட்க நான் கொடுக்கமாட்டேனென்று பக்கிரிசொல்ல கொடுக்காமல் போனுல் கொல்லுகிறேன் இக்கிளியை என்று பாலகன்சொன்னதைக்கேட்டு அப்ப பாலகா கொல்லவேண்டாமக்கிளியை

உயிரோடுகாமிருந்தால் உகந்துமொன்றுதேடலாம்
இப்படிமயாபக்கிரியும் இதமாகவோட்டையுந்தான்
பாலகன்கையில்தான்கொடுக்க பண்பாகபாலகனும்
சொல்லத்தொடார்ந்தானே சிங்காரவாய்திறந்துமவன்

வசனம்.

அடாபக்கிரி உன்னிடத்தில் மனிதனைச் செய்கிறதும் சாம்பலாக்கிறதும் காயாகச்செய்கிறதும் இந்த வித்தைகளடங்கிய மூன்று பொம்பு இருக்கிறது அதை கொடென்றுகேட்க பக்கிரி இதைக் கேட்டு அப்பா பாலகா இது எனது பிராணன் அதைக் கொடுக்க மாட்டேனென்று சொல்ல அப்போது பாலகன்.

கொடுக்காவிட்டாலிப்போ கிளியைநான்கொல்லுவேன்
அப்பாஎன்அன்புள்ளபாலகா அக்கிளியைகொல்லாதே
எந்தன்பிராணத்திற்கு யெமனுகநீஇங்குவந்தாயடா
இதுயிருந்தென்னைத்தான் இப்போதுகாக்கிறதா
பிராணனிருந்தால்லப்பா பிகுவாநான்சம்பாதிப்பேன்
பிரமபையுந்தானெடுத்து பாலன்கைகொடுத்தானே

வசனம்.

அந்தப்பிரம்புகளை பெற்றுக்கொண்டு மறுபடியும் அவனைப் பார்த்து அடா பக்கிரி கோட்டைவெளியில் செடிகளாகவும் கல்லாகவும் மலையாகவும் இருப்பது வென்றுகேட்க அப்போது பக்கிரி பாலகனைப் பார்த்து அப்பா ஏழுபேர் வேந்தர் என்மீது யுத்தம்செய்ய வந்தார்கள் அவரை இப்படி செய்துவிட்டேனென்றுச் சொல்ல இதைக்கேட்டுப் பாலகன் ஐயோ பாவமாச்சுதே அவர்களை எழுப்புவாயென்றுச் சொல்ல அப்பா அவர்கள் என்பகையாளிகள் ஆகையால் எழுப்பமாட்டேன்என்றுச்சொன்னான் அதைக்

கேட்ட பாலகன் அவர்களை நீ எழுப்பாவிட்டால் அக்கினியைக் கொல்லுவேனென்று சொன்னதை பக்கீரிகேட்டு பயந்து அப்பா அக்கினியை நீகொன்றால் உனக்கு என்னலாபம் வருமப்பா கினியைக் கொல்லாதே இப்போதே எல்லோரையும் நான் எழுப்பித்தருகின் றேன் என்று சொன்னான்

இந்தமொழிதான்கேட்டு இன்பமதாய்பாலகனும்
பக்கீரியைத்தான்பார்த்து பக்குவமாய்சொன்னானே
நான்பார்க்கயவரையிப்போ கலமாகயெழுப்புவாயே
அந்தவார்த்தைதான்கேட்டு அந்தமுள்ளநல்லபக்கீரியும்
விபூதியங்கேபோடவேதான் விழித்தந்தவேந்தர்களும்
மந்திரிகளுமசேனைகளும் மகிழ்ந்துமேயெழுந்தார்கள்
பக்கீரிதன்னையப்போதான் பார்த்துக்கொண்டுவந்தாரே
கோட்டைக்குள்ளாகவே கொலுவேந்தர்கள்வந்தாரே
கத்திபால்வெட்டவுந்தான் கடுகவேஓடிவந்தார்கள்
அப்போதந்தமாயாபக்கீரியும் அலரிகெட்டுபாலனிடம்
ஓடிவந்துதானுமப்போ ஒளித்தானேமாயாபக்கீரியும்
நிறுத்தும்நிறுத்துமையாவே நீதியுள்ளவேந்தர்களே
ஒளித்தவரைக்கொல்லவே யுகக்துசாஸ்திரம்சொல்லுதா
அப்போதுவேந்தர்கள்தான் அன்பாகஅப்பாலகனை
எந்தவூரெந்ததேசம் யெங்களுக்குச்சொல்லுமையா
என்றுமேதான்கேழ்க்கவே எடுத்துரைத்தான்பாலகனும்
பானுகண்டிப்பட்டணம் பண்புள்ளஎன்தேசமய்யா
என்றுமேதான்சொன்னவுடன் எடுத்தங்கேகேட்டாரே
உன்தாய்தந்தைகள்யாரப்பா உகந்துமேநீசொல்லுவாயே
அப்போதுபாலகன்தான் அன்பாகசொல்லுகின்றான்
சார்பவர்த்திவேந்தனய்யா கருணையுள்ளயென்தந்தை
பட்டபுதேவிபாலநாகம்மாள் பண்புள்ளஎன்தாயாராகும்
அப்போதுஅவ்வேந்தர்களும் அன்பாகஅப்பாலகனை
வாரியெடுத்துமங்கே வண்மையாய்மடிமீதுவைத்து
அப்பாநீபிறந்துமிப்போ அன்புடனேமீட்டுவந்தாய்
எழுப்பிவிட்டாய்நீயுமப்பா எங்களெல்லோரையுந்தான்
நீயுமேஇங்குவாராவிட்டால் நிகழ்வதுஎக்காலமப்பா
இந்தமொழிகளைத்தான் இவன்கேட்டான்பக்கீரியும்

நல்லசமர்த்துகாரனிவன் நமதுகோட்டைகைபிடித்தான்
என்தன்பிராணமதைஇவன் எடுத்துமேவைத்துக்கொண்டு
வந்தானேபிங்குமேதான் வண்மையுடனிவன்தானும்
இவனைகட்டிவந்தகிழவிபை இப்பவேசொல்லுகிறேன்
என்றுமேசொல்லியப்போ எழுந்துமேதான்நடந்தானே
அப்போதுபாலகன்தான் அதிதீவிரமாய்எதுசெய்தான்
அந்தக்கினிக்காலேயுந்தான் அழுத்தியேவொடித்தானே
பக்கிரியுந்தானுமப்போதான் பார்மீதவன்விழுந்தானே
அப்பாநல்லபாலகாரீயும் அக்கினியைகொல்லாதே
இவ்வளவுகாரியங்கள் இவன்இன்பமாய்செய்தானே

வசனம்

இப்படிச்சொல்லவே இதுகேட்டுப்பாலகன் கிழவிவீட்டிற்கு வந்து அம்மாடிபாட்டி நீஇங்கு இருந்தால் உன்னை பக்கிரிகொல்லு வான்என்தேசம் வருகிறாயாஎன்றுக்கேட்க அதற்கு அக்கிழவிசம்மத மடைந்து நடக்க இக்கிழவியை அழைத்துக்கொண்டுபோய் வேந் தர்களிடம் விட்டு எல்லோரும் சந்தோஷமாயிருக்க முத்துபல்லக்கு கொண்டுவந்து அப்பல்லக்கில் தாயாராகியநாகம்மாளை அமரச்செய்து

வாடிவாடி வணிகச்சங்குரீயும் வண்மையுடனிப்போது
பின்னால்நீசென்றுமேதான் பிடியடியிந்தக்கொம்பை
அப்போதுவணிகச்சங்கு அலரியேதான்துடித்தாளே
அவன்தலைதானுடைய அப்பவேவேண்டாமென்றேனே
இந்தநல்லகர்மத்தைநான் இனியாரிடம்சொல்லுவேன்
இப்படிஅழுதுகொண்டு இவள்பிடித்தாளேபின்கொம்பை
வாடாவஃடாமாயாபக்கிரியேநீ வண்மைகெட்டசண்டாளா
முந்திக்கொம்பைதானுமே முகந்துநீதான்பிடியுமடா
அப்பொழுதுபக்கிரியுந்தான் அழுதகண்ணுசிந்தையுமாய்
நான்பிழைத்தபிழைப்புகள் நலங்கெட்டுபோச்சுதப்பா
இப்படிஎன்தலையில்பிரமன் இன்பமதாய்எழுதினனே
பாழும்பிரமன்அவன்தானும் பார்த்துமேஎழுதினனே
இப்படியான்பிழைத்துமேதான் இந்தநல்மைதுக்குமே
பல்லக்குசுமக்கவேதான் பாரினில்நான்பிறந்தேனே
என்னடாயிப்போதாமதம் எட்டவேநீநிற்கின்றாய்
எடுக்கமாட்டேனென்றுமே பெட்டித்தான்நின்றானே

அப்பவேகிளிக்கழுத்தை அழுத்தினன்பாலகனும்
பக்கிரிக்கப்போதுதான் பயங்காமதிகமாச்சுதங்கே
அப்பாகல்லபாலகாநான் அன்பாய்வெடுக்குறேண்டா
உந்தன்பலத்தாலிப்போ உகந்துமேகொல்லுகிறாய்
பிந்திகொம்பைதானுமே பிடித்தானேவணிகச்சங்கு
முந்திக்கொம்பைதானுமே முன்வந்தவன்பிடித்தானே
போகலாம்வாருங்களப்பா புகழுடனேநமதுதேசம்
இந்தமொழித்தான்கேட்டு இவரெல்லோருந்தானுமே
வெடுத்தாரேடேறுக்களை எழுந்தாரேசேனைகளுந்தான்
குதிரைமீதுடங்காவப்போ கொப்பனவேபோட்டாரே
வேந்தர்களெல்லோரும்தான் வேகமாய்புறப்பட்டாரே
பல்லக்குதானப்போது பாங்குடனேதான்வருகின்றது
நாகள்ளபூடிகரைகோடியிலே நலமாய்வந்துநின்றாரே
பல்லக்கையுந்தானுமப்போ பாங்குடனிறக்கினார்கள்
அடித்தாரேடோரக்கள் அங்குஅனைவருமதங்கவேதான்
ஆறுபேர்தந்தைகளைத்தான் அன்பாகயவன்பார்த்தானே
தன்தந்தையையப்போது தன்மையுடன்பார்த்தானே
பாலகனைத்தானுமப்போ பக்ஷமாய்தான்வெடுத்தாரே
உச்சிமுகர்ந்துமங்கேதான் உளளங்கால்முத்தமிட்டார்கள்
அப்போதுபாலகன்தான் அன்பாகச்சொல்லலானான்
அந்தநல்லவேளையில்தான் அங்கிருந்தசிலசேனைகளை
சேனைகளைத்தான்பார்த்துமே சிறப்புடனழைத்தானே
நானிங்குதான்வருமளவும் நீங்களிந்தகோட்டைதன்னை
கத்திகட்டிசிப்பாய்மார்களே காவல்களுமசெய்வீரே
இப்படிச்சொல்லியேதான் இன்பமதாய்வெழுந்தானே
தகுந்தகுதிரைமீதுஅப்போ தானுமேஏறிக்கொண்டான்
நடந்தாரேயெல்லோரும் நலமுடனேகாட்டுமார்க்கம்
நாகள்ளபூடிதனிலிருக்கும நலமுள்ளசக்திமுன்பாக
வந்துமேஎல்லோருந்தான் வணக்கமதாய்நின்றார்கள்

வசனம்.

இப்படியிருக்க பாலகன் தனது பரிவாரத்தை அழைத்துக் கொண்டு நாகள்ளபூடிகரை எல்லையிலிருக்கும் சத்தி எதிரில் வருக இப்பாலகனைப் பார்த்தவுடன் வேந்தனே சந்தோஷமாய்தந்தைகளை

அழைத்துவந்திரா என்றுகேட்க பாலகன் இதைக்கேட்டு தேவி யான் சந்தோஷமாகவே அழைத்துவந்தேன் ஆனால்பக்கிரியிடமிருக்கும் பூதங்களுடைய மந்திரம் உன்னிடமிருக்கிறதாம் அதைஎனக்கு உபதேசஞ்செய்யவேண்டுமென்று சொல்ல அதுபோல் தேவி உப தேசஞ்செய்ய அந்தப்பாலகன் நிமிஷத்தில் ஸ்மரிக்க பூதங்கள் எதிரில்வந்து நின்றது அதைப்பார்த்து ஏ பூதங்களே பக்கிரி அழைத்தால் போகவேண்டாமென்று திட்டஞ்செய்துவிட்டு அப் போதேபுறப்பட்டார்கள்

அந்தவிடத்தைவிட்டுமே அப்போதுபுரப்பட்டான்
நயனவாதிபட்டணம்தான் நடந்தானேமறுதினத்தில்
அவ்விடத்தைவிட்டுமேதான் அப்பவேபுரப்பட்டான்
கிளிப்பட்டணம்தானுமே கிருபையுடன்சேர்ந்தானே
அந்தநல்லகானகத்தில் அன்பாகத்தான்டேருதன்னை
அங்குதானப்போடேரு அன்புடனேபோட்டார்கள்
எல்லோரும்தானமர்ந்து ஏகோபித்திருந்தசமயத்தில்
டங்காவைத்தானுமப்போ டம்பமாயடித்தார்களே
சூர்யவர்திவேந்தனும்தான் சூக்ஷமாகக்கேட்டானே

வசனம்.

இந்த டங்காசப்தத்தை கேட்டவுடன் சூர்யவர்த்திவேந்தன் காவலரையழைத்து ஆரோஇதிரிகள் வந்திருக்கிறார்கள் அதையரிந்து வரும்படி திட்டஞ்செய்ய காவல்காரர் வந்துபாலகன் எதிரில்நின்று சந்தோஷமடைந்து ஐயா உம்மை எமதுவேந்தர் அழைத்துவரும் படி திட்டஞ்செய்தார் என்று சொன்னவுடனே எல்லோரும புறப் பட்டு சூர்யவர்த்திவேந்தன் எதிரில்வந்து நிற்க இவரைப்பார்த்து ஐயா பாலவர்த்திவேந்தா போனகாரியஞ் சந்தோஷமடைந்தீரு வென்று கேட்க பாலகன் இதைக்கேட்டு ஓ ராஜோத்தமா யான் சந்தோஷத்துடன் வந்தேன் இதோ என் தந்தைமார் ஏழுபேரை யும் என் தாயாரையும் அழைத்துவந்தேனென்றுச்சொல்ல வேந்தன் அதிக சந்தோஷமடைந்து தன்புதல்வியை தந்து நல்ல சுபமுகூர்த் தத்தில் கலியாணஞ்செய்து முடித்தார். அதன்பிறகு பாலவர்த்தி வேந்தன் சூர்யவர்த்தி வேந்தனைப்பார்த்து யான் போகவேணும் விடைதருவீரென்றுகேட்க அதுபோல அவ்வேந்தன் சம்மதமடைந் தார் உடனேபாலகன் தன் பரிவாரத்துடன புறப்பட்டு கெங்கா

வதிபட்டணம் வந்துசேர்ந்தார்கள் சோந்தவுடனே அவ்வேந்தர் இவர்களைப்பார்த்து சந்தோஷமடைந்து நல்லசுப முகூத்தத்தில் தன் புதல்வியைத்தந்து பாலவர்த்திவேந்தனுக்கு விவாகமுடித்தார். அதன் பிறகு பாலவர்த்திவேந்தன் தன் பரிவாரத்துடன் புறப் பட்டு புலிவேந்தன் பட்டணயபோய் சேர்ந்தார்கள்.

காட்டிற்குவெளியிலிப்போ நல்லடேருபோட்டார்கள்
வந்தசேனைகளெல்லோரும் வண்மையாயமர்ந்தாரே
இந்நல்லசேதிகேட்டுமே இன்பமதாய்புலிவேந்தன்
மந்திரியுந்தானுமப்போ மகிழுடனே அப்பாலகனை
கண்டுசந்தோஷித்துமே கடுகவேதானழைத்தார்கள்
க்ஷேமந்தான்விசாரித்தார் சிறப்புடனே அப்போது
அப்பாநல்லகுமாரநீயும் அன்புள்ளதவவேந்தனும்
கூடத்தானனுப்பிவைத்த குருப்பிராமணனெங்கேதான்
என்றுமேதான்கேழ்க்க எடுத்துரைத்தான்பாலகனும்
அய்யாவேநீர்கேளுமிப்போ அன்புடனந்தவிப்பிரவன்
வரும்வழிதன்னிலேதான் வண்ணமாய்வேங்கைதின்றது
உந்தன்நல்லகிருபையாலே உகந்தென்தாய்தந்தைகளை
கொண்டுமேவந்தேனையா கொப்பனவேநான்யிப்போது
என்னுடையபட்டணம்தான் எல்லோரும்போகவேண்டும்
இப்படியவன்சொல்லவே இணக்கமதாய்புலிவேந்தன்
அய்யாவேநீங்களுந்தான் அன்பாகமணமுடித்துமே

வசனம்.

இதைக்கேட்டவுடன் புலிவேந்தன் சந்தோஷமடைந்து அப்பா பாலவர்த்திவேந்தனே இனி கலியாணம்செய்துகொள்ள என்னதாமதம் என்றுகேழ்க்க இதற்கு சம்மதமடைய அப்போது வேதியரை அழைத்து முகூர்த்த லக்கினமிட்டு அத்தினத்தில் தன் னாடெல்லாம அலங்காரஞ்செய்து பாலவர்த்திவேந்தனுக்கு கலி யாண முகூர்த்தஞ்செய்து ஈரெட்டுநாள்வைத்திருந்து பாலவர்த்தி வேந்தனையும் தன் மகளையும் கூட்டியனுப்பசந்தோஷமாய் புறப் பட்டு தாய்தந்தையை யழைத்துக்கொண்டு வந்தான்.

வனமாய்வனங்கடந்துமப்போ வருகின்றாரெல்லோரும்
காடுமலைசெடிகளும்தான் கானகமும்தாண்டிவந்தார்கள்
பானுகண்டிபட்டணத்தின் பழஞ்சோலைக்கண்டானே
அந்நல்லபூஞ்சோலையில் அன்பாகடேரூபோட்டார்கள்

வந்தவல்லவேந்தர்களும் வண்ணமாய் அமர்ந்தாரே
இவர்களைவிட்டுமங்கேதான் இன்பமதாய்பாலகனும்
ஓண்டியாய்வந்தானே உகந்துமேதன்னரண்மனைக்கு
வந்துமேபெரியதாயாரை வாஞ்சையாயழைத்தானே
அம்மாடிநீகேளாயிப்போ அன்புடனேயென்வார்த்தை
எல்லோரையும்தானுமே இப்போதழைத்துவந்தேன்
இந்தமொழிகேட்டுமப்போ இன்பமதாய்த்தானுமே
சூர்யநாகம்மாளப்போ சிந்தையும்தான்பொங்கினள்
பாலகனையப்போதுதான் பண்புடனெடுத்துக்கொண்டு
இன்றைக்குஉன்முகத்தை இன்பமாய்பார்த்தோமப்பா
உன்தந்தைகள்தானிருந்த தனியிடத்தைப்பார்த்தாயோ

வசனம்

அம்மா! எனது தந்தைகளையும் தாயாரையும் அழைத்துக்கொண்டு வந்தேன் என்றுச்சொல்ல இதைக்கேட்ட பெரியதாயார்கள் அதிக சந்தோஷமடைந்தார்கள் இதற்குள் பாலகன் காவலரை யழைத்து வளையல்கார செட்டியை அழைத்துவரும்படி திட்டஞ் செய்தான் அதுபோல் காவலர் அழைத்துவருக ஆறுபேர் தாய்களுக்கும் வளையவிட்டு பிறகு தன்னுடைலங்காரஞ்செய்ய அந்த சமயத்தில் தந்தையான சார்பவர்த்தி வேந்தன் பாலகனைப் பார்த்து அப்பா இதுயேனென்றுகேட்க இதைக்கேட்ட பாலகன் தந்தையே நீங்கள் காகள்ளபூடியில் கல்லாகிவிட்டபிறகு என் தாய்மார்கள் அமங்கல்யஸ்திரீயானர்கள் இப்போது இந்தபந்தலில் உங்கள் ஏழு பேருக்கும் கலியாணம்போல்செய்து நால்வர் அறியும்படி சந்தோஷமடையச் செய்குறேன் என்றுச்சொல்ல இதைக்கேட்ட சாரியவர்த்திவேந்தன் அப்பாயிந்த ஆறுபேருக்கும் உனதிஷ்டம்போல் செய்யவும் எனக்குமாத்திரம் வேண்டாமென்று வெருக்க இதைக் கேட்ட பாலகன் ஐயா அதுயேன் எந்தனுக்குச் சொல்லும் என்றுக்கேட்க அப்போது சார்பவர்த்திவேந்தன் சொல்லத் தொடங்கினன்

உந்தன்தாயாரானஎன்தேவி உகந்தபாலநாகம்மாளும்
பக்கிரிஅந்தசண்டாளனால் பதிவிரதமதுகெட்டாளே
இப்படிக்கொத்தவளைநான் இன்பமதாயழைக்கலாமா
இந்தமொழிகேட்டுமப்போ இன்பமதாய்பாலகனும்

தந்தைபேர்சொலுமிப்போ தனிமையுடனென்தாயை
செய்பாதபரீக்ஷைகள்தான் செய்யவேபார்த்துமிப்போ
பரிக்ஷைகள்பிசகினுலப்பா பாங்குடன்வெட்டுவீர்கள்
இப்படிச்சொல்லியேதான் இசைந்துமேபாலகனும்
காலுகுடமெண்ணெய்பங்கே கலமாய்கொண்டுவந்துமே
எழுகுதொட்டிதன்னிலப்போ யின்பமாய்கொட்டினர்கள்
அக்கினியைமூட்டியங்கே அனலாககாயவைத்தார்கள்
தனதுவிரல்மோதிரத்தை தன்மையுடன்போட்டானே
அம்மாடியம்மாயிப்போ அன்பாயென்னைபெற்றமாதாவே
இந்தநல்லமோதிரத்தையும் இன்பமாநீயெடுப்பாயே
இப்படிச்சொல்லவேதான் இதுகேட்டாள்பாலநாகம்மாள்
சூரியனைசாக்ஷிவைத்தான் சருதிபூமிதான்சாக்ஷிவைத்தான்
அப்பாநல்லஎன்குமாரா அன்புள்ளஎன்செல்வரத்தினமே
உன்தந்தையன்றிநானுமே ஒருவர்முகம்பார்த்தறியேன்
இதுநிஜயமென்றுசொல்லி இன்பமதாய்மோதிரத்தை
எல்லோருந்தானறியும்படி எடுத்தாளேமோதிரத்தை
சார்பவர்த்திவேந்தன்தான் கண்டானேயப்புதுமையை
பக்கிரிதன்னிடத்தில் பகர்ந்தவித்தையிதுதானப்பா
இந்தநல்லமோதிரத்தை இவள்யெடுத்ததுபெரிதாமோ
இவைகளைநம்பமாட்டேன் இந்தவித்தையானறிவேன்
இத்தனையுங்கேட்டானே இன்பமுடனப்பாலகனும்
ஆழக்குழியையங்கேதான் அவன்வெட்டினனப்போது
அந்தக்குழிதன்னிலப்போ அன்பாகக்கட்டைகளை
போட்டுநெருப்பிட்டுமே பொரிபொரியாபெரியவே
அந்தநல்லவேளைதன்னில் அன்பாகயெண்ணைகொட்டி
சுடர்விட்டெரியும்சமயத்தில் சுகமாய்த்தன்தாயாரை
குதிக்கவேதான்சொன்னனே கோப்பனவேயப்போது

வசனம்.

அந்தசமயத்தில் சார்பவர்த்திவேந்தன்பார்த்து அப்பா இது குதிப்பது எப்படியென்றல் அந்த குண்டத்தில் நாலுமணிநேரம் மொழியாடவேண்டும் பிறகு கரையேரவேண்டும் அப்போதுகட்டிய சேலை பங்கமாகலாகாது குங்குமம் அழியக்கூடாது. திரேகங்கொப் பளிக்கலாகாது இப்படியிருந்தால் யான்நம்புவேனென்றுச்சொல்ல அதுபோல்

அப்போதுநாகம்மாள் அக்குண்டத்தில்குதித்தாளே
நாலுமணிநேரமங்கேதான் நல்வார்த்தையாடினாள்
பிந்தியப்போகரையேறி பிரியமாய்த்தான்வந்தாளே
அப்போகட்டியசேலையதில் அங்கொன்றும்பழுதுமில்லை
நெற்றியிலிட்டகுங்குமம் நிலைகலையாமலிருந்ததங்கே
எதுமேபங்கமில்லாமலப்போ யெழுந்துதான்வந்தாளே
அப்போதுவேந்தர்கள்தான் அனபாகமனங்குளிர்ந்து
நான்பெற்றதவப்பாலா நம்பினேனுன்தாயை இப்போது
இதைக்கேட்டுபாலகன்தான் இன்பமாயமர்ந்தானே
என்னை ஈன்றதாயுமிப்போ யெனக்குநல்கீர்த்திதந்தாள்

வசனம்.

இப்படியாக பாலவர்த்திவேந்தன் வேதியரை அழைத்து இவர்களுக்குக் கலியாணசாங்கியம முதலானதுஞ் செய்யும்படி திட்டம் செய்ய அப்போது பனிரெண்டுலக்ஷ சேனைகளும் பார்த்து ஐயா பாலவர்த்தி,வேந்தா நாங்கள் எப்படி எங்களுடைய மாதர்களைப் பார்ப்பதுயென்று சொல்ல அப்போது அவரவர்களுடைய மாதர்களையழைத்து வலையவிட்டு அந்த பந்தல்தன்னிலே அவர்களுக்கும் கலியாணஞ்செய்து அனுப்பினான். இப்படி நான்குதினமடைந்த பிறகு ஐந்தாந்தினத்தில் பக்கிரியானவன், பாலவர்த்திவேந்தனை வணங்கி ஐயா, என்கிளியை கொடுத்து என்னை ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான்.

அப்பாபாலவர்த்திவேந்தா அக்கிளியைதாருமையா
இன்பமதாய்பக்கிரியும் இணங்கியப்போகேட்டானே
கிளியைநான்தரமாட்டேன் கிண்ணாரம்நீபாடாதே
இப்படித்தான்சொல்லவே இதைகேட்டான்பக்கிரியும்
வணிகச்சங்கைதான்பார்த்து வருகின்றுயாயிப்போது
என்றுமேதான்பக்கிரியும் எடுத்துமிகச்சொன்னானே
இதைக்கேட்டவணிகச்சங்கு இனியில்லாத்துயரமானான்
அடபோடாபடுபாவியே அப்பவேநான்சொன்னேனே
இப்பாலகனிடத்தில்தான் இன்பமாய்நானிருப்பேனே
அடியெடுத்துவரமாட்டேன் அன்பாகநானிப்போது
இப்படியவள்சொல்லவே இதுக்கேட்டான்பக்கிரியும்
வாடிவாடிவணிகச்சங்குநீயும் வண்மையுடனிப்போது

பக்கிரியும்தான்சொல்லவே பண்புடனவன்வந்தாளே
நல்லதுஎன்றுச்சொல்லியே நடந்தாரேயிருவருமாய்
நாலைந்துதினத்திலப்போ நாகள்ளபூடிதானும்வந்தார்
அப்போதுபாலகன்தான் அன்பாகசொல்லுகின்றான்
கேட்டையாபக்கீரிநீயும் கிருபையுடனென்வார்த்தை
உந்தன்திரவியமெல்லாம் உகந்துமிப்போகாட்டுமடா
இல்லாமல்போனலிப்போ இக்கிளியைகொல்லுகிறேன்
கிளியைநீயும்கொல்லாதே கிரமமாய்காட்டுகின்றேன்
தனமிருக்குமிடமெல்லாம தான்வந்துகாட்டினானே

வசனம்.

அப்போது பாலவர்த்திவேந்தன் கிளிபட்டணத்திலும் கங்காவதிபட்டணத்திலும் புலிவேந்தன் பட்டணத்திலும இருந்து வண்டிகளும், ஆனைகளும், ஒட்டைகளும வரவழைத்து பனிரெண்டுஸ்தம் பத்தினிடத்திலிருக்கும் தங்கமுதலாகிய நவரத்தினங்களையும், ஜவ்வாது, புனுகு முதலான வாசனை திரவியங்களையும எடுத்து வண்டிகள்மீது, ஆனைகள்மீது, ஒட்டைகள்மீது ஏற்றி தனது பட்டினத்துக்குபோகும்படி திட்டஞ்செய்துவிட்டு அங்காட்டிற்கு சுற்றிலும் இராநின்ற ஒட்டரையழைத்து அக்கோட்டைதனை இடித்து தூளிதஞ்செய்து அதில் எருக்கன், ஊமத்தி, எட்டி, முத்துக்கொட்டை இப்படிக்கொத்த விரைகள் விரைத்துவிட்டு வண்டிமீது ஏறுஞ்சமயத்தில் பக்கீரிபார்த்து அப்பா இன்னாட்டில் நாலுவீதியில் பிச்சையெடுத்து பிழைக்குறேன் கிளியைக்கொடுமென்று கேட்க அதற்கு பாலகன் அடாபக்கீரி உனக்கு ஆராகிலுமிருந்தால் அவருடன் சொல்லிக்கொள் பயமில்லை என்றுச்சொல்ல பக்கீரியோடி வந்து அந்தக்கிளியை பிடித்தான கிளித்தலை பாலகன்கையிலும் கால்கள் பக்கீரிகையிலும் அகப்பட்டு இருக்கும்போது,

விடடாவிடடாஅப்பா விமலனேபாலவர்த்தி வேந்தா
விடமாட்டேன்சண்டாளா விடமாட்டேன்உன்னைத்தான
இப்படித்தானிருவரும் இசைந்துமேயிழுக்கும்போது
கிளித்தலையப்போதுதான் கிள்ளியங்குவிழுந்ததுவே
ஹல்லாஹூதாவென்றுமே அப்போதுதானபக்கீரியும்
மலைபோலங்கேவிழுந்தானே மண்மீதுதானப்போது
பக்கீரிதன்பிராணனும்தான் பார்த்தேகிளிசாகவுமே

வசனம்.

இப்படிபக்கிரி இரந்தபிறகு பாலவர்த்திவேந்தன் தினக்குள் தானே இந்ததிரவியம் நமக்கேனென்றுச்சொல்லி போகும் வண்டிகளை திருப்பிக்கொண்டுவந்து அன்பதுபக்கிரிகளை யழைத்து அவனுக்கு கோரிகட்டச்செய்து அந்தகோரிசுற்றிலும் விந்தையான பூஞ்சோலை யமைத்துவிட்டு அவனுக்குச்செய்யவேண்டிய கர்மங்கள் செய்துவிட்டு மிகுதிதிரவியத்தை கோரியில்வைத்து தினம் சாம்பிராணி தூபமிடும்படி திட்டஞ்செய்து அந்த பக்கிரிகளிடத்தில் இதையெல்லாம் ஒப்புவித்துவிட்டு பாலகன் பானுகண்டிபட்டணம் வந்தவுடனே தந்தைகள் இராஜ்யபார மாண்டுக்கொண்டிருந்தார்கள் பூச்சக்கிரபட்டணத்தை தந்தைக்கு மகுடம்சூட்டினுன் பிறகு மாமன்மார் காலஞ்சென்றபிந்தி பாலவர்த்திவேந்தன் அந்நாடுகளை எல்லாம் பரிபாலித்துக்கொண்டு சகலசம்பத்துடன் வாழ்ந்திருந்தான் ஆகையால் இந்த பாலநாகம்மாள் கதையை வாசிததபேர்களும் கேட்டபேர்களும் அவாவர்கள் கஷ்டானுசாரம் தொலைந்து புத்ர களத்ர சம்பத்தை யடைந்து இருக்கும்படி ஸ்ரீ கைலாசபதியாகிய உமாநாயகனை தினந்தோறும் தியானிக்கின்றேன்.

வாழ்த்து

எண்சீர் ஆசிரியவிருத்தம்

சீர்பெருக சிறப்புடனே பெரியோர்பாதம்
சித்தமகிழ்ந்து நித்தமும்வாழ்க
பேர்பெருக பாலநாகம்மா ளென்னும்
பெண்பாவை சரித்திரம்புகழ்ந்து வாழ்க
நீர்வாழ்க நிதம்படித்தோர் வாழ்க
நீனிலத்தில் கேழ்ப்பவரும் நிதமும்வாழ்க
கார்வாழ்க. கவிசுக்கர்தானும் வாழ்க
கண்டறிந்த குருபாதம்சென்னியில் வாழ்க.

பால நாகம்மாள் கதை முற்றிற்று.

யுனைடெட் பிரஸ், ஆடிசன்பேட்டை, காஞ்சிபுரம். 22—12—1938.
புரொப்ரைடர் K. S. முருகேச நாயகர்.